

# பழங்கதைகளும் பழமொழிகளும்

சமூக, மானிடவியல் ஆய்வுக் கட்டுரைகள்

நா.வானமாமலை

# பழங்கதைகளும் பழமொழிகளும்

## சமூக, மானிடவியல் ஆய்வுக் கட்டுரைகள்

பேராசிரியர் நா. வானமாமலை

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை- 600 098.
☎: 26251968, 26359906

| | | |
|---|---|---|
| Title | : | **Pazhangathaigalum Pazhamozhigalum** |
| Author | : | **Naa. Vaanamaamalai** |
| First Edition | : | February, 1980 |
| Revised Edition | : | March, 2008 |
| Copyright | : | Padmavathy Vaanamaamalai |
| Code No | : | A 123 |
| ISBN | : | 81 - 234 - 1146 - 4 |
| No.of pages | : | xii + 156 = 168 |
| **Price** | **:** | **Rs.75.00** |
| Type set | : | NCBH Computers |
| Size | : | 1/8 Demy |
| Printed at | : | Cossmic Printers. |

முதல் பதிப்புக்கான

# *பதிப்புரை*

பேராசிரியர் நா. வானமாமலை கடந்த சில ஆண்டுகளில் எழுதியவற்றுள் மணியான ஆறு ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து, சிறு நூலாகத் தமிழ் வாசகர்களுக்கும் தமிழ் ஆராய்ச்சியில் ஆர்வமுடையோருக்கும் வழங்குகிறோம்.

தொன்னெடுங் காலமாகத் தமிழ் நாட்டில் வழக்கில் இருந்துவரும் பழங் கதைகளிலும் பழமொழிகளிலும் சில வகைகளை இக்கட்டுரைகள் ஆராய்கின்றன.

இந்த ஆய்வின் மூலம் கட்டுரை ஆசிரியர் அக்காலத் தமிழக வரலாறு, சமூக நிலைமைகள் பற்றிய பல சுவையான உண்மைகளை நமக்குப் புலப்படுத்துகிறார். மார்க்சிய முறையியலைக் கையாண்டு பிரச்சினைகளைப் பரிசீலனை செய்யும் ஆசிரியர், ஆழ்ந்த சிந்தனைக்குரிய முடிவுகளை வந்தடைகிறார்.

ஆறு கட்டுரைகளும் சிந்தனையொருமையால் ஒருசேர பிணைக்கப்பட்டு முழுமையான தனியொரு நூலாக விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நூலின் அச்சுப்படிகள் தயாரான நேரத்தில் இதன் ஆசிரியர் மறைந்த செய்தி எல்லோரையும் திடுக்கிடச் செய்தது.

மார்க்சீய அறிஞர்; போதனாசிரியர்; முதுபெரும் ஆராய்ச்சி வல்லுநர்; மிகப் பல துறைகளிலும் முன்னோடியாகத் திகழ்ந்து புதுமைகள் பல கண்டவர்; முற்போக்கு இலக்கியவாதி; இளம் எழுத்தாளர்களுக்கும் விமர்சகர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் வழிகாட்டி வந்த ஆசான்; பாட்டாளி மக்களது தோழனாய் வாழ்வெல்லாம் அயராது உழைத்த உத்தமர் – இப்படிப் பல சிறப்புகளுக்கும் உரியவராகத் திகழ்ந்தவர் பேராசிரியர் நா. வானமாமலை. அவரது மறைவு தமிழகத்துக்கு நேர்ந்திருக்கும் பேரிழப்பாகும்.

எங்கள் பதிப்பகத்துக்குப் பதிப்பாசிரியராகவும் ஆலோசகராகவும் இருந்து இத்தனை ஆண்டுகளாய் அவர் எங்களுக்குச் செய்திருக்கும் சேவைகள் அளவற்றவை.

அமரர் நா. வா. அவர்களது நினைவு என்றென்றும் எமக்கு உத்வேகம் அளித்து வழிகாட்டும்!

வாழ்க அவர்தம் நாமம்! வெல்க அவர் அயராது பாடுபட்டு வந்திருக்கும் இலட்சியங்கள்!

சென்னை
20-2-1980

- பதிப்பகத்தார்

இரண்டாம் பதிப்புக்கான

# பதிப்புரை

"ஆராய்ச்சி" அறிஞர் பேராசிரியர் நா. வானமாமலை மறைந்து 27 ஆண்டுகள் கடந்துவிட்டன.

அவர் மறைந்தவுடனேயே 1980ஆம் ஆண்டு பிப்ரவரியில் அவர் வரைந்த கட்டுரைகளில் ஆறு கட்டுரைகளைத் தேர்வு செய்து மானுடவியல், சமூகவியல் என்னும் இரு பகுதிகளாக ஒரு நூலை என்.சி.பி.எச். வெளியிட்டது. அந்த நூலின் இரண்டாம் பதிப்பு இப்பொழுது வெளியிடப்படுகிறது.

பேராசிரியர் நா. வானமாமலை நாட்டாரியலிலும், தமிழ்ச் சமூக வரலாற்றியலிலும் தடம் பதித்தவர். முதன் முதலாகத் தமிழ் ஆய்வில் மார்க்சிய அணுகு முறையியலைப் பயன்படுத்தி ஆய்வாளர்க்கு, தமிழ் அறிஞர் உலகுக்கு வழிகாட்டியவர்.

மானுடவியல் என்னும் பகுதியில் மூன்று கட்டுரைகள் இடம் பெறுகின்றன. அம்மூன்றும் மானுட சமுதாயம் எவ்வாறு பொருள் முதல்வாத அடிப்படையில் மாறி வளர்ந்து வந்துள்ளது, மானுட சமுதாயம் இனக் குழுநிலையில் இருந்தபோது கடவுள்களும் தெய்வங்களும் எவ்வாறு படைக்கப்பெற்றனர் என்பதைத் தெளிவாக எடுத்துச்சொல்லுகின்றன.

நாட்டார் வழக்கியல் என்பது கீழ் மக்களுக்கே உரித்தான, தொட்டுப் பார்க்கத்தகாத இழிந்த பழக்க வழக்கம், சிந்தனையோட்டம், பிரிவு என நெடுங்காலம் ஒதுக்கப்பட்டு வந்தது. ஆனால் ஹென்றி லூயி மார்க்கன் எழுதிய "பண்டைய சமுதாயம்" என்னும் நூலும் அதைத் தொடர்ந்து பிரடெரிக் எங்கல்ஸ் எழுதிய "குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம்" என்னும் நூலும் சமூக ஆய்வியலுக்கு அடித்தளமிட்டன. காரல் மார்க்சின் மருமகனான, பால் லபார்க் (Paul Lafargue) முதன் முதலில் பிரெஞ்சு நாட்டில் வழக்காற்றில் இருந்த கிராமியப் பாடல்களையும் கதைகளையும் ஆய்ந்து நூல் எழுதினார். இந்த நூல் இங்கிலாந்து உட்பட பல்வேறு நாடுகளில் வழக்கத்திலிருந்த பண்டைய இனக்குழுக் கதைகள் பாடல்களை ஆராய்வதற்கு முன்னோடியாக இருந்தது.

பின் புதிய சிந்தனையையும் அணுகு முறையையும் தோற்றுவித்தது. பிரிட்டிஷ் தீவுகளிலும் – ஸ்காட்லாந்திலும் வாழ்ந்த பழங்குடி மக்களிடை வழங்கிய நாட்டுப்புற இலக்கியங்கள் ஆடல் பாடல்கள் பற்றியும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வாளர்களில் பெரும்பாலானவர்கள் சோஷலிஸ்டுகள் ஆவார்கள். எனவே மக்களிலக்கியத்தின் சிறப்புப் பகுதியாக வளரத் தொடங்கியது.

இந்திய நாட்டளவில், வரலாற்றில் இலக்கியத்தில் சிறந்த, உயர்ந்த பங்களிப்பது நாட்டார் வழக்கியல் என்பதனை எடுத்துக்காட்டியதோடு, நாட்டாரியலில் அக்கறை செலுத்தியவர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக இலங்கிய பி.சி. ஜோஷி ஆவார். ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்துடன் அவர் கொண்டிருந்த தொடர்பு இதற்குச் சாதகமான பின்னணியை உருவாக்கித் தந்தது.

தமிழகத்தில் கி. வா. ஜகந்நாதனும், அன்னகாமுவும் கிராமியப் பாடல்களைத் தொகுக்கத் தலைப்பட்டனர். தொகுப்புப் பணியில் ஈடுபட்ட ஆங்கிலேயரும் உண்டு. அடுத்து பேராசிரியர் நா. வானமாமலை நாட்டுப் புறப்பாடல்களை அரிதின் முயன்று முறையாகத் தொகுத்து வெளியிட்டதோடு பல்கலைக்கழக உயர்மட்டத்தில் நாட்டார் வழக்காற்றியலுக்கு இடம்பெற்றுத் தந்த ஆராய்ச்சிப் பெருமகனாவார் என்பது நினைவுகூரத்தக்கது.

நாட்டுப்புறப் பாடல்கள் மக்களுடைய வாழ்வின் எல்லா நிலைகள் – பிறப்பு, உழைப்பு, பயிர்த்தொழில், கைத்தொழில், திருமணம், சடங்கு, மரிப்பு ஆகிய எல்லா நிலைகளிலும் மக்களை ஆட்படுத்தி வசப்படுத்துவனவாகும். எனவேதான் இவை ஊர்ப்புற மக்கள் வாழ்வில் சிறப்பிடம் பெறுகின்றன.

பெரும்பாலான நாட்டுப்புறக் கதைகள் சமுதாய மாற்றங்களைக் குறிப்பாகத் தாய் தலைமை நீங்கித் தந்தை தலைமை அதாவது, பெண்டிரை அடிமைப்படுத்தி ஆடவன் எவ்வாறு எழுச்சி பெற்றான் என்ற சமுதாய நிலை மாற்றத்தை எடுத்துச்சொல்லுவன. பேராசிரியர் நா. வானமாமலை இம்மாற்றத்தை மிகத் தெளிவாக எடுத்து விளக்கிச் சொல்வது பாராட்டுக்குரியது. நாடு விடுதலை பெற்றபின் தமிழகத்தில் மானுடவியல், இனவியல், மொழியியல் பற்றிய ஆய்வுகள் மிகச்சிறப்பாக நடைபெற்றுவந்துள்ளன. அவற்றில் முதலிடம் பெறுவன இவரது கட்டுரைகள்.

வேதகாலமே பொற்காலம், சங்க காலமே பொற்காலம் என்ற முழக்கங்களுக்கு நேர் எதிராக வரலாற்றில் பொற்காலம் என்பது ஏதும்

இதுவரை இருந்ததில்லை, வரலாறு என்பது செல்வர், வறியர், மேலோர், கீழோர், ஆண்டான், அடிமை இடையே நிகழ்ந்த வர்க்கப் போராட்டங்களின் வரலாறே. வருங்காலத்தில்தான் ஏற்றத்தாழ்வற்ற பொற்காலத்தை இனி மனித சமுதாயம் சென்றடைய முடியும் என்று அறுதியிட்டுச் சொல்லுவது மார்க்சியம்.

இதனையொட்டித் தமிழகத்தில் சமுதாய மாற்றங்கள் எவ்வாறு நிகழ்ந்தன என்பதைப் பேராசிரியர் நா. வானமாமலை பல கட்டுரைகளில், நூல்களில் எடுத்துச் சொல்லியுள்ளார்.

இத்தொகுப்பில் இரண்டாம் பகுதியாக அமைவது சமுகவியல். இதில் முதல் கட்டுரை தஞ்சைப் பெருவுடையார் கோவிலின் நிலவுடைமை, செல்வம் பற்றியும் அதன் வழிவந்த வருவாய் பற்றியும் ஆகும். முதன் முதலில் தமிழகத்தில் மத்தியகால நிலவுடைமை ஆதிக்கம் பற்றி, கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, கே. கே. பிள்ளை, டி. வி. மகாலிங்கம் ஆகிய அறிஞர்களுக்குப் பின்னர் தொடர்ந்து இடைக்காலச் சோழர் ஆட்சியில் நிலவுடைமை பற்றி ஆய்வு செய்தவர் பேராசிரியர் நா. வானமாமலை. பின்வந்த ஆய்வாளர் பலர். ஜப்பான் நாட்டைச் சார்ந்த பேராசிரியர் கராஷிமா நா. வா இதே பொருள் பற்றி ஆங்கிலத்தில் எழுதியுள்ள சில கட்டுரைகளில் கண்ட சில முடிவுகள் பற்றி ஐயம் எழுப்பியுள்ளார் தம்முடைய South Indian History and Society, studies from inscriptions 850 - 1800 என்னும் நூலில்.

ஆதாரங்கள் மாறுபடும்போது முடிவுகளும் இயல்பாகவே மாறும். ஆய்வுப் பரப்பு பெரிய கால வெளியைத் தழுவியது. எனவே கருத்து வேற்றுமை இருக்கும். இது வளர்ச்சிக்கான அறிகுறி. இது வரவேற்றுப் பாராட்டத்தக்கது. இருப்பினும் பேராசிரியர் நா. வானமாமலையின் பங்களிப்புக்கு இதனால் ஊறு ஏதும் நேர்ந்திடாது. ஆராய்ச்சி என்பது தொடர் நிகழ்ச்சி. தமிழகத்தைப் பொறுத்தவரை, 1968–1969 வரை தமிழ்க் கல்வெட்டுக்கள், தாமிர சாசனங்கள், அரேபிய, பர்சிய மொழிச் சாசனங்கள், கர்நாடக மும்பை கல்வெட்டுகள் நாணயங்கள் 51,569 கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 2832 மட்டும் படித்தறியப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளன என்பதனை நோக்கும்போது, அரசு, ஆய்வாளர்கள் முன்னுள்ள பணி எவ்வளவு பெரிது என்பது புலனாகும்.

திரிபுரி பழமொழிகளுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எடுத்துக்காட்டுவது இரண்டாவது கட்டுரை. மற்ற மொழிகளில் வழங்கும் பழமொழிகளைத் திரட்டி அவற்றுக்கு ஒப்பான தமிழ்ப் பழமொழிகளை

ஆய்வறிஞர்கள் எடுத்துச் சொல்லவேண்டும் என்பதற்கு இக்கட்டுரை ஓர் வழிகாட்டியாக உள்ளது.

தமிழகத்தில் வழங்கும் இராமாயணக் கதை வைதிகத்தை அடிப்படையாகக்கொண்டது. பௌத்த ராமாயணம் ஜைன ராமாயணம் வட நாட்டிலும் உலகின் வேறு பல நாடுகளிலும் பரவி இருப்பவை. ஆனால் தமிழகத்தில் பக்தி இயக்கத்தின் பின் சீதை, அனுமன், இராமன் ஆகியோர் வைதிக அடிப்படையில் பெற்றிருந்த செல்வாக்கைக் கிராம மக்களிடையே அவர்கள் பாராட்டப்பெற்ற தகைமையை எடுத்துச்சொல்வது பாராட்டுக்குரியது. இராமாயணம், மகாபாரதம் பற்றிய ஆய்வுகள் பெருகிய வண்ணம் உள்ளன. குறிப்பாக அண்மைக்கால ஆய்வுகள் ஆரியரல்லாத தொல்பழங்குடி மக்களிடை வழக்கில் நாட்டார் கதைகள் அடிப்படையில் அவை எழுந்தவை. நாளடைவில், காலப்போக்கில் ஆரிய மயமாக்கப்பட்டன எனக் காட்ட முயல்கின்றன.

பேராசிரியர் நா. வானமாமலை அவர்களின் கட்டுரைத் தொகுப்பினைத் தமிழ் மக்களுக்கு அளிப்பதில் என். சி. பி. எச். பெருமகிழ்ச்சியடைகிறது. அவர் என். சி. பி. எச். ஆசிரியர் குழுவில் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

-ஆர். பார்த்தசாரதி

# முன்னுரை

சமூகவியல், மானுடவியல் ஆராய்ச்சி தமிழுக்குப் புதிது, அதிலும் மார்க்சீய முறையியலைப் பயன்படுத்தி ஆராய்ச்சி செய்வது இதுவே முதல் தடவை.

முதல் மூன்று கட்டுரைகள் ஆராய்ச்சியில் வெளிவந்தவை. இவை உலகம் படைக்கப்பட்ட விதம் பற்றி வரலாற்று முற்கால மக்களும், தற்கால இனக்குழு மக்களும் புனைந்துரைத்த புனைகதைகள். இவை விஞ்ஞான விளக்கங்களல்ல. கற்பனைப் புனை கதைகளே. இக்கதைகள் கூட, சமூக நிலைமைகளால் கட்டுப்படுத்தப்பட்டு கதைகள் எழுந்த சமூக நிலைமைகளை இப்புனை கதைகள் பிரதிபலித்தன. புனை கதை "The fantasic reflection of the society that produced them" என்று மார்க்ஸ் கூறினார். எனவே கற்பனைச் சிறகுகளை அகற்றிவிட்டுப் பார்த்தால் உண்மையின் கரு தெரியும். இக்கதைகள் பலவற்றை நான் தார்வாரில் முதுநிலை ஆய்வாளனாகவும், கௌரவப் பேராசிரியனாகவும் பணியாற்றிய ஓராண்டுக் காலத்தில் படித்தேன். Eliades தொகுத்த From the Primitive to Zen என்ற நூலிலும், R.G. கிரேவ்ஸ் எழுதிய Greek Myth என்ற நூலிலும் ஆசிரியர் பெயர் தெரியாத Babylonian Myths என்ற நூலிலும், Dictionary of Myth and Legend என்ற நூலிலும், ஒவ்வொரு தேசத்தின் பண்டையப் புனை கதைகள், புராணக் கதை இவற்றை 13 பகுதிகளாக வெளியிட்டிருக்கும் Hamlyn Mythology Series-ஐயும், பற்பல பத்திரிகை பைண்டு வால்யூம்களையும் படித்தேன். இவற்றில் இருந்து உலகப் படைப்பு பற்றி பண்டைய சமுதாயங்களில் வாழ்ந்த வரலாற்று முற்கால மக்களும் தற்காலத்தில் அதே சமுதாய நிலைமைகளில் வாழ்கிற இனக்குழு மக்களும் ஒரே விதமாகச் சிந்திப்பதும் சமுதாயங்களின் வளர்ச்சி வேறுபாடுகளுக்கு ஏற்ப குறிப்பிட்ட புனைகதை வகைகளும் தோன்றியுள்ளன என்ற முடிவுக்கு வந்தேன். அந்த ஆராய்ச்சியைத் தான் "உலகப் படைப்புக் கதை மூலகங்கள் – ஓர் ஆய்வு" என்ற

கட்டுரையிலும், "உலகப் படைப்புப் புனை கதைகளும் அவற்றின் சமூக அடித்தளங்களும்" என்ற கட்டுரையிலும் முழுமைப்படுத்திச் சில முடிவுகளுக்கு வந்துள்ளேன். அதனைக் கட்டுரைகளிலேயே காணலாம்.

இவ்விரண்டு கட்டுரைகளும் முதல் பகுதி. இதனைப் புனைகதை மானிடவியல் ஆராய்ச்சி என்று கூறலாம்.

இரண்டாம் பகுதி மூன்று கட்டுரைகள் உள்ளன. தஞ்சைக் கோயிலில் இசை, நடனம் முதலிய நிகழ்விக்க ராஜராஜன், வருமானத்துக்கு ஏற்பாடு செய்த விதம் இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது. கிட்டத்தட்ட இச்செலவும், செலவுக்காக ராஜராஜன் செய்த வழி மாற்றங்களும் கல்வெட்டுக்களிலிருந்து கணக்கிடப்பட்டுள்ளன. இது சமூகவியல் துறை ஆராய்ச்சியாகும்.

கல்கத்தாவிலிருந்து வெளியாகும் Folk Lore என்னும் பத்திரிகையில் 32 திரிபுரிப் பழமொழிகள் வெளியாயின. அது எங்கள் குழுவின் சிந்தனையைத் தூண்டியது. உ. மீனாட்சி சுந்தரம், டி. மங்கை ஆகிய எனது மாணவ–மாணவியர் இப்பழ மொழிகளுக்கு இணையான தமிழ்ப் பழ மொழிகளைத் தேடிக் கண்டுபிடிக்க அனுப்பப்பட்டனர். ஒரு கள–ஆய்விற்குப் பின்னர், அநேகமாக எல்லாப் பழ மொழிகளுக்கும் கருத்து ஒற்றுமையுடைய தமிழ்ப் பழமொழிகளையும், உள்ளடக்கம் உருவம் இரண்டிலும் ஒற்றுமையுடைய பழமொழிகளையும் தேடிக் கொணர்ந்தார்கள். அதன் பின்னர் ஆய்வு தொடங்கியது. ஒற்றுமைக்கும், வேற்றுமைக்கும் காரணங்களை ஆராயும் ஒரு கட்டுரையை நான் எழுதினேன். இப் பிரச்சினைக்கு நான் தீர்வு கண்டுள்ளேன்.

கடைசிக் கட்டுரையும் புனை கதை மானிடவியல் Mythography இராமாயண நிகழ்ச்சிகளில் சில வட இந்தியாவில் மட்டும்தான் நடந்தது என்று H.D. சங்காலியா என்ற தொல்பொருள் அறிஞர் பண்டைய இராமாயணச் சுவடிகளையும், அவை குறிக்கும் தலங்களைத் தோண்டி ஆராய்ந்தும் முடிவுக்கு வந்துள்ளார். அவர் இராமாயண நிகழ்ச்சிகள் நடந்த இடங்களையே தேசப்படத்தில் குறித்துள்ளார்.

தமிழ் நாட்டில் பல இடங்கள் இராமாயணக் கதை மாந்தர் அல்லது நிகழ்ச்சிகளோடு தொடர்புடைய தலங்களாக, தலமாந்தர் நம்புகிறார்கள்.

இவற்றில் ஏழெட்டுத் தலங்களை எடுத்துக்கொண்டு நான் ஆராய்ந்துள்ளேன். இராமாயணம் அல்லது இராமாயணப் பாத்திரங்கள் தமிழ் நாட்டில் பிரபலமடைந்த பின், ஒவ்வொரு தல மக்களும் தங்கள் ஊரை அதனோடு தொடர்புபடுத்திக்கொள்ள கொண்ட விருப்பமே, இப்புனை கதைகளுக்குக் காரணம் என்று முடிவு கண்டுள்ளேன்.

இப்புது முயற்சிக்கு தமிழ் ஆராய்ச்சியாளர், இளம் மாணவர்கள் ஆதரவு தருவார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

ஆராய்ச்சி,
பாளையங்கோட்டை.

**நா. வானமாமலை**

# பொருளடக்கம்

## பாகம் 1 மானிடவியல்


| | | | |
|---|---|---|---|
| 1. | உலகப் படைப்புக் கதைமூலங்கள் – ஓர் ஆய்வு | ❋❋ | 2 |
| 2. | உலகப் படைப்புப் புனைகதைகளும், அவற்றின் சமூக அடித்தளங்களும் | ❋❋ | 39 |
| 3. | தாய் தெய்வ வணக்கத்தின் சமூக அடிப்படைகள் | ❋❋ | 79 |


## பாகம் 2 சமூகவியல்


| | | | |
|---|---|---|---|
| 1. | தஞ்சைக் கோயிலின் செலவும் – நில வருவாயும் | ❋❋ | 94 |
| 2. | திரிபுரி பழமொழிகளுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகள் – ஓர் ஒப்பாய்வு | ❋❋ | 122 |
| 3. | இராமாயணத்தோடு தொடர்புடைய இடங்கள் பற்றிய புனைகதைகள் | ❋❋ | 140 |

பாகம் - 1

# மானிடவியல்

# 1

# உலகப் படைப்புக் கதைமூலங்கள்

## ஓர் ஆய்வு

உலகம் படைக்கப்பட்ட விதம் பற்றி வரலாற்று முற்கால மக்கள் பல கதைகளைப் படைத்திருக்கிறார்கள். அவற்றுள் இருவிதமானவற்றை வேறுபடுத்திக் காணலாம். உலகைப் படைத்தது தாய்தான். அவளை உலக மாதாவாகக் கருதி படைக்கப்பட்ட கதைகள் ஒரு விதம். உலகைப் படைத்தது தந்தைதான். அவர் உலகப் பிதா என்று கருதிப் படைக்கப்பட்ட கதைகள் இன்னொருவிதம். சில கதைகளில் தாய் கடலையும், வானையும் படைத்தாள் என்றும், பூமியையும், ஜீவராசியையும் அவளுடைய வழித்தோன்றலான ஒரு ஆண்மகன் படைத்தானென்றும் கூறப்படுகிறது.

இவை யாவும் நாகரிக முற்கால மக்களின் வாய்வழிக் கதைகள். இவற்றை எழுத்துத் தோன்றிய பின்னர் தனிக்கதைகளாகவும், காப்பியங்களின் பகுதிகளாகவும், சமய நூல்களின் பகுதிகளாகவும் ஆக்கிவிட்டார்கள். இவற்றுள் பழைமையானவை பாபிலோனிய சுமேரியக் கதைகள், கிரேக்கக் கதைகள், யூதர்களது கதைகள், ஆரியர்களது வேதப் புராணக் கதைகள் முதலியன.

இக்கதைகள் தோன்றிய சமுதாயச் சூழல்களை அகழ்வாராய்ச்சி, மானிடவியல் ஆய்வுகள் மூலம் கண்டுபிடித்து இக்கதைகளை உருவாக்கிய மக்களின் பண்பாட்டு நிலைகளிலிருந்து அக்கதைகள் எவ்வாறு உருவாயின என்பதை நாம் காண வேண்டும்.

உலகைப் படைத்தது யார்? இக்கேள்வியை வரலாற்று முற்காலத்திலும் நாகரிகத் துவக்க காலத்திலும் வாழ்ந்த மக்கள்

கேட்டனர். ஆதாரங்களோடு விடையளிக்க முடியாத வினாக்களுக்கு கதைகளைப் புனைந்து அவற்றையே விடையாக அளித்தனர். விஞ்ஞான ஆய்வுகளும், சிந்தனை வளர்ச்சியும் ஏற்பட்டிராத காலத்தில் பண்டைய மக்கள் இயற்கையைப் பற்றியும் வாழ்க்கையைப் பற்றியும் இத்தகைய விடைகளையே கண்டுபிடித்திருக்கிறார்கள் என்பதைப் பண்பாட்டு மானிடவியல் விளக்குகிறது.

## படைப்புக் கதைகளின் தோற்றம்

இப்புனை கதைகளின் தோற்றம் பற்றி ஆண்ட்ரூலாங் கூறுவதாவது: "பண்டைய மக்களின் சடங்காச்சாரங்களினின்றும் (Rite) இக்கதைகள் எழுகின்றன. மனிதனது இயல்பு பற்றியும், பிரபஞ்சத்தின் மூலாதாரம் பற்றியும் தத்துவ பூர்வமான சிந்தனைகளாக இப் புனை கதைகளைக் கருதமுடியாது. பிரபஞ்சம் எப்படித் தோன்றியது என்ற வினாவிற்கு இவை கற்பனையான விடை என்று கொள்ளுவதற்கில்லை".[1] ஈ.ஓ. ஜேம்ஸ் கூறுகிறார்: "படைப்புக் கதைகளும் சாவின் துவக்கமும் மனித இனத்தின் அழிவும் பல புனை கதைகளின் கருப்பொருள்களாக இருப்பினும் அவை தத்துவ விளக்கங்களாக இல்லை என்பது ஆண்ட்ரூ லாங் கூறுவதுபோல் உண்மையே."[2]

பண்டைய மக்கள் சடங்காச்சாரங்களை வாழ்க்கையில் நலன்களைப் பெற மிக அவசியமெனக் கருதினர். மழை பெய்யவும், பயிர் வளரவும், காய், கிழங்குகள் கிடைக்கவும் நோய் நொடிகள் வராமல் இருக்கவும், வேட்டையில் விலங்குகள் கிடைக்கவும், புயல் போன்ற இயற்கை விபத்துகள் நேராமல் இருக்கவும் பலவகைச் சடங்குகளை நிகழ்த்தினர்.

இலையுதிர் காலம் முடிந்து வசந்த காலம் துவங்குகிறபோது பருவ மாறுதலை வரவேற்றும் வசந்த காலத்தில் பயிர்கள் செழித்து வளரவும் பண்டைய மக்கள் சடங்குகளை நடத்தினர். காலங்களை மனித உருவங்களாகக் கற்பனை செய்து ஒரே தெய்வம் இறந்து மறுபடி உயிர் பெறுவதாக நம்பி, இவற்றை நடத்தினர்.

எகிப்திய பிரமிட் கோபுரங்களில் செதுக்கப்பட்டிருக்கும் சிற்பங்களிலிருந்து 'ஆஸிரிஸ்' என்ற பருவங்களின் தெய்வம் இறந்து மறுபடி உயிர்த்தெழும் கதையையும், சடங்குகளைப் பற்றியும்

அறிந்துகொள்ள முடிகிறது. தாலமி அரசனின் கல்வெட்டுக்கள், இச்சடங்கு விழா நடைபெற்ற விதத்தைக் கூறுகிறது. இவ்விரண்டு சான்றுகளிலும் கதாநாயகர்களின் பெயர்கள் வேறுபட்ட போதிலும் அவர்களின் இயல்பும், கதையின் நிகழ்ச்சிகளும் ஒன்றாகவே இருக்கின்றன. இத்தெய்வங்களின் உருவத்தை மண்ணாலும், பார்லி வைக்கோலாலும், மணலாலும் செய்து தங்க நிற வர்ணம் பூசுவார்கள். எகிப்திய மாதமான கோயாக் மாதம் 12–ம் தேதி விழாத் தொடங்கும். 24–ம் தேதி வரை அவ்வுருவத்தைப் புனித முழுக்காட்டுவார்கள். பின்பு அவ்வுருவத்தை ஒரு படகில் வைத்து பாபைரஸ் என்ற நாணலால் செய்யப்பட்ட 24 படகுகள் புடை சூழ நீரினுள் செலுத்துவார்கள். படகுகளில் மொத்தம் 364 விளக்குகளை (இது ஓர் ஆண்டைக் குறிக்கும்.) ஏற்றுவார்கள். 24–ம் தேதி ஆஸிரிஸின் உருவத்தை, பிணத்தைப் பதனிட்டு மம்மி ஆக்கிக் அதனை அலங்கரிப்பார்கள். அதன் பின்னர் ஒரு சவப்பெட்டியில் அதனைக் கிடத்துவார்கள். உருவத்தின் கீழ் விதைகளைப் பரப்பி வைப்பார்கள். 30–ம் தேதி சவப்பெட்டியை ஓர் அறையில் வைத்துப் பூட்டுவார்கள். இப்பொழுது ஆஸிரிஸின் இறந்து போன நிகழ்ச்சி சடங்காக நடிக்கப்பட்டுவிட்டது.

இனி உயிர்த்தெழும் நிகழ்ச்சியையும் ஆஸிரிஸின் கோவிலிலுள்ள சிற்பங்கள் காட்டுகின்றன. வட எகிப்தில் காணப்படும் பாழடைந்த ஆஸிரிஸ் கோவில் சுவர்களில் காணப்படும் புடைப்புச் சிற்பங்களிலிருந்து உயிர்த்தெழும் கதையை அறிய முடிகிறது. 'மம்மியாகக் கிடக்கும் ஆஸிரிஸைச் சூழ்ந்து பல தெய்வங்கள் நிற்கின்றன. அனுபிஸ் ஐஸிஸ், நெப்திஸ் முதலிய தெய்வங்களும் பசுத்தெய்வமான ஹாதோரும், அவளுடைய சகோதரன் ஹெகட்டும் ஆஸிரிஸின் உடலருகில் நிற்கிறார்கள். உயிர்த்தெய்வமான தவளைத் தெய்வம் உடலருகில் உட்கார்ந்திருக்கிறது. ஒரு கழுகு ஆஸிரிஸின் தலைப்பக்கமும், மற்றொன்று காலினருகில் பறப்பது போல சித்திரங்கள் இருக்கின்றன. அடுத்த சித்திரங்களில் ஆஸிரிஸ் தலையில் மகுடத்தோடு தலையைத் தூக்குவது போலவும், பின் எழுந்து நிற்பது போலவும் காணப்படுகின்றன. கடைசிச் சித்திரத்தில் ஆஸிரிஸ் செங்கோலைக் கையிலேந்தி நிற்கிறான். ஒரு தாடி தரித்த ஆண்தெய்வம் கையில் கிரக்ஸ் அனஸ்தா என்ற உயிரின் அடையாளத்தைக் கையில் பிடித்துக்கொண்டு நிற்கிறது'.[3]

இச்சிற்பங்கள் பருவமாற்றத்தின் போது பண்டைய எகிப்திய மக்கள் நிகழ்த்திய சடங்குகளுக்கு அடிப்படையான நம்பிக்கைகளை மிகத் தெளிவாகக் காட்டுகின்றன. இச்சடங்குகளிலிருந்தும், நம்பிக்கைகளிலிருந்தும்தான் ஆஸிரிஸ், ஐஸிஸ் புனைகதை உருவாகியது. எனவே இயற்கையின் மாற்றத்தை விளக்க முடியாத போது மாந்திரீகச் சடங்குகளைக் கையாண்டு, அதனை தங்கள் வாழ்க்கைத் தேவைகளுக்கேற்ப மாற்றுகிறபோது தோன்றுகிற நம்பிக்கைகளை உறுதிப்படுத்திக்கொள்ளவும், அடுத்த பரம்பரைக்கு அவற்றை வழிச் செலுத்தவும் இப்புனைகதைகள் தோன்றின. இக்கதைகள் குறிப்பிட்ட சமுதாய நிலைமைகளில் குறிப்பிட்ட பண்பாட்டுச் சூழலில் எழுந்தன. இவை சமூக மாறுபாட்டுக்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் ஏற்றாற்போல் மாறின. வெவ்வேறு சமூக அமைப்புகளும் பண்பாட்டு வளர்ச்சியும் உடையவர்கள் கலப்புறும் பொழுது இணைந்தும், அவை முரண்பட்டும் வேறுபட்டும், வளர்ச்சியும், சிதைவும் அடைந்தன.

எகிப்தில் நடைபெற்ற இச்சடங்கு மிகப் பழமையானது. எகிப்தின் பாராவோக்கள், புரோகிதர்களாகவும், ஆடுபவர்களாகவும் செயல் புரிந்தனர். மன்னர்களான பின், அவர்கள் ஆஸிரிஸ் சடங்குகளின் கதாநாயகர்களாகினர். பாராவோ சாவதாகவும், உயிர்த்தெழுவதாகவும் இச்சடங்கு நடைபெற்றது. அதன் பின்னர் மன்னனது தெய்வீகத் தன்மையை நிலைநாட்டுவதற்காகவே கதைகள் புனையப்பட்டு, இச்சடங்கிற்குப் பொருளை அளித்தனர்.

ஆண்டுதோறும் நடைபெறும் இவ்விழாவினை விளக்க எழுந்த கதை சமூகப் பொருளாதார அமைப்பை நிலை நிறுத்தப் பயன்படுத்தப்பட்டது. ஆடுமாடுகள் பல்கிப் பெருகவும், பயிர்கள் செழித்து வளரவும், மனித இனம் பெருகவும் இச்சடங்கு அவசியமென எண்ணிய புராதன எகிப்தியர்கள், தங்கள் பண்பாட்டுக் கதாநாயகனைச் சிந்தனையில் தோற்றுவித்து, ஆண்டுதோறும் அவனது சாவையும் உயிர்த்தெழுதலையும் கொண்டாட அவனைச் சுற்றி ஒரு புனை கதையையும் படைத்தார்கள்; இது தனி மனிதச் சடங்கல்ல; சமுதாயச் சடங்கு. இது சமூக நலனை நோக்கமாகக் கொண்டது. தனி மனித மோட்சத்தை நோக்கமாகக் கொண்டதல்ல. அரசனுடைய தெய்வத்தன்மை, விவசாயப் பருவங்களின் மாறுதலைக் குறிக்கும். "ஹோரஸ் ஆஸிரிஸ்

குறியீடு மீதுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் இச்சடங்கும் புனைகதைகளும் எழுந்தன. இதனைப் போலவே புராதன மக்கள் பாபிலோனியாவில் "தம்மூஸ் – இஷ்டார்" கதையையும் புனைந்தனர்."

நாகரிகத் துவக்க காலத்துப் புனைகதையொன்றின் தன்மையை மேலே கண்டோம். இக்கதை நாகரிக முற்காலத்திலேயே தோன்றியிருத்தல் வேண்டும். சமுதாய மாற்றங்களால் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றங்களால் கதை மாறியிருக்க வேண்டும்.

நாகரிக காலத்துக்கு முன்னர் எகிப்தை அரசிகள் ஆண்டனர். அவர்கள் மணம் செய்து கொள்வதில்லை. விரும்பிய ஆண்மகனோடு ஓராண்டு வாழ்ந்து பின்னர் அவனைப் பலியிட்டுவிடுவார்கள். இது பெண்ணாதிக்க விவசாய சமுதாயத்தில் நடைபெற்றது. கலப்பை விவசாயம் தோன்றிய பின்னர் ஆணாதிக்க சமுதாயம் படிப்படியாக எழுந்தது. அப்போது அரசி காதலனைக் கொல்லுவது நின்றது. ஆனால் ஒரு நாள் அவள் அரச பதவியை இழந்து, வேறொருவனுக்கு அதனை அளித்து அவனைப் பலியிடும் வழக்கம் தோன்றியது. (Substituted sacrifice) பின்னர், அதுவும் நின்று ஆஸிரிஸ் இறந்து உயிர்ப்பித்தலை பொம்மை இறந்து உயிர் பெறும் சடங்காக மக்கள் கொண்டாடி இருத்தல் வேண்டும். இம்மாறுதல்கள் நடந்த கால எல்லையில்தான் ஹோரஸ் ஆஸிரிஸ் கதை புனையப்பட்டிருத்தல் வேண்டும்.[4]

இப்புனை கதைபோலவே, பல இயற்கை நிகழ்ச்சிகளைப் பற்றிய சடங்குகளும் அவற்றிலிருந்து தோன்றிய புனை கதைகளும் பண்டைய மக்களிடையே வழங்கிவந்தன. சூரியனைப் பற்றிய சடங்குகளும் கதைகளும், சந்திரனைப் பற்றிய சடங்குகளும் கதைகளும், அக்கினியைப் பற்றிய சடங்குகளும் கதைகளும் பண்டைய நாத்திக நாடுகளில் வழங்கி வந்தன. மூலக்கதை சமுதாய மாற்றத்திற்கேற்ப அவ்வச் சமுதாய மாற்ற கட்டத்தில் மாற்றப்பட்டிருக்கின்றது. எனவே புனைகதைகள் தற்காலப் படைப்புக் கதைகளைப் போன்றவையல்ல. அது ஒரு கால வாழ்க்கையேயாகும். அதாவது வாழ்க்கையை இயக்கும் நம்பிக்கைகளை அவை அடிப்படையாகக் கொண்டவை.

இதனால்தான் பேராசிரியர் மாலினாவ்ஸ்கி பின்வருமாறு கூறுகிறார்:

"காட்டுமிராண்டி சமுதாயத்தில் வழங்கிய புனைகதை அதாவது மூலநிலைப் புனைகதை சொல்லப்படுகின்ற ஒரு கதையன்று. அது வாழ்க்கையின் உண்மையாகும். இன்று நாம் படிக்கும் ஒரு நாவலின் தன்மையைப் பெற்றதன்று நாகரிக முற்கால புனைகதை. அக்கதையின் நிகழ்ச்சிகள் உண்மையில் புராதன காலத்தில் நடைபெற்றதாக அக்கதையைச் சொல்லுபவர்கள் நம்புகிறார்கள். அதுமட்டுமல்லாமல் அக்கதையின் சம்பவங்கள், நிகழ்ந்த காலத்திலிருந்து தம் காலம் வரை உலகையும், மனித விதியையும் இயக்கிவருவதாகவும் அவர்கள் நம்புகிறார்கள். ஒரு கிறிஸ்தவன் பைபிள் கதையான, சிருஷ்டி, மனிதன் தாழ்வு, சிலுவையில் மரித்த கிருஸ்துவினால் மனிதன் மேன்மை பெறுவது, ஆகிய சம்பவங்கள் எவ்வளவு உண்மையெனக் கருதுகிறானோ அவ்வளவுக்குத் தான் கூறும் கதைகள் உண்மையெனப் பண்டை மனிதன் நம்பினான்."[5]

பண்டைய பண்பாட்டு வளர்ச்சி நிலையில் இருக்கும் தற்கால இனக்குழு மக்களும் அவ்வாறே நம்புவதை மானிடவியலாளர் கண்டு ்ளார்கள்.[6]

ட னைகதைகள் இத்தன்மையன என்பதை அறிந்துகொண்டபின், நாம் உலகப் படைப்புக்கதைகளில்" மிகப் பண்டைக்காலக் கதைகளை ஆராய்ந்து அவற்றின் தோற்றத்திற்கு அடிப்படையான சமுதாய அடித்தளத்தைக் கண்டுபிடித்து இரண்டையும் தொடர்புபடுத்திக் காண முயலுவோம்.

படைப்புக் கதைகளில் மிகப் பழமையானவை பாபிலோனிய–சுமேரியக் கதை, கிரேக்கக் கதைகள் ஆகியவையாகும்.[7] அதற்கடுத்த பண்பாட்டுக் கட்டத்தில் யூதர்களது யெஹோவா – படைப்புக்கதையைக் கூறலாம். இதைப் பின்பற்றியே பைபிள் உலகப்படைப்பின் 'வரலாற்றை'க் கூறுகிறது.

ஏறக்குறைய அதே பண்பாட்டு வளர்ச்சி நிலையில் ரிக்வேதத்தில் காணப்படும் புருஷ சூக்தக் கதைகளைக் கூறலாம்.[8] பின்னர் விஷ்ணு புராணத்தில் கூறப்படும் நாராயணன் – உலகப்படைப்புக் கதையைக் குறிப்பிடலாம்.

கால நிர்ணயம் செய்யமுடியாத தந்திரீக நூல்களில் காணப்படும் படைப்புக் கருத்துக்கள் மிகப்பழமையானவை என்பதில் சந்தேகமில்லை.

## பாபிலோனிய - சுமேரியப் படைப்புக் கதைகள்

**பாபிலோனிய படைப்புக் கதை:** முதலில் பாபிலோனிய – சுமேரியப் படைப்புக் கதையைக் காண்போம். பாபிலோனியாவின் பண்டையத் தலைநகரான நினிவேயை ஜார்ஜ் ஸ்மித் 1873–ல் அகழ்ந்து, ஆராய்ந்தபொழுது அஷூர்பானிபால் (சுமார் கி.மு. 2000) என்ற அரசனின் காலத்தில் எழுதப்பட்ட சுட்டமண் ஓட்டுச் சாசனங்கள் கிடைத்தன. அவற்றில் படைப்புக்கதை எழுதப்பட்டுள்ளது. அச்சுட்டமண் ஓடுகளின் வாசகத்தை எல்.டபிள்யூ. கிங் என்ற ஆய்வாளர் படித்து 'படைப்பு பற்றிய ஏழு ஓடுகள்' என்னும் நூலை[9] எழுதியுள்ளார். அந்நூலில் காணப்படும் செய்திகளை அடிப்படையாகக் கொண்டே நாம் இக்கதையின் போக்கைக் கூறுவோம்.

இப்பிரபஞ்சத்தின் ஆரம்ப காலத்தில் கடல் மட்டுமே இருந்தது. மேலே இருக்கும் வானத்திற்கும், கீழே இருக்கும் பூமிக்கும் பெயர்களிடப்படவில்லை. இவற்றின் தந்தை 'அப்ஸூ'; தாய் 'தியாமத்'. தரை இன்னும் உருவாகவில்லை. சேறும் இல்லை. அவற்றின் விதியும் நிர்ணயிக்கப்படவில்லை. கடலில் ஓர் அசைவு உண்டாயிற்று. பல தேவதைகள் நீரிலிருந்து வெளிவந்தன. 'லச்மூ' தேவனும், 'லச்சாமூ' தேவியும் வெளிவந்தனர். பின்னர் 'அன்ஷார்' தேவனும் 'கிஷார்' தேவியும் நீரினின்று எழுந்தனர். பின்னர் 'அனு' என்னும் வான தேவன் உதித்தான். அவனுடைய மனைவி 'அனாது'.

'இயா' இதன்பின் தோன்றினான். அவனே எல்லாத் தேவர்களிலும் அறிவு மிக்கவனாகவும் வலிமை மிக்கவனாகவும் இருந்தான். அவனுக்குச் சம்மானவன் இல்லை. அவன் சமுத்திர ராஜனாகவும், பூமியின் மன்னனாகவும் இருந்தான். அவனுடைய தேவி 'டாம்கினா' பூமியின் தேவியாக இருந்தாள். இவ்வாறு தேவர்களும் தேவியர்களும் தோன்றி, வலிமையும் புகழும் பெற்றார்கள்.

அப்ஸூவும், தியாமத்தும் இருளடர்ந்த கடலில் குழப்பத்தினுள் வாழ்ந்தார்கள். தங்களது வழித்தோன்றல்களான தேவர்கள் பிரபஞ்சத்தைத் தங்கள் ஆளுகைக்குட்படுத்தி, குழப்பத்தில் ஒழுங்கை நிலைநாட்ட முயலுவதைக் கண்டு மூலப்பிதாவும், மூலமாதாவும் கவலையுற்றனர். தியாமத் தன்மீது அடித்துக்கொண்டு புயல்களைத் தோற்றுவித்தாள்.

அப்ஸூவும் அவனுடைய அமைச்சனும் தியாமத்தைப் போய்ப் பார்த்து அவளை வணங்கிவிட்டு, தேவர்களுடைய சூழ்ச்சி பலிக்காமல் இருப்பதற்கு என்ன செய்யவேண்டுமென்று கேட்டார்கள்.

"ஒளி மிக்கவளே, தேவர்கள் சூழ்ச்சியை அறிந்து நான் கவலைப்படுகிறேன். இரவு, பகலாக எனக்கு உறக்கமில்லை. அவர்களை அழித்து நிம்மதியாக ஓய்வுகொள்ள விரும்புகிறேன்" என்றான், அப்ஸூ.

தியாமத் இதனைக் கேட்டு உறுமினாள். புயல்கள் வீசின. அப்ஸூவைப் பார்த்து அவள் விடை கூறினாள்; "அவர்கள் பலசாலிகளாயினும் நம்மால் அவர்களை அழித்துவிட முடியும்"

இதைப் பற்றி இயா அறிந்தான். தீய தேவதைகள், தேவர்களை அழிக்க எண்ணிச் சூழ்ச்சி செய்வதைப் பற்றித் தெரிந்துகொண்டான். ஒரு மந்திரத்தால் அப்ஸூவையும் மும்முவையும் அழிந்துவிடச் செய்தான்.

அவர்களது நண்பனான கிங்கு தியாமத்தைப் பார்த்து "மும்முவையும், அப்ஸூவையும் அழித்துவிட்டார்கள். அதற்காக நீ பழிவாங்க வேண்டும், புயல் தேவியே" என்று கூறினான்.

"போர் துவங்கு" என்று தியாமத் கட்டளையிட்டாள்.

"கூபர் தாய்" என்ற மறுபெயர்கொண்ட தியாமத் பேய்களையும், ராட்சசப் பாம்புகளையும், மலைபோன்ற விஷ ஜந்துக்களையும், தீயுமிழும் டிரகான்களையும் படைத்தாள். மலைப் பாம்புகளையும், நச்சரவங்களையும், புயல்வீசும் விலங்குகளையும், வேட்டை நாய்களையும், தேள் மனிதர்களையும், மீன் மனிதர்களையும், ராட்சஸ ஆடுகளையும் படைத்தாள். கிங்குவைப் படைத் தலைவனாக்கினாள். அவனை முதல்தேவன் என அறிவித்தாள். அவனை உயர்ந்த இருக்கையில் அமர்த்தி, சிறந்த உடைகள் அணிவித்து, அவனிடம் சொன்னாள்:

"உன்னுடைய ஆணையைத் தேவர்கள் நிறைவேற்ற வேண்டும். நீ அவர்களை அடக்கி ஆளவேண்டும். நீயே யாவரினும் வலியவன். உன்னை நான் கணவனாக ஏற்றுக்கொள்ளுகிறேன். மூன்றுலகிற்கும் நான் உன்னை அதிபதியாக்குகிறேன்" என்று கூறி அவனிடம் விதியின் கல்வெட்டையளித்தாள்.

இயா இதனையெல்லாம் அறிந்தான். தன் தந்தை அன்ஷாரிடம் சென்று, “நமது தாய் தியாமத் நம் மீது கோபங் கொண்டுள்ளாள். தேவர்களை அவள் தன்னோடு சேர்த்துக்கொண்டதோடு தான் படைத்த உயிர்களையும் நம் மீது ஏவிவிட்டிருக்கிறாள். நீங்கள் அப்ஸூவையும், மும்முவையும் அழித்துவிட்டீர்கள். இப்பொழுது நம்மையெல்லாம் அழிக்க கிங்குவை உலகத் தலைவனாக நியமித்திருக்கிறாள். தியாமத்தை எதிர்க்க யாருமில்லை” என்றான்.

அவள் கோபத்தைத் தணித்து வரும்படி அவன் முதன்முதலில் ‘அனு’வை அனுப்பினான். அனு தியாமத்தின் உலகிற்குப் போய் அவளைப் பார்க்க அஞ்சித் திரும்பிவிட்டான். பின்னர் இயா சென்றான். அவனும் அஞ்சித் திரும்பிவிட்டான்.

பின், அன்ஷார் இயாவின் மகன் மொரோடாக்கை அழைத்து, “என் அன்பிற்குரிய மகனே நீ போருக்குப் போ. உன்னை யாராலும் ஜெயிக்க முடியாது” என்றான்.

“தங்கள் கட்டளைப்படியே நடக்கிறேன். எந்த மனிதன் தங்களைப் போருக்கு அழைக்கிறான்?” என்று அவன் கேட்டான்.

“மனிதனல்ல. தியாமத் என்னும் பெண் நம்மை போருக்கு அழைக்கிறாள். பயப்படாதே. தியாமத்தின் மண்டையை நீ உடைப்பாய். மந்திரத்தால் நீ அவள் மீது வெற்றி கொள்வாய். அவசரமாகப் புறப்படு. அவளால் உன்னை காயப்படுத்த முடியாது. நீ திரும்பி வருவாய். போய் வா” என்று அன்ஷார் கூறினான்.

மொரோடாக், தேவர் மகாசபையைக் (உப்ஷினாகு) கூட்டினான். அவர்களும் அன்ஷாரின் விருப்பத்தை ஆதரித்தால், தானே தேவ சேனாபதியாக தியாமத் மீது படையெடுத்துச் செல்வதாகக் கூறினான், அவர்கள் மொரோடாக்கைத் தங்களது தலைவனாகவும், தேவ சேனாபதியாகவும் நியமித்தனர். அவர்கள் கூறியதாவது:–

“விண்ணவர் அனைவரினும் நீ மேலானவன். உன்னுடைய கட்டளை ‘அனு’வின் கட்டளையாகும். தேவர்களைப் பதவியில் உயர்த்தவும், தாழ்த்தவும் உனக்கு அதிகாரம் உண்டு. உன்னுடைய அதிகாரத்திற்கு எதிராகத் தேவர்களாகிய நாங்கள் எதுவும் செய்ய மாட்டோம். இப்பிரபஞ்ச முழுவதையும் ஆளும் உரிமையை உனக்கு

நாங்கள் அளிக்கிறோம். உனது ஆயுதங்களை யாரும் எதிர்த்து நிற்க முடியாது. கலகம் செய்யும் தேவர்களை வீழ்த்து. உன் மீது நம்பிக்கை கொண்டு உன்னைப் பணிபவர்களைக் காப்பாற்று."

ஒரு துணியைக் கீழே விரித்து அவனை அதைப் பார்த்து வாயால் ஊதச் சொன்னார்கள். அவன் அவ்வாறே செய்தான். துணி மறைந்து போய்விட்டது. பின்னர், 'வா' என்று கூப்பிட்டான். துணி தரையில் கிடந்தது.

இந்த அடையாளத்தைக் கண்டதும் தேவர்கள் "மன்னன் வாழ்க!" என்று ஆர்ப்பரித்தனர்.

மொரோடாக்கின் யுத்தத் தயாரிப்புக்களை இனி மூலக்கதை மிக விரிவாகக் கூறுகிறது. அதனைச் சுருக்கமாகக் கூறுவோம்: 1. வில்லையும் அம்பறாத்துணியையும் அவன் தோளில் மாட்டிக் கொண்டான். 2. கையில் கதையை எடுத்துக்கொண்டான். 3. அனு அவனுக்கு ஒரு வலையைக் கொடுத்தான். 4. மொரோடாக் ஏழு காற்றுக்களை உண்டாக்கினான். அவை அவனைப் பின் தொடர்ந்து சென்றன. இடி மின்னலை ஆயுதமாகக் கையில் எடுத்துக்கொண்டான். விஷ மூச்சு வீசும் நான்கு குதிரைகள் கட்டிய தேரில் குதித்தேறி அமர்ந்தான். அவன் தேரில் முன் செல்ல தேவர் படை பின் தொடர்ந்தது.

அவன் தியாமத்தின் மறைவிடத்திற்குப் போய்ச்சேர்ந்தான். கிங்குவும், தியாமத்தும் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒரு வினாடி அவன் தயங்கினான். இதற்குள் அவள் அவனைப் பார்த்துவிட்டாள். உறுமிக்கொண்டே ஓடிவந்தாள்.

அவன் அவளைப் படைதிரட்டிக்கொண்டு போருக்கு வருமாறு அழைத்தான்.

ஆனால் அவள் நேரில் அவனை நோக்கி வந்தாள். மொரோடாக் அனு தனக்கு கொடுத்த வலையை வீசினான். அவள் தன் வாயைப் பிளந்தாள். அது ஏழு மைல் அகலமிருக்கும். அவள் வாயை மூடிவிட முடியாமல் மொரோடாக் காற்றை அவள் வாயினுள் வீசுமாறு கட்டளையிட்டான். காற்று வீசியது. திறந்த வாயை அவளால் மூடமுடியவில்லை. அவளது இதயம் வலிமை குன்றியது. அவள் மூச்சுத் திணறினாள். மொரோடாக் அவள் வயிற்றை நோக்கி ஓர் அம்பை

எய்தான். அது அவள் வயிற்றைக் கிழித்து, இதயத்தையும் துண்டாக்கியது. தியாமத் இறந்துபோனாள். அவளுடைய படைகள் சிதறியோடின.

மொரோடாக் இறந்துபோன கிங்குவிடமிருந்து விதி ஓட்டை எடுத்துக்கொண்டான். அவன் தியாமத்தின் மண்டையை உடைத்து அவளுடைய இரத்தம் பூமியில் படாதபடி காற்றினால் மறைவிடங்களுக்குக் கொண்டு செல்லச்செய்தான்.

அவளுடைய உடலை இரு பகுதிகளாக வெட்டி, ஒரு பகுதியைப் பூமியாகவும் மற்றோர் பகுதியை வானமாகவும் படைத்தான். தேவர்களுக்குப் பதவிகள் அளித்து அவர்களைப் பதவியில் அமர்த்தினான். ஒவ்வொரு நாலுக்கும் ஒரு தேவனை அதி தேவதையாக்கினான். சந்திரனை நாட்களை அளக்கும்படி நியமித்தான். அவனது தந்தை இயாமனிதன் உலகில் தோன்றவேண்டும் என்று எண்ணினான். இதையறிந்து மொரோடாக் அவனிடம் கூறினான்: "எனது இரத்தத்தைச் சிந்தி எலும்பை உண்டாக்குவேன். இவ்வுலகை நிரப்ப மனிதனைப் படைப்பேன். தேவர்களை வணங்கவும் அவர்களுக்குக் கோவிலைக் கட்டவும் மனிதன் தேவையல்லவா?".

வேறோர் கதையில் சிப்பார் என்னும் தேவர்களின் அரசி மொரோடாக்கோடு சேர்ந்து 'மனிதனது விதை'யைப் படைத்தாள் என்று கூறப்பட்டுள்ளது.

ஏழாவது சாசன ஓட்டில் அவன் ஐம்பத்தொரு பெயர்களால் தேவதேவன் என்றழைக்கப்படுகிறான். எல்லாத் தேவதைகளும் மொரோடாக்கின் அம்சமென அப்பகுதி கூறுகிறது.

**சுமேரியப் படைப்புக் கதை:** இக்கதைக்கு முன்னர் சுமேரியக் கதையொன்றிருந்தது என்று சுமேரிய நாட்டுக் கதைகளை ஆராய்ந்த ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அதன் சுருக்கம் வருமாறு:

"காடுகளிலும், கடலிலும், பயங்கர ராட்சஸ மனித விலங்குகள் வாழ்ந்தன. அவை மலையில் வாழ்ந்த வீரர்களுடன் பகைமை கொண்டிருந்தன. வீரர்களின் மன்னனான இயா மனிதர்களின் விரோதிகளான இவ்விலங்குக் கூட்டத்தின் மீது படையெடுத்துச் சென்று, அவற்றின் தலைவனான அப்ஸூவையும், அவன் மகனான

மும்முவையும் கொன்றான். ஆனால் மிகவும் சக்தி வாய்ந்த தியாமத் என்னும் உலக மாதா இன்னும் உயிரோடிருந்தாள். தனது உறவினர்களின் சாவிற்காக அவள் பழிவாங்கத் துடித்தாள். இயா, அவளோடு போரிடத் தயாரிப்புச் செய்தான். சாதாரணமான ஆயுதங்களால் அவளைக் கொல்ல முடியாது. அவளுடைய மந்திர சக்தியும், தந்திரத் திறமையும் அவளை யாராலும் வெல்ல முடியாதவளாக்கின. இயா மந்திரவசியங்களையும், செய்வினைச் செயல்களையும் அவளுக்கு எதிராகச் செய்து பார்த்தான். அவற்றால் அவளை எதுவும் செய்துவிட முடியவில்லை. அவளுடைய உயிர்நிலை அவளுடைய கல்லீரலில் இருந்தது. அவளுடைய வயிற்றில் குத்தி கல்லீரலைக் கிழித்தால் அவள் இறந்துபோவாள்." இதனைத்தான் பாபிலோனியக் கதையில் மொரோடாக் செய்ததாக நாம் கண்டோம்.

இக்கதையில் தியாமத் தனது கணவனையும் மகனையும் விட வலிமைமிக்கவள் என்பது கூறப்பட்டிருப்பது முக்கியமானது.

இக்கதை மொரோடாக் சிறு தெய்வமாயிருந்து தனிப்பெரும் தெய்வமானதைக் கூறுகிறது. அவனே தனிப்பெருங் கடவுளாக வழிபாடு செய்யப்பட்ட காலத்தில் இக்கதை எழுந்திருக்கவேண்டும். இது அரசும், அரசனும் பாபிலோனிய சமுதாயத்தில் தோன்றிய காலத்தில்தான் தோன்றியிருக்க முடியும். இக்கதையை ஆண் ஆதிக்க சமுதாயத்தில், ஆண் வலிமை போற்றப்பட்ட காலத்தில் அச்சமுதாயத்தின் கவிஞர்கள் உருவாக்கியிருத்தல் வேண்டும். மாரோடாக் மர்டாக் என்ற பெயரிலும், எல் என்ற பெயரிலும், பாபிலோனியாவிற்கு வெளியே உள்ள நாடுகளில் பிற்காலத்தில் வழிபாடு செய்யப்பட்டான்.

இவன் ஏகநாயகன், தனிப்பெரும் தேவன் என்று கருதப்பட்டாலும், அவனுக்குத் தந்தையும் பாட்டனும் இருந்தார்கள். அவர்களுக்குப் பகைவர்கள் இருந்தார்கள். அப்பகைவர்கள் பெண்ணாதிக்க, பெண்ணுரிமைப் பண்பாட்டினை உடையவர்கள். தியாமத்தான் அவர்கள் எல்லோருக்கும் தாய். இவளை அன்ஷாராலும், இயாவாலும் கொல்ல முடியவில்லை. மொரோடாக் தான் அவளைக் கொல்லும் அளவுக்கு வலிமையும் வீரமும் உடையவனாக இருந்தான்.

மொரோடாக் உலகைப் படைத்தான். மனிதர்களைப் படைத்தான். ஆயினும் அவனுக்கு முன் கடலும், வானமும், தேவர்களும்,

இராட்சஸர்களும் இருந்தனர். கடலையும், வானையும், தேவர்களையும், ராட்சஸர்களையும் தியாமத்தான் படைத்தாள். அவளுக்கு அப்ஸூ என்ற கணவன் இருந்தான். தேவர்கள் அவனைக் கொன்றபிறகு கிங்கு என்ற வேறோர் கணவனை அவள் நியமித்துக்கொண்டாள். அவனுக்கு அவளே உலகத் தலைமையை அளித்தாள். எனவே உலக ஆதிபத்திய உரிமை அவளிடமே இருந்தது.

அவளை அனு, அன்ஷார், இயா, மொரோடாக் முதலிய தேவர்கள் தாய் என்று அழைத்தார்கள். ஆயினும் தனது இரத்த பரம்பரையோடு அவள் ஏன் விரோதம் கொண்டாள் என்று அனு என்னும் வானதேவன் கேட்கிறான். நமக்கும் இக்கேள்வி தோன்றத்தான் செய்கிறது.

அவள் பிரபஞ்சத்தில், குழப்பத்தை விளைவிக்கப் புயல்களை உண்டாக்கினாள். தேவர்கள் அமைதியையும், ஒழுங்கையும் விரும்பினார்கள். அதனால்தான் மொரோடாக் அவள் மீது போர் தொடுத்து முடிவில் அவளைக் கொன்றான்.

அவள் உயிரோடிருக்கும் பொழுது வானையும், கடலையும், தேவர்களையும், ராட்சஸர்களையும் படைத்தாள். இறந்த பின் அவளுடைய உடலிலிருந்து பூமியையும், வான முகட்டையும் மொரோடாக் படைத்தான். அவன் தனிப்பெரும் தேவனானபின், தன்னையும் தனது பரிவார தேவர்களையும் வணங்க மனிதனைப் படைத்தான்.

கதையின் அடிப்படைக் கருத்துக்கள் இவை. இக்கருத்துக்கள் சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கோடு வளர்ந்தவை. சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கை அறிந்துகொள்ளாமல் அதன் மேற்கோப்பாகத் தோன்றி மாறுதல்களடைந்து வளர்ந்த கருத்து வளர்ச்சியை அறிய முடியாது. உதாரணமாக உலகின் ஆதிப் படைப்பாளி ஏன் ஒரு பெண்ணாக எண்ணப்பட்டாள்? தாய் ஏன் தன் மக்களைப் பகைத்தாள்? தாயைக் கொல்ல ஏன் மொரோடாக் முன் வந்தான்? பின் மனிதனைப் படைத்தவன் ஏன் ஆணாக எண்ணப்பட்டான்? என்ற வினாக்களுக்கு மொரோடாக் கால சமூக அமைப்பு, அதில் ஏற்பட்ட கருத்துக்கள், அதற்கு முன் இருந்த கருத்துக்கள், இவற்றின் இயங்கியல் முரண்பாடுகள், அதன் விளைவாகத் தோன்றிய கூட்டுக் கருத்து இவையனைத்தையும் நாம் ஆராய்தல் வேண்டும். இதனை இவ்விடத்தில் ஆராய்ந்துவிட்டால்

பின்னர் கூறப்படும் படைப்புக் கதைகளுக்கும் அவை தோன்றி மாறி, வளர்ந்த முறைகளுக்கும் விளக்கம் காண்பது எளிதாகும்.

இக்கதைகள் வரலாற்று முற்காலத்தைக் குறித்தவை. இவற்றுள் வரலாற்று மனிதர்கள் எவரும் பங்கு கொள்ளுவதாகக் கூறப்படவில்லை. தியாமத் மனிதர் படைக்கப்படுமுன் கொல்லப்பட்டுவிட்டாள். மொரோடாக்கின் கதை மனிதன் படைக்கப்படுமுன் முடிந்துவிடுகிறது. ஆனால் இக்கதையை மொரோடாக்கை வழிபட்ட மனிதர்கள்தான் கற்பனையால், தங்கள் காலத்திற்கு முன்பிருந்த கதைகளை இணைத்து மாற்றிப் படைத்தார்கள். அவர்கள் காலத்தில் எழுத்துத் தோன்றவில்லை. இது வாய்வழியாகப் பரம்பரை பரம்பரையாக வழிச் செலுத்தப்பட்டது. எழுத்து தோன்றிய பின் எழுதப்பட்டு, படைப்புக் கதையாக அஸுர்பானிபால் என்ற பாபிலோனிய மன்னன் காலத்தில் பாதுகாக்கப்பட்டது.

அவ்வாறானால் இக்கதையின் முக்கியக் கூறுகள் வரலாற்று முற்காலத்தில் பல கட்டங்களில் தோன்றிக் காலப்போக்கிலும், சமுதாய மாற்றங்களின் போக்கிலும் மாறி வளர்ச்சியடைந்து மொரோடாக்கின் கதையாக முழுமை பெற்றிருத்தல் வேண்டும்.

இக்கதையின் கூறுகள் எந்நிலைமைகளில் தோன்றின என்ற வினாவிற்கு விடை காண வரலாற்று முற்காலப் பண்டைச் சமுதாயங்களின் வளர்ச்சி முறையை அறிதல் வேண்டும்.

டார்வினது "உயிரினங்களின் தோற்றம்" என்ற நூல் வெளியான பின்னர் பல உயிரினங்கள் அவ்வவ்வாறே படைக்கப்பட்டன என்ற கருத்து தோல்வியடைந்தது. சிற்றுயிர்கள் சூழ்நிலைக்கேற்றபடி தம்மை மாற்றிக் கொள்வதால் அவை படிப்படி மாற்றம் அடைந்து பல்லுயிர்க்கணங்கள் தோன்றின[11] என்ற பரிணாமக் கருத்து விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டது. அதிலிருந்து உயிரின வளர்ச்சிக் கருத்து விஞ்ஞானத்தில் ஆதிக்கம் பெற்றது. எல்லாத் துறைகளிலும் இப்பரிணாமம் அடிப்படை உண்மையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதுவரை மனிதனது சமுதாயங்களைத் தனித்தனியாகக் கருதி வந்த மானிடவியலும், சமூகவியலும் இக்கருத்தின் அடிப்படையில் ஆய்வுகள் தொடங்கின. உலகப் படைப்புப் போலவே, சமூகப்

படைப்பையும் கருதிவந்த அறிஞர்களின் கருத்துக்களோடு, சமுதாயப் பரிணாம வளர்ச்சி என்ற கருத்து மோதியது.

இது பற்றி கார்டன் சைல்டு பின்வருமாறு கூறுகிறார்: "18-ம் நூற்றாண்டில் ஐரோப்பிய சமுதாயத்தில் இருந்து முற்றிலும் வேறுபட்ட சமுதாயங்களை ஆய்வாளர்கள் கண்டனர். அவர்களை ஸாவேஜ் (Savages) என்றழைத்தனர். அவர்களுள்ளும், சமூக அமைப்பு, தொழில் நுணுக்கம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் பல வேறுபாடுகள் இருப்பதைக் கண்டனர். சில ஆய்வாளர்கள் ஸாவேஜ்களிலும் ஏற்றத்தாழ்வான நிலைகள் இருப்பதைக் கண்டு வேறுபட்ட நிலைகளை வரையறுத்தனர். 1768-ல் பெர்குஸன், ஸாவேஜரி[12] என்ற நிலையை பார்பரிசத்திலிருந்தும் இரண்டையும் நாகரிக நிலையினின்றும் வேறுபடுத்திக் கண்டார். இவையாவும் தொடர்பற்ற தனித் தனியான அமைப்புக்கள் என்று அவர் கருதினார். உயிரினங்கள் தனித்தனியாக படைக்கப்பட்டன என்ற பைபிள் ஆதியாகம கருத்தையொத்து சமூகங்களும் தனித்தனியாக ஒன்றில் இருந்து ஒன்று தோன்றாமல் தனித்தனியாகத் தோன்றியவை என்பதுதான் அவருடைய கருத்து. அவர் காலத்து மானிடவியல், சமூகவியல் அறிஞர்களும் அவ்வாறே கருதினர்.

பரிணாம வளர்ச்சிக் கொள்கை தோன்றிய பின் அறிவுலகம் சமுதாயங்களின் வேறுபாடுகளை அக்கொள்கையின் சிந்தனைகளின் அடிப்படையில் சிந்திக்கத் தொடங்கியது. இது சமூகவியலிலும், மானிடவியலிலும் ஏற்படாமல் தத்துவத்தில் தொடங்கியது. 1850-ல் ஹெர்பட் ஸ்பென்சர்[13] இச்சிந்தனை மாற்றத்தைத் தோற்றுவித்தார். அவர் அங்க ஜீவிகளுக்கும், சமூகங்களுக்கும் ஒரு பொருத்தப்பாட்டை (analogy) எடுத்துக்காட்டினார். அங்கஜீவிகள் சூழ்நிலையின் தொடர்பாலும் மாற்றுச் செயல்களாலும் (mutual interactions) வளர்கின்றன. அதுபோலவே சமுதாயங்களும் சூழ்நிலையோடு எதிர்செயல் புரிவதால் வளர்கின்றன என்ற புரட்சிகரமான கருத்தை வெளியிட்டார். வளர்ச்சிக்குரிய காரணங்கள் இவ்விரண்டிற்கும் வேறு வேறானவை. தற்காலத்திலுள்ள ஸாவேஜ், பார்பரிசம் ஆகிய வளர்ச்சி நிலைகளிலுள்ள சமுதாயங்கள் அவ்வவ் வளர்ச்சிகளில் வளர்ச்சி தடைப்பட்டு நிற்கின்றன. முழுமையாக எல்லாச் சமுதாயங்களையும் கருத்தில் கொண்டால் பரிணாமச் செயல்பாட்டை நாம் காணமுடியும்.

தனித்தனி சமுதாயத்தை மட்டும் ஆராய்ந்தால் இப்பரிணாம வளர்ச்சிப் போக்கைக் காண்பது இயலாது. இது ஸ்பென்சரின் கருத்து. எனவே சமூக மானிடவியல்களில் ஒப்பீட்டு ஆய்வு முறையின் தேவையை ஸ்பென்சர் வலியுறுத்தினார். பண்டைக் கால சமுதாயங்களைப் பற்றிக் கற்பனையான வளர்ச்சிக் கட்டங்களை வரையறுத்துக்கொண்டு தடம் புரண்டு வழி கண்டுபிடிக்க இயலாமல் குழம்பி நின்ற மானிடவியலாருக்கும் சமூகவியலாருக்கும், அவர் தற்காலத்தில் சமூக வளர்ச்சியில் பின் தங்கி ஸாவேஜ் நிலையிலும், பார்பரிஸ நிலையிலுமுள்ள பழங்குடி மக்களது சமுதாயங்களை ஒப்பியல் ஆய்வு செய்து, அவற்றை முற்கால மக்களது தொல்பொருள் எச்சங்களோடு (அகழ்வாராய்ச்சி மூலம் கிடைக்கும்) ஒப்பிட்டுப் பழங்கால சமுதாயங்களின் வளர்ச்சிநிலை, சமுதாய அமைப்பு, பண்பாடு முதலியவற்றை அறிந்து கொள்ளவேண்டும் எனப் போதித்தார். இதன் மூலம் உலக சமுதாயங்களின் ஒற்றை வழி வளர்ச்சிப் போக்கில் வளர்ந்துள்ளதை அனுமானம் செய்வதற்குரிய ஆதாரங்கள் கிடைக்குமெனக் கூறினார். 1891–ல் வெளியான 'பண்டையச் சட்டம்' (Ancient law) என்ற ஹென்றிமெய்னியின் நூலிலும், 'திருமண நிறுவனம்' (The Institution of marriage) என்ற மெக்லென்னானின் நூலிலும், ஸ்பென்சரின் கொள்கையைப் பின்பற்றி ஆய்வு முறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பண்பாடு பற்றி ஸ்பென்சரின் கொள்கை வருமாறு:

"மனித இனத்தின் பல்வேறு சமுதாயங்களின் நிலைகளை பொதுக் கொள்கைகளின் வெளிச்சத்தில் ஆராய வேண்டுமானால், அது மனித சிந்தனை, மனிதச் செயல்கள் ஆகியவற்றின் பொதுவிதிகளை ஆராய்வதாகவே முடியும். உலகம் முழுவதும் நாகரிகத்தின் ஒற்றுமைகளைக் கவனிக்கும்பொழுது பொதுவான செயல்களுக்குப் பொதுவான காரணங்கள் இருக்கவேண்டும் என்று அனுமானிக்கலாம். வேறுபட்ட பலநிலைப் பண்பாடுகள் ஒரு வழிப்போக்கான வளர்ச்சியின் பல கட்டங்களே என்பதையும், ஒவ்வொரு காலகட்டத்தின் பண்பாட்டு நிலை பழமை வரலாற்றின் விளைவெனவும், அவ்வக்காலகட்டத்தின் செயல்கள் வருங்காலத்தைப் பாதிப்பவை எனவும் அறியலாம்."

ஸ்பென்சர், சமுதாயங்களின் நம்பிக்கைகளையும் சமுதாயங்களின் நிறுவனங்களையும் ஒப்பிட்டார். ஆனால் அவற்றின் பண்பாட்டையும்,

நிறுவனங்களையும் சமுதாயங்களின் வளர்ச்சியடைந்துள்ள நிலைகளோடு பொருத்திக் காட்டவில்லை. எந்தப் பண்பாடு எந்த வளர்ச்சி நிலையில் தோன்றியவை என்பதையும் ஆராயவில்லை.

இத்தவறுகளை லீவிஸ் ஹென்றி மார்க்கன்[14] என்ற அறிஞர் தமது கொள்கைகளால் ஒருவாறு நீக்கினார். தனித்தனி நிறுவனங்களை, அவற்றின் சமூக வளர்ச்சியை கவனியாமல், ஆராயாமல் சமுதாயப்படி முறை வளர்ச்சியை முழுமையாக ஆராய்ந்தார். சமுதாயங்களை அவற்றின் வளர்ச்சி நிலைக்கேற்றபடி எண் வரிசையில் வரிசைப்படுத்த முயன்றார் மூன்று கால கட்டங்களாக அவற்றைப் பகுத்தார்: (1) ஸாவேஜரி, (2) பார்பரிஸம், (3) நாகரிகம்.

இப்பகுப்பைச் செய்ய அவர் அடிப்படையாகக்கொண்டது அவ்வப் பண்பாட்டு மக்கள் கையாண்ட உற்பத்திக் கருவிகளே. இதனால் அவருடைய பகுப்புக்குரிய சான்றுகளை அகழ்வாராய்ச்சி அளிக்கமுடியும். அவர் மானிடவியலையும் சமூகவியலையும் புறவய ஆராய்ச்சியாக மாற்றும் வழியைக் காண்பித்தார்.

பழைய பண்பாட்டை அறியக் கருவிகள் மற்றும் பண்டைய மக்கள் பயன்படுத்திய பொருள்களைச் சான்றுகளாகக் கொண்டதால் சமுதாயவியலை ஓர் புறவியல் விஞ்ஞானமாக அவர் மாற்றிவிட்டார். இக்கருவிகளின் வளர்ச்சியை அகழ்வாராய்ச்சிச் சான்றுகளின் மூலம் கண்டு பொருளுற்பத்திச் சக்திகளின் பெருக்கத்தை உய்த்துணர்ந்து, அதன் உற்பத்தி விநியோகம் ஆகிய சமூகச் செயல்களுக்கான சமுதாய நிறுவனங்கள் எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தன என்பதையும் அவை பண்டைக் காலம் முதல் அடைந்த மாற்றங்களால் ஏற்பட்ட சமுதாய பரிணாமத்தையும் காணவேண்டும் என மார்கன் போதித்தார். இப்பரிணாமத்தின் அடிப்படையிலேயே கருத்துக்கள், நம்பிக்கைகள், சமயங்கள், சட்டங்கள் எல்லாம் தோன்றுகின்றன. எனவே கருத்துக்களின் உற்பத்தி, சமுதாய பொருளுற்பத்தி முறையோடும் அச்சமுதாயத்தில் மக்கள் ஒரு பிரிவினரோடு மற்றோர் பிரிவினர் கொள்ளும் உறவுகளிலிருந்தும் தோன்றுவதாகும்.

"கார்ல் மார்க்சும், பிரடரிக் ஏங்கெல்சும் மார்கனுடைய பண்டைய சமுதாய திட்டத்தை ஏற்றுக்கொண்டதால் அவருடைய மானிடவியல் கொள்கைகள் பெரிதும் ஆற்றல் பெற்றன. இது தற்செயல்

நிகழ்ச்சியன்று. 1859–லேயே மார்க்ஸ் பொருள் முதல்வாத வரலாற்றுக் கொள்கையை வெளியிட்டார்.[15] இவ்வாண்டில்தான் டார்வினது 'உயிரினங்களின் தோற்றம்' வெளிவந்தது. அகழ்வாராய்ச்சியாளர்களான ஜான்இவான்ஸ், ஃபால்கோனர், ப்ரெஸ்ட்விச் ஆகியோர் பண்டைக்கால மனிதனது வாழ்க்கையை அறிய உதவும் அகழ்வாராய்ச்சிச் சான்றுகளை வெளியிட்டு பிளிஸ்டோஸீன் மனிதனைப் பற்றிய விவரங்களை எழுதினர்."

இத்தகைய சான்றுகளிலிருந்து மார்க்சும் எங்கெல்சும் தங்கள் சமுதாய வளர்ச்சி பற்றிய கருத்துக்களை உருவாக்கி வெளியிட்டனர். ஒரு சமுதாயத்தின் அமைப்பு, அடிப்படையில் அச்சமுதாயத்தின் உற்பத்தி முறையைப் பொறுத்திருக்கிறது. உற்பத்திமுறை, உற்பத்தியில் பயன்படும் உற்பத்திச் சாதனங்களைப் பொறுத்தது. சமுதாயத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட தேவைகளை நிறைவுசெய்து கொள்ளுவதற்காக, சமுதாயத்தின் ஆளுகையில் இருக்கும் தொழில் நுணுக்க சாதனங்களையும், சக்திகளையும் பொறுத்தே உற்பத்திமுறை இருக்கமுடியும். நாகரிக சமுதாயங்களின் வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டு இக்கொள்கையை அவர்கள் வரையறுத்துக் கூறினார்கள். மார்க்ஸ் எழுத்தறிவில்லாத வரலாற்று முதற்கால சமுதாயங்களின் மாறுதல்களை ஆராயும்பொழுது மார்கனது கொள்கையை ஏற்றுக்கொண்டார்."[16] மார்கன், பொருள் முதல்வாத வரலாற்றுக் கொள்கையை வலியுறுத்தும் சான்றுகளைத் திரட்டித் தந்திருந்தார்.

மார்கனுடைய சமூக பரிணாமக் கொள்கை மார்க்ஸின் வரலாற்றுக் கொள்கையோடு நெருங்கியதாயிருந்தது. எங்கெல்ஸ் ஒரு சமுதாயம் மற்றோர் சமுதாயமாக மாறுவதை மார்கனது திட்டத்தோடு, உற்பத்தி சக்திகளின் மாற்றம் என்னும் கருத்தை இணைத்தார். இவ்வாறு செய்யும் பொழுது மார்கனது திட்டத்தில் எங்கெல்ஸ் சில திருத்தங்களைக் கொணர்ந்தார். இது தமது கொள்கைக்கேற்றபடி மார்கனது கொள்கையை மாற்றியதாக இல்லை. "ஐரோப்பாவில் வரலாற்று அகழ்வாராய்ச்சி முடிவுகளைப் பற்றிய அவருடைய ஆழ்ந்த அறிவின் ஒளியில் மார்கனது திட்டத்தை மாற்றினார். எனினும் மார்கனது திட்டத்தின் அடிப்படை அம்சங்களை அவர் ஏற்றுக்கொண்டார்."[17]

இவ்வாராய்ச்சிகளின் அடிப்படையில் தாம்ஸன் தற்கால இனக்குழு மக்களின் சமுதாயங்களின் வளர்ச்சி நிலைப்படிகளை வரையறுத்தார்.[18]

I 1) கீழ்நிலைவேட்டைச் சமுதாயம் –

தொழில் – உணவு சேகரித்தல் – வேட்டையாடுதல்.

2) உயர்நிலை வேட்டைச் சமுதாயம் – தொழில் வேட்டையாடுதல், மீன் பிடித்தல்.

II மேய்த்தல் –

1) ஆடுமாடுகளைப் பிடித்தல் – வளர்த்தல்.

2) ஆடுமாடு வளர்ப்போடு, விவசாயம் செய்தல்.

III விவசாயம் –

1) கலப்பையின்றி விவசாயம்.

2) கலப்பை விவசாயம்.

3) கலப்பை விவசாயத்தோடு, ஆடு மாடு வளர்ப்பு.

“இவ்வளர்ச்சி முறைபற்றி எங்கெல்ஸ் கூறுவதாவது: இந்தப் படிமுறை வளர்ச்சி குறிப்பிட்ட காலகட்ட வளர்ச்சியாக இருக்கவில்லை. உணவு சேகரித்தலும் வேட்டையும் எல்லாச் சமுதாயங்களிலும் முதலில் தோன்றின. ஆனால் அவற்றிற்கு உயர்ந்த வாழ்க்கை நிலைகள் தோன்றுவது குறிப்பிட்ட பகுதிகளின் தாவர நிலைகளையும், சூழ்நிலைக் கூறுகளையும் பொறுத்துள்ளது. முதல் கட்டத்திற்குப் பின் சில பகுதி மக்கள் மேய்ச்சல் (Pastoral) வாழ்க்கைக்கு மாறினர். சில பகுதி மக்கள் முதல் கட்டத்திற்குப் பின் விவசாயத்தைக் கண்டுபிடித்தனர். இவ்விரண்டு பாதைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் இனக்குழு வாழ்க்கையை அழித்தது. இரண்டு சமாந்தரப் பாதைகளில் பண்டைய இனக்குழு மக்கள் சமுதாயங்கள் நாகரிகத்தை நோக்கிச் சென்றன. தற்கால இனக்குழு மக்களின் சமுதாய மாற்றங்களை ஆராய்பவர்களும் இதனையே காண்கிறார்கள்”.[19]

இதனிடையே நாம் பாபிலோனியப் படைப்புக் கதையை ஆராய்வோம்.

பாபிலோனிய பண்டைய நாகரிகத்தை ஆராய்ந்து கார்டன் சைல்டு[20] கூறுவது இங்கு கவனிக்கத் தக்கது: "பார்பரிஸக் காலத்திலிருந்து நாகரிக காலத்திற்கு ஏற்பட்ட மாற்றத்தைக் காட்டும் அகழ்வாராய்ச்சித் தலங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இரண்டு தலங்களை அகழ்வாராய்ச்சியாளர் மிஸோலிதிக் அல்லது நியோலிதிக் பண்பாட்டுக்காலத் தலங்களாகக் கருதுகின்றனர். அதன் பின்னர் நான்கு கால வரிசைப்படி முறையான பண்பாட்டுக் கட்டங்களைக் காட்டும் தலங்கள் உள்ளன.

தானியங்களைப் பயிரிடுதல், ஆடு மாடு வளர்த்தல் முதலிய தொழில்களில் ஈடுபட்டு நிலையான கிராமங்களில் வாழ்ந்த மக்களின் சுவடுகளை அகழ்வாய்வாளர்கள் கண்டுள்ளனர். உணவு சேகரிப்பும், மீன் பிடித்தலும் இங்கிருந்த மக்களின் தொழில்களாயிருந்தன. நிலைத்த கிராமங்களுக்கருகே ஆடு, மாடு மேய்த்த குழுக்களும் இருந்தன. இவையிரண்டும் நாகரிகத்தை நோக்கி முன்னேறின.

நாகரிகத் துவக்க காலத்தில் பாபிலோனியாவில் பல சிறு நகரராஜ்யங்கள் இருந்தன. அவை ஒன்றோடு ஒன்று போரிட்டுக் கொண்டன. அந்த நகரங்களின் போர் வீரர்கள் செம்புக் கோடாரிகள், ஈட்டிகள், கத்திகள், தலைக்கவசங்களைப் பயன்படுத்தினர்.

ஹாலாபியன் காலகட்டத்தில் பெண்களின் உருவச்சிலைகள் காணப்படுகின்றன. சரித்திர காலகட்டத்தில் இவை இஷ்டாரின் உருவங்களாக இருக்கலாம். அதற்குப் பின்னுள்ள காலகட்டத்தில் ஆண் சிலைகள் அருகியே காணப்படுகின்றன."

இச் சான்றுகளிலிருந்து இக் கதைகளைப் புனைந்தவர்களது வாழ்க்கை நிலையை அறிகிறோம். முழுக்கதையையும் வழங்கி வந்த பண்டைய பாபிலோனிய மக்கள் நாகரிக முற்காலத்தவர்.

மொரோடாக்கை ஏக தெய்வமாக வழிபட்டவர்கள் தங்கள் நகர ராஜ்யங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு ஓரரசன் கீழ் வந்தபொழுது, பல தேவர்களுக்கும் மேலாக ஒரு தேவனை, ஒரு தேவராஜனை கற்பனை செய்தல் இயல்பே.

இந்த நாகரிகத் துவக்க காலத்துக்குமுன், மொரோடாக் தியாமத்தோடு போராடி அவளைக் கொன்றான். மொரோடாக்

ஆணாதிக்கமுடைய சமுதாயத்தின் கற்பனையில் தோன்றிய ஒரு தேவன். "ஆணாதிக்கம் ஆடு, மாடு மேய்க்கும் சமுதாயத்திலும், கலப்பை விவசாய சமுதாயத்திலும் தோன்றும்"[21] என்று சமூகவியலார் ஆய்வுகளின் முடிவுகள் தெளிவாக்குகின்றன. ஏனெனில் இச் சமுதாயங்களில் ஆண்களின் உழைப்பு பெண்களின் உழைப்பைவிடச் சமுதாயத்திற்குத் தேவையான உற்பத்தி சக்தியாகப் பயன்படுத்தப்பட்டு சமுதாயச் செல்வத்தின் பெரும் பகுதியையளிக்கிறது.

ஆனால் மொரோடாக்கும் அவனுடைய முன்னோர்களும் தியாமத்தின் வழித்தோன்றல்கள் என்று கதை கூறுகிறது. அவளே உலகத்தாய் என்றும் அழைக்கப்படுகிறாள். அப்படியானால் தியாமத்தை அவளுடைய வழித்தோன்றல்களே கொன்றுவிடப் போர் செய்வானேன்?

கார்டன் சைல்டின் கூற்றின்படி ஹாலாபியன் கட்டத்தில் பெண்ணுருவச் சிலைகள் மிகுதியாக கிடைக்கின்றன.

மொரோடாக் ஏக தெய்வமான பிறகு ஆண் சிலைகளே அதிகமாகக் கிடைக்கின்றன. அக்காலத்திற்கு முந்தி, ஹஸ்ஸூயானா என்ற தலத்தில் இருபது ஆண் தெய்வங்களின் சிலைகள் அகப்பட்டன. இங்கு பெண் சிலைகள் அகப்படவில்லை.

இதிலிருந்து பாபிலோனியாவில் தாய் வழிச் சமுதாயமும், தந்தை வழிச் சமுதாயமும் மொரோடாக் கதை தோன்று முன்னரே தனித்தனியாக வெவ்வேறு தலங்களில் இருந்திருக்க வேண்டுமென ஊகிக்கலாம்.

தாய்வழிச் சமுதாயத்திலிருந்து தாங்கள் தோன்றியவர்கள் என்று கருதிய தந்தைவழி மக்கள் தங்களுடைய பரம்பரையைத் தோற்றுவித்தவள் ஒரு பெண்ணென்னும் முந்தைய சமுதாய நிலைமையை இனக்குழு நினைவாகக் கொண்டிருத்தல் வேண்டும். எனவே தங்கள் சமுதாயத்தின் நிழலாகப் படைத்த முற்காலத் தேவருலகிலும் தாயையே மூல புருஷியாகக் கருதினர்.

ஆனால் தியாமத்தை ஒரு ராட்சஸியாகவும் அவளை எதிர்த்துக் கொன்றவனைத் தேவனாகவும் ஏன் இக்கதையில் படைத்தார்கள்?

பாபிலோனியாவில், நாகரிகத் துவக்கத்துக்கான உற்பத்தி சக்திகள் பெருகி, நாட்டை ஒன்றாக்கி அரசு தோன்றுவதற்கு இரு

முறையான தாய்வழி, தந்தைவழிச் சமுதாயங்களை இணைக்க வேண்டும். தந்தைவழிச் சமுதாயம் மேய்த்தல், விவசாயம், உலோக உபயோகம் இவற்றால் வளர்ச்சி பெற்றுவிட்டதால் தேங்கி நின்ற புராதன விவசாய நிலையிலும், வேட்டை நிலையிலும் இருந்த தாய்வழிச் சமுதாயத்தை அழிக்கப் போர் செய்யவேண்டும்.

தாய்வழிச் சமுதாயம் தங்கள் முன்னேற்றத்திற்கு இடையூறெனக் கருதிய தந்தைவழி மக்கள் அதனை அழிக்கச் செய்த போர்கள், இக்கதை தோன்றுவதற்கு முன்பே நடைபெற்றிருத்தல் கூடும்.

தியாமத் அதற்கு முன்னரே தாய்வழிச் சமுதாயத்தால் வணங்கப்பட்ட தெய்வம். அச்சமுதாயத்திலிருந்தே, உற்பத்திச் சாதன வளர்ச்சியால் பிரிந்து தந்தை வழி முறையைக் கொண்டு வளர்ச்சி பெற்று வலிமை பெற்ற சமுதாயத்தில் ஆண் தெய்வங்களைப் படைத்து மக்கள் வழிபட்டார்கள்.

இவ்விரு சமுதாயங்களின் பகைமை தியாமத்தேவர்கள் பகைமையாக வருணிக்கப்பட்டது.

தியாமத் மிகப் பழங்கால தெய்வமாதலால் அதற்குப் போர்க்கருவிகள் எதுவுமில்லை. அதுவே ஆளுகிற ஆண்களை நியமித்தது என்றால் அது சர்வ வல்லமையுடையது. அது உலகைப் படைக்க அப்ஸூ துணையாயிருந்தான். ஆனால் இறந்தபின் அவள் கிங்குவைத் துணையாக்கிக்கொண்டாள். இவையெல்லாம் தேவர்கள் – தாய்த் தெய்வம் என்ற கதைமாந்தர்களின் செயல்களாகக் கூறப்பட்ட போதிலும், தாய்வழிச் சமுதாயத்தில் நிகழ்கிற செயல்களே.

தியாமத் உலகையும், மக்களையும், உயிரினங்களையும் படைக்கவில்லை என்று இக்கதை கூறுகிறது. ஆனால் அவளிடமிருந்தே உலகம் தோன்றியதாக தாய்வழி மக்கள் நம்பினர். எனவே இக்கதை புனைந்தவர்கள் அவளைக் குழப்பத்திலிருந்து வானையும் கடலையும் படைக்கச் செய்தனர். தேவர்களையும் படைத்தவள் அவளே. முந்திய கதையின் படைப்புத் தாயை அவளோடு பகைத்து நின்ற தேவர்களும் ஒப்புக்கொண்டனர். ஏனெனில் பாபிலோனியா முழுவதும் முதற்படைப்புத் தெய்வமாக இருந்த தியாமத்தை பிந்திய படைப்புக் கதையில் ஒதுக்கிவிட முடியாது.

ஆனால் ஆணாதிக்க சமுதாயத்திற்கு பல நகர ராஜ்யங்களை இணைக்கிற வலிமைமிக்க ஒரு தேவன் தேவை. எனவே மொரோடாக் ஆயுதங்கள் தரித்தவன். தலைக்கவசம் தரித்தவன். புயல் போன்ற குதிரைகள் கட்டிய தேரில் போருக்குச் செல்லுகிறான். இது வளர்ச்சியடைந்து உலோக உபயோகம், சக்கர உபயோகம், விலங்கு பழக்கல் முதலியவற்றைத் தெரிந்துகொண்ட மக்களின் கற்பனை என்பதில் ஐயமில்லை. தியாமத் மொரோடாக் போரில், மொரோடாக் பயன்படுத்திய வலை, ஈட்டி, கத்தி ஆகியவை, மீன் பிடித்தல், வேட்டையாடுதல், முதலியவற்றில், முன்னேறிய தொழில் நுணுக்கத்தைப் பயன்ப்டுத்திய மக்களின் சிந்தனையைக் காணலாம்.

தியாமத் வாயைப் பிளந்ததும், மொரோடாக் காற்றை அவள் வாயினுள் புகும்படி ஆணையிட்டான். காற்றாடிகள் (Wind lass) மூலம் நீரிறைக்கும் தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள் காற்றைத் தங்கள் ஆணைக்குட்படுத்தலாம் என்று கருதினர். அதனால்தான் அவர்கள் கற்பனையில் மொரோடாக் காற்றைக் கட்டளையிட முடிந்ததைக் கருத முடிந்தது.

தியாமத்தின் உடலிலிருந்து பூமியையும் ஆகாயத்தையும் மொரோடாக் படைத்தான். இதிலிருந்து பூமியும், வானமும் தாயின் உடலிலிருந்து தோன்றியவை என்பது மொரோடாக்கை வணங்கியவர்களது கருத்து என்று தோன்றுகிறது.

மொரோடாக் மனிதனைப் படைத்ததாகக் கதை கூறவில்லை. ஆனால் அவனை எல்லாத் தெய்வங்களுக்கும் சக்தியளிக்கும் ஒரே தேவன் என்று ஒரே நாடாகப் பாபிலோனியா இணைந்த பின் கருதிய மக்கள் அவன் மனிதனைப் படைக்க எண்ணினான் என்று கதையை முடித்துவிட்டனர்.

தேவர்கள் இருந்தால் போதுமா? அவர்களுக்குக் கோவில் கட்டி வணங்க மனிதர்கள் வேண்டாமா? இதனால் தங்களை வணங்க மனிதனைப் படைக்க மொரோடாக் எண்ணினான் என்று கதை கூறுகிறது.

ஒரு குறிப்பிட்ட சமுதாய நிலைமையில் அதற்கு முன் நிலை பெற்றிருந்த சமுதாயங்களில் தோன்றியிருந்த மக்கள் நம்பிக்கைகளால் படைக்கப்பட்ட தெய்வங்களில் ஒன்றையொன்று கொன்ற பிறகு

எஞ்சியிருந்த தெய்வம் மனிதனைப் படைக்க எண்ணியதாகத் தங்கள் கற்பனையில் வரலாற்று முற்காலச் சிந்தனைகளைப் பண்டைய பாபிலோனியவர் தலைமாற்றிக் கொண்டார்கள்.

இதுவே மிகப்பழமையான படைப்புக் கதையின் மானிடவியல் – சமூகவியல் விளக்கமாகும்.

ஒரு கதையை இவ்வாறு விளக்கிவிட்டால் மற்றக் கதைகளை இவ்வளவு விரிவாக விளக்க வேண்டியதில்லை. அக்கதைகளைக் கூறி அவற்றைப் படைத்தவர்களின் சமுதாய வளர்ச்சி நிலையோடு இணைத்துக் காட்டினால் போதுமானது. எனவே இனிவரும் படைப்புக் கதைகளை சுருக்கமாகவே விளக்குவோம்.

## கிரேக்கப் படைப்புக் கதைகள்

கிரேக்கப் புனைகதைகளில் நான்கு வேறுபட்ட படைப்பு 'வரலாறு'கள் கூறப்படுகின்றன. அவற்றைக் காண்போம்:

1. ஆதியில் யூரிநோம் என்னும் உலகமாதா குழப்பத்திலிருந்து அம்மணமாக எழுந்தாள்; தனது கால்களைப் பதிக்க இடமில்லாமல் கடலையும், வானையும் பிரித்தாள். கடலின் மீது தனியாகத் தாண்டவமாடினாள். அவள் தெற்கு நோக்கி ஆடிக்கொண்டே போனாள். காற்றுப் புதிதாக எழுந்து அவளைப் பின்பற்றி வீசியது. அவள் காற்றை இரு கைகளாலும் பிடித்துத் தேய்த்தாள். ஒபியான் என்ற பெரும் பாம்பு தோன்றியது. அவள் ஆட, ஆட ஒபியான் அவளுடலைச் சுற்றி வளைத்தான். அசைவில் காம உணர்வு கொண்டு அவளைப் புணர்ந்தான். 'மோரியாஸ்' என்ற வடகாற்று அவளைக் கர்ப்பம் கொள்ளச் செய்தது. பெண் குதிரைகள் வடகாற்றடிக்கும்பொழுது தங்கள் உடலின் பின் பாகத்தை அதனை நோக்கித் திருப்ப ஆண்குதிரை புணராமலேயே கருவுறுகின்றன என்று பண்டைக் கிரேக்கர்கள் நம்பினார்கள்.

பின்னர் அவள் ஒரு புறாவின் உருவெடுத்துப் பிரபஞ்ச முட்டையிட்டாள். அவள் ஆணையை ஏற்று ஒபியான் அதனைச் சுற்றி ஒரு வளையமாகத் தனது உடலை வளைத்துக்கொண்டான். அந்த முட்டையிலிருந்து சூரியன், சந்திரன், கிரகங்கள், உடுக்கணங்கள், பூமி, பூமியிலுள்ள ஆறுகள், மரங்கள், தாவரங்கள், உயிரினங்கள் அனைத்தும் வெளிவந்தன.

ஒலிம்பஸ் மலையில் யூரிநோமும், ஒபியானும் வாழ்ந்தனர். "நான் தான் உலகத்தைப் படைத்தேன்" என்று கூறி அவன் அவளைச் சீற்றமுறச் செய்தான். அவள் தனது குதிங்காலால் அவன் தலையில் மிதித்துக் காயம் உண்டாக்கினாள். அவனை உலகின் இருண்ட குகையில் சென்று வாழும்படி விரட்டிவிட்டாள்.

அடுத்து அவள் ஏழு கிரகங்களையும் படைத்தாள். ஒவ்வொரு கிரகத்திலும் ஒரு ராட்சஸியையும், ராட்சஸனையும் வாழ அனுப்பினாள் (கதை ஒவ்வொரு கிரகத்திற்கும் அனுப்பப்பட்ட ராட்சஸி, ராட்சஸர்களின் பெயர்களைக் கூறுகிறது). முதன் முதலில் படைக்கப்பட்ட மனிதன் பெலாஸ்கஸ். அர்க்காடியாவில் வாழ்ந்த பெலாஸ்கஸியர் என்ற இனத்தாரின் மூதாதை அவன். அவனுக்குப் பின் வேறு மனிதர்கள் படைக்கப்பட்டனர். எல்லோருக்கும் அவன் தோலை உடுக்கக் கற்றுக் கொடுத்தான். குடிசை கட்டவும், தானியம் சேகரிக்கவும் கற்பித்தான்.

"இக்கதை பிளினியின் இயற்கை வரலாறு ஹோமரின் பெலாஸ்ஜியர் வரலாறு கூறும் இலியாதின் பகுதி, அப்பலோனியஸ், ரோடியஸ் என்ற பழம் புலவரது ஆர்கோ நாடிகா என்ற நூல்கள், முந்தையர் செவிவழிக் கதைகளெனக் குறிப்பிடப்பட்டுள்ளன."[22]

இந்தப் புனைகதையைப் பல மூலங்களிலிருந்து புனர் நிர்மாணம் செய்து எழுதிய பேராசிரியர் கிரேவ்ஸ், இக்கதை தோன்றிய சமுதாய வரலாற்றுச் சூழ்நிலைகளைக் குறிப்பிடுகிறார்:

"இக்கதையின் சமய நம்பிக்கையில் தேவர்களும், பூசாரிகளும் காணப்படவில்லை. ஒரு உலகமாதா நம்பிக்கையும் அவளுடைய தேவராட்டிகளும் மட்டுமே இருந்த காலத்தில் இக்கதை பிறந்திருக்க வேண்டும். பெண்ணே வலிமையும், ஆதிக்கமும் உடையவள். ஆண் அவளுக்கு அஞ்சி வாழும் வலிமையற்ற ஜீவன். கருவுறுவதற்கு ஆண் தேவையில்லையென்றும் காற்று மட்டுமே போதும் என்றும், அக்கால மக்கள் கருதினர்.[23] தாய்வழித் தாய உரிமைதான் அக்காலத்தில் இருந்தது. பாம்பு முன்னோர்களின் உருவம் என்றெண்ணப்பட்டது. சந்திரன் என்னும் பெண் தெய்வமாக யூரினோம் கருதப்பட்டாள். இவளுடைய சுமேரியப் பெயர் இயாஹி. அம்மொழியில் இச்சொல்லுக்கு புற என்பது பொருள். யூதர்களின் படைப்புத் தெய்வமான யஹோவா என்ற பெயர் இச்சொல்லிலிருந்துதான் தோன்றியது.

வசந்தகால விழாவின்போது பாபிலோனியாவில் மார்டக் ஒரு புறாவை இரண்டாக வெட்டினான் என்ற புனைகதையின் அடிப்படையில் ஒரு சடங்கு பண்டைய பாபிலோனியாவில் கொண்டாடப்பட்டது. அந்தப் புறா இயாஹூமைவைக் குறிக்கும். தியாமத்தின் உடலை இரண்டு கூறாக வெட்டி உலகையும் வானத்தையும் மார்டக் படைத்தான் என்ற பாபிலோனியப் புனைகதையோடு இச்சடங்கிற்குத் தொடர்புள்ளது.

இக்கதை புனைந்தவர்களது சமூகநிலை தாய்வழிச் சமுதாய நிலையே என்பது உறுதி. கிரேஸ் கூறும் விளக்கத்தைக் கண்டோம். கார்டன் சைல்ட், நியோலிதிக் A, நியோலிதிக் B என்ற பண்பாட்டுநிலை முதலே கிரேக்கத்தின் பண்பாடு காணப்படுகிறது. பாலியோலிதிக் இல்லை என்கிறார்.[24] அது மட்டுமல்லாமல் நீண்ட காலமாக மேய்ச்சல் விவசாயப் பண்பாட்டு நிலைகள் பிரியவில்லை என்றும் கூறுகிறார். எனவே தாய்வழிச் சமுதாயம் வேறு சமுதாயங்களோடு போராடாமல் வாழ்ந்த காலத்தில் இக்கதை தோன்றியிருத்தல் வேண்டும்.

2. இரண்டாவது கிரேக்கப் படைப்புக் கதையொன்று ஹோமர், ஆர்பியூஸ் என்னும் கவிஞர்களால் இலியாதிலும் ஆர்பியூஸின் கவிதைகளிலும் குறிக்கப்படுகிறது.[25]

எல்லாத் தேவர்களும், ஜீவராசிகளும் ஒஷியானஸ் என்னும் உலகைச் சுற்றி ஓடும் நீரோட்டத்தில் தோன்றின என்றும் டெதிஸ் என்னும் தெய்வம், ஒஷியானஸ் என்னும் தேவனது குழந்தைகளின் தாயென்றும் கூறுகிறார்கள். ஆனால் ஆர்பியூஸின் கவிதைகளில் ஸியூஸ் என்னும் தேவர்க்கரசன் கூட அஞ்சி நடுங்கும் வல்லமையுடைய கறுப்புச் சிறகுடைய இருள் என்னும் தேவியைக் காற்று காதலிக்க அக்காதலின் விளைவாக ஒரு வெள்ளி முட்டையை அவளுடைய கருப்பையில் வைத்தான் என்றும், அம்முட்டையில் இருந்து ஈராஸ் என்னும் காதல் தேவன் பிறந்து உலக இயக்கத்தை துவங்கி வைத்தான் என்றும் அவர் கூறுகிறார். ஈராஸ் ஆணும் பெண்ணுமான உறுப்புடையவன்; தங்கச் சிறகுகள் உடையவன்; நான்கு தலைகளையுடையவன். சில வேளைகளில் காளையைப் போலவும், சில வேளைகளில் சிங்கத்தைப் போலவும் கர்ச்சிப்பான். சில வேளைகளில் ஆட்டைப் போலவும் கத்துவான். இரவுத்தேவி அவனுக்கு மூன்று பெயரிட்டாள். இரவில் மூன்று வடிவமாக அவள் அவனுக்குத்

தோன்றுவாள். அவ்வடிவங்கள் இரவு, ஒழுங்கு, நீதி என்பன. அவர்களது குகையின் முன் ரீயா என்ற தேவி ஒரு வெண்கல முரசை முழக்கிக்கொண்டு காவல் காத்தாள், இத்தேவியின் சாலினிகள் இங்கிருக்கிறார்கள் என்பது முரசு முழக்கத்தின் பொருள். பானஸ் என்ற இருளின் மகன் உலகம், வானம், சூரியன், சந்திரன் முதலிய பொருள்களைப் படைத்தான். ஆயினும் மும்முகம் உடைய இருள்தேவி உலகையாண்டு வந்தாள். அவளுக்குப்பின் யூரானஸ் செங்கோல் செலுத்தினான்.

இக்கதையில் முதல் கதையின் வளர்ச்சியைக் காண்கிறோம். இருள்தேவி, யூரோநோமை ஒத்திருக்கிறாள். ஆர்போன் என்ற பாம்பிற்குப் பதில் ஓஷியானஸ் அவளை அணைக்கிறான். ஓஷியானஸ் கடலாகும்.

மிகப் பிற்காலக் காதல் தெய்வம் மிகப் பழைய படைப்புத் தெய்வத்தின் மகனாக்கப்பட்டு அவனே உலகைப் படைப்பவனாகக் கூறப்பட்டுள்ளான். இருள் தேவியின் மும்முகமும் அதனுடைய பொருளும், வளர்ச்சியடைந்த ஒழுங்கு நீதிக் கருத்துக்கள் கொண்ட சமுதாயத்தில் வாழும் மனிதருடைய சிந்தனைகள். இரவின் வெள்ளி முட்டை சந்திரன். சந்திரனைப் பற்றி பல, புனைகதைகள் தோன்றி விட பழைய படைப்புக் கதையில் அவனைப் புகுத்தியுள்ளனர்.

இந்த வளர்ச்சியடைந்த கதையில் முதல் கதையைவிட படைப்பில் ஆணின் பங்கு அதிகமாக்கிக் காட்டப்பட்டுள்ளது. ஆயினும் இருள்தேவியே உலகை ஆளுகிறாள். அவளுடைய காவல் தெய்வமும் சாலினிகளும் பெண்களே. ஆனால் கதை புனையப்படும்பொழுது யூரானஸ் என்ற ஆண் தெய்வம் உலகத்தை ஆளும் தெய்வமாக கருதப்பட்டது. எனவே அக்கருத்து தந்தைவழிச் சமுதாயமும் தாய் வழிச் சமுதாயமும் இணைந்ததையே குறிப்பிடுகிறது. ஆனால் போர்கள் எதுவும் நிகழவில்லை. முதல் கதையில் யூரிநோம், ஒபியோனைத் தலையில் மிதித்து ஒரு குகைக்கு விரட்டினாள் என்றிருக்கிறது. இக்காலத்தில் ஏற்பட்ட முரண்பாட்டிற்குப் பின் தாய்வழிச் சமுதாயமும், தந்தை வழிச் சமுதாயமும் சமாதானமாக இணைவதாகத் தோன்றுகிறது. இந்தச் சமுதாய மாற்ற நிலைமைகளில் கிரேக்கர்கள் இக்கற்பனைக் கதைகளைப் படைத்திருக்க வேண்டும்.

3. ஆதி காலத்தில் பூமித்தாய் குழப்பத்திலிருந்து தோன்றி, உறங்கும்பொழுதே யூரானஸைப் பெற்றெடுத்தாள்.[26] அவன் வானத்திலிருந்து அவளை அன்போடு நோக்கி அவளுடைய இரகசியமான பள்ளத்தாக்குகளை நோக்கி மழை பொழியச் செய்தான். அவள் புல், மலர், மரம், விலங்குகள், பறவைகள் முதலியவற்றை இடத்திற்கேற்பப் பெற்றெடுத்தாள். இம்மழையே ஆறுகளையும், கடல்களையும் உண்டாக்கியது.

அவளுடைய முதற் குழந்தைகள் அரைகுறை மனித உருவமுடையவர்களாக இருந்தனர். பிரையேரியஸ், கைகெஸ், காட்டுஸ் என்ற நூறு கைகளையுடைய அரக்கர்கள் பிறந்தனர். பின்னர் ஒற்றைக் கண்ணுடைய சைக்ளாப்ஸ் என்னும் அரக்கர்கள் பிறந்தனர். இவர்கள் பெரிய சுவர்களைக் கட்டினார்கள். இரும்பு வேலை செய்யும் கொல்லர்களாகவும் இருந்தார்கள். இவர்களைத் தான் ஒடிஸியூஸ் ஸிஸிலியில் பார்த்தான். அம்மூவரின் பெயர்கள் பிரான்டீஸ், ஸ்டீரோப்ஸ், ஆர்கெஸ். இவர்களுடைய ஆவிகள் எட்னா எரிமலையின் குகைகளில் இருந்தன. அப்பாலோ அவைகளைக் கொன்றான்.

ஒலிம்பிய மலைச்சமயத்தில் தந்தைவழிச் சமுதாயப் புனைகதையான யூரானஸின் கதை புகுந்துவிட்டது. யூரானஸ் என்ற சொல்லுக்கு வானம் என்பது பொருள். வருணன் என்னும் ஆரிய தேவனோடு யூரானஸ் இணைக்கப்பட்டான். அவனே முதல் தந்தையென்று நம்பப்பட்டான். கிரேக்க மொழியில் யூரானஸ் என்னும் சொல் யூரானா என்னும் பெண்பால் பெயரின் ஆண்பால் சொல்லாகும். யூரானா என்றால் மலைராணி, கோடையின் தேவி, காற்றுத் தேவி, காட்டு மாடுகளின் தெய்வம் என்பது பொருள். யூரான் என்ற பெண் தெய்வம் தான் ஆணாதிக்க சமுதாயத்தில் பால் மாற்றப்பட்டது. ஆண் தெய்வமாகக் கருதப்பட்டிருத்தல் வேண்டும். ஹெலனிக் நாகரிகமுடைய இனக்குழுக்கள் வட கிரேக்கத்தின் மீது படையெடுத்து வந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும் ஒரு புனைகதை யூரானஸ் பூமா தேவியை மணந்துகொண்டான் என்று கூறுகிறது. அவனே முதல் தந்தையென்றும் கூறுகிறது. ஆனால் அவனே பூமாதேவியின் மகன் என்ற புனைகதை இதனோடு முரண்படுகிறது.

இது தாய் வழி இனக்குழு மக்களும் தந்தை வழி ஹெலனிக் இனக்குழு மக்களும் போராடிய காலத்திற்குப் பின், பண்பாட்டு

இணைப்பாகத் தோன்றிய கதை. இதில் படைப்பின் முதல் தெய்வமாக பூமிதேவி கூறப்பட்ட போதிலும், அவளுடைய மகனே அவளது கணவனாகி, உலகில் தாவரங்களையும் உயிரினங்களையும் படைத்தான் என்று கூறப்படுகிறது. நூறு கையுடைய அரக்கர்கள் தாய் வழிச் சமுதாயத்தின் கைத்தொழிலாளர்கள் என்பதும் அவர்களால் வலிமைபெற்ற தாய்வழிச் சமுதாயத்தை அழிக்க அவர்களுடைய பகைவர்களின் கொலைச் செயல்கள் இப் புனைகதையில் அப்பாலோ என்ற ஹெலனிக் ஆண் தெய்வத்தின் செயலாகவும் கூறப்பட்டது.

4. நான்காவது கதை ஒரு தத்துவ ரீதியான படைப்புக் கதை.[27] இது புனைகதையாக இல்லாமல் வளர்ச்சியடைந்த தத்துவ–சமயக் கருத்தாக இருப்பதால் இதனை நாம் ஒதுக்கிவிடலாம்.

இனி பைபிளில் கூறப்படும் யூதர்கள் அல்லது இஸ்ரவேலர்களின் படைப்பு வரலாற்றைக் கவனிப்போம்.

இக்கதையின் தேவன் ஆவியாக அசைந்தாடி வானையும் கடலையும் பிரித்தார். சூரியன், சந்திரன், நட்சத்திரங்களைப் படைத்தார். தாவரங்களையும், விலங்குகளையும், பறவைகளையும் படைத்தார். கடைசியில் தன்னுருவத்தில் மனிதனைப் படைத்தார். மண்ணால் உருவம் செய்து அதில் தனது மூச்சை ஊதினார். முதல் மனிதன் ஆதாம் உயிர் பெற்றான்.

இக்கதையைப் புனைந்தவர்கள் தந்தை வழிச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். இஸ்ரவேலர்கள் பைபிள்[28] வருணனைப்படி மேய்த்தல் தொழில் உடையவர்கள். ஆணாதிக்க சமுதாயத்தின் கற்பனையின்படியே இவர்கள் பெண்ணின் பாத்திரமில்லாமல் உலகு படைக்கப்பட்ட கதையைப் புனைந்தார்கள். அது மட்டுமல்ல. ஒரே ராஜ்யமாக, ஓர் அரசனின் கீழ் ஒன்று திரண்டு பகைவர்களை எதிர்த்ததால்தான் இவர்கள் 'ஒரே கடவுள்' என்ற பண்பாட்டுச் சிந்தனையுடையவர்களாயிருந்தனர். இவர்களுடைய இனத்திற்கு தாய் வழிச் சமுதாயத்தின் முற்காலம் இல்லாததால் படைப்புக் கதையில் தாயின் தேவையே ஏற்படவில்லை.

## இந்திய-ஆரியப் படைப்புக் கதைகள்

வேதத்தில் முக்கியமாகக் கடவுள்களே போற்றப்படுகிறார்கள். முக்கிய கடவுள்கள் இந்திரன், மித்ரன், வருணன், ருத்ரன், அக்னி

இவர்களனைவரும் ஆண் ஆற்றலுடைய தேவர்களே. சூரியனும் ஆண் தெய்வமே பெண்கள் ஆண் தெய்வங்களின் மனைவிமார்களாகவே இரண்டாந்தர மதிப்புப் பெறுகிறார்கள். வேதகால ஆரிய கணங்களின் சமூகப் பண்பாட்டு நிலை பற்றியும், அந்நிலையில் எழுந்த தெய்வக் கருத்துக்கள் பற்றியும் பின்னர் காண்போம்.

அதற்கு முன் ரிக் வேதத்தில் புருஷசூக்கத்தில் கூறப்படும் உலகப் படைப்பு பற்றிக் கூறுவோம்.

'புருஷன்' என்ற பெயரே ஆணைக் குறிக்கும். அவனைப் பற்றி ரிக் வேதம் கூறுவதாவது:

புருஷனுக்கு ஆயிரம் தலைகள், ஆயிரம் கண்கள், ஆயிரம் கால்கள், உலக முழுவதிலும் பத்து விரற்கடை இடத்தை அவன் உருவம் அடைத்துக் கொள்ளும். இப்புருஷனே இப்பொழுது இருக்கும் எல்லாமாகவும் இனி வரப்போகும் எல்லாமாகவும் இருக்கிறான். அழிவில்லாத அவன் உணவால் பெருக்கமுற்று இருக்கிறான். அவனது பெருமை உயர்ந்தது. அதனினும் பெரியவன் புருஷன். முக்கால் பங்கு புருஷன் மேலே போய்விட்டான். கால் பங்கு இங்கேயிருக்கிறான். தின்பது, தின்னாதது எல்லாவற்றின் பக்கத்திலும் அவன் நடந்தான்."[29]

இவ்வாறு புருஷனை வருணித்து விட்டு, அவனைத் தேவர்கள் பலியிட்டதாகவும், அவனுடைய உடலின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் சூரியன், சந்திரன் முதலிய கோளங்களும் உலகமும், விலங்குகளும், பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய சூத்திரங்களும் தோன்றியதை இப்புருஷசூக்தம் விவரிக்கிறது.

வேதத்தில் ஆணாதிக்கக் கருத்து வன்மையாகக் காணப்படுகிறது. பிரபஞ்ச முழுவதும் முதல் ஆணினின்றும் தோன்றியதாக இந்நூல் கூறுகிறது. இது ஏன்? "அவர்களுடைய பொருளாதார அமைப்பை மீறி அவர்களுடைய கற்பனை செல்ல முடியாது. புருஷசூக்கத்தில் சூட்சும சிந்தனை சிறிதளவு உள்ளது. ஆயினும் அச்சிந்தனை மாடு மேய்ப்பவர்களின் சமூகத்தில் வாழ்பவர்களது சிந்தனையாகவே உள்ளது. அவர்கள் ஆண்களின் உயர்வில் நம்பிக்கையுடையவர்கள்."[30] எனவே படைப்பிலும் ஆணைப் பலி கொடுத்து உலகம்

உண்டாக்கப்பட்டதாகக் கருதி ஒரு கற்பனைப் புருஷனது புனைகதையை உலகப் படைப்பை விளக்கப் படைத்தார்கள்.

பிற்கால நாராயணப் படைப்புக் கதைகளும் ஆணாதிக்கக் கருத்தையே வெளியிடுகின்றன. "நாராயணன் வேத காலத்தில் ஆரியர்கள், ஆரியரல்லாதவர்களிடமிருந்து ஏற்றுக்கொண்ட கடவுள் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். விஷ்ணு வேதத்தில் சிறு தெய்வம். நாராயணன் வேதக் கடவுளன்று. நாரா என்றால் நீர் என்பது சம்ஸ்கிருதத்தில் பொருள். நீரின் மீது உறங்குபவனாகப் பண்டைப் புனைகதைகள் அவனை சித்திரிக்கின்றன. அவன் பாம்பின் மீது உறங்குபவன். பாம்பு பண்டைய இனங்களின் குலக்குறி."[31] நாராயணனைத் தெய்வமாகக்கொண்ட வளர்ச்சி பெற்ற இனக்குழுக்கள், ஏதோ ஒரு நாகக்குலக் குறியுடைய இனக்குழுவை வென்றதால் இது அவனுடைய படுக்கையாக ஆக்கப்பட்டது. நாராயணன் பாற்கடலில் பாம்பின் மீது உறங்குகிறான். அவனது நாபியிலிருந்து ஒரு தாமரை தோன்றுகிறது. அதிலிருந்து லட்சுமியும், பிரமனும், சந்திரனும் தோன்றுகிறார்கள், பிரமன் உலகைப் படைத்தான்.

இக்கதையில் பாற்கடலும், ஆண் உலகத்தைப் படைத்தலும், மாடு மேய்ப்பவர்களின் கற்பனைகளாகவும், கருத்துக்களாகவுமே தோன்றுகின்றன.

உலகைப் படைத்தது ஆணா பெண்ணா?

இனி இக்கதைகள் அனைத்திலும் உலகு,

1. பெண்ணால் படைக்கப்பட்டது;

2. ஆனால் படைக்கப்பட்டது;

3. பெண் ஒரு பகுதியையும், ஆண் மற்றோர் பகுதியையும் படைத்தார்கள் என்ற மூன்று கருத்துக்கள் காணப்படுகின்றன. ஒவ்வொன்றிலும் சமூக அமைப்பு எவ்வாறு இக்கருத்துகள் தோன்றக் காரணமாயிருந்தன என்பதைக் கூறியுள்ளோம். இங்கு சமுதாய மாற்றங்கள் எப்படி படைப்புக் கருத்தையும், படைப்புத் தெய்வங்களின் ஆண் அல்லது பெண்பாலையும் தீர்மானிக்கின்றன என்று காண்போம்.

பண்டையச் சமுதாயங்களிலும், இன்றைய பழங்குடிச் சமுதாயங்களிலும் ஆணாதிக்கம் அல்லது பெண்ணாதிக்கம் அல்லது

தந்தை வழி அல்லது தாய்வழி உரிமைகள் எவ்வாறு தோன்றுகின்றன என்பது பற்றி பல சமூகவியல் அறிஞர்கள் விளக்கியுள்ளனர். அவர்களுள் தாம்ஸன் கூறுவதை இங்கே கவனிப்போம்.

“ஈட்டி கண்டுபிடிக்கப்பட்ட பின் வேட்டையாடுதல் ஆண்களின் தொழிலாயிற்று. பெண்கள் உணவு சேகரிக்கும் செயலில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தனர். இவ்வாறு ஆண் – பெண் பாலாரிடையே வேலைப் பிரிவினை இருந்து வருவதை எல்லா வேட்டைச் சமுதாயத்தினரிடையேயும் இன்றும் காணலாம். பெண்கள் கருவுற்றிருக்கும் காலத்தில் அலைய முடியாததால் இயற்கையிலேயே இத்தகைய வேலைப் பிரிவினை ஏற்பட்டது.

“வேட்டையிலிருந்து விலங்குகளைப் பழக்கி வளர்க்கும் தொழில் தோன்றியது. வேட்டையில் கொல்லுவதற்குப் பதில் விலங்குகளைப் பிடித்துக் கொணர்ந்து வளர்த்தார்கள். ஆடு மாடு வளர்த்தல், வேட்டையாடுதல் ஆண்களின் தொழில்களாகவே இருக்கின்றன. உணவு தேடுதலிலிருந்து, குடியிருப்பின் அருகில் விதைத்துப் பயிரிடும் தொழில் தோன்றியது. எனவே தோட்டப் பயிர் செய்தல் பெண்களின் வேலையாகவே இருந்தது. கலப்பையை உழுவதற்குப் பயன்படுத்தத் தொடங்கிய காலத்தில் இருந்து விவசாயம் ஆண்களின் தொழிலாயிற்று. ஆப்பிரிக்காவில் கலப்பையைப் பயன்படுத்தியுள்ள இனக்குழு சமுதாயங்களில் இன்றும் இம்மாறுதல் நிகழ்ந்து வருவதைக் காணலாம்.

ஆண் பெண் சமூக உறவுகள் உற்பத்தி முறை மாற்றங்களுக்கு ஏற்றபடி மாறுகிற பொழுது தந்தை வழி உரிமை முறை வலுப்படுகிறது. இச் செயல்பாட்டு முறை வேட்டையாடுதலோடு தொடங்குகிறது. ஆடு மாடு வளர்த்தலோடு வலுப்படுகிறது. ஆனால் ஆரம்பகால விவசாயத்தோடு தாய் வழிக்குத் திரும்புகிறது.

ஆரம்பத்தில் தாய்வழி உரிமை முறை இருந்ததென்றால் மிகவும் பின்தங்கிய மக்கள் தாய்வழி முறையையும், அவர்களைவிட முன்னேறிய மக்கள் தந்தை வழி முறையையும் பின்பற்றுகிறார்களே, இது ஏன் என்று கேட்கலாம். இதற்கு விடையாவது: “வேட்டைப் பொருளாதாரம் தந்தையுரிமையை ஏற்படுத்தும் தன்மை வாய்ந்தது. இன்றும் பல வேட்டைச் சமுதாய இனக்குழு மக்கள் தந்தை வழியினராக

இருப்பதற்குக் காரணம் அவர்களுடைய சமுதாய வளர்ச்சி அந்நிலையில் தேங்கியிருப்பதேயாகும். வரலாற்று முற்காலத்தில் விரைவாக வேட்டைச் சமுதாயத்திலிருந்து விவசாய சமுதாயத்திற்கு மாறிய குழுக்களில் தாய்வழி உரிமை, அச்சமுதாயம் மாற்றமடைந்த பின்னும் தொடர்ந்து நீடித்தது.''[32]

இது குறித்து தேவி பிரசாத் சட்டோபாத்தியாயா கூறுவதாவது:

"ஆண், பெண் உயர்வு தாழ்வுகளுக்குக் காரணம் பொருளாதார வாழ்க்கையின் வளர்ச்சியே. வேட்டைக்கு (ஈட்டியைப் பயன்படுத்துதல்) முற்கால சமுதாய நிலையில் தாயுரிமை இருந்தது. வேட்டை வளர்ச்சி பெற்றபோது ஆண்களுக்கு சமூகத்தில் உயர்வு ஏற்பட்டது. வேட்டைச் சமுதாயம் ஆடு மாடு வளர்ப்புச் சமுதாயமாக மாறிய பின் பெண்ணுக்குச் சமூகத்தில் உயர்வு ஏற்பட்டது. அதனால் தாய்வழி உரிமை மீண்டும் அவர்களிடையே தோன்றியது. காளைகள் இழுக்கும் கலப்பையைப் பயன்படுத்தி நிலத்தை உழும் பயிர்த்தொழில் தோன்றிய பின் தாயுரிமை முற்றிலும் மறைந்துவிட்டது. ஆயினும் அதன் எச்சங்களைத் தந்தையுரிமைச் சமுதாயத்தில் காணலாம்.''[33]

"தேவர்களும், தேவிகளும், மனித உருவில் மனித சிந்தனையால் படைக்கப்பட்டவர்களே. ஆண், பெண் பாலாரின் தராதர உயர்வு தாழ்வுகள் மாறின: வேட்டை, ஆடு மாடு வளர்த்தல் ஆகிய தொழில்களை அடிப்படையாகக் கொண்ட சமுதாயங்களில் ஆண் ஆதிக்கம் இருந்தது. அச்சமுதாயங்களில் மக்களால் வணங்கப்பட்ட தெய்வங்கள் ஆண்களாகவே இருந்தன. ஆரம்பகால விவசாய சமுதாயங்களில் பெண் ஆதிக்கம் இருந்ததால் அச் சமுதாயங்களில் பெண் தெய்வங்களே ஏற்றம் பெற்றன.''[34]

இவ்வாறு சமுதாய மாற்றங்களால் ஏற்பட்ட சிந்தனை மாற்றங்களால் படைப்புக் கதைகளிலும் கதை மாந்தர்கள் ஆண் அல்லது பெண்ணாக இருப்பதைக் காணலாம். மேலே உதாரணங்களாகக் காட்டிய மிகப் பழைய வரலாற்று முற்காலக் கதை மூலங்கள் இவ்வுண்மையை விளக்குகின்றன.

## படைப்புக் கதைகளில் பாம்பும், பலியிடுதலும்

இனி முக்கியமற்ற சில கூறுகளைப் பற்றி ஆராய்வோம். படைப்புக் கதைகள் பலவற்றில் பாம்பிற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. இது ஏன்?

பாம்பு வணக்கம் என்ற நாக வணக்கம் உலகம் முழுவதிலும் காணப்படுவது. அது அச்சுறுத்தும் தெய்வமாகவும், செழிப்புத் தெய்வமாகவும் ஆண் உருவம் பெண் உருவம் ஆகிய இருபால் உருவங்களிலும் வழிபடப்படுகிறது. மிகப் பண்டைக் காலத்தில் நாக வழிபாடு இருந்ததென்பதற்குச் சான்றுகள் உள்ளன.[35] பாபிலோனியக் கதையில் படைப்பு நிகழ்ச்சியைப் பற்றிக் கூறும் கதையில் பாம்பிற்கு இடமில்லை. ஆனால் தியாமத் மொரோடாக்கை எதிர்த்துச் செல்லும் பொழுது பெரிய மலைப்பாம்புகளைப் படைத்தாள். இதனால் தியாமத் கதை தோன்றிய பொழுது பாபிலோனியாவில் நாக வணக்கம் முக்கியமானதாக இல்லை என்று அனுமானிக்கலாம். ஆனால் பல குழுக்கள் தோன்றி, ஒன்றாக இணையும் நிலையில் நாகர் வணக்கம் இருந்ததென்பது தியாமத் படைத்த விலங்குகளில் நாகமும் ஒன்றென்று படைப்புக்கதை குறிப்பிடுவதால் புலனாகிறது. நாகர் குழு தியாமத் குழுவினரோடு சேர்ந்து கொண்டதையே இக்குறிப்புக் காட்டுகிறது. இது போலவே நாராயணன் – படைப்புக் கதையில் பாம்பு அவரது படுக்கையாக மட்டும் உள்ளது. இதுவும் நாராயணனை வழிபட்ட ஆடு மாடு வளர்த்த மக்கள், நாகர் வழிபாடுடையவர்களை வெற்றி கொண்டனர் என்பதைக் காட்டும். கிரேக்கக் கதையில் ஓஷியானஸ் கடல் நீரோட்டமாகும். தீவுகளில் வாழ்ந்த மக்கள் கடலையே தெய்வமாக்கி வழிபட்டதால் படைப்புக் கதையில் ஓஷியானஸ் இடம் பெறுகிறான்.

பலயிடுதலால் நன்மை உண்டாகும் என்று கருதி போலி மந்திரச் சடங்குகள் (Sympathetic Magic) செய்தல் பண்டைக் கால இனக்குழு மக்களின் சமயத்தில் முக்கிய காரணமான அம்சமாகும்.[36]

இதனால்தான் தியாமத்தின் உடலைப் பிளந்து வானையும், உலகையும் மொரோடாக் படைத்ததாகப் புனைகதையில் கற்பனை செய்யப்பட்டுள்ளது. அது தாய்வழி மக்கள் சமுதாயத்தில் தோன்றிய கற்பனை. புருஷனைப் பலியிட்டு உலகம் படைக்கப்பட்டதாகக் கூறும் புருஷ சூக்தக் கதை, வேத கால மாடுமேய்க்கும் சமுதாயத்தில் வாழ்ந்த தந்தை வழிச் சமுதாயத்து மக்களின் கற்பனை.

இவ்வாறாக பலியிடும் சடங்கு, செழிப்புச் சடங்குகள், இனக்குறி விலங்கு வழிபாட்டுச் சடங்குகள், படைப்புக் கதை தோன்றிய காலத்தில்

வளர்ச்சியடையாத மக்களிடையே பரந்திருந்ததால், அரசை நோக்கியும், ஒன்றுபட்ட நாட்டை நோக்கியும் முன்னேறுகிற பெரிய இனக்குழு மக்களின் படைப்புக் கதைகளில் இவைகளும் இடம் பெற்றன.

இவையனைத்தையும் ஒருங்கிணைத்துப் புதிய படைப்புக் கதைகள் முற்கால மக்கள் புனைந்தது அவர்களுடைய சமுதாயம் ஒற்றுமைப்படவும் சிறுகுழுக்கள் ஒன்றாகி நாடும், அரசும் தோன்றுவதற்கு உதவுவதற்காகவே.

## BIBLOGRAPHY


1. Lang, Ritual and Religion (Lord, 1899), P. 162.
2. E.O. James, Comparative Religion, P. 99.
3. E. Budge, Osiris and Egyptian Resurrection, (Lord, 1911), P.21.
4. Graves, "Introduction", Greek Myths.
5. Malinovsky, Myth in Primitive Psychology (Lord, 1926), P.21.
6. Verrier Elwin, "Introduction", Religion of a Tribe.
7. Graves, "Creation of Myths", Greek Myths.
8. Debiprasad Chattopadyaya, "Gauri", Lokayatha.
9. E.O. King, Seven Tablets of Creation Myths.
10. Babylon the Great has fallen, (New York, Watch Tower Bible Society, 1963).
11. Charles Darwin, Origin of the Species.
12. Fergusson, History of Civil Society (Edinburgh, 1768).
13. Herbert Spencer, Social Statics; Radeliff Brown, American Anthropology, (1946), P.233.
14. Morgan, Ancient Society (1871).
15. K. Marx, "Preface", Contribution to the Critique of Political Economy.
16. Gorden Child, Chap. 2, Social Evolution.
17. Ibid.
18. Thomson, quoted by Debiprasad Chattopadyaya in Lokayatha, chap. on "Gauri".
19. Engels, Origin of Private Property, Family and State (1884).
20. Gorden Child, Social Evolution, P. 153.
21. Thomson, quoted by Debiprasad Chattopadyaya in Lokaytha, Chap. "Gauri".
22. Graves, "Comment on First Myth", Greek Myths, P. 28.

23. Ibid., P. 29.

24. Gorden Child, Social Evolution, pp. 124-127.

25. Graves, Greek Myths, P. 30.

26. Ibid., P. 31.

27. Ibid., P. 132.

28. "Genesis-Summary of the creation story," The Bible.

29. Rig Veda, 1090.

30. Debiprasad Chattopadyaya, Ibid., P. 245.

31. D.D. Kosambi, Myth and Reality, P. 20.

32. Thomson, quoted by Debiprasad Chattopadyaya in Lokayatha, P. 242.

33. Debiprasad Chattopadyaya, Ibid., P. 242.

34. Ibid., P. 243.

35. Manasa, Devi and Naga Worship (Calcutta, Indian Publications)

36. Kroeber "Rituals and Magic", Cultural Anthropology.

2

# உலகப் படைப்புப் புனைகதைகளும், அவற்றின் சமூக அடித்தளங்களும்

பண்டைய மனிதன் உலகம் தோன்றிய விதம் பற்றிச் சிந்தித்தான்.

அவனுடைய சிந்தனை அவன் இயற்கையோடு கொண்டிருந்த தொடர்பைப் பொறுத்து வேறுபட்டது. இயற்கையோடு அவன் கொண்டிருந்த தொடர்பு, அவன் அதனோடு போராடி அதன் பொருள்களைத் தனக்காகப் பயன்படுத்திக் கொள்வதில் அடைந்த வெற்றிகளைப் பொறுத்திருந்தது. அவன் இயற்கையோடு தொடர்பு கொள்வதற்குத் தன்னைப் போன்ற மனிதர்களோடு இணைந்து சமூகக் குழுக்களை உருவாக்கிக் கொண்டான்.

தன்னுணர்வும், சமூக உணர்வும் எந்த நிலையில் இருந்தனவோ அந்த நிலையில்தான் அவன் உலகம் தோன்றிய விதம் பற்றிக் கற்பனை செய்து படைப்புக் கதைகளைத் தோற்றுவித்தான். தான் வாழ்ந்த இருப்பு நிலையில் இருந்து உலகம் தோன்றிய முந்திய கால நிலைமையைப் பற்றிச் சிந்தித்தான்.

தான் வாழ்கிற பூமியையும், தனக்கு மேலேயுள்ள வானத்தையும் பற்றி எண்ணினான். உலகம் முழுவதிலும் வாழ்ந்த மக்கள், இவையிரண்டும் ஒன்றாயிருந்து பின்னர் பிரிந்ததாக முதன் முதலில் எண்ணினார்கள். உலக முழுவதிலும் இத்தகைய சிந்தனை தோன்றியது. பண்டைகால மக்களின் நாகரிக நிலைகளில் இன்றும் வாழ்கிற இனக்குழு மக்களின் சிந்தனையும் அவர்களுடைய சிந்தனை நிலையிலேயே இருக்கிறது.

இனக்குழு மக்களின் புனைகதைகள் இவ்வுண்மையை வெளிப்படுத்துகின்றன.

மயோரி மக்களின் புனைகதையொன்று பின் வருமாறு:

எங்கும் ஒரே இருளாக இருந்தது. ஒளியென்பதே சிறிதும் இல்லை. அவர் சுறுசுறுப்பாக இருக்கத் தீர்மானித்தார். சிறிது வெளிச்சத்தை உண்டாக்கினார். ஆயினும் இருள் விலகவில்லை. "இருள் கீழே இருக்கட்டும். ஒளி மேலே இருக்கட்டும்" என்று பேசினார். அதன்பின்,

ஒளி உலகம்; ஒளி உலகம் என்று கூவினார். தன்னை சூழ்ந்திருந்த நீரைப் பார்த்துச் சொன்னார்.

தெய்க்காமாவிலுள்ள நீரே,

நீ பிரிந்து போ வானம் உண்டாகட்டும்"

என்றார்.

உன்னை நீ பிறப்பித்துக்கொள் பூமியே!

என்று சொன்னார். உடனே இயக்கமுள்ள உலகம் அவர் காலடியில் இருந்தது.

இப்படித்தான் பிரிவின்றி இருந்த உலகம் பூமியாகவும், வானமாகவும் பிரிந்தது.[1]

மாய்து மக்களின் புனைகதை இப்படித் தொடங்குகிறது. "துவக்கத்தில் நட்சத்திரங்கள், சூரியன், சந்திரன் எதுவும் இருக்கவில்லை. எனவே ஒளியும் இல்லை. ஒரு கட்டுமரம் மிதந்து வந்தது. அதில் இருவர் இருந்தனர். ஒன்று கடல் ஆமை. மற்றொன்று இரகசியக் கூட்டத்தின் தந்தை.

"ஆமை மண்ணை நீரினுள் இருந்து வெளிக்கொணர்ந்தது. தந்தை உலகைப் படைத்தார். பிறகு தாவரங்களைப் படைத்தார். அதில் இருந்து 12 வகையான விதைகள் கிடைத்தன."[2]

ஆப்பிரிக்க இனக்குழு மக்களில் ஒரு குழுவினரான பொஷாங்கோக்களிடம் வழங்கி வரும் படைப்புப் புனைகதையும் துவக்கத்தில் உலகம் இருட்டியிருந்ததாகவே கூறுகிறது.

"ஆரம்பத்தில் இருள் இருந்தது. நீர் தவிர எதுவும் இல்லை. பம்பா தனித்திருந்தார்."

ரிக் வேதத்தில் படைப்புக் கதையின் ஆரம்பம் இவ்வாறு இருந்தது. "அக்காலத்தில் பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை. இரவு பகல் என்ற காலப்பிரிவும் இல்லை. ஒரே ஒரு உயிர்தான் மூச்சு விட்டுக் கொண்டிருந்தது. அந்த ஒன்று தவிர வேறு எவருமில்லை, இருள் எல்லாவற்றையும் போர்த்திக்கொண்டிருந்தது. ஒளிபடாத நீர் எங்கும் பரந்திருந்தது."[3]

எனவே உலக மக்கள் தங்கள் இனக்குழு வாழ்க்கையிலிருந்து தெரிந்து கொண்ட அறிவின் பயனாகவும் பின்னோக்கிக் கற்பனையைச் செலுத்தியதின் பயனாகவும்,

உலகம் பிரிவின்றி இருந்தது
இருளில் மூழ்கிக் கிடந்தது
நீர்மட்டும்தான் துவக்கத்தில் இருந்தது

என்று நம்பினார்கள், இந்தக் கற்பனை சர்வாம்சமானது.

கதை புனைந்த மனிதன் தன்னைச் சுற்றிலும் இயற்கைப் பொருள்களைக் கண்டான். சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கடல், பூமி, மலை இவற்றையெல்லாம் பார்த்தான். அவற்றோடு தொடர்பு கொண்டு தனது வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முயன்றான், அவனுடைய மனத்தில் இவை தோன்றிய காலம் கற்பனையில் தோன்றியது. தன்னுடைய வாழ்க்கையின் அனுபவங்களின் மூலம் மனதில் தோன்றிய அறிவுப் படிமங்களின் துணையால் இவையில்லாத ஒரு காலத்தையும், இவை எவ்வாறு உருவாயின என்ற துவக்கத் தோற்றத்தையும், கற்பனை மூலமாக உருவாக்க முயன்றான்.

தாயும் சேயும் பிரசவத்திற்கு முன் ஒன்றாகயிருந்தது பின்னர் பிரிவது, முட்டையினுள் வளர்ச்சியடைந்த கரு முட்டையுடைந்து குஞ்சாவது போன்ற தோற்றநிலைகளை அவன் அனுபவ மூலம் அறிந்திருந்தான். அதுபோலவே தான் ஒளிக்கோளங்கள் இல்லாத காலத்தில் பொருள் ஒருமையில் இருந்தது. நீர் மட்டும் வெள்ளமாகப் பெருகி வந்ததும் அதன் பின்னர் ஒளிக்கோளங்கள் வந்ததாகவும் கற்பனையில் அனுமானம் செய்தான்.

இவ்வாறு மிகவும் எளிய நாகரிக நிலையில் வாழ்ந்த மனிதன், மிக எளிய கற்பனையில் புனைகதைகளைப் படைத்தான். உதாரணமாக

மயோரிப் புனைகதையைக் கூறலாம். நாகரிக நிலை உயர உயர எளிய புனைகதைகளை இணைத்து மிகவும் சிக்கலான புனைகதைகளைப் படைத்தான். தொழில் பிரிவினை அதிகரித்து வர்க்கங்கள் பிரியக்கூடிய நிலையில் இருந்த சமுதாய மனிதன், இனக்குழு மனிதன் படைத்த கதைப்படிமங்களை இணைத்து புதிய படைப்புக் கதைகளை உருவாக்கினான்.

'உலகம் எவ்வாறு தோன்றியது?' என்ற வினாவிற்கும் வகை மாதிரியான இனக்குழு நிலையிலிருந்து நாகரிகநிலை அடைந்து வந்த மனிதனின் மனதில் சில வகை மாதிரியான (Types) விடைகளே தோன்றியிருக்கிறது.

இதில் நான்கு வகையான தோற்றத்திற்கான காரணங்களைக் காண்கிறோம். இக்கட்டுரையில் 30 புனைகதைகள் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

முதல் வகையான கதைகளில் பண்டைக் காலத்தில் ஒருமையாக இருந்த உலகம், இரண்டு மூன்று அல்லது பலவாகப் பிரிகிறது,

பிரிவதற்குரிய காரணங்களில் வேறுபாடு இருக்கலாம்.

1. முதலில் பூமியும் வானமும் பிரிந்தன.
2. உலகத்தின் பெற்றோர்கள் பிரிந்து உலகைப் பிரித்தனர்.
3. குழப்பமான, அருவமான உலகம், தெளிவாக இரண்டு மூன்றாக வேறுப்பட்டு பிரிகிறது.
4. பகிரண்ட முட்டை இரண்டாக வெட்டப்பட்டது.

வேட்டை வாழ்க்கை நிலையில் வாழுகிற அமெரிக்க இந்திய இனக்குழு "வின்னிபாகோ" என்ற சமுதாயத்தில் உலகப் படைப்புப் பற்றி வழங்கும் கதை மிகவும் எளிய கற்பனை கொண்டது. அவர்கள் தங்கள் முதல் முன்னவனை, முதல் தந்தை என்று அழைத்தனர். அவர் ஒருமையான உலகைப் பிரித்தார். எப்படி? கதை சொல்லுகிறது:

முதலில் உருவங்கள் இல்லை. நம் தந்தை ஒரு கனவு நூலில் கட்டியிருந்த நமீனா என்னும் மாயையைத் தழுவினார். அதில் எதுவும் இல்லை. இந்த வெறுமையை மந்திர கோந்தினால், பஞ்சினால் ஒட்டினார். உலகத் தோற்றத்தை அவர் அறிந்தார். அவர் பல தடவை

துப்பினார். காடுகள் தோன்ற வேண்டும் என்று விரும்பினார். பூமியும் காடுகளும் உண்டாயின.

பின்னர் ஒரு மண்கட்டியை எடுத்து மனிதனை உருவாக்கினார். அவர் மூச்சுவிட்டார். பின்னர் அதனோடு பேசினார். அது பதில் சொல்லியது.[4]

இக்கதையில் ஒரு படைப்பாளி உண்டு. ஆனால் அவர் கடவுள் அல்லர்; சர்வ சக்திமானும் அல்லர்; மந்திரச் செயல் புரிகிற ஷாமன் என்ற மனித இனத்தைச் சேர்ந்த வரும் அல்லர். ஆனால் அதே சக்தியுடைய மனித இயல்பு வாய்ந்தவர் தாம்.

இவர் ஒருமையான அவ்யக்தமான உலகை வியக்தமாகப் பிரிக்கிறார். அதற்கு மந்திரவாதத்தைப் பயன்படுத்துகிறார்.

படைப்பாளிகள் உலகும், காடும், மனிதனும் தோன்றிய விதத்தைத் தங்கள் சமூக நிலையில் தோன்றிய கற்பனையால் படைத்துள்ளார்கள். மனிதன் ஒரு மண்கட்டியிலிருந்து தோன்றியவனே. "நமது தந்தை மூச்சு விட்டார். மனிதனும் மூச்சுவிடத் தொடங்கினான்." இது தொத்து மந்திரச்செயலாகும். நாம் செய்வது போல, உயிரற்றவற்றைச் செய்ய வைக்கலாம் என்ற மந்திரவாத நம்பிக்கை இதில் வெளிப்படுகிறது.

மயோரி என்ற இனக்குழு மக்களின் படைப்புப் புனைகதை வருமாறு:

அது எல்லையற்ற பரப்பான விண்ணில் வாழ்ந்தது. விண் முழுவதும் இருட்டாயிருந்தது. ஒளி சிறிதும் இல்லை. சுறுசுறுப்பாய் இருக்க அது முடிவு செய்தது. இருளில் ஒளியைத் தோற்றுவிக்க எண்ணியது. ஆயினும் இருள் குறையவில்லை.

ஒளிமிக்க இடம்
ஒளிமிக்க இடம்

என்று அது ஜபித்தது. தன்னைச் சூழ்ந்திருக்கும் நீரோடு அது பேசியது.

நீரே நீ தனியாக இரு:
விண்ணுலகம் தனியாக இருக்கட்டும்

உடனே இயங்கும் உலகம் அதன் காலடியில் கிடந்தது.

இச்சொற்கள் நமது முன்னோர்களின் மனதில் பதிந்தன. பரம்பரை பரம்பரையாக இச்சொற்கள் இறக்கி வந்தன. நமது புரோகிதன் மகிழ்ச்சியாக அதனை ஜீவன் என்றான்.

எல்லையற்ற வெற்றிடத்திலுள்ள விண்ணே
கடல் நீர் சாட்சியாக இருக்கட்டும்
புதிதாகத் தோன்றிய விண்ணே
நீ உலகத்தைப் பெற்றெடுத்தாய்

இந்தக் கதையோடு சேர்ந்த மூன்று சடங்குகள் உள்ளன. முதல் சடங்கு குழந்தையைப் பூமியின் வெற்றுக் கருப்பையில் ஊன்றுவது. இரண்டாவது சடங்கு உடலையும் உள்ளத்தையும் அறிவால் துலக்குவது. மூன்றாவது, சாவையும் போரையும் பற்றிய பாட்டையும் இனக்குழுவின் பரம்பரைப் பாட்டையும் பாராமல் சொல்லுவதாகும்.

எந்தச் சொற்களால் இயோ உலகத்தைப் படைத்தானோ, இருளில் இருந்து ஒளி வீசும் உலகை உண்டாக்கினானோ, அவற்றையே மூன்று சடங்குகளிலும் மக்கள் உச்சரிக்கிறார்கள். வெற்றுக் கருப்பையில் விதையை ஊன்றுவதற்கும் உலகைப் படைப்பதற்கும் பயன்படும் மந்திரம் ஒன்றே.[5]

இங்கும் படைப்பாளி உண்டு. அவன் இறைவன் அல்ல. மந்திரவாதியின் பண்புகளை மிகைப்படுத்திக் கருத்தால் படைக்கப்பட்ட ஒரு கற்பனை வடிவமே அவன். இங்கும் தொத்து மந்திரச் செயலும், சொல்லும் மந்திரச் சொற்களும் பயின்று வரக் காண்கிறோம். மந்திரவாத நம்பிக்கையில் இருந்துதான் படைப்புக்கதை உருவாகி உள்ளது. மந்திர சக்தி படைத்த மனித உருவத்திலிருந்து, அச்சக்தியிலேயே மிக அதிகம் பெற்ற ஒரு உயிரைக் கற்பனை செய்து உலகைப் படைத்தவனாகக் கொள்ளுகிறார்கள்.

மூன்று மந்திரங்களும், விருப்பத்தை வெளியிடுகின்றன. விருப்பத்தோடு தொடர்பில்லாத செயல்கள் செய்யப்படுகின்றன. மந்திரத்தின் சக்தியால் செயல்கள் நடைபெறுகின்றன. இயற்கையின் செயல் மானுடச் செயல்களை ஒத்திருப்பதாகக் கருதுவது மானுடத்தன்மைச் செயல் (anthropomorphic) என்று வழங்கப்படும்.

ஓர் ஆப்பிரிக்கப் படைப்புக்கதையைக் காண்போம். போஷாங்கே என்னும் குல மக்களிடையே வழங்கும் கதை இது. இவர்கள் பார்ட்டு இனத்தில் ஹாண்டு என்னும் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

இதுவும், படைப்பாளியை மானுட இயல்புகள் வாய்ந்த ஒரு மாபெரும் உருவம் வாய்ந்தவனாகக் கருதுகிறது.

"ஆரம்பத்தில் எங்கும் இருளாக இருந்தது. பம்பா (படைப்பாளி) தனியாக இருந்தான். அவனுக்குச் சகிக்கவொண்ணாத வலி ஏற்பட்டது. (குழந்தையைப் பெறுமுன் பெண்களுக்கு வலி ஏற்படுகிறது. அதுபோல உலகைப் பெறுவதற்கு பம்பாவிற்கு ஏற்பட்டது. இது மானிடத் தன்மை. பெண்மையும் இவ்வலி மூலம் உணர்த்தப்படுகிறது) தொத்து மந்திரச் செயலாக நீர் வழிந்து உலகம் காணப்பட்டது. வலிக்கும், இயற்கைச் செயலுக்கும் நேரடித் தொடர்பு கூறப்படவில்லை. மணல் கரைகளும், பாறைகளும் தோன்றின. ஆனால் உயிர்கள் தோன்றவில்லை".

"ஆனால் பம்பாவின் உடலில் இருந்து சந்திரனும், நட்சத்திரங்களும் தோன்றின. அவை அவன் வாந்தியெடுக்கும்போது தோன்றின. ஒன்பது உயிருள்ளவை தோன்றின. அவையாவன: 1. கோயி பம்பா, 2. பர்கோபம்பா, 3. கொண்டைப் கம்பா, 4. சிறுமீனானயோ, 5. பின்னர் ஆமை, 6. கொக்கு கொடும் வியாதிக்குக் காரணமான ட்ஸேட்ஸே, ஈ தோன்றியது. கடைசியில் மனிதர்கள் தோன்றினர். அவனுக்கு பம்பா "லோகோயிமா" என்று பெயரிட்டார்கள்.

ஒவ்வொரு வகை ஜந்துவும், தம் இனத்தைப் பெருக்கிகொண்டன. கொக்கிலிருந்து கழுகு தவிர மற்ற பறவைகளும் ஆட்டில் இருந்து கொம்புடைய விலங்குகளும் தோன்றின. யோவிலிருந்து கடலில் வாழ்ந்த மீன்களும் வண்டிலிருந்து எல்லாப் பூச்சிகளும் தோன்றின."

இங்கு சில ஜந்துக்கள் முதலில் தோன்றிய ஒன்பது மூல ஜந்துக்களின் பட்டியலில் காணப்படவில்லை. இனக்குழு மக்களின் நினைவாற்றல் மிகக் குறைவு. சில இனக்குழுவினர் 3 என்ற எண்ணிற்கு மேல் எண்ணத் தெரியாதவர்கள். பின்னர் தோன்றிய பிராணிகளை, 9 மூல ஜந்துக்களின் பரம்பரையாகத் தொடர்புபடுத்த இயலவில்லை.

உதாரணமாக பூச்சிகள், பாம்புகள் ஆகியவை மூல ஜந்துகள் ஒன்பதிலிருந்து பிறக்கவில்லை. பூச்சிகள் வண்டுகளில் இருந்தும்,

பாம்புகள் முதலையிலிருந்தும் தோன்றினவாம். வண்டும், முதலையும் முதலில் பம்பா வாந்தியெடுத்த 9 விலங்குகளுள் இல்லை.

இனி பம்பாவின் மைந்தர்கள் சிற்சில தாவரங்கள், பூச்சிகள், பறவைகளைப் படைக்கிறார்கள்.

மூத்த மகன் கரையானைப் படைத்தான். அவை உலகத்திலுள்ள பொருள்களை அழித்தன. படைத்தவனையும் அழித்துவிட்டன. ஆனால் தம்மைப் படைத்தவனின் நினைவாக மண்ணை வெளியே கொண்டு வந்தன.

இரண்டாவது மகன் ஓர் அதிசயமான செடியைக்கொண்டு வந்தான். அதிலிருந்து எல்லாச் செடிகளும் தோன்றின.

மூன்றாவது மகன் கழுகு போன்ற மிகப் பெரிய ராஜாளி என்னும் பறவையைப் படைத்தான்.

ட்ஸேட்ஸே மிகப் பெரும் சேதத்தை விளைவித்தது. மக்கள் கூட்டம் கூட்டமாக இறந்தனர். பம்பா அதனை உலகில் இருந்து வானத்திற்கு விரட்டினான். ஆயினும் சில சமயங்கள் அது பூமிக்கு வந்து மனிதர் கூட்டத்தை தாக்கி அழிக்கிறது.

இன்னும் உலகம் இருளில் சூழ்ந்திருந்தது. பம்பா மரங்களில் தீ ஒளிந்திருப்பதை அறிந்திருந்தான். அதனை வெளிப்படுத்த மனிதர்களுக்கு கற்றுக் கொடுத்தான்:

படைப்பு முடிந்ததும் பம்பா அமைதியான கிராமங்களின் வழியே நடந்து சென்றான். அவன் மக்களிடம் சொன்னான்:

## இவையாவும் உங்களுடையவை

இவ்வாறாக பம்பாவினிடமிருந்து மக்களினம், விலங்கினங்களின் முதல் – முன்னோர்கள் தோன்றினர். மக்கள் இனமும் விலங்கு இனமும் உலகில் தோன்றின.[5]

இது மானுடப் பிறப்பின் தன்மையில் இருந்து உலகின் பிறப்பை விளக்கும் புனைகதை. முதலில் நீரும் நிலமும் பிரிகிறது. இது சர்வாம்சமான கற்பனை. உலக முழுவதற்கும் பொதுவானது. ஆனால் உலகமும் ஜீவராசிகளும் படைக்கப்பட்ட விதம் பார்ட்டு இனத்தாரின்

சமூக வாழ்க்கையை அடித்தளமாக கொண்டு அதன்மீது கற்பனையால் கட்டப்பட்டுள்ளது. குழந்தைத்தனமான கற்பனையால் புனைகதை புனையப்பட்டுள்ளது என்பது வெளிப்படை.

அவர்கள் இனம் காணக்கூடிய 9 வகையான உயிரினங்கள் முதலில் படைக்கப்பட்டன. வாந்தியெடுத்து பம்பா அவற்றைப் படைத்தான். வாந்தியெடுக்கும்முன் அவனுக்கு வலியெடுத்தது.

இயற்கைக்கு மாறாக பெண் மகவு பெறுவதுபோல் ஆணுக்கு வலி வந்ததாக இக்கற்பனை அமைந்துள்ளது. பம்பா பெண் என்று சொல்லப்படவில்லை. எனவே இச்சமுதாயம் ஆண் வழி உரிமையும், பெண்வழி உரிமையும் கலந்த சமுதாயமாகத் தோன்றுகிறது.

இந்தியாவில் உலகப் படைப்பு பற்றி இரு வகைப் புனைகதைகள் உள்ளன. ஜகன்மாதா உலகைப் பெற்றெடுத்தாள் என்றும், பிரம்மா உலகைப் பெற்றெடுத்தான் என்றும், நூற்றுக்கணக்கான புனைகதைகள் உள்ளன. இவையிரண்டும் அக்கதைகளைப் படைத்தவர்களின் சமூக அமைப்பின் தன்மைகளைக் காட்டுகின்றன. ஒன்று தாய் வழி உரிமைச் சமுதாயம்; மற்றொன்று தந்தை வழி உரிமைச் சமுதாயம்.

பம்பாக் கதை தாய்வழி உரிமையை எதிர்த்து தந்தை வழி உரிமை முளைவிடுகிற நிலையில் தோன்றியதாக இருக்கவேண்டும்.

பெண் படைக்கப்பட்டது கதையில் இல்லை. மூன்று குமாரர்கள்தான் பம்பாவின் படைப்புத் தொழிலுக்கு உதவினர். எனவே இக்கதை ஆண் ஆதிக்கச் சமுதாயத்தின் படைப்பாகவே இருத்தல் வேண்டும்.

ஜீவராசிகளை வகைப்படுத்தும் முறையும் குழந்தைத்தனமாக இருப்பதைக் காணலாம். ஜீவராசிகளுள், ட்லேட்ஸே மட்டும் பிறவற்றிற்கு நோயுண்டாக்கக் கூடியதாயுள்ளது. அதனை பம்பா விண்ணிற்கு அனுப்பிவிட்டார்.

இங்கும் படைப்பாளி (anthromoporphic) மானிட வடிவமுடையவனாக இருக்கிறான். பெண்ணோடு சேர்ந்து அவன் மக்களைப் பெறவில்லை. பெண்ணின் பாத்திரம் இச்சமுதாயத்தில் அதிகம் உணரப்படவில்லை. எனவே அவர்களுடைய உணர்விற்கும் அறிவு வளர்ச்சிக்கும் ஏற்ப ஒரு படைப்பாளியைக் கற்பனையில்

படைத்தனர். அவனுக்கு முன்னரே இருளில் மூழ்கியிருந்த நீரினுள் மூழ்கிய உலகு இருந்தது. இவன் தனக்கு இயல்பான மந்திர சக்தியால் விலங்குகளைப் படைத்தான். படைக்கும் முன் வலியுண்டாகி வருந்தினான்.

தென் அமெரிக்காவில் மறைந்து போய்விட்ட 'மாயா' நாகரிகத்தில் மக்களுடைய 'போபல்வோ' என்ற புராணத்தில் ஒரு படைப்புக்கதை உள்ளது. ஸ்பானியர்கள் அவர்களை கிறிஸ்தவ சமயத்தைத் தழுவச் செய்த காலத்தில் இந்நூலைக் கண்டுபிடித்து ஸ்பானிய மொழியில் பெயர்த்தெழுதினார்கள். அதற்கு முன் மாயா சித்திரவெழுத்தில் இந்நூல் இருந்தது. நூல் மிகவும் பழமையானது.

"அனைத்தும் அமைதியாகவும் மௌனமாகவும் இருந்தன. பரந்த வெட்ட வெளிப் பரப்பில் சலனம் எதுவும் இல்லை.

அவர்கள் தோப்புகளையும், முந்திரித் தோட்டங்களையும் தோற்றுவிக்கவும் அதிகமாக்கவும் திட்டமிட்டார்கள். வானத்தில் ஹீரோதான் இருந்தார். தானிருப்பதை அவர் மின்னல் மூலமாகவும், மின்னல் ஒளி மூலமாகவும், இடி இடிப்பதன் மூலமாகவும் அறிவித்தார். இம்மூன்று செயல்களும் வானத்தின் இதயத்தில் நிகழ்ந்தன. பின் அவர்கள் 'டெப்பன் குகுமாட்ஸ் இடம் வந்தார்கள். நாகரிக வாழ்க்கையைத் தாங்கள் அமைத்துக் கொள்ள ஆலோசனை கேட்டார்கள்.

விதையை எப்படி உருவாக்குவது?
ஒளியை எப்படி உண்டாக்குவது?
நீரை எப்படிப் பெறுவது?
நீர்தான் உயிரை வளர்க்கிறது

"இப்படிச் செய்வோம். நீர் விலகட்டும். தரை தோன்றட்டும். நாம் விதை விதைப்போம். பகலின் ஒளி தரைமீது பாயட்டும். இவ்வளவும் இருந்தாலும் போதாது. அறிவுடைய மனிதர்கள் உலகில் வாழ வேண்டும்."

இதுவே உலகில் நடைபெற்ற முதல் உரையாடல். இவ்வுலகில் மனிதன் கூட வாழவில்லை.

வானமும் கடலும்தான் இருந்தன. உருவங்கள் தோன்றவில்லை. ஒன்று மற்றொன்றோடு இணைக்கப்படவில்லை. காற்று அசையும் சலசலப்புக்கூட இல்லை. வானத்திற்குக் கீழே எந்தவித ஒலியும் இல்லை.

படைப்புக் கர்த்தா, குருமாட்சம், இறக்கையுடைய பாம்பு ஒன்றும் ஆக மூன்று உயிர்கள் தாம் இருந்தன. சூழ்ந்திருந்த நீரில் இவர்கள் இருந்த இடத்தில் ஒளி வீசியது. அவர்கள் உலகைப் படைத்தார்கள். இப்படித் தான் உலகு படைக்கப்பட்டது. மூடுபனிபோலவும், மேகம் போலவும் மலை, திடமான பொருளாக உருவாயிற்று. பூமி என்று மூவரும் அழைத்தார்கள். பூமி உண்டாயிற்று. தோட்டங்களும் சைப்ரஸ் காடுகளும் மலைமீது உண்டாயின. குகுமாட்ஸ் மகிழ்ச்சி மிகுதியால் கூவினான்.

“வானத்தின் இதயமே, ஹீரோகும்; நீ வருக. மின்னலே இடியே நீங்கள் வருக. நாங்கள் படைத்திருக்கும் உலகைக் காண வருக.”[7]

இக்கதையில் உலகு துவக்கத்தில் எல்லாப் புனைகதைகளிலும் போலத்தான் உருவாக்கப்பட்டுள்ளது. படைப்பாளி ஒருவர். அவருக்கு உதவுபவர் மூவர். உலகு தோன்றும் முன் வானம் இருந்தது. உலகு வெள்ளப் பெருக்கில் மூழ்கி நீரில் இருந்து தோன்றிற்று. மலைமீது தோட்டங்கள் அமைத்துப் புராதன விவசாயம் செய்து வாழ்ந்த மக்கள் ஆதலால் மலையையும், காட்டையும் தோட்டங்களையும் அவர்கள் கற்பனையில் படைத்தார்கள்.

மேற்காட்டிய உதாரணங்கள் அனைத்தும் இனக்குழு சமுதாயத்தில் வாழ்ந்த மக்களின் கற்பனைகள். இயற்கையில் இருந்து மனிதனைப் போன்ற ஜீவன்கள் உலகைப் படைத்தார்கள். இவற்றில் பொதுவானதோர் படைப்புத் திட்டம் உள்ளது. வேறுபாடுகள் சமூக வளர்ச்சிக்கு ஏற்றாற்போல் உள்ளன.

பொதுவான படைப்புத் திட்டம்:

1. இருள் – நீர்
   |
   படைப்பாளி
   |
2. பிரிவு – தரையும், வானமும்
   |
3. விலங்குகள், பூச்சிகள், தாவரங்கள்
   |
4. மனிதர்கள்
   |
5. இரண்டாவது படைப்பு

படைப்பாளி இயற்கைப் பொருள்களில் இருந்துதான் உலகைப் படைத்தான் அல்லது பெண், குழந்தை பெறுவது போலத் தன் உடலில் இருந்து படைத்தான். 3, 4-ம் தான் சமுதாய வளர்ச்சி நிலைக்கும் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற நிலைக்கும் ஏற்ப வேறுபடுகிறது.

உலகப் படைப்பாளி ஆணா, பெண்ணா என்பதை அச்சமுதாயத்தின் உரிமை நிர்ணயிக்கும்.

பழமையான நாகரிகங்களில் ஒன்று மெசபடோமிய நாகரிகம். இந்நாகரிகத்தில் மார்டக் என்னும் தேவன் பிரபஞ்சத்தில் ஒழுங்கையும், அமைதியையும் நிலைநாட்டியதாக 'எனுமாஎலிஷ்' என்ற புராணக்கதை கூறுகிறது? குழப்பத்தில் இருந்து அரசு தோன்றியபின் முந்தைய குழப்பநிலை பற்றிய ஒரு புனைகதையும் பிந்திய அமைதி நிலை பற்றி ஒரு புனைகதையும் 'எனுமா எலிஷ்' என்ற புராணத்தில் இணைக்கப்பட்டுள்ளன. இக்கதையைப் படைத்த மக்களது வாழ்க்கையில் நிகழ்ந்த சமூகப் புரட்சிகள் மனித உலகிலும் தேவர் உலகிலும் நடைபெறுவதாகப் புராணம் கூறுகிறது. இக்கதையில் மிகத் தெளிவாகப் பெண் உரிமைச் சமுதாயம், ஆணுரிமைச் சமுதாயத்தினால் அழிக்கப்பட்ட செய்தி கூறப்படுகிறது. முந்தைய நிலைமையில் இருந்து புதிய நிலைமை தோன்றுகிற மாறுதல் மனிதர்களாலேயே நடைபெற்றதாயினும் அதனைத் தேவர்கள் நிகழ்த்துவதாகக் கதை கூறுகிறது. இத்தேவர்கள், முந்திய பெண்ணாதிக்க சமுதாயத்தின் தலைவி தியாமத்தின் பரம்பரையினரே ஆவர்.

எனுமா எலிஷா என்ற கதை கி.மு. 2-ம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. எழுதப்படு முன்னர் பல நூற்றாண்டுகள் வாய்மொழி மரபாக நிலைத்திருந்தது. எனவே கதை எழுதப்பட்ட காலத்திற்கு முன்னர் வாழ்ந்த மக்களின் படைப்புப் புனைகதையே 'எனுமா எலிஷ்' என்ற புராணக் கதையென்று கூறலாம். இதில் நாம் முற்கூறிய மெசபடோமிய மக்களது சமுதாய அமைப்பின் வளர்ச்சிக்கேற்றபடி இக்கதையில் மூன்று நிலைகள் உள்ளன.

1. படைப்புக்கு முற்பட்ட நிலையில் (பெண்) சக்தி மட்டும் இருந்த நிலை.
2. தேவர்கள் உருவான நிலை.
3. தேவர்கள் பெண்சக்தியை வென்ற நிலை.

இனிக் கதையைத் தெரிந்து கொள்வோம்:

"முதலில் இருளில் நீர்ப்பெருக்கம் இருந்தது. தியாமத் என்னும் தாய்த்தெய்வம் நீரின் மேல் நடனமாடிற்று. அதன் கையில் ஒரு பாம்பு இருந்தது. பாம்பின் புணர்ச்சியால் தியாமத் நீரையும், நிலத்தையும் பிரித்தாள். பின்மனிதனைப் படைத்தாள். மனிதனைத் தனது இணைவிழைச்சுக் கூட்டாளியாகக் கொண்டாள். அப்ஸூ என்பது அவனது பெயர்.

அப்ஸூவும் தியாமத்தும் உலக மக்களின் முன்னோர்கள். நீரில் குழப்பம் உண்டாயிற்று. தேவர்கள் பிறக்கும் முன் நீரில் புயல் உண்டாயிற்று. தேவர்கள் பிறக்கும் முன்னரே தியாமத் பிறந்துவிட்டான். பிறக்கப் போகும் தேவர்களைக் கொன்றுவிட அப்ஸூவை வேண்டிக் கொண்டாள். ஆனால் தேவர்களின் தலைவர் இயா இச்சூழ்ச்சியை அறிந்தான். அப்ஸூவை அவன் கொன்று விட்டான். தியாமத் அடங்காக் கோபம் கொண்டாள். அவளது உடலில் இருந்து அசுர விலங்குப் படையைத் தோற்றுவித்தாள். (இயற்கையில் உள்ள விலங்குகளைவிடப் பிரமாண்ட உருவங்கள் கொண்டவை) தனது துணைவனது கொலைக்குப் பழிவாங்கத் தீர்மானித்தாள்.

அச்சம் கொண்ட தேவர்கள் இயாவின் மகனான மார்டக்கை தியாமத்தோடு போர் புரிந்து அவளால் ஏற்படக்கூடிய பேரழிவிலிருந்து தங்களைக் காப்பாற்ற வேண்டிக் கொண்டார்கள். மார்டக் தன்னை அவர்கள் அரசனாக ஏற்றுக்கொண்டால் போர் புரிவதாகக் கூறினான். அவர்கள் கூட்டம் கூடி அவனை அரசனாக ஏற்றுக்கொண்டார்கள். அவனைப் பெரும்படையோடு அனுப்பி வைத்தார்கள். அவனுக்குத் தேரும் வேலும் வில்லும் அம்பும் கொடுத்தார்கள். புயலை அவனுக்குத் துணைபுரிய அனுப்பினார்கள். மார்டக் தியாமத்தோடு போர் புரிந்தான். அவளுடைய உடலைக் காற்றால் நிரப்பினான். அவள் வாய் திறந்தே இருந்தது. ஒரு அம்பை வாய் வழியாக இதயத்தில் செலுத்தினான். அவள் உடலை இரண்டாகக் கிழித்து, ஒரு பாதியை உயரே எறிந்தான். மேற்பகுதி வானமாகவும், கீழ்பகுதி பூமியாகவும் ஆயிற்று.

இதன்பின் மார்டக் விண்ணுலகத்தில் ஒழுங்கை ஏற்படுத்தினான். பின்னர் தனது தந்தையின் உதவியோடு தியாமத்தின் உதிரத்திலிருந்து 'கிங்கு' என்ற படைத்தலைவனையும், மெசபடோமியாவில் வாழ்கிற

கறுப்பு நிற முடியையுடைய மக்களையும் படைத்தான். இறுதியாக அவன் மக்களும் தேவர்களும் செய்ய வேண்டிய சடங்குகளை நிர்ணயித்தான். மனிதர்களுடைய நடைமுறை ஒழுங்குகளும் அவை குறித்த முன் அறிகுறிகளும் இவ்வாறுதான் என்று விதிக்கப்பட்டன. தேவர்களது கடமைகளும் அதிகாரங்களும் வரையறுக்கப்பட்டன.

50 தேவாதிபதிகளுக்கு ஆசனங்கள் அளிக்கப்பட்டன. ஏழு தேவாதி தேவர்கள் தோற்றுவிக்கப்பட்டனர். விண்ணுலகை ஆள 300 தேவர்கள் அரசர்களாக நியமிக்கப்பட்டனர்.

மார்டக் பயன்படுத்திய வலையையும், வில்லையும் செய்த என்லில் என்பவன் பல வலைகளையும் விற்களையும் செய்து கொண்டு வந்தான். மார்டக்கின் தந்தையர்கள் அவனது படைப்பைப் புகழ்ந்தார்கள். அனு என்னும் பெயருடைய தேவர் தலைவன் வில்லை எடுத்து முத்தமிட்டு அதனுடைய சக்தியையும் தங்களுக்கு வெற்றியளித்த இப்புதிய போர்க்கருவியின் திறத்தையும் புகழ்ந்து பேசினான். மார்டக்குக்கு ஒரு கோவில் கட்டினார்கள். தங்களை வணங்குவதற்காக அவன் மக்களைப் படைத்தான்.

மெசபடோமிய மக்களின் புனைகதைத் திறன் முதன் முதலில் அவ்யக்தமான பிரபஞ்சத்தில் இருந்து நீரும், இருளும், பெண் சக்தியும், ஆண் சக்தியான பாம்பும் பிரிந்ததைக் கற்பனை செய்தது. ஆண் சக்தி பெண்மையின் ஆதிக்கத்திற்கடங்கியே இருந்தது. இது தியாமத் மட்டும் நீரின் மீது நடனம் புரிந்த செயல்மூலம் குறிப்பிடப்படுகிறது. பின்னர் பாம்பு அவளிடமிருந்து தோன்றி அவளை கருவுறச் செய்தது. எனவே பெண் சக்தியே ஆண் சக்தியைப் படைத்து அதனோடு கூடி உலகைப் படைத்தது என்பதே மெசபடோமீயர்களது கற்பனையாக இருந்தது. ஒரு தடவை கருவுற்ற தியாமத்துக்கு அதன் பின்னர் உலகைப் படைக்க ஆண் சக்தி தேவையாக இருக்கவில்லை. தானே படைத்த அப்ஸுவோடு கூடி அவள் பின்னர் படைப்புத் தொழிலில் ஈடுபட்டாள். இப்பொழுது தேவர்களும், மனிதர்களும் படைக்கப்படவில்லை. விலங்குகள் மட்டுமே படைக்கப்பட்டிருந்தன.

இது முதற் பகுதிக்கதை. இக்கதையில் பெண்மைதான் படைப்பிற்கு மூல காரணம் என்பதும், ஆண்மை துணைக் காரணமாக மட்டுமே இருக்கிறது என்பதும் உட்கருத்தாக உள்ளது.

தியாமத்தின் படைப்பில் அவளையே அழிக்கக்கூடிய சக்தியான தேவர்கள் சிலர் பிறந்தார்கள். மீண்டும் தேவர்கள் பிறக்கப் பண்டைய கடலில் புயல் தோன்றியது.

இது பெண்ணுரிமைச் சமுதாயத்திலிருந்து ஆண் உரிமைச் சமுதாயம் பிறக்கிற நிலையைக் குறிக்கும். புதிய சமுதாயம் பழைய சமுதாயத்தை வன்முறையால் அழித்துத்தான் பிறக்கிறது. பழைய சமுதாயத்தின் ஒழுங்கு அழிக்கப்பட்டு புதிய சமுதாயத்தின் ஒழுங்கு வன்முறையால் தோற்றுவிக்கப்படுகிறது. புதிய சமுதாயத்தில் புதிய போர்க் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. புதிய சமுதாயத்தில் வளர்ச்சியடைந்த உற்பத்திக் கருவிகளே போர்க்கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. பெண்ணுரிமைச் சமுதாயத்தில் வளர்ச்சியடைந்த கருவிகள் இல்லை.

புதிய சமூகத்தில் பயன்பட்ட புதிய கருவிகள்; தேர், வலை, வில், அம்பு, வேல் முதலியன. தியாமத் கற்காலத்துக் கருவிகளையும், உடல் வலிமையையுமே பயன்படுத்தினாள். அனுமான், பீமன், போல.

பெண் உரிமைச் சமுதாயத்தில் அரசர்கள் இல்லை. தாயும் மக்களும் தான் இருந்தனர். விலங்குகளைப் போரில் பயன்படுத்தினர். இவர்கள் எப்படி உணவு தேடிக் கொண்டார்கள் என்ற கேள்வியே புராணக் கற்பனையைப் புனைந்தவர்கள் மனத்தில் எழவில்லை. ஏனெனில் அரசும் மதமும் தோன்றிய வளர்ச்சிக் கட்டத்தில் உணவு என்பது முந்திய சமுதாயத்தில் பிரச்சினையாக இருந்தது போல இல்லாத காலத்தில் அதைப்பற்றி அவர்கள் அதிகமாகச் சிந்திக்கவில்லை. தங்கள் மனப்படிமங்களைக் கொண்டே முந்திய காலத்தைப் பற்றியும் அவர்கள் சிந்தித்திருக்க வேண்டும்.

தனிச்சொத்துடைமையும், வர்க்க உறவுகளும் தோன்றிய பின்னரே ஆளுவோரும், ஆளப்படுவோரும் தோன்றுகின்றனர். உலகில் தோன்றிய யதார்த்தமே, விண்ணுலகில் நிழலாக அக்கால மக்களின் உள்ளத்தில் பிரதி பலித்திருக்க வேண்டும். எனவே ஏழு கடவுள்கள், 50 தேவாதி தேவர்கள், 300 தேவர்கள் விண்ணுலகை ஆள நியமிக்கப்பட்டதாகக் கதை கூறும். இப்பிரதிபலிப்பின் யதார்த்தம் என்ன? வாய்மொழி மரபு எழுதப்படுகிற காலத்தில் (கி.மு. 2–ம் நூற்றாண்டில்) அடிமைச் சமுதாயம் இருந்தது. அடிமை அரசுகளும் இருந்தன. அரசர்க்கரசனாக மார்டக் விளங்கினான்.

பெண்ணுரிமைச் சமுதாயத்தோடு போராடி, ஆணுரிமைச் சமுதாயம் தன்னை நிறுவிக்கொண்ட காலம் அது. அடிமைச் சமுதாயத்தின் ஆளும் வர்க்கமே பெண்ணுரிமைச் சமுதாயத்தை அழித்து, பெண்களை அடிமைப்படுத்தியது என்று உறுதியாகக் கூறலாம்.

தேவர்களுடைய உலகில் கருவிகளைச் செய்தவன் புகழப்பட்டான். தேவர்க்கரசனுடைய தந்தை வில்லை முத்தமிட்டு அதனைப் புகழ்ந்தான். பழைய தடி, கற்கள் போன்ற கருவிகளைவிட அழிவுத்திறன் அதிகம் பெற்ற வில்லை அவன் புகழ்ந்ததற்குக் காரணம், மனிதனுடைய உழைப்பும், அறிவும் புதிய கருவிகளைச் செய்து ஆளும் வர்க்கத்திற்கு அளித்தது என்பதனாலேயே ஆகும்.

தங்களது யதார்த்த உலகில் நடந்த வரலாற்று நிகழ்ச்சிகளையும் வரலாற்று முற்காலத்தில் நிகழ்ந்ததாகத் தங்கள் கற்பனையில் கருதி வந்த நிகழ்ச்சிப் போலிகளையும் புனைகதைப் பாணியில் தேவருலகில் நடை பெற்றதாக, கலை உருவங்களாக மெசபடோமிய மக்கள் படைத்தார்கள். சமூக யதார்த்தம் பற்றி அவ்வச் சமூகத்தாருடைய கலைப் படைப்பாக இல்லாமல் ஒரு சமூகத்தை அழித்து மற்றொரு சமூகத்தை நிறுவியவர்கள் அச்சமூகத்தின் நியாயத் தன்மையை மெய்ப்பிக்கத் தோற்றுவித்த புனைகதைத் தொகுப்பான புராணமே (Legend) எனுமா எலிஷா.

பண்டைய எகிப்திய நாகரிகத்தில் கடலில் இருந்து பிறந்த தலைமைக் கடவுளும் அவன் வாயிலிருந்து தோன்றிய இரு கடவுளர்களும் சேர்ந்து உலகைப் படைத்தார்கள். 'அபாபிஸ்' (Apophis) என்ற புராணக்கதை கூறும்: இங்கு உலகின் மூலப்பொருள் கடல் தான். கடலில் இருந்து தோன்றிய கடவுள்தான் தெய்வங்களையும், மனிதனையும் படைத்தார்.

கதை வருமாறு:

எந்நாட்டவர்க்கும் இறைவன், தான் உருவானவுடன் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

"நான்தான் முதலில் உருவானவன். மற்றவையெல்லாம் நான் உருவான பின் தோன்றின. எனது வாயிலிருந்து எண்ணற்ற ஜீவன்கள் வெளிவந்தன. உலகமும், உலகில் வாழ்ந்த ஜீவன்களும் அப்பொழுது

தோன்றவில்லை. நான் களைப்பாக இருந்தேன். களைப்பினால் கடலிலுள்ள ஜீவன்களோடு பிணைக்கப்பட்டிருந்தேன். எனக்கு நிற்க இடம் இல்லை. தனியாகவே இருந்து எல்லா உருவங்களையும் படைத்தேன். என் வாயில் இருந்து 'ஷீ', 'டெப்மட்' (Tefmut) என்ற இரு தெய்வங்கள் தோன்றினார்கள். இவர்கள் தாம் வேறு ஜீவன்கள் தோன்று முன் தோன்றியவர்கள். நான் சிந்தித்தேன்; பல உருவங்கள் தோன்றின. ஷீவையும் டெப்மட்டையும் எனது தந்தையான நீர்பரப்பு வளர்த்தார். நான் ஒரே கடவுளான பின்னர் என்னுள் மூன்று கடவுளர்கள் இருந்தனர். டெப்மட்டும், ஷீவும் நீர்பரப்பில் மகிழ்ச்சியோடு விளையாடினர். இதன் பின்னர் என் கண்ணை என்னிடம் கொணர்ந்தனர். (கண் – சந்திரன்) எனது உறுப்புகள் பொருத்தப்பட்ட பின்னர் என் கண்ணில் இருந்து நீர் வழிந்தது. கண்ணீரில் இருந்து மக்கள் தோன்றினர். பின்னர் என் கண் பொருந்தியது. அதற்கு மிகவும் கோபம். ஏனெனில் அது இல்லாத காலத்தில் நான் ஒரு கண்ணைப் பொருத்தியிருந்தேன். அது மிகவும் பிரகாசமாக இருந்தது. எனது நெற்றியில் பழைய கண்ணுக்கு மேல் ஓரிடம் கொடுத்தேன். அவள் (கண்) உலகமுழுவதும் அரசு செலுத்தத் தொடங்கினாள். அவள் பூக்கத் தொடங்கியதும் நெற்றியிலிருந்து விழுந்து விட்டாள். நான் பாம்புகளையெல்லாம் படைத்தேன். ஷீவும், டெப்மட்டும், கெப் (Geb)பையும், நட்டையும் (Nut) படைத்தார்கள். இவர்களிருவரும் ஒரே உடலாகி ஹோரஸ், ஆஸிரிஸ் என்பவர்களைப் படைத்தனர். அவர்கள் கடவுள் தலை மேலுள்ள அக்கினி கக்கும் பாம்பைப் படைத்தார்கள். யெத்ஜஸிஸ், நெப்திஸ் என்பவர்களும் அதன் பின் அவர்களுக்குக் குழந்தைகளும் பிறந்தார்கள்.[8]

எகிப்தியர்கள் தங்கள் சமூக வளர்ச்சியின் பயனாகப் பல தெய்வங்களில் ஒரு தெய்வத்தை எல்லாவற்றிற்கும் மேலானதாகக் கருதினார்கள். இத் தெய்வம் அவர்கள் கற்பனையில் தோன்றுவதற்கு முன் பலதெய்வ வணக்கம் அவர்களிடையே இருந்தது. ஒரு தெய்வ வணக்கம் தோன்றிய காலத்தில் அவர்கள் அத்தெய்வங்களை மாபெரும் தெய்வத்தின் படைப்புகளாகக் காட்ட வேண்டியிருந்தது. ஷீவும், டெப்மட்டும் மாபெரும் தெய்வத்திற்கு முன்னரே வணங்கப்பட்ட தெய்வங்கள் நப், கெப், ஹோரஸ், ஆஸிரிஸ், ஐஸிஸ், நெப்தூஸ் ஆகிய தெய்வங்களும் அவ்வாறே. இவை பருவ தெய்வங்களாக வழிபடப்பட்டன.

பருவதெய்வங்கள் செத்துப் பிறப்பதாக நம்பி, விழாக்கள் கொண்டாடினார்கள். சூரிய சந்திரர்களைத் தனிக்கடவுள்களாக வணங்கினார்கள். இவர்களனைவரும் 'பெருந்தெய்வம்' என்ற கருத்துத் தோன்றிய பின்னர், கற்பனையில் அவரால் படைக்கப்பட்டவையாகப் பெருந்தெய்வத்திற்குக் கீழ்ப்பட்ட தெய்வங்களாக இணைக்கப்பட்டன.

சூரியசந்திரர்கள், பெருந்தெய்வத்தின் நெற்றிக் கண்ணாக மாற்றப்பட்டனர். கண்கள் கதையில் பின்னால் இருதெய்வங்களால் கொண்டுவரப்பட்டதாகவும், அது பூப்பு அடைந்தவுடன் நெற்றியில் இருந்து விழுந்து விட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. இது சூரிய வணக்கத்திற்கும் பெருந்தெய்வ வணக்கத்திற்கும் ஏற்பட்ட முரண்பாடுகளைக் குறிப்பிட்டது. சிறிது காலம் பெருந்தெய்வத்தோடு இணைக்கப்பட்டு பின்னர் பிரித்து வணங்கப்பட்டதை இது குறிப்பிடலாம். தலையில் தீ உமிழும் பாம்பு இருக்கிறதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பல்வேறு தெய்வ வணக்கங்களை ஒரே தெய்வ வணக்கமாக, உருவாக்குகிறபோது ஏற்படும் முரண்பாடுகள், கதையிலும் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன. நெற்றிக்கண் தலையில் பாம்பு, சடையில் சந்திரன் முதலிய கூறுகளைக் கொண்ட எகிப்தியப் பெருந்தெய்வம், நம் நாட்டுச் சிவனை ஒத்திருப்பதைக் காணலாம். சிவனுடைய கற்பனைப் படிமத்திற்கும் எகிப்தியப் பெருந்தெய்வ கற்பனைப் படிமத்திற்கும் சில ஒற்றுமைகள் இருப்பதைக் காணலாம். சிவனும், பல தெய்வங்களின் இணைப்பான பெருந்தெய்வமே. மூன்று தெய்வங்கள் ஒன்றாக இருப்பதும் அவற்றைப் பெருந்தெய்வமே படைத்தது என்பதும் முக்கியமான ஒற்றுமை. நெற்றிக்கண், தலையில் பாம்பு, புத்திரர்களைப் பெண் சக்தியில்லாமலேயே பெற்றது போன்ற செய்திகளிலும் இவ்வொற்றுமையைக் காண்கிறோம்.

கிரேக்கப் படைப்புக்கதை ஹெஸியோடு என்ற நூலில் காணப்படுகிறது.

இக்கதையில் நான்கு பகுதிகள் உள்ளன. இதற்கும் மெசபடோமியப் புராணக் கதைக்கும் ஒற்றுமை உள்ளது. ஆயினும் வேற்றுமைகள் இவை வெவ்வேறு கதைகள் என்று காட்டப் போதுமானவையாக உள்ளன. ஆரம்பக் கட்டங்களில் வேற்றுமையை விட ஒற்றுமை அதிகம் உள்ளது.

கதையின் முற்பகுதியில், குழப்பத்திலிருந்தும் வெட்ட வெளியிலிருந்தும் உலகமும், வானமும் தோன்றி, வானத்தில் முதல் பரம்பரையான தேவர்கள் தோன்றுவது வரை சொல்லப்படுகிறது.

இரண்டாவது பகுதி குரோனாஸ் என்னும் பூமிகுமாரன் தனது தந்தையைக் காயடிக்கும் செயல் கூறப்பட்டுள்ளது.

மூன்றாவது பகுதி தந்தையால் விழுங்கப்படுவதினின்று ஜீயுஸ் என்னும் கிரேக்க இந்திரன் தப்புகிற செயல் வருணிக்கப்படுகிறது.

நான்காவது பகுதி ஜீயுஸுக்கும் தேவர்கள் இராட்சசர்களோடு போரிட்டு ஜயிக்கும் நிகழ்ச்சி சொல்லப்படுகிறது.

கதை வருமாறு:

1. முதலில் வெட்டவெளி உருவாயிற்று.

2. அகல் இடம் கொண்ட உலகம் தோன்றியது.

எல்லோருக்கும் வாழ இடமளிப்பதும், ஈரோஸ் (ஆசை) என்ற அழகிய தேவியும், மற்ற தேவர்களும் வசிப்பதற்கு இடமானதும் தேவன், மனிதன் ஆகியவர்களது புயல் வேகமான ஆசைகளை, தனது குளிர்ந்த மெல்லிய வீச்சால் தணிவிக்கின்ற காற்று தங்குகிற இடமானதுமான உலகம் தோன்றியது (கிரேக்கப் புராணத்தின்படி தேவர்கள் வசிப்பது இவ்வுலகில்தான். மேல் உலகில் அல்ல).

இருளில் இருந்தும், வெட்ட வெளியில் இருந்தும் ஒளி தோன்றி இரவும் பகலும் உண்டாயின.

பூமி தன்னைப் போன்ற அளவுடைய வானத்தைத் தன்னை மூடிக் கொள்வதற்காகப் படைத்தாள். பிறகு உயர்ந்த மலைகளையும் அவற்றிலிருந்து குதித்து ஓடிவரும் அருவிகளையும் நீரோடைகளையும் சிருஷ்டித்தாள். அவற்றில் தேவர்களுடைய குடியிருப்புகளை அமைத்தாள். அவள் மீது அன்பு செலுத்துவார் யாரும் இல்லை.

இதன்பின் வானத்தோடு கூடினாள். இதன் விளைவாகச் சமுத்திரம் தோன்றியது. கடல், நீர்த்தெய்வங்களான கோக்கஸ், ஹைப்பீரியன், இயாபிடஸ், தியோ, பியா (Phea) தெர்மியா, நிமோஸீன் (நினைவு) பொன்முடி தரித்த ஃபிபே (Phobe) அழகு மிக்க தெடிஸ் ஆகியவர்கள் பிறந்தார்கள். எல்லோருக்கும் கடைசியாக குரோனஸ்

என்ற கடைக்குட்டி பிறந்தான். இவன் தைரியமிக்கவன். பிறகு பூமி, முரடர்களான சைக்ளாப்ஸ் என்ற ஒற்றைக் கண் ராட்சசர்களைப் பெற்றாள். இடி, மின்னல், ஒளி ஆகிய சக்திகளை அவர்கள் ஜீயுஸூக்குக் கொடுத்தார்கள். அவர்கள் தேவர்களைப் போல இருந்தார்கள். ஆனால் நெற்றியில் ஒரு கண் இருந்தது. அவர்களுடைய வலிமையும், திறமையும் கைகளில் இருந்தது.

இன்னும் மூன்று குழந்தைகள் பூமிக்குப் பிறந்தார்கள். அவர்கள் கோட்டஸ், பிரையேரியல், கைஸ் என்பவர்கள். இவர்களுக்கு 100 கைகள் இருந்தன. தங்களது பேருருவத்துக்கு ஏற்ற பெருவலிமை அவர்களுக்கு இருந்தது.

இவர்களது உருவையும், பலத்தையும் கண்டு இவர்களால் தனக்கே ஆபத்து நேருமோ என்று தந்தை பயந்தான். மேற்கொண்டு யாரும் பிறக்கமுடியாதபடி பூமியின் கருப்பையினுள் சிசுக்களை நீண்ட காலம் தங்க வைத்தான். பூமி மூச்சு முட்டித் திணறினாள். பின்னர் அவள் தனது கணவனைப் பழி வாங்க முடிவு செய்தாள். தன்னுடைய குமாரர்களை அழைத்து அவர்களிடம் சொன்னாள்:

“உங்கள் தந்தை காட்டுமிராண்டி. அவர் எனக்குச் செய்த வன்முறைக் குற்றத்திற்குப் பழிவாங்க வேண்டும். அவர்தான் முதலில் இயற்கைக்கு விரோதமாகக் குற்றம் புரிந்தவர்” என்றாள்.

குமாரர்கள் பயத்தால் ஒடுங்கிப் போயினர். குரோனஸ் மட்டும் துணிந்து பதிலளித்தான்: “அம்மா உன்னுடைய திட்டங்களை மேற்கொண்டு நான் நிறைவேற்றுகிறேன். எனக்கு என் தந்தையின் மீது மதிப்பு மரியாதை எதுவும் இல்லை. ஏனெனில் அவர்தான் முதலில் வன்முறையை உன் மீது செலுத்தினார்.”

பூமி குரோனஸ் கையில் ஒரு அரிவாளை (கதிர் அறுக்கும் அரிவாள்) கொடுத்து ஒரு புதரினுள் மறைந்து கொள்ளச் சொன்னாள். மறைந்து கொண்ட பின் தனது பழிவாங்கும் திட்டத்தை விவரித்தாள். வானம், பூமியோடு கூடுவதற்கு வந்தான். அவளை மறைத்து அவன் உடல் அவள் மீது கிடந்தது. மறைவிடத்திலிருந்து வந்த குரோனஸ் இடது கையினால், வானத்தின் ஆண் குறியைப் பற்றி வலது கையிலுள்ள அரிவாளால் அறுத்துத் தூர எறிந்தான். வழிந்த ரத்தம் பூமி மீது வழிந்து ஓட விடாமல் உறிஞ்சிக்கொண்டாள். அவ்வுதிரத்தினின்றும்

பழிவாங்கும் ஆவிகள் தோன்றின. இவற்றிற்கு எரிமியஸ் என்று பெயர். பின்னுகிற கவசங்களையணிந்து நீண்ட வேல்களைத் தாங்கிய அரக்கர்கள் தோன்றினார்கள். அறுத்தெரியப்பட்ட உறுப்பு கடலில் மிதந்து கொண்டிருந்தது. அதிலிருந்து கிளம்பிய நுரையில் இருந்து அழகிய தேவதையொருத்தி தோன்றினாள். அவள் எரித்திரியா வழியாக சைப்ரஸ் வந்து சேர்ந்தாள். சைப்ரஸ் கடற்கரையில் அவள் கரையேறினாள். தேவர்கள் அவளை அப்ரோடைட் என்று பெயரிட்டு அழைத்தனர். அவளது பாங்கியர்களாக உணர்ச்சியும் (Passion) காதலும் (Eros) படைக்கப்பட்டனர். அவளுக்கு அளிக்கப்பட்ட உரிமைகள் மகளிரது புன்சிரிப்பு, கவரும் வித்தைகள், மகளிர் தரும் இன்பம், காதல் ஆகியவை.

தனது மக்களை தேவரது தந்தை 'டைகூன்' டைடன்கள் (தடியர்கள் – Titans) என்றழைத்தார். ஏனெனில் அவருக்கு அவர்கள் மீது வெறுப்பு இருந்தது. தங்கள் கழுத்துக்கே சுருக்கு போட்டுக் கொண்ட முட்டாள்களாக அவர்களை அவர் கருதினார். அவர்களுடைய கொடுஞ் செயலுக்கு உரிய தண்டனையை அளிக்கக் காத்திருந்தார்.

1. பூமியிலிருந்துதான் வானமும், மலைகளும், நதிகளும் தோன்றின. உயிரற்ற அசலப்பொருள்களைப் படைத்தவள் பூமியே.

2. இதன் பின்னர் மனிதர் போன்ற தேவர்கள் படைக்கப்பட்டனர். இப்படைப்புக்கு மனிதப் புணர்ச்சி போன்ற (Anthropomorphic action) மானிட இயல்புச் செயல் தேவையாய் இருந்தது. இவர்கள் தேவர்களும் அசுரர்களும் ஆவர்.

இவர்களுக்குப் பின் மிகவும் வலிமை வாய்ந்த பேருருவம் பெற்ற இராட்சகர்கள் தோன்றினர்.

3. அப்புறம்தான் தந்தை அவர்களது கொடுஞ் செயல்களுக்காக அவர்களைத் தண்டிக்க உறுதி கொண்டார்.

தாய் அவருடைய வன்முறைச் செயலுக்காக அவரைத் தண்டிக்க தனது மக்களை வேண்டினாள். குரோனஸ் சம்மதித்தான். தந்தையின் உறுப்பை அறுத்தெறிந்தான். இரத்தத்திலிருந்து எரிமியல் என்ற அரக்கர்களும், அப்ரோடைட் என்ற பெண் தெய்வமும் தோன்றினர்.

4. இக்கதையின் சமூகக் கருத்துக்கள் வருமாறு: தாய்மை அல்லது படைப்புச் சக்தி உயிரில்லாத பொருள்களைத் தோற்றுவித்தது: அப்படிப் படைப்பை நிகழ்த்த ஆண்சக்தி தேவையில்லாதிருந்தது. தேவர்களையும் அசுரர்களையும் தோற்றுவிக்க மானிட உருவ இயல்பு அவசியமாயிற்று. மானிட உருவ சக்தி ஆண்மையின் வன்முறையாக மாறிற்று. தனது வழிவந்தோருக்கே கேடு செய்யும் நிலை தோன்றியது. வானத் தந்தையும், பூமித் தாயும் ஏன் பகைத்துக் கொண்டனர்? குரோனஸ் ஏன் தந்தையின் உறுப்பை அறுத்தெறிந்தான்? இந்த வினாக்களுக்கு விடைகாண முயலுவோம்.

கதையின் துவக்க காலம் தாயுரிமைக் காலம். தாயுரிமைக்கு, தந்தையுரிமை முரண்பட்ட நிலைமையை தந்தை தாயின் கருவினுள் பிறக்க வேண்டிய பேருருவம் அடையப்போகும் சிசுக்களை அடக்கிய செயல் குறிப்பிடும். இதனால் பெண்மை வேதனையடைகிறது. பெண்மை இக்கொடுஞ் செயலை எதிர்த்து தனது மக்களுள் ஒருவனைப் பழி வாங்கச் சொல்லுகிறது.

தந்தைக்கெதிராகவே குரோனஸ் செயல் புரியக் காரணம் என்ன? கதை தோன்றிய காலம், தந்தையுரிமை தோற்றமெடுத்த காலம். இவ்வுரிமை திடீரென்று தோன்றிவிடவில்லை, இவ்வுரிமை இனக்குழுக்கள், அரசு தோன்றுகிற வளர்ச்சி நிலையில் அமைதியாகத் தந்தை – மகன் என்ற உரிமையாகத் தோன்றிவிடவில்லை என்பதை கிரேக்க புராணக் கதைகளும் எகிப்திய புராணக் கதைகளும் காட்டுகின்றன. அரசபதவி, குருபதவியினின்றும் தோன்றியது. காலப்போக்கில் இரு பதவிகளும் இணைக்கப்பட்டு, ஒருவரே இரு பதவிகளையும் வகித்தார். இப்பதவிகள் இணைந்த காலத்தில் ஆயுள் கால முழுவதும் இவ்விரு பதவிகளையும் ஒருவர் வகிக்க முடியாது. முதலில் சில ஆண்டுகள் ஒருவர் பதவி வகித்த பின்னர், அவரைத் தெய்வங்களுக்குப் பலியிட்டு வேறொருவனைத் தேர்ந்தெடுப்பார்கள். அவன் அரச பரம்பரையாக இருக்க வேண்டுமென்பதில்லை. அவன் இனக்குழுவில் திறமை பெற்றவனாக இருக்கவேண்டும். எனவே ஆளும் வர்க்கம் உருவாகு முன்னர், தனிச் சொத்துரிமை தோன்றுமுன் சமூக அமைப்பின் காரணமாகத் தோன்றிய சமூகச் சடங்கு வழக்கமாக இது இருந்தது.

பின்னர் தனிச்சொத்துரிமையும் வர்க்கங்களும் தோன்றின. ஆளும் வர்க்கத்தின் தலைமைப் பதவியை தனது வம்சத்துக்குள்ளேயே நிலைநிறுத்திக் கொள்ள ஆளும் பதவியில் இருப்பவன் ஆசைப்பட்டான். இதனால் பழக்கமும், சடங்கும் மாற்றப்பட்டன. சில வருஷங்களுக்குப் பின்னர் கொல்லப்பட வேண்டிய அரசன் சடங்கு பூர்வமாகக் கொல்லப்பட்டு, மீண்டும் பதவியிலேயே நீடித்தான். எகிப்தில் இவ்வழக்கம் எப்படி மாற்றமடைந்தது என்று காண்போம். எகிப்திய மன்னர்களான பாரோவாக்கள் 12 ஆண்டுக்கு ஒரு முறை ஒரு நாள் பதவியிலிருந்து இறக்கப்படுவார்கள். யாராவது ஒருவனை ஒருநாள் அரசனாக்குவார்கள். அவன் ஒரு நாள் அரியணை ஏறுவான். மறுநாள் அவனைப் பலியிடுவார்கள். பழைய அரசன் மீண்டும் சிங்காதனம் ஏறுவான். மீண்டும் பன்னிரண்டு ஆண்டுகள் அவன் பதவி வகிப்பான். மீண்டும் சடங்குப் பலிக்கு ஒருவன் தேர்ந்தெடுக்கப்படுவான். மீண்டும் பலி; மீண்டும் பழைய அரசன் பதவியேற்பான். அரசன் இறந்து போனால் ஒருநாள் வேறு ஒருவனை அரச பதவியில் அமர்த்திப் பலியிடுவார்கள். அரசனது மக்கள் யாராவது ஒருவன் அரசனாகத் தேர்ந்தெடுக்கப் படுவான். இம்முறை எகிப்தில் கிறிஸ்துவிற்கு முன் சில நூற்றாண்டுகளில் நிகழ் முறையாக இருந்தது.

அரச பதவிக்கு அரசனது மகன் வரவேண்டும் என்ற ஆசை, தந்தைக்கு விரோதமாக மகனை நிறுத்தியது. மகன் தந்தையைக் கொல்லவோ, மீண்டும் மக்களைப் பெற சக்தியற்றவனாகச் செய்யவோ முயன்ற வரலாற்றுப் போக்கையே, குரோனஸ் வானத் தந்தை பகைமை காட்டுகிறது.

உடல் வலிமை மிக்க அரக்கர்கள் ஒரே தந்தையிடம் தோன்றியதாகக் கருதப்பட்ட பல்வேறு இனமக்களே. இந்த வேறுபாட்டை புராணம் இரண்டு மூன்று வகையாகக் குறிப்பிடுகிறது. நூறு கைகொண்டவர்கள் ஒற்றை கண்ணர்கள், பளபளப்பான உலோகக் கவசங்களும், உலோக ஈட்டிகளும் கொண்டவர்கள் என அவர்கள் குறிப்பிடப் பட்டுள்ளனர்.

கடைசியில் தோன்றியவர்கள் உலோக ஆயுதங்களைப் பயன்படுத்தியவர்கள்.

அப்ரோடைட்டின் தோற்றம் புராணப் பாணியில் கூறப்பட்டுள்ளது. இது தந்தை உரிமைக்கும், தாயுரிமைக்கும் இடையே நடந்த போரில்

தாய்த்தெய்வம் பண்பு மாற்றம் பெற்று, வேறு நாடுகளுக்குக் குடி பெயர்ந்ததை குறிப்பிடலாம்.

இக்கதையில் உலோக காலத்தின் தோற்றம் இரண்டு வகைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒன்று தாய்த் தெய்வம், சாம்பல் நிற எஃகைப் படைத்து, அதில் ஓர் அரிவாள் செய்து குரோனஸிடம் கொடுத்தாள். அவ்வாறானால் இக்கதை அரிவாள் தோன்றிய பின்னர் தோன்றியதாக இருக்க வேண்டும். அரிவாள் பயிரை அறுவடை செய்யப் பயன்படும் கருவி. அவ்வாறாயின் இப்புனைகதையைப் படைத்த மக்கள் ஆரம்பகால விவசாயத்தை அறிந்திருந்தனர். மாட்டைப் பழக்கவோ கலப்பை விவசாயம் செய்யவோ அறிந்திருந்ததில்லை.

விவசாயம் பெண்களது படைப்பு என்பது சமூக மானிடவியலார் அனைவரும் ஒப்புக் கொண்டுள்ள ஒரு கருத்து. கதையும் தாயுரிமைச் சமுதாயத்தில் இரும்பு அரிவாள் பயன்பட்டதைக் கூறுகிறது. ஆனால் அரிவாள் அறுவடை செய்யப் பயன்படுத்தப்படவில்லை. தந்தையின் படைப்பு உறுப்பை அறுத்தெறியப் பயன்படுத்தப்பட்டது.

இது உயர்வு நவிற்சியாக, பல இனக் குழுக்களுக்கும் விரோதமாகிவிட்ட தந்தையாதிக்கத்தை அழிக்கும் முயற்சியைக் குறிப்பிடுகிறது.

நாம் இங்கு சொன்ன கதையில் 3, 4 பாகங்கள் இதனைத் தெளிவுபடுத்தும். அதனையும் சுருக்கமாகவேனும் கூறினால்தான் இப்புனைகதை பற்றிய சமூக மானிடயில் விளக்கம் முழுமையடையும்.

மூன்றாவது பகுதியில் ஜீயுஸ் தனது தந்தையால் விழுங்கப் படுவதினின்றும் தப்பித்துக் கொள்கிறான். ஜீயுஸை தந்தை விழுங்கும் முயற்சி தந்தை – மகன் முரண்பாட்டையும், பகைமையையும் குறிக்கும். இதன் காரணத்தை முன்னரே குறிப்பிட்டோம்.

ஜீயுஸ் தலைமையில் தேவர் ஒன்றுதிரண்டு அரக்கரோடு போராடி அவர்களை அழித்ததை நான்காம் பகுதி கூறும். அரக்கர்கள் தாயுரிமைச் சமுதாயத்தின் ஆண்கள் வளர்ச்சி பெற்ற தந்தையுரிமைச் சமுதாயத்தின் ஆண்கள் தான் தேவர்களெனக் கருதப்படுகிறார்கள்.

எனவே முடிவில் தந்தையுரிமை நிலை நாட்டப்படுகிறது. இதற்குரிய சமூக உற்பத்தி நிலை தோன்றியவுடன் சமூக உறவுகள்

போரினால் மாற்றப்படுகின்றன. புனைகதை படைத்தவர்களது பண்டைக்கால முன்னோர்களது செயல்களையே புராணத்தில் வானத்தந்தை, பூமித்தாய் ஆகியோரின் உறவாகவும், போராட்டமாகவும், குரோனஸ் வானத்தந்தை ஆகியோரின் பகைமையாகவும் குரோனஸின் கொடுஞ்செயலாகவும் புராணம் கூறுகிறது. மேலும் சிற்சில இடங்களில் உருமாறிய தாயுரிமை, வெறும் வழிபாடாக வேறு நாடுகளில் நிலைப்பதை அப்ரோடைட் தோற்றமாகவும், வாரிசுரிமைப் போட்டியில் தந்தை, மகன் பகையை ஜீயுஸை வானத்தந்தை விழுங்க முயலுவதாகவும், தந்தையுரிமையின் வெற்றி, அசுரர் மீது தேவர்களது வெற்றியாகவும் கூறப்பட்டுள்ளது.

மயோரி என்ற இனக்குழு மக்களின் படைப்புக் கதையைக் காண்போம். பாலினேஷியத்தீவுகளில் வாழும் அவர்கள் பூமித்தாயிடமிருந்து, வானத்தந்தையின் கூட்டால் மக்களும் பிற உயிர்களும் பிறந்ததாக நம்புகிறார்கள். இக்கதை தோன்றிய காலம் புராதன விவசாயம் தோன்றி அதற்குப்பின் அறிவுடைய மக்கள் தோன்றியதைக் குறிப்பிடுகிறது. கதை வருமாறு:

உலகப் பெருவெள்ளத்தின் மீது பூமித்தாயும், வானத்தந்தையும் கூடினர். உலகத்தில் உயிர் வாழ்க்கை தோன்றியது. மக்களும், விலங்குகளும் பூமித்தாயின் நான்கு கருப்பைகளில் உருவாயினர். பூமித்தாய் வானத்தந்தையைத் தன்னிடம் இருந்து விலக்கி விரட்டினாள். 'தாயின் முதல் குழந்தைக்குத் தீங்கு நேரும்' என்ற நம்பிக்கையில் தாய், தந்தையிடம் தனது எண்ணற்ற குழந்தைகளைப் பற்றி ஆலோசனை செய்தாள்.

"நம்முடைய குழந்தைகள் பிறந்தவுடன் எப்படி உலகில் பல இடங்களை அறிவார்கள்? சூரியத் தந்தையின் வெள்ளை ஒளியில் கூட இவர்கள் இடங்களை அறிவது கடினமாக இருக்குமே" என்று பேசிக் கொண்டார்கள்.

பிறகு முகமூடிகளை அணிந்த கூத்தாடிகள், முகமூடிகள் மூலம் இன்னார் என்றறிவது போல இவர்களும் ஒருவரையொருவர் தெரிந்து கொள்வார்கள் என்று நினைத்தார்கள். இப்படியே இவன் மனிதன், இவள் மனுஷி என்று பிரித்தறிவார்கள் என்று எண்ணினார்கள்.

பூமித்தாய் தனக்குள்ளே நினைத்தாள். அவர்கள் கடலோரத்தில் மலைகளின் மீது திரிகிறபோது நாடுகளைப் பிரித்து இனம் காண்பார்கள்.

பூமித்தாய் வெள்ளப் பெருக்கில் துப்பினாள். நுரையுண்டாயிற்று. அவள் விரலால் நீரைக் கலக்கினாள். நுரை மிகுதியாகி உயர்ந்தது. அவள் பின்வருமாறு கூறினாள்:

"எனது உடலில் இருந்து (மார்பு) நான் பெற்ற பிள்ளைகள் உணவு பெறுவார்கள்."

அவள் மூச்சு நுரையை உயரத் தூக்கியது. வானத்தந்தை குளிர்காற்றை நுரையீன்மீது ஊதினார். சிறு துளிகளாக நீர் பூமியின் மீது மழையாகப் பெய்தது. 'மலையுச்சிகளில் இது பனியாக உறையும். சமவெளியில் நீரோடைகளாக ஓடி எனது மடியில் மறையும்' என்று பூமித்தாய் எண்ணினாள்.

பூமித்தாய் குளிர்ச்சியானவள். வானத்தந்தை வெப்பமானவர். பெண் குளிர்ச்சியும், ஆண் வெப்பமும் உடையவர்கள்.

வானத்தந்தை தனது உள்ளங்கையில் ஏழு மஞ்சள் நிற வித்துக்களை வைத்திருந்தார்.

"நமது குழந்தைகள் சூரியன் பிரகாசிக்காத காலத்தில் விளக்கு ஒளியில் தொழில் புரிவார்கள்."

தந்தையின் விதைகள் நிலத்தில் விழுந்து பன்மடங்கு விளைந்து பலன் தந்தன. மனித வித்துக்களும், விலங்கு வித்துக்களும் பூமித்தாயின் நான்கு கருப்பைகளில் உருவம் பெற்றுப் பெருகின. பறவைகள் முட்டையில் இருந்து வெளியேறுவது போல மனிதர்களும் விலங்குகளும் தோன்றினர். ஆனால் இவ்வுயிர்கள் முழுமையான வளர்ச்சியடைந்திருக்கவில்லை. இவை நெருக்கமான கூட்டங்களாகவும், இருளில் வாழ்ந்தவையாகவும் இருந்தன. இவை கடுஞ்சொற்கள் பேசின. இவற்றுள் சில இருளில் இருந்து தப்பித்து, வெளியேற முயன்றன.

இவர்களுள் 'போஷாயன்ஸ்காயா' என்பவன் மிகவும் அறிவு வளர்ச்சி பெற்றுத் தெய்வத் தன்மை பெற்றான். இவன் நான்கு

கருப்பைகளையும் கடந்து ஒளியையடைந்தான். பூமியின் மேற்பரப்பை அடைந்து சூரியத் தந்தையைக் கண்டு வணங்கினான். கருப்பையில் உழலுகிற மனிதனையும் பிற உயிர்களையும் விடுவிக்க வேண்டினான். சூரியன் மீண்டும் உயிர்களைப் படைத்தான். இப்படைப்பினால் சுதந்திரமான அறிவுக் கூர்மையுடைய மனிதர்களை அவன் தோற்றுவித்தான். பூமித்தாயின் மீது தோன்றியிருந்த நுரையை இவன் கூட்டி ஒன்றாக்கினான். இவ்விணைப்பில் இரட்டைப்பிள்ளைகள் பிறந்தனர்.

இவர்களுக்கு எல்லாவிதமான மந்திர மாய சக்திகளைச் சூரியன் அளித்தான். இவர்களை மக்களது தலைவர்களாகவும், பிரபுக்களாகவும் நியமித்தான். இவர்கள் வானத் தந்தையால் வளர்க்கப்பட்டு அறிவாளிகளாயினர். வானத் தந்தையைத் தூக்கிச் சென்று அந்தரத்தில் உயரத்தில் நிறுத்தினர். தங்கள் மந்திர சக்திகளாலும், இடி ஆயுதத்தாலும் மலைகளைப் பிளந்து, மேகக் கவசத்தை உடைத்து மனிதர்களோடும், விலங்குகளோடும் கீழே இறங்கினர்; தெய்வங்களென்றும் போற்றப் பட்டனர். மனிதர்கள் முன்னேற அவர்கள் வழிகாட்டினர். இவ்வாறுதான் மனிதர்கள் தோன்றி விடுதலையடைந்தார்கள்.[9]

இந்த நீண்டகதையில் மிகப் பழைய அடுக்கு பெண்ணின் படைப்பு. படைத்தவன் கடவுள். இங்கு கடவுள் பழமையான அடுக்கிலிருந்து வேறுபட்டவன். கதையில் முற்பகுதியில் கூறப்படும் கடவுளுக்கு கதையின் நடுவிலும், முடிவிலும் வேலையில்லையென்பதைக் காணலாம். கடவுள் மண்ணை உருட்டி மனித உருவம் செய்தது, அது பெண்ணாக மாறியது எல்லாம் கிறிஸ்தவப் படைப்புக்கதையைத் தழுவியுள்ளது. ஒரே ஒரு வேறுபாடு பைபிளில் முதலில் படைக்கப்பட்டவன் ஆதம் என்ற ஆண்மகன். அவனுடைய எலும்பொன்றை உருவிப் பெண்ணைத் தேவன் படைத்தான். எனவே இது ஸ்பானியப் பாதிரியார் மயோரிக் கதைகளைத் தொகுத்தபோது இடைச்செருகிய கருத்து என்று துணிந்து சொல்லலாம். ஆயினும் இடைச்செருகலில் கூட மயோரிப் பழமையை மறைக்க முடியவில்லை. தாயுரிமை ஆதிக்கம் இருந்ததை கடவுள் முதலில் படைத்தது பெண்தான் என்ற கதைப்பகுதி வலியுறுத்துகிறது.

பின்னர் தரையும், வானமும் பிரிந்து சூரியன் தோன்றியது வருணிக்கப்படுகிறது. இது உலகப் புனைகதைகளின் பொதுவான கற்பனையோடு ஒத்துப்போகிறது.

பூமித்தாய் வானத்தந்தை ஆகியோரின் மானிட இயல்புச் செயல்களினால் (Anthropomorphic) உலகமும், மழையும் பனிக்கட்டியும் தோன்றுகிறது. இவற்றுக்குக் காரணமாக இருப்பது நுரையும், குளிரும், வெப்பமுமாகச் சொல்லப்படுகிறது. இச்சக்திகளே மானிட இயல்பு உருவங்களாக வானத் தந்தையாகவும், பூமித் தாயாகவும் இனக்குழுக் கற்பனையில் உருவாக்கப்பட்டுள்ளார்கள். இயற்கைச் சக்திகளை வசப்படுத்த முடியாத காலத்தில் மனித இனக்குழுக்கள் அவற்றை வணங்கின (Deification of natural forces).

பின்னர் தெய்வங்களாக்கப்பட்ட இயற்கை சக்திகள் மானிட இயல்புச் செயல்கள் புரிவதாகவும், அவர்களின் கூடுதலினால் மக்களும் பிற உயிர்களும் தோன்றியதாகவும் கதை சொல்லுகிறது.

வானத்தந்தையும், நிலத்தந்தையும் தங்களுடைய மக்களைப் பற்றிக் கவலை கொண்டார்கள். "எப்படி இவர்கள் இடங்களை அறிந்து கொள்வார்கள்?" என்பது முதல் வினா.

விடை : முகமூடி கூத்தாடிகளை முகமூடியில் இருந்து அறிவது போல் இவர்கள் ஆண் பெண் வேறுபாடுகளையும் கடல், மலை, காடு முதலிய வேறுபாடுகளையும் அறிவார்கள்.

முகமூடி நடனங்கள் வேட்டையால் வாழ்க்கை நடத்தும் மக்களிடையே தோன்றிய கலை. எனவே படைப்புக் கதையின் இந்த அடுக்கு இம்மக்கள் வேட்டை நிலையில் படைக்கப்பட்டதாக இருக்கவேண்டும்.

நான்கு கருவறைகள் என்பது மனிதன், விலங்குப் பிராயமான வாழ்க்கை வாழ்ந்ததைக் குறிப்பிடுகிறது. வேட்டைக்கால மக்கள் தம் முன்னோர் வாழ்க்கையைப் பற்றிய அனுமானம் இது.

இதன்பின் அவர்களில் ஒருவன் (மனிதன்தான்) போஷாய்ன்ஸ்காயா, தனது அறிவுத்திறனால் ஒளிக்கு வருகிறான். அவனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி சூரியதேவன் இரட்டையரைப் படைத்து அவர்களுக்கு மந்திர சக்தியைக் கொடுக்கிறான்.

அவர்கள் மந்திரக் கத்திகளாலும், இடிக்கருவிகளாலும் மலைகளையும் மேகங்களையும் பிளந்து மக்களோடும் விலங்கினங்களோடும் பூமிக்கு இறங்குகிறார்கள்.

இது உலோக காலப் பண்டைய மனிதனது வாழ்க்கையிலிருந்தும் அவன் செய்த இரும்புக் கருவிகளில் இருந்தும் மனித விடுதலை கிடைக்கிறது என்பதைக் குறிப்பிடும். கிரேக்க தெய்வம் ஹிராக்ளீஸ், இந்திய தெய்வம் முருகன் ஆகிய இரும்புத் தோற்றகாலத்தின் கடவுள்களது செயல்களோடு இதை ஒப்பிடலாம். பாறைகளைப் பிளப்பதும் அதற்காக ஈட்டிகளைப் பயன்படுத்துவதும் மனிதர்களை விடுதலை செய்வதும் இவ்விரட்டையர்கள் உலகப் பண்பாட்டு வீரர்கள் படிமத்தில் உருவாக்கப்பட்ட கற்பனைகள் (imaginary models of cultural hero).

இக்கதையின் முழு வடிவம் இரும்புத் தோற்ற காலத்தின் துவக்கத்தில் பூரணமடைந்தது என்று கொள்ளலாம்.

1. கதையின் முன்னுரைப்பகுதி இடைச் செருகலாயிருக்க வேண்டும்.

2. இரண்டாவது பகுதி மானிட உருவச் செயல்களால் உலகம் படைக்கப்பட்டது.

3. மூன்றாவது பகுதி புனர்படைப்பு. (Recreation) அறிவுள்ள ஒரு மனிதனது தோற்றம். அவனது வேண்டு கோளால் இரட்டையர்கள் பிறந்தார்கள்.

உலோக காலத்தின் அறிவு வளர்ச்சியால் இருளில் கிடந்த மக்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

முதற்பகுதி உலோக முற்காலப்படைப்பு. இரண்டாவது பகுதி, விலங்குப் பிராயமான மக்களில், மனிதப் பிராயமான அறிவாளி தோன்றுவது. அவன் மக்களை விடுதலை செய்ய வேண்டுவது பின்னர் இரட்டையர் பிறப்பு. மூன்றாம் பகுதி இரும்புக் கருவிகளால் வலிமை பெற்ற மனிதன் இருளில் கிடந்த மனிதனை விடுதலை செய்வது ஆகிய வளர்ச்சிப் பரிணாம கட்டங்கள். புனைகதை (Myth) வளர்கதைப் பாணியில் (legend) மயோரி மக்களிடையே கிறிஸ்தவப் பாதிரிமார் வருகைக்கு முன் வழங்கி வந்திருக்க வேண்டும்.

அவர்கள் தங்கள் படைப்புக் கதையின் ஓர் அம்சத்தை கதையின் முன்னுரைப்பகுதியில் புகுத்தியிருக்க வேண்டும்.

இதனை மெர்ஸிடீஸ், எலியாடிஸ் என்ற புனைகதைகளின் பதிப்பாசிரியரே ஒப்புக்கொள்ளுகிறார்.

ரிக் வேத காலத்திலிருந்து, உபநிஷத காலம் வரை வளர்ந்து மாறிய படைப்புப் பற்றிய கருத்துக்களை புனைகதைகளில் இருந்து அறியலாம். இவற்றுள் ரிக்வேதக் கதை மிக முந்தியது. அதற்குப் பிந்தியது புருஷசூக்தம். உபநிஷதக் கதைகள் ரிக்வேத படைப்புகளுக்கும் காலத்தால் பிந்தியவை.

ரிக்வேத காலத்தில் ஆரியர் மாடு பராமரிக்கும் இனக்குழுக்களாக வாழ்ந்தனர். நிலையான வாழ்க்கையில்லாமல் மாடு மேய்க்கிற 'திரியும்' வாழ்க்கை நிலையில் அவர்களிருந்தனர். இவர்கள் வேட்டைக்கால சமுதாயங்களைவிட நாகரிகத்தில் முன்னேறியவர்கள். ஆயினும் நிலைத்த வாழ்க்கையில்லாதவர்களாதலால் இவர்கள் இயற்கைச் சக்திகளுடைய ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்களாகவே இருந்தார்கள். இவர்கள் தந்தையுரிமை முறையைப் பின்பற்றியவர்கள். மாடு மேய்க்கும் இனக் குழுக்களில் ஆண்தான் சமூக நிலைப்புக்குத் தேவையான மாடுகளை வசக்கி அவற்றின் பாலையும், ஊனையும் பெற்றான். மிகச் சிறிதளவுதான் அவர்கள் பயிர்த்தொழில் செய்தார்கள் (ரிக்வேத காலத்தில்). பயிர்த்தொழில் வளர்ச்சி ஏற்படாததால் அவர்களுடைய பெண்களுக்குச் சமுதாயத்தின் பொருளாதாரத்தில் மிகுதியான பங்கு இல்லை. எனவே அவர்கள் ஆணாதிக்கத்தைத் தங்கள் சமுதாய வாழ்க்கையில் ஏற்றுக்கொண்டிருந்தார்கள்.

வேட்டைகாலச் சமுதாய மக்களைவிட வளர்ச்சியடைந்த சிந்தனையை ரிக்வேதக் கதையில் காண முடிகிறது.[10]

1. வெறுமை கூட அக்காலத்தில் இல்லை வானமும் காற்றும் விண்ணில் இல்லை.

   எது எதனை மூடியிருந்தது? எங்கிருந்தது? யாருடைய கையில் இருந்தது?

   ஆழம் அறிய முடியாத இடத்தில் நீர் இருந்ததா?

2. அழிவும் அழிவின்மையும் அப்போது இல்லை.

   இரவு பகல் என்ற காலப் பிரிவுகள் இல்லை.

   ஒன்று காற்றில்லாமல், தன்னைத் தான் நிறுத்திக் கொண்டு இருந்தது.

3. முதலில் இருளில் போர்த்த இருள்தான் இருந்தது. நீரின் மீது இருள்தான் மூடியிருந்தது. எதனாலும் மூடப்படாத ஒன்றே ஒன்றுதான் இருந்தது.

   வெப்பத்தின் சக்தியால் அது பிறந்தது.

4. ஆரம்பத்தில் ஆசை அதன்மீது இறங்கியது.

   மேலும், கீழும் என்ன இருக்கிறது என்பதை அறிந்தது.

   தம் இதயம் அறிந்த ஞானிகள் யார் உறவு, யார் இல்லை என்பதையறிந்தார்கள்.

5. வெட்ட வெளியில் நூலை விட்டெறிந்து மேலே என்ன இருக்கிறது, கீழே என்ன இருக்கிறது என்பதை அறிந்தார்கள்.

   வீரியத்தின் சக்தி, மாபெரும் சக்திகளைக் கருக்கொள்ளச் செய்தது.

   மேலே வலிமை, கீழே இயல்பூக்கம்.

6. இவையெல்லாம் எங்கிருந்து வந்தன? படைப்பு எவ்வாறு நிகழ்ந்தன?

   தேவர்கள் படைப்புக்குப் பின்னர்தான் தோன்றினர்.

   எனவே இது எப்பொழுது தோன்றிற்று என்று யாருக்குத் தெரியும்?

   எல்லாம் தோற்றம் கொண்டபின் அவன் இவற்றையெல்லாம் படைத்தானா? அல்லது இல்லையா?

   உயர்ந்த வானோர் உலகிலிருந்து இதையெல்லாம் காண்பவன் அவனுக்கே தெரியும் அல்லது அவனுக்கே தெரியாமல் இருக்கலாம்.

இப்பாடலில் சந்தேக வாதம் (Agnosticism) காணப்படுகிறது. முதன் முதலில் தோன்றியது இருள். உலகம் ஒன்றாயிருந்தது, பிறகு பிரிவுகள் தோன்றின. இது எப்படி, கடவுள் படைத்தாரா இல்லையா அவருக்கே அது தெரியுமா? என்று கவிஞர் சந்தேகப்படுகிறார். ஒருமையான சூன்யத்திலிருந்தும் இருளில் இருந்தும் இவ்வுலகம்

தோன்றியது என்ற கருத்தை இப்பாடலில் காண்கிறோம். மொத்தத்தில் புனைகதைகளில் நம்பிக்கையின்மையைக் காட்டும் ஐயவாதம் இதில் காணப்படுகிறது.

இந்த உப நிஷத் கதை மிகப் பிற்பட்ட காலத்தில் எழுந்தது. சுமாராக 700 கி.மு. விலிருந்து 200 கி.மு. வரை இதன் காலம் எனக் கூறலாம். இக்காலத்தில் இயற்கைச் சக்திகள். ஒரே சக்தியின் பல கூறுகள் என்று உபநிஷத் ஆசிரியர்கள் கருதினர். பிரம்மம் என்ற கருத்து தோன்றிவிட்டது. ஆயினும் பண்டையப் புனைகதைகளின் செல்வாக்கு இப்படைப்புக் கதையில் இல்லாமல் போகவில்லை.

கதையின் ஆரம்பம் உலகத்தில் வழங்கிய புனைகதைகளைப் போலவே, உலகம் தோன்றாத காலத்தில் இருளும் அமைதி'யும் நிலைகொண்டிருந்ததாகக் கூறுகிறது.

பின் படைப்புச் சக்தி இருளை விலக்கிக் கொண்டு எழுந்தது. அந்தக் காரணங்களால் மட்டுமே அறியப்படக் கூடிய, சூட்சுமமானதும் அழிவற்றதுமான பிரம்மம் தனது இச்சக்தியால் இருளை விலக்கி ஒளி வீசியது.

பல்லுயிர்களைத் தனது உடலில் இருந்தே படைக்க வேண்டும் என்னும் விருப்பத்தால் அது தனது நினைப்பால் நீரைப் படைத்து, தனது வித்தை அதன்மீது விடுத்தது.

அவ்வித்து ஒரு பொன் முட்டையாயிற்று. அதிலிருந்து அவனே பிறந்தான். அவனே பிரம்மம். அவனே உலகின் தந்தை.

நீருக்கு நாரஸ் என்று பெயர். அதுவே அவனது இருப்பிடமாக (ஆயன) இருந்ததால் நாராயணன் என்று அவனுக்குப் பெயர்.

ஆதிகாரணனும், அறியப்படக்கூடியவனும் உண்மையானவனும், அழிவற்றவனுமான அவனிடமிருந்து 'புருஷன்' பிறந்தான். இவனே முதல் ஆண்மகன் ஆவான்.

தெய்வீகமான புருஷன் முட்டையினுள் ஓராண்டு இருந்தான். பின்னர் தனது சிந்தனையால் அதை இரண்டாகப் பிளந்தான். அதில் இருந்து இரு அரைக்கோளங்கள் தோன்றின. ஒன்றில் இருந்து சுவர்க்கமும் பூமியும் தோன்றின. இவற்றின் இடையே ஒரு பகுதியும், எட்டுத் திக்குகளும் தோன்றின. நீரில் இருந்து இவற்றைப் படைத்தான்.

தன்னிலிருந்தே 'நான்' என்ற சுய உணர்வையும், மனத்தையும் படைத்தான். இதுவே பிரபுத்துவம் வாய்ந்தது. பின்னர் ஆன்மாவையும், மூன்று குணங்களால் பாதிக்கப்படுகின்ற எல்லாப் படைப்புகளையும், ஐந்து புலன் உறுப்புகளையும் படைத்தான்.

எல்லையற்ற ஆற்றல் கொண்ட ஆறு மூலப்பொருள்களின் துகள்களை இணைத்து எல்லாஉயிர்களையும் படைத்தான்.

முதற்பகுதியில் சாங்கிய தத்துவத்தின் கூறுகள் காணப்படுகின்றன. தாமசகுணம் இயக்கத்திற்குத் தடையான நிலைத்தல் தன்மையைக் குறிப்பிடும். அதுவே முதலில் மேலிட்டு இருந்தது.

நான் என்ற சுயஉணர்வு பிரம்மன் என்று அழைக்கப்பட்டது. இது உயிர்கள் தோன்று முன்னரே இருந்தது. சாங்கியத்தின் பரிணாம விளைவுப் பொருள்கள் இருபத்தினான்கும், ஆறு பொருள்களாகச் சுருக்கப்பட்டுள்ளது. சாங்கியத்தில் புருஷன் என்பது செயலற்றதும் சாட்சி மயமானதுமாக வருணிக்கப்பட்டுள்ளது. ஆனால் இக்கதையில் படைப்புச் செயலின் ஆதிகாரணமாகக் கூறப்படுகிறது.

சாங்கிய தத்துவம் உபநிஷத காலத்திற்கும் முந்திய கருத்து.

இக்கதையில் ஆணாதிக்க சமுதாயத்தின் கருத்துக் காணப்படுகிறது. பிரபஞ்சத்தைச் சிந்தையால் பிரம்மம் படைத்தது. அதே சமயம் பிரம்மம் ஒரு வருஷம் முட்டையினுள் இருந்தது. நீரைப் படைத்தது பிரம்மம். நீரை வாழ்விடமாகக் கொண்ட நாராயணன் உலகையும் உயிர்களையும் படைத்தான். பிற்காலத்தில் புராணங்களில் முக்கியத்துவம் அடைந்த பிரம்மாவிற்கு இக்கதையில் இடம் இல்லை என்பது கவனத்துக்குரியது. சிவனுக்கும் இடம் இல்லை.

பிரம்மம் செயல்படும் சக்தியாக இக்கதையில் கூறப்படுகிறது, பிற்காலத்தில் உபநிஷதங்களிலேயே குணமற்றதும் செயலற்றதுமாக வருணிக்கப்படும் பிரம்மம் இங்கு படைப்பின் மூலகாரணமாக வருணிக்கப்படுகிறது. சாங்கியத்தின் ஜடகாரணப்பரிணாமம் இக்கதையில் ஈசுவர காரணப்பரிணாமமாக மாற்றப்பட்டது. அதாவது பொருள் காரணமாக ஏற்படும் பரிணாமம் கடவுள் காரணமாக ஏற்படும் பரிணாமமாகக் கருத்து மாற்றப்பட்டது.

மற்றோர் உபநிஷதக் கதை சாவில் இருந்து உலகமும் உலகத்து உயிர்களும் தோன்றியதாகக் கூறுகிறது. பசி என்ற சாவு மறைந்திருந்தது. அது தன்னை (self) படைத்துக்கொண்டது. வணக்கம் செய்துகொண்டே அது நகர்ந்தது. நீர் தோன்றியது.

நீரின் நுரை கட்டியாகி நிலமாயிற்று. அதன் மீது சாவு இளைப்பாறியது. தான் செய்த தவத்தால் அது (சாவு) சூடாயிற்று. பிரகாசத்தின் சாரம் தீயாக வெளிப்பட்டது. அது மூன்று பிரிவுகளாகப் பிரிந்தது. ஒரு பிரிவு தீயாயிற்று. இரண்டாவது சூரியனாயிற்று. மூன்றாவது பிரிவு மூச்சாயிற்று.

சூரியன்தான் பிரம்மம், இதுதான் வேதக்கருத்து.

துவக்கத்தில் உலகம் இல்லை. பின்னால் அது இருப்புக்கொண்டது. அது ஒரு முட்டை வடிவம் பெற்றது. ஓர் ஆண்டு அது கிடந்தது. பின்னர் வெடித்தது. அதிலிருந்து வெள்ளியாக ஒரு பகுதியும், தங்கமாக ஒரு பகுதியும் தோன்றின. வெள்ளியாக இருந்த பகுதி உலகமாயிற்று. தங்கமாக இருந்த பகுதி வானமாயிற்று. வெளிப்பகுதியாயிருந்த ஜவ்வு, மலைகளாயிற்று. உள்பகுதியாயிருந்த ஜவ்வு மேகங்களாயின. உள்ளிருந்த நாளங்கள் ஆறுகளாயின. உள்ளிருந்த திரவப்பகுதி கடலாயிற்று.

கதையின் இரண்டாவது பகுதி காலத்தால் முந்தியது என்பதை சிந்தனை வளர்ச்சியைக் காண்பவர்கள் உணர முடியும். இது ஓர் ஒப்புமைப் புனைகதை. முட்டை வெடித்துக் குஞ்சு வெளிப்படுவதுபோல உலகம் தோற்றம் கொண்டது என்பது மிகச் சுலபமான ஒப்புமை.

ஆனால் முதற்பகுதியில் சிந்தனை வளர்ச்சியைக் காண்கிறோம். சாவு உயிருக்கு எதிர்மாறானது. ஆனால் உயிருள்ளவை சாவில் இருந்து தோன்றியதான கற்பனை விசித்திரமானது. ஆனால் சாவு என்பது எதுவும் இல்லாத வெறுமை நிலையைக் குறிக்கிறது. அதன் செயலால்தான் நீரும் நுரையும் தோன்றி நுரையிலிருந்து உலகம் தோன்றியது. பின்னர் சாவு, தீ, சூரியன், காற்று சக்திகளாகப் பிரிந்தது. பிரிவின்றியிருந்த சாவு, மூன்றாகப் பிரிந்தது.

இதிலும் கூட படைப்பு, பொருள் முதல் வாத அடிப்படையிலேயே புனைகதை உள்ளது. சாவு, இயற்கையின் இயங்காத எதிர்மறை நிலை.

முட்டைக் கதையை விடச் சிந்தனை வளர்ச்சியடைந்த நிலையில் இக்கதை உள்ளது. ஆனால் இரண்டாவது கதை போல தத்துவச் சிந்தனை இக்கதையில் இல்லை. சாங்கிய தத்துவத்தின் படைப்புக் கருத்தை மாற்றும் நோக்கத்தோடு புனையப்பட்ட இரண்டாவது உபநிஷதக் கதையில் காணப்படும் தத்துவச் சிந்தனை இக்கதையில் இல்லை.

நாராயணன் படைப்புக் கதையிலும் ஆணாதிக்கக் கருத்து வன்மையாகக் காணப்படுகிறது. பிரபஞ்ச முழுவதிலும் முதல் ஆணினின்றும் தோன்றியதாக இக்கதைகள் கூறுகின்றன. புருஷன் என்ற கருத்து ஆரிய சமுதாயம் வளர்ச்சியடைந்து, நான்கு வகைகளாகப் பிரிந்த பின்னர், அதனை நியாயப்படுத்த எழுந்த கதை. புருஷனைப் பலி கொடுத்து, உலகப்படைப்பு நிகழ்ந்ததாகக் கதை கூறுகிறது. "புருஷன் உணவால் பெருக்கமுற்றிருக்கிறான். முக்கால் பங்கு புருஷன் மேலே போய் விட்டான். கால் பங்கு இங்கே இருக்கிறான். உணவால் பெருகிய புருஷன் முக்கால் பங்கு தெய்வத்தன்மையும் கால் பங்கு மனிதத் தன்மையுடையவனாகக் கருதப்பட்டான். அவனை பலியிட 'அவர்கள்' இருந்தார்கள். "அவர்கள்" தேவர்கள். இயற்கையினின்றும் ஏதாவது பெற வேண்டுமானால் பலி கொடுப்பது, சடங்கு செய்வது என்ற மந்திரச் சடங்குகளைச் செய்வது அக்கால மக்களின் நம்பிக்கை மரபாக இருந்தது. எனவே பலி கொடுத்து சூரியன், சந்திரன் முதலிய கோளங்களும், பிராமணர், சைத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற சமூகப் பிரிவுகளும் தோன்றின என்று கதைசொல்கிறது.

இதற்குப் பின் தோன்றியது நாராயணன் கதை. இதுவும் ஆணாதிக்கக் கருத்தின் விளைவாகத் தோன்றியதே. விஷ்ணு வேதத்தில் சிறு தெய்வம். வேதத்தில் இந்திரன், மித்திரன், வருணன், வாயு போல நாராயணன், முக்கியமான தெய்வமாகக் கருதப்படவில்லை. அழிவைத்தரும் தெய்வங்களே சக்திவாய்ந்த தெய்வங்களாக வேத காலத்தில் போற்றப்பட்டன. விஷ்ணு, நாராயணன் அழிவைத் தடுக்கும் தெய்வம். மக்களைக் காப்பாற்றுகிற தெய்வம். விலங்கு பராமரிப்போர் விவசாயம் செய்வோராக மாறும் நிலையில் அழிவைத் தடுக்கும் பயிர்களைப் பாதுகாக்கும் தெய்வங்களுக்குப் பெருமை உண்டாயிற்று. ஆரியர்களுக்கு முன்பே, வேட்டைச் சமுதாயம், விலங்கு பராமரிக்கும் சமுதாயம் ஆகிய நிலைகளைக் கடந்து விவசாய நிலை எய்திவிட்ட

ஆரியரல்லாத சமுதாயத்தினர் இந்தியாவில் வாழ்ந்து வந்தனர். அவர்களோடு கலப்பு ஏற்பட்ட பின்னர்தான், புராணங்கள் தோன்றின. வேதங்களிலும் முக்கியமற்ற தெய்வமாயிருந்த விஷ்ணுவோடு நாராயணன் என்ற (ஆரியரல்லாத மக்கள் வணங்கிய) உலகைப் பாதுகாக்கும் தெய்வத்தை ஆரியப் புராண மரபு இணைத்துக் கொண்டது. இது மாடு மேய்ப்பவர்களுடைய கற்பனையே என்பது பாற்கடலில் நாராயணன் பள்ளிகொண்டிருப்பதாகக் கூறும் செய்தியே சான்று. நாகப்படுக்கையில் அவன் உறங்குகிறான். நாகம், ஒரு இனக்குழுவினரின் குலக்குறி. இது செழிப்பின் அறிகுறி. வளர்ச்சியடைந்த ஒரு மாடு மேய்க்கும் சமுதாயம், வளர்ச்சியடையாத நாகத்தைக் குலக்குறியாகக் கொண்டுள்ளவர்களை வென்றிருக்கலாம். எனவே நாராயணன் நாகப்படுக்கை மீது சயனித்திருப்பதான கற்பனை தோன்றியது. இச்சமுதாய நிலையில்தான் (வளர்ச்சியடைந்த மாடு மேய்ப்பவர் சமுதாயம் விவசாயத்திற்கு மாறுகிற நிலையில்தான்) விஷ்ணு உலகத்தைப் படைத்த படைப்புக் கதை தோன்றியது. விஷ்ணு பாற்கடலில் ஆதிசேஷன் மீது உறங்குகிறார். அவருடைய நாபியில் இருந்து ஒரு தாமரை தோன்றுகிறது. அதில் இருந்து லட்சுமியும் 'பிரமனும்' சந்திரனும் தோன்றுகிறார்கள். பிரமன் உலகத்தைப் படைத்தான். இது போன்ற எண்ணற்ற படைப்புக் கதைகள் புராணங்களில் உள்ளன. ஆயினும் அவை எந்த அம்சத்தில் வேறுபட்டாலும் ஒரு ஆண் தெய்வம் பெண்ணின் துணையின்றியே உலகையும் மக்களையும் படைத்தது என்ற கருத்தில் ஒன்றுபடுகின்றன.

கிறிஸ்தவ படைப்புக் கதையைப் புனைந்தவர்கள் இஸ்ரவேலர்கள். இவர்கள் தந்தை வழிச் சமுதாயத்தில் வாழ்ந்தவர்கள். பைபிளில் ஆதாம் தொடங்கி, ஆபிரகாம் வரை ஆபிரகாம் முதல் வரலாற்றுக்கால அரசர்களின் ஆண்கொடி வழிப்பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்களுடைய படைப்பாளி ஒரே தெய்வக் கருத்தில் எழுந்த 'ஜெஹோவா' என்ற தனிப்பெரும் ஆண் கடவுள்!

இக்கதையின் தேவன் ஆவியாக அசைந்தாடி வானையும், கடலையும் பிரித்தார். சூரியன், சந்திரன், நட்சத்திரங்களைப் படைத்தார். தாவரங்களையும், விலங்குகளையும், பறவைகளையும் படைத்தார். கடைசியில் தன்னுருவத்தில் மனிதனைப் படைத்தார். மண்ணால் உருவம் செய்து அதில் தனது மூச்சை ஊதினார். முதல் மனிதன் ஆதாம்

உயிர் பெற்றான். அவனது எலும்பை உருவி, அதன்மேல் மண்ணைச் சேர்த்துப் பெண்ணைப் படைத்தார். அவள்தான் ஏவாள்.

இஸ்ரவேலர்கள் ஆரியர்களைப் போலவே விலங்கு பராமரிக்கும் குழுக்களாக வாழ்ந்தவர்கள். இவர்களது குழுக்கள் ஒன்று சேர்ந்து ஒரே நாடாக உருவாகிற நிலைமையைத்தான் பழைய ஏற்பாட்டுக் கதைகள் பிரதிபலிக்கின்றன. ஒரே ராஜ்யமாக, ஒரே அரசனின் கீழ் திரண்டு, ரோம சாம்ராஜ்யத்தை எதிர்க்கிற போது, சிறு தெய்வங்களை (இனக்குழுத் தெய்வங்களை) எதிர்த்துப் போராடி ஒரே தெய்வ வணக்கத்தால் தம்மை இணைத்துக்கொண்டார்கள். இந்நிலையில் தந்தையே முக்கியத்துவம் பெறுகிறார். என்வே பெண்ணில்லாமலே உலகத்தை ஆண் கடவுள் படைத்து விடுகிறார். மனித இனத்தில் முதலில் படைக்கப்பட்டவன் ஆண். பின்னர் அவன் எலும்பிலிருந்து படைக்கப்பட்டவள் பெண்.

இப்படைப்புக் கதைகளில் மூலாதாரச் சிந்தனைகள் ஐந்து வகைப்பட்டவை.

1. உலகம் சில சக்திகளின் செயலால், ஒரு படைப்பவன் இன்றியே பரிணாமம் அடைந்தது.
2. இவ்வுலகம் ஒரு பெண்ணால் படைக்கப்பட்டது.
3. இவ்வுலகம் ஒரு ஆணால் படைக்கப்பட்டது.
4. இவ்வுலகம் ஒரு பகுதி பெண்ணாலும் ஒரு பகுதி ஆணாலும் படைக்கப்பட்டது.
5. பெண்ணால் படைக்கப்பட்ட உலகம் பின் சக்தி வாய்ந்த தேவர்களால் அழிக்கப்பட்டு ஒழுங்காக மீண்டும் அமைக்கப்பட்டது.

இவ்வாறு பண்டைய சமுதாய வளர்ச்சி நிலை அல்லது மாறும் நிலையில் படைப்புக் கதைக் கற்பனைகள் மக்கள் உள்ளங்களில் தோன்றியுள்ளன.

மனிதன் குரங்கு நிலையிலிருந்து மனித நிலைக்கு மாறப்பல்லாயிரம் ஆண்டுகள் பிடித்தன. மனித நிலைக்கு மாறிய பின்னர் அவன் உயிரியல் செயல்களைச் செய்தது மட்டுமின்றி, தன்

வாழ்க்கைக்குத் தேவையானவற்றைத் தன் முயற்சியாலேயே தேடத் தொடங்கினான். இவ்வுழைப்புச் சிந்தனையைத் தோற்றுவித்தது. நேராக இயற்கையைக் கண்டான். இயற்கையிலிருந்தே தனக்குத் தேவையான அனைத்தையும் பெறவேண்டும் என்றும் கண்டான். அப்பொழுது இயல்பியல் கருத்துக்கள் அவன் மனதில் தோன்றின. அதனால்தான் சாங்கிய பரிணாமம் போன்ற கருத்துக்களாலும், பஞ்சபூதக் கருத்துக்களாலும் உலகப் படைப்பை விளக்க முற்பட்டான். பின்னர் கருவிகளைப் படைத்து, உணவையும் தேவைப் பொருள்களையும் உற்பத்தி செய்யத் தொடங்கினான். சமுதாயம் வளர்ந்தது. வேலைப் பிரிவினைகளை சமுதாயத்தில் ஏற்படுத்திக்கொண்டான். இந்நிலையையே புருஷ சூக்தக் கதையும், மர்டாக் கதையும், ஹெஸியோடு கதையும் பிரதிபலிக்கின்றன. உற்பத்தி சக்திகள் வளர்ந்தன. தாயுரிமை தந்தையுரிமைப் போராட்டங்கள் நடந்தன. முடிவில், தனிச்சொத்துடைமை ஆணாதிக்கத்தில் வந்தது. மனிதக் கற்பனையும் உலகப் படைப்பாளியை ஆணாகவே கண்டது.

தாய் வழி, தந்தை வழி இவற்றுள் எது எப்பொழுது ஏற்றம் பெறுகிறது என்பதைப் பற்றி இந்திய மார்க்சீய தத்துவ பேராசிரியர் தேவி சட்டோபாத்யாயா கூறுவதாவது:

“ஆண் பெண் உயர்வு தாழ்வுகளுக்குக் காரணம் பொருளாதார வாழ்க்கையின் வளர்ச்சியே. வேட்டைக்கு ஈட்டியைப் பயன்படுத்திய காலம் மிக முக்கியமானது. வேட்டை வளர்ச்சி பெற்றபோது ஆண்களுக்குச் சமூகத்தில் உயர்வு ஏற்பட்டது. வேட்டைச் சமுதாயம் ஆடு மாடு வளர்ப்பு சமுதாயமாக மாறிய பின் பெண்ணுக்கு சமுதாயத்தில் உயர்வு ஏற்பட்டது. அதனால் தாய்வழி உரிமை மீண்டும் அவர்களிடையே தோன்றியது. காளைகள் இழுக்கும் கலப்பையைப் பயன்படுத்தி நிலத்தை உழும் பயிர்த்தொழில் தோன்றிய பின் தாயுரிமை முற்றிலும் மறைந்துவிட்டது. ஆயினும் அதன் எச்சங்களைத் தந்தையுரிமைச் சமுதாயத்தில் காணலாம்.

“தேவர்களும், தேவிகளும் மனித உருவில் மனித சிந்தனையால் படைக்கப்பட்டவர்களே. ஆண், பெண் இருபாலரின் தராதர உயர்வுகள் மாறின. வேட்டை, ஆடு மாடு வளர்த்தல் ஆகிய தொழில்களை அடிப்படையாகக் கொண்ட சமுதாயங்களில் மக்களால் வணங்கப்பட்ட

தெய்வங்கள் ஆண்களாகவே இருந்தன. ஆரம்பகால விவசாய சமுதாயங்களில் பெண் தெய்வங்களே ஏற்றம் பெற்றன."

இவ்வாறு சமுதாய மாற்றங்களால் ஏற்பட்ட சிந்தனை மாற்றங்களால் படைப்புக் கதைகளிலும் படைப்பாளிகள் ஆண் அல்லது பெண்ணாக இருப்பதைக் காணலாம். மேலே உதாரணங்களாகக் காட்டிய மிகப்பழைய வரலாற்று முற்காலக் கதை மூலங்கள் இவ்வுண்மையை விளக்குகின்றன.

இவ்வாறு சமுதாய வளர்ச்சி நிலைகளின் புறவய யதார்த்தம், அவ்வச் சமுதாயத்தில் மக்கள் உள்ளங்களில் இவ்வுலகம் தோன்றிய விதத்தைச் சிந்தனை செய்வதைப் பாதித்தது. படைப்புக் கதைகள், ஒரு சமுதாய நிலை தோன்றிய பின்னரே, அச்சமுதாயத்தின் மக்களால் படைக்கப்பட்டன. ஒரு சிந்தனைப் படிவம் தோன்றிய பின்னர், அச்சிந்தனைப் படிவமே வளர்ச்சி பெறுகிறது. சமுதாய மாற்றங்கள், துவக்கச் சிந்தனைப் படிவத்தை தனது செல்வாக்கால் மாற்றுகின்றன.

ஒவ்வொரு சமுதாயத்தின் படைப்புக் கதைகளின் கற்பனைகள், அச்சமுதாயம் வரலாற்றுப் போக்கில் உருவாக்கியுள்ள கற்பனைப் படைப்புப் படிமங்களையும், சமுதாய வளர்ச்சியால் ஏற்படும் புதிய சிந்தனைப் படிமங்களையும் இணைத்து வளர்த்துக்கொண்டு போகிறது. சமுதாய வளர்ச்சி தேங்கிய குழுக்கள், பண்டைய காலத்தில் படைத்த படைப்புக் கதைகளையே நம்புகிறார்கள். வளர்ச்சி பெற்ற சமுதாயங்கள், வளர்ச்சிக்கேற்ற புது அம்சங்களை படைப்புக் கதைகளில் சேர்த்துக் கொண்டே வருகின்றன. சுரண்டல் சமுதாய அமைப்புப் புரட்சியால் மாற்றப்படும்பொழுது, புனைகதைகளுக்கு சமூக அடிப்படையே இல்லாமல் போய்விடும். கற்பனைப் புனை கதைகளைப் படைக்க அவசியமில்லாதபடி விஞ்ஞானமே எல்லாக் கேள்விகளுக்கும் விடையளிக்கும்.

# BIBLIOGRAPHY


1. "A Maori Cosmogomy", Journal of Polynesian Society, XVI (1907).
2. "Maidu Myths", American Journal of Natural History, Vol. XVIII, No.1.
3. A.L. Basham, The Wonder that was India.
4. Paul Radin, "Annual Report", Journal of American Ethnology.
5. Journal of Polynesian Society, XVI (1970), P.123.
6. Maria Leach, The Beginning, PP. 145-160.
7. American Mythology (Boston, 1920), PP. 160-2.
8. Mercea Eliades, "Egyptian Cosmogony", From Primitive to Zen.
9. Mercea Eliades, "A Maori Myth", From primitive to Zen.
10. ரிக்வேதம், 129.

3

# தாய் தெய்வ வணக்கத்தின் சமூக அடிப்படைகள்

தெய்வங்கள், வழிபடுவோரின் வாழ்க்கை முறையில் இருந்து எழுகின்றன. ஒரு சமுதாயம் அதன் உணவு, உடை, உறையுள் ஆகிய புறவாழ்க்கைத் தேவைகளை எந்த முறையில் பெறுகிறதோ, அதற்காக எத்தகைய சமுதாய அமைப்பை உருவாக்கிக் கொண்டுள்ளதோ, அந்த அமைப்பின் அடிப்படையின் மீது தெய்வநம்பிக்கை என்ற மேற்கோப்பு எழும் (எங்கல்ஸ்).

நாகரிக முற்கால வாழ்க்கையை மூன்று கால கட்டங்களாக கார்டன் சைல்டு என்ற புகழ் பெற்ற தொல்பொருள் துறை அறிஞர் பகுத்துள்ளார். இது வாழ்க்கையின் துவக்க காலம்.

## 1. மனிதர்கள் உணவு தேடித் திரிந்த காலம்

வேட்டையாடியும், கனி கிழங்குகளைப் பொறுக்கியும் தோண்டியும் பெற்ற காலம் இவ்வாறுதான் மனித வாழ்க்கை முதலில் தொடங்கியது. இதை வேட்டைக் காலம் என்று அவர் அழைக்கிறார்.

## 2. கால்நடை வளர்ப்புக் காலம்

ஆடு, மாடு, எருமை, ஒட்டகம், குதிரை முதலிய விலங்குகளை உயிரோடு கொணர்ந்து பழக்கி வளர்த்த காலம்.

## 3. புராதன விவசாயம் செய்து உணவின் ஒரு பகுதியைப் பெற்ற காலம்

இக்கால மக்கள் கற்கருவிகளைப் பயன்படுத்தியவர்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். கல்லெறிந்தும், கவண் மூலம் கல்லைக்

குறி பார்த்து எறிந்தும் கல் ஈட்டி, கல் கோடரிகளைப் பயன்படுத்தியும் விலங்குகளைக் கொன்றனர். இக்கால மக்கள், மந்திரம் மந்திரச் சடங்குகள், வனதேவதைகள், பேய்கள், அவற்றை அடக்கக் கூடிய வலிமையுடைய பல தெய்வங்களை நம்பினார்கள். குழு நடனங்களையும் தமது பயத்தைப் போக்கிக்கொள்ளப் பயன்படுத்திக்கொண்டனர்.

தமிழ் நாட்டில் ஆர் – அரமகளிர் என்ற பயமூட்டும் பெண் தெய்வங்களை நம்பினர். வான் – அரமகளிர் என்று வானத்தில் உலவும் பெண் தெய்வங்களையும் நம்பினர். பாவை என்ற உருவங்களில் அவற்றை வழிபட்டனர். கொல்லிப்பாவை என்ற தெய்வம் கண்டவரைக் கொன்று விடும் என்ற நம்பிக்கைகொண்டிருந்தனர். இவை தவிர பல்லாயிரம் பிசாசுகளும், பேய்களும் இறந்தவர் ஆவிகளும், தங்கள் வாழ்க்கையில் தலையிடுகின்றன என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது.

அவர்களுடைய வாழ்க்கைக்கு மழை தேவையாக இருந்ததால், மழையை மாரியென்ற தெய்வமாக வழிபட்டனர். மாரி பின்னர், தொத்து நோய்களை உண்டாக்கும் தெய்வமாக மாறிவிட்டது. வடநாட்டில் நூற்றுக்கணக்கான நோய்த் தெய்வங்களும் பாம்புத் தெய்வங்களும், இயற்கை சக்திகளும் வணங்கப்பட்டன. அவர்கள் மலை, வானம், காடு முதலிய இடங்களில் இயற்கைக்கு அதீதமான சக்திகள் இருக்கின்றனவென்று நம்பி அவற்றைப் பற்றி அச்சம்கொண்டிருந்தனர். அச்சத்தின் காரணமாகவே அவற்றை வழிபடவும் பலி கொடுத்து அவற்றைத் திருப்திப்படுத்தவும் முயன்றனர். அவர்களது தெய்வ வணக்கம் அச்சத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

கால்நடை வளர்ப்புக் காலத்தில் வாழ்க்கைத் தேவைகள் அதிகரித்தன. கால்நடைகளுக்குத் தேவையான, புற்பூண்டுகள், தழைகள் நீர் முதலியன கிடைக்கிற இடங்களைத் தங்கள் வாழ்விடங்களாகக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இப்பொழுதும் வானத்தை நம்பியே அவர்கள் வாழ்ந்தனர். மழையே அவர்களுக்கு முக்கியமானதாக இருந்தது. எனவே மழைத்தெய்வம் அவர்களுடைய பிராதனத் தெய்வமாக இருந்தது. வருணனும் மித்ரனும் மாபெரும் தெய்வங்களாகப் போற்றப்பட்டன. ஆடு, மாடுகளை வனவிலங்குகளிலிருந்தும் மனிதர்களிடமிருந்தும் பாதுகாக்க வேண்டியிருந்தது. அதனால் ஆடு மாடுகளைப் பாதுகாக்கும்

சக்தியுடையவர்கள் எனக் கருதப்பட்ட சக்திகள் தெய்வங்களாகப் போற்றப்பட்டனர். தெய்வங்கள் விலங்குகளோடு தொடர்பு படுத்தப்பட்டன. இயற்கைப் பொருள்கள் வானத்துப் பொருள்கள் அவர்கள் உள்ளங்களில் பெருமதிப்புப் பெற்றன. கிரேக்க, இந்திய, சுமேரிய நாகரிகங்களில் 'வானக்கடவுள்' முக்கியமான தெய்வமாயிற்று (Sky God - The Supreme god of Vedic Hindus and Iranians). ஆரியர் சமூக வாழ்க்கையில் முதலில் வருணனும், பின்னர் இந்திரனும் புகழ்பெற்றனர். வருணன் வலையைத் தனது கருவியாகக் கொண்டிருந்தான். இந்திரன் எலும்பினாலான வஜ்ராயுதத்தைப் பயன்படுத்தினான். இவர்களில் எவரும் உலோகங்களினால் செய்யப்பட்ட கருவிகளைப் பயன்படுத்தவில்லை. பிற்காலப் புராணங்கள் வேல், ஈட்டி, அம்பு முதலிய இரும்புக் கருவிகளைப் பயன்படுத்தியதாகக் கூறுகின்றன. ஆரியருடைய தெய்வங்கள், கால்நடை வளர்ப்புக் காலத்தில் அவர்கள் சிந்துசமவெளியை அடைந்த காலத்தில் அவர்கள் கொண்டு வந்தவை. அதற்கு முன்னர் அவர்கள் ஈரானிலும், மத்திய ஆசியாவிலும் வசித்த காலத்தில் அவர்களால் வணங்கப்பட்ட தெய்வங்கள் குறித்து வேதங்களில் கூறப்படவில்லை. வேதங்களில் குறிக்கப்படும் தெய்வங்களில் சில காலந்டை வளர்ப்புக் காலத்துக்கு முந்தியவை ஆகலாம்.

புராதன விவசாயக் காலத்தில் அவர்கள் புற உலக வாழ்க்கைக்குப் பூமியே முக்கியமானது. செழிப்புத் தெய்வங்களும், மந்திரச் சடங்குகளும் பூமியின் செழிப்புத் திறனை மிகுதியாக்கக் கற்பனை செய்யப்பட்டு உருவாக்கப்பட்டன. செழிப்புத்திறன் பெண்களுக்கே உண்டு என்ற நம்பிக்கை தோன்றிற்று. பெண்கள்தான் முதலில் வேட்டைத் தொழிலில் இருந்து பிரிந்து விவசாயத்தைச் செய்ய ஆரம்பித்தனர். பூமியின் விதையைச் செடியாக வளர்க்கும் திறனுக்கும் குழந்தையைப் பெறும் சக்திக்கும் தொடர்பு உண்டு என்று புராதன விவசாயத்தில் ஈடுபட்ட மக்கள் நம்பினர். எனவே விவசாய மந்திரச் சடங்குகளில் பெண்களே பங்குகொண்டனர். மரத்தில் காய்கனிகள் செழிப்பாக வளருவதற்கு என்ன செய்யவேண்டும் என்பது பெண்களுக்குத் தெரியும். ஏனெனில் அவர்களுக்குக் குழந்தையைப் பெறத் தெரிகிறது. பிள்ளை பெறத் தெரியாதவர்களுக்கு மரங்களையும் செழிப்படையச் செய்ய முடியாது. கருவுற்றிருக்கும் பெண் விதை

விதைத்தால், அவை ஒன்று, நூறாக பல்கும். இது தொத்து மந்திர முறை என்று மானிடவியலாளரால் அழைக்கப்படும் (Contagious magic).

பூமியை உயிருள்ள, உயிரில்லாத அனைத்திற்கும் தாய் என்று அவர்கள் கருதினர். தத்துவச் சிந்தனை வளர்ச்சி பெற்ற காலத்தில் பூமி, பிற உலகங்கள் எல்லாம் ஒரே ஜகன் மாதாவிலிருந்து தோன்றின என்று நினைத்தனர். இவ்வாறு தாய்த் தெய்வம் மக்கள் உள்ளத்தில் தோற்றமெடுத்தது. செழிப்புத் தெய்வங்களும் தோன்றின.

ஸ்டார் பிரச் கூறுகிறார்:

1. "தெய்வங்களில் பெண் தெய்வங்கள் உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து வணங்கப்பட்டன. பெண்ணுக்குச் சமுதாய வாழ்க்கையில் எவ்வித ஸ்தானம் இருக்கிறதோ, அதன் அடிப்படையிலேயே பெண் தெய்வங்களுக்கும் மதிப்போ, அவமதிப்போ இருக்கும். இனக்குழு வாழ்க்கையில், குலத்தில் (clan) பெண்ணே, தாயாகவும் தலைவியாகவும் இருக்கிறாள். இந்த நிலையில் சமுதாயத்தில் தாய்த்தெய்வம் எல்லாத் தெய்வங்களுக்கும் மேலாகத் தலைமை பெறுகிறது. ஆண் தெய்வங்களைவிட, பெண் தெய்வம் உயர்ந்த ஸ்தானத்தைப் பெறுகிறது".

2. "வேட்டை முற்காலச் சொத்து பெண் வழியில் இறங்கியதால் பெண்களுக்குச் சமுதாயத்தில் உயர்ந்த மதிப்பு இருந்தது."

இரண்டாவதாகக் கூறப்படும் பகுதி உண்மையாக இருக்க முடியாது. வேட்டை முற்கால சமுதாயத்தில் மிகவும் புராதனமான கற்கருவிகளே இனக்குழுக்களுக்குச் சொந்தமாயிருந்தன. அவை குழு முழுவதற்கும் சொந்தமாயிருந்தன. ஆண், பெண் என்ற பிரிவினையின்றி, அவை குழுவிற்கு உரிமையாயின. விவசாயம் துவங்கிய பின்னர்தான் நிலம் சொத்தாயிற்று. அது பல்வேறு விதங்களில் பொதுவுடைமையாயிருந்தது.

வேட்டைக் காலத்திலேயே இனக் குழுவினுள் வேலைப் பிரிவினை ஏற்பட்டது. பெண்கள் தாவர உணவு தேடுவதிலும், ஆண்கள் வேட்டையாடுவதிலும் ஈடுபட்டிருக்கவேண்டும். தற்கால இனக்குழு வாழ்க்கையிலும், வேட்டைக்கால வளர்ச்சி நிலையிலுள்ள 'உணவு தேடும்' மக்களைக் காண்கிறோம். அவர்களிடமும் ஆண்–பெண் வேலைப் பிரிவினை காணப்படுகிறது. இது போன்றே பண்டைய

வேட்டைக் காலத்தில் இயற்கையாகத் துவங்கிய தாவர உணவு தேடுகிற வேலைப்பிரிவினை, பெண்கள் தாவரங்கள் பற்றிய அனுபவ அறிவு பெறும் வாய்ப்பை அளித்தது. அவர்கள் விவசாயத்தில் ஈடுபடத் தொடங்கினர். வேட்டை மூலம் கிடைக்கும் மாமிச உணவைவிட, நம்பத்தகுந்த விளைச்சலை பெண்கள் உற்பத்தி செய்தார்கள். எனவேதான் உலக முழுவதிலும் செழிப்பைக் குறிக்கும் தெய்வங்கள் பெண் தெய்வங்களாகவே இருக்கின்றன. பூமியும் பெண் தெய்வமாகவே கருதப்படுகிறாள்.

கல்லினால் செய்யப்பட்ட குத்துக்கோல் பின்னர் சூலாயுதமாக மாறிற்று. உலோக காலத்தில் செம்பினால் செய்யப்பட்ட சூலாயுதம் விவசாயக் கருவியாகப் பயன்பட்டது. வேட்டைக் கருவியாக இருந்த கருவிகளே, விவசாயத்திலும் பயன்பட்டன. ஒரே கருவி கொண்டு விவசாயமும் செய்தார்கள், வேட்டையும் ஆடினார்கள். இக்கருவியே இன்றும் உழவர் மக்களிடையே தெய்வத்தைக் குறிக்கும் அறிகுறியாய் உள்ளது. மிகவும் 'தாழ்ந்த' சாதியாருடைய கோயில்களில் சூலாயுதத்தையே வணங்குகிறார்கள். இதுவே முற்காலத்தில் பெண் தெய்வங்களின் போர் ஆயுதமாகவும் கருதப்பட்டது. 'சூலி' என்ற சொல் சூலாயுதத்தை உடையவள் என்றும் சூல் கொண்டவள் என்றும் பொருள்படும். உலகைச் சூல் கொண்டு பெற்றவள் என்று அவளைக் கருதுகிறார்கள். சில கோயில்களில் பொந்தந்தடி என்ற வேட்டைக் கருவியை வணங்குகிறார்கள்.

இவ்வாறு பெண் தெய்வங்கள் உலகப் படைப்புக்குக் காரணமான மூலதெய்வமாகக் கருதப்பட்டதற்குக் காரணம், பெண்கள் விவசாயத்தின் மூலம் சமூக ஆதிக்கம் பெற்றிருந்ததுதான்.

தோட்ட விவசாயத்தில் உழைப்பை ஈடுபடுத்திய பெண்கள், தானிய உற்பத்தியில் உழைப்பைச் செலுத்தத் தொடங்கினர். இக்காலத்தில் பெண்களின் உழைப்பினால் கிடைத்த உணவு, ஆண்களின் தொழிலான வேட்டையிலிருந்து கிடைத்த உணவைவிட மிக அதிகமாயிருந்தது. சமூகத்தின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதில் பெண்கள் உழைப்பு பிரதானமாக இருந்ததால் பெண்களுக்கு சமூக மதிப்பு உயர்ந்தது. இந்த சமூக மதிப்பின் வெளிப்பாடாக சக்தி வாய்ந்த தெய்வங்கள் பெண் தெய்வங்களாகவே இருந்தன. மூலதெய்வம் பெண் தெய்வமாகவே இருந்தது.

இவ்வாறு காளைகளால் இழுக்கப்பட்ட கலப்பையைக் கண்டுபிடிக்கும் வரை பெண்ணாதிக்க நிலையும் நீடித்தது. கலப்பை விவசாயம் ஆண்களுடைய தொழில். அவர்களால் விளைவிக்கப்பட்ட தானியம் சமூகத்தின் வளர்ந்திருக்கும் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் உபரியாகவும் ஆகும்பொழுது பெண்களின் ஆதிக்கத்தை எதிர்த்து, ஆண்கள் தமது ஆதிக்கத்தை நிறுவமுயன்றனர். இந்த நிலையை உலகப் படைப்புப் புனை கதைகள் காட்டும். உலகம் தோன்றிய கதைகளில் மிகப் புராதனமானவை. ஒரு பெண்ணின் உடலிலிருந்து உலகம் தோன்றியதாகக் கூறும். அதன் பின்னர் தோன்றிய கதைகளில் பெண்ணாதிக்க உலகத்தை அழித்து உலகத்தை மறுபடைப்புச் செய்தவன் ஆணாகவே இருப்பான். பெண் தெய்வங்களான, பிசாசுகள், பூதங்கள் இவற்றிற்கும் ஆண் தெய்வங்களுக்கும் பெரும் போர் நடந்து, ஆண் தெய்வங்கள் வெற்றி பெறுவார்கள். பிறகு ஆண் ஆதிக்கம் நிலைநிறுத்தப்படும். எகிப்து, பாபிலோனியா, வேத கால இந்தியா இவற்றில் காணக்கிடக்கும் புராணக் கதைகள் இதனைத் தெளிவாக்கும். இக்கதைகள் புராதன விவசாய நிலையிலிருந்து காளை பூட்டிய கலப்பை விவசாயத்திற்கு வாழ்க்கைமுறை மாறுகிற புரட்சியைக் குறிப்பிடும்.

மனித வாழ்க்கையில் சூலம் அல்லது ஈட்டி வேட்டையிலும், விலங்குகளை மனிதனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கும் பயன்படுத்தப்பட்டது. தோட்ட விவசாயம், வயல் விவசாயமாயிற்று. பூமியில் குழி தோண்டும் கருவியைப் பயன்படுத்தி விவசாயம் செய்ததை விடுத்து, காளை பூட்டிய ஏரைப் பயன்படுத்திப் பயிர் செய்ய ஆரம்பித்தார்கள்.

இந்த மாறுதல்கள், பெண்களின் தொழிலாயிருந்த விவசாயம், ஆண்களின் தொழிலாக மாறுவதற்குக் காரணங்களாயின. இந்த மாறுதலினால் துவக்கத்திலிருந்து பழைய கருவிகளை வழிபட்ட மக்கள் காளைகளையும் வழிபடத் துவங்கினர். பரமசிவன், வேட்டையாடுபவர்களின் தெய்வமாகப் புலித்தோல் போர்த்திருந்தார். அவர் ரிஷபாரூடரானார். கங்கையைத் தலையில் வைத்தார். மாதொரு பங்கு வைத்தார். "இந்த உற்பத்திமுறை மாற்றங்களுக்கேற்ப பெண்வழி உரிமை ஆண்வழி உரிமையாக மாறிற்று" (தாம்ப்ஸன்).

பெண்ணாதிக்க சமுதாயத்தில் தாய்வழிதான் குறிப்பிடப்பட்டது. 'இவள் மகன் இவன்' என்றுதான் ஆண்கள் அழைக்கப்பட்டனர். கால்நடை வளர்ப்புத் தோன்றி வளர்ச்சி பெற்றதும் 'இவன் மகன் இவன்' என்று ஆண்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர். பைபிளில் குறிப்பிடப் படுபவர்கள் ஆண்வழி உரிமையிலேயே அழைக்கப்படுகிறார்கள் (இவன் மகன் இவன்).

1916–ல் மோஹன்ஜதரோ தொல் பொருள்கள் கண்டுபிடிக்கப் படுவதற்கு முன்னால் ஒரு ஆய்வாளர் எழுதினார்:

"சர்வசக்தி வாய்ந்த தேவி என்ற கருத்தை வேதகால ஆசிரியர்களுடைய காலத்துக்கு முன்பு, ஆசியாமைனர், சிரியா, எகிப்து முதலிய மத்திய தரைக் கடற்கரை நாடுகளில் காணலாம். இந்திய சாக்தேயர்களது 'தேவி' கருத்தையொத்த கருத்துக்களையும் வழிபாட்டு முறைகளையும் சடங்காசாரங்களையும் அந்நாடுகளின் பண்டைய நாகரிகத்தில் காணலாம்."

அந்நாடுகளில் சக்தி வழிபாட்டில் சடங்காசாரப் புனிதப் புணர்ச்சி வழக்காயிருந்தது. இதில் இருந்துதான் 'தந்திர' வழிபாட்டுமுறை தோன்றியது.

நம் நாட்டுத் தாய் தெய்வங்களைப் போன்ற இயல்புகளைக் கொண்ட, செமிடிக் நாடுகளைச் சேர்ந்த 'அஸ்டார்டே' என்ற தெய்வமும், எகிப்திய தெய்வமாக 'ஐஸிஸ்' என்ற தெய்வமும், பிரிஜிய நாட்டைச் சேர்ந்த 'ஸைபீல்' என்ற தெய்வமும் வணங்கப்பட்டு வந்தன.

சாங்கிய தத்துவத்தில், "உலகில் வேறுபட்ட பல்வகையான உருக்கள் தோன்றுவதற்கு முன் வேற்றுமையற்ற ஒரே பொருள்தான் இருந்தது" என்ற அடிப்படையான பொருள் முதல்வாதக் கருத்து இருந்தது. இதனைப் 'பிரக்ருதி' என்று தத்துவவாதிகள் அழைத்தனர். இது ஒரு தத்துவக் கருத்தாகத்தான் இருந்தது. ஆனால் புராண காலத்தில், இக்கருத்திற்குப் புறவடிவம் கொடுத்து, பிரக்ருதி என்ற மூலப்பொருளுக்குப் பெண்மையென்னும் இயல்பை ஏற்றி, அதற்கு உணர்வு என்னும் புருஷனையும் கற்பித்தார்கள். ஆனால் உணர்வு என்னும் புருஷன் தோன்று முன்னரே, பிரக்ருதி படைப்பதற்கு ஆசை கொண்டாள். ஜகன்மாதாவாக உருக்கொண்டு அவள் தனது உடலிலிருந்து பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூன்று கடவுளர்களையும்

படைத்தாள். அவர்களில் பிரம்மா, உலகங்களையும், பொருள்களையும், உயிர்களையும் பிரக்ருதியிலிருந்தே படைத்தான். பிரக்ருதி என்ற பொருள், பெண் தன்மைகொண்டது, படைக்கும் திறனுடையது என்ற கருத்து புராணங்களின் படைப்புக் கதைகளில் இருந்து விளங்கும்.

மோஹன்ஜதரோவின் 'தாய்த்தெய்வம்' இப்பொழுது ஆய்வாளர்களுக்குத் தெரிந்ததுதான். அத்தலத்தில் அகழ்வாய்வுகள் செய்த மார்ஷல் கூறுகிறார்:

"முதலில் இங்கு புராதனத் தாய் தெய்வ வணக்கம் இருந்தது. இதன் பிறகு அவ்வணக்க முறையிலிருந்தே ஒரு கருத்துத் தோன்றியது. தேவி என்ற தனித்தெய்வம், அழிவில்லாத, சர்வசக்தி வாய்ந்த பெண் தத்துவமாகக் கருதப்பட்டது."

சாங்கியத்தின் பிரக்ருதி (பிரதானம்) தான் படைக்கும் ஆற்றல் உள்ளது. எல்லா உருக்கள் தோன்றுவதற்கு உடலாயுள்ளது. பரிணாம முறையில் அதுவே உலகில் தோன்றுகிற எல்லாப் பொருள்களும், உயிர்களும் தோன்றக் காரணம், பிரக்ருதியின் படைப்பே உணர்வு. இதைப் புருஷன் என்றும் அழைக்கிறார்கள். புருஷன் சக்தியற்றது சாட்சிமயமானது. பிரக்ருதியின் செயலின் விளைவுகளை சாட்சியாக நின்று காண்கிறது. இதுவே பிரக்ருதி பற்றியும் புருஷன்பற்றியும் பூர்வசாங்கிய வாதிகள் கொண்டிருந்த கருத்து. இக்கருத்துக்கள் முற்றிலும் பொருள்முதல்வாதமாக இருந்ததால், பிற்கால தெய்வவாதிகள், ஆன்மீக வாதிகள் இதன் கருத்துக்களை மாற்றினார்கள். முந்திய சாங்கியம் நிரீஸ்வர சாங்கியம் என்ற பெயர் பெற்றது. காரணம் அந்தத் தத்துவம் ஈஸ்வரன் என்ற கர்த்தாவை ஒப்புக்கொள்ளவில்லை. மறுக்கவே செய்தது. பிற்கால ஆத்திகர்கள் இந்நிலையை மாற்றி புருஷன் என்ற சாங்கிய தத்துவத்தைக் கடவுளாக மாற்றி, சாங்கியத்தில் அதற்கில்லாத குணங்களை அதற்குக் கற்பித்து "கடவுளோடு சேர்ந்த சாங்கியம்" என்று பெயரிட்டார்கள். அதுதான் "சேஸ்வர சாங்கியம்" என்பது. ஈஸ்வர கிருஷ்ணர் என்ற தத்துவாசிரியர் 'ஸாங்கிய காரிகை' என்ற கபிலரது மூலநூலைக் கண்டு பிடித்து விட்டதாகக் கூறி அதற்கு உரையெழுதினார். உண்மையில் மூலமும் அவருடைய படைப்பே என்று தற்காலத் தத்துவாசிரியர்கள் நம்புகிறார்கள். சாங்கிய சூத்திரம் என்ற நூலையும் அவர் எழுதியுள்ளார். இது கி.பி. முதல் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இவர்

எழுதிய நூலில்தான் புருஷனைச் சகல சக்தி வாய்ந்த ஈசுவரனாகக் காட்டுகிறார். சாங்கியத்தின் பிரக்ருதி படைப்பாற்றல் கொண்டிருப்பதால், பெண்மை என்ற இயல்பு அதற்குண்டு எனக் கருதப்பட்டது. புருஷனுக்கு ஏற்றம் தோன்றிய – அவர்களுக்குப் பொருளாதார, சமூக ஆதிக்கம் ஏற்பட்ட பிறகுதான் புருஷனுக்கும் சக்திக்கும் நிகழ்ந்த சண்டைகள் பல புராணங்களில் விவரிக்கப்படுகின்றன. ஆரம்பத்தில் பல போர்களில் புருஷன் (சிவன்) தோற்றுப் போனதாகவும், கடைசியில் பிரக்ருதியை வென்று விட்டதாகவும் புராணக் கதைகள் இருக்கின்றன.

பிரக்ருதியையே உலகமாதா (ஜகன்மாதா) என்றழைத்தனர். இதில் ஒரு முரண்பாடு உள்ளது. அவள் சிவனின் மனைவி. அதே சமயம் சிவனைப் படைத்தவளும் அவளே. சிவனைப் படைத்து அவனையே உலகைப் படைப்பதற்குத் துணையாகக்கொண்டாள்.

பல குமரித் தெய்வங்கள், இந்தியாவில் உள்ளன. மாரி, காளி, இசக்கி, முப்புடாதி (முப்புரதேவி) குமரி போன்ற திருமணம் ஆகாத தெய்வங்கள் தமிழ்நாட்டில் வணங்கப்படுகின்றன. இவற்றில் கன்னி குமரியைத் திருமணம் செய்துகொள்ள சிவன் முயன்று தோற்ற கதைகள் சுசீந்திரத்திலும், கன்யாகுமரியிலும் வழங்குகின்றன. இத்தெய்வங்கள் படைப்புத் தெய்வங்களாகவும் கருதப்படுகின்றன. அவ்வாறானால், இவை ஆண் உதவியின்றிப் படைக்கின்றன என்ற கருத்து உள்ளது. பண்டைக் காலத்தில் குழந்தைப் பிறப்பில் ஆணின் பங்கு (Role) அறியப்படாமல் இருந்த காலத்தில் பெண்ணே குழந்தை பெறுவது அனுபவ அறிவாகத் தெரிந்த காலத்தில் உருவாக்கப்பட்ட தெய்வங்கள் குமரித்தெய்வங்கள் திருமணமாகாமலும் இருக்கின்றன. உலகைப் பெறவும் செய்கின்றன

கலப்பை விவசாயம் சமூக வாழ்க்கையை மாற்றியது போல் அக் உலகக் கருத்துக்களையும் மாற்றிவிட்டது. கலப்பை விவசாயத்தில் ஆண் இனத்தின் உழைப்பு அதிகமாகப் பயன்படுவதாலும் தானிய உற்பத்தியில் பெரும் பகுதி அவர்கள் உழைப்பால் கிடைப்பதாலும், முதலில் பெண்ணுக்கு ஆண் சமம் என்ற நிலைமை தோன்றிப் பின்னர், ஆணுக்குப் பெண் தாழ்ந்தவள் என்ற கருத்துடைய ஆணாதிக்க சமுதாயம் நிலைத்துவிட்டது.

ஹாரப்பா, மோகன்ஜதரோ தலங்களில் 3,000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்கள் விவசாயப் பொருளாதார அமைப்பினைக் கொண்டிருந்தார்கள் என்பதும், தாய்த் தெய்வ வணக்கத்தை மேற்கொண்டிருந்தார்கள் என்பதும் சான்றுகளால் தெளிவாகிறது. அவர்கள் கோதுமை, பார்லி, பட்டாணி, பேரீச்சை முதலியனவற்றைப் பயிர் செய்தார்கள். 160' 135' நீள அகலமுள்ள இரண்டு தானியப் பாதுகாப்பு அறைகள் அங்கு காணப்பட்டன. அவர்களுடைய சமுதாய வாழ்க்கையில் செல்வம் குவித்து வைக்கப்பட்டது. இவர்கள் கால்நடைச் சொத்தை மிகுதியாக வைத்திருக்கவில்லை. தானியத்தைச் சேமித்து வைத்திருந்தார்கள்.

ஹாரப்பாவிலும், மோஹன்ஜதரோவிலும் இதுவே சமூக நிலைமை. ஏருழவு தோன்றிக்கொண்டிருக்கிற நிலைமையில் அவர்கள் வாழ்ந்தார்கள். பெண் தெய்வங்களுக்குப் பெருமதிப்பு இருந்தது. ஆண் தெய்வங்கள் (பசுபதி) இருந்தபோதிலும் பெண் தெய்வங்களே பிரதானமானவையாக இருந்தன.

ரிக்வேத காலத்தில் ஆரியரது சமயத்தில் ஆண் தெய்வங்களே மதிப்புடையவையாக இருந்தன. கால்நடை வளர்ப்பின் ஆதாரப்பட்ட சமுதாயம் அவர்களுடையது. அவர்கள் விவசாய வாழ்க்கையை மேற்கொள்ளவில்லை. வேதங்களில் இயற்கைத் தெய்வங்களும் கால்நடை வளர்ப்பிற்கேற்ற தெய்வங்களும் வணங்கப்படுகின்றன. ஆண் தெய்வங்களைவிடச் சக்திவாய்ந்த பெண் தெய்வங்கள் வேத வழிபாட்டில் இல்லை.

எனவே வேத முற்கால மக்களது சமய வாழ்க்கையில் தோன்றியவைதான் தாய்த் தெய்வமும் மற்றப் பெண் தெய்வங்களும். சக்தி வழிபாடு வேத வழிபாட்டிற்கும், சடங்காசாரங்களுக்கும் முரணானது. பல தெய்வ வணக்கம் வேத வழிபாட்டில் உள்ளது. ஒவ்வொரு தெய்வத்தை, ஒவ்வொரு நோக்கத்திற்காக வழிபட வேண்டும். சில வேளைகளில் வழிபாடே இல்லாத, சடங்குகளை, மந்திரங்களை உச்சரிக்க வேண்டும். நமது சடங்குகள், விளைவுகளை ஏற்படுத்தவல்லது. வேதங்களின் கடைசிப் பகுதிகளில்தான் தத்துவமும், ஒரு தெய்வ வணக்கமும் காணப்படுகிறது. வேதத்தின் பெருந்தெய்வங்கள் ஆணுருவில் உள்ளவையே!

பல வேறு பகுதிகளில் இருந்த தாய்த் தெய்வங்கள், செழிப்புத் தெய்வங்கள் நோய்த் தெய்வங்கள் இவற்றைப் பல புராணக் கதைகள் இணைந்து ஒன்றாக்க முயன்றன. ஒரே பராசக்தியின் பல தோற்றங்கள் என்ற ஒரு தத்துவக் கருத்தை முன் வைத்தன. ஆயினும் சக்தியின் தோற்றங்கள் என்று கருதப்படுபவை, ஒவ்வொரு காலத்தில் வணங்கப்பட்ட தனித்தனித் தெய்வங்களே. லலித சகஸ்ரநாமத்தில் ஆயிரம் பெயர்களும், வருணனைகளும் உள்ளன. இவையனைத்திலும் இரத்தத்தோடு பெண் தெய்வங்கள் சம்பந்தப்பட்டுள்ளன. காளி மட்டும்தான் கருநிறம் படைத்தவள். ஆனால் இரத்தத்தை விரும்புவாள். இன்னும் விவசாயத்தில் ஈடுபடக்கூடிய சாதிகளால் வழிபடப்படுகின்றன. சக்தி வழிபாடு வேதாந்திகளால் வெறுத்து ஒதுக்கப்படுகிறது. நமது சமயங்கள் பொருந்தாதன எல்லாவற்றையும் பொருந்தவைக்கும் பெருந்தன்மையினால் முரண்பாடுகளை மழுங்கடித்துச் சக்தி வழிபாட்டை, வேதாந்தியும் ஒப்புக் கொள்ளுகிற நிலையைக் காண்கிறோம். லலித சகஸ்ரநாமம் என்ற ஆயிரம் தேவியரை வருணிக்கும் நூலை சங்கரர் எழுதியுள்ளார்.

பரமார்த்திக உண்மையென்றும் விவகாரிக சத்தியம் என்றும் பிரித்து, உண்மையில் உண்மையல்ல, பொய்யில் உண்மையானது என்றும், இரு வகையான உண்மைகளை வேதாந்திகள் கருத்தில் கொண்டுள்ளார்கள். அதில் சக்தி வழிபாடு விவகாரிக சத்தியம். விவசாய உழைப்பாளிகளிடம் ஆழ்ந்து வேரூன்றிவிட்டதால் வேறு சமயக் கருத்துக்களால் இதனை அழிக்க இயலவில்லை.

எல்லா வகையான மத நம்பிக்கைகளையும் அழித்துவிடும் விஞ்ஞானம் ஒன்றே இந்த நம்பிக்கைகளை அழிக்கும். காரியங்களுக்குக் காரணம் கண்டுபிடிக்கப்பட்டு நிரூபிக்கப்படும் பொழுது கற்பனையான காரணங்களுக்கும் இயற்கைக்கு அதீதமான சக்திகளுக்கும் ஆதாரமில்லாமல் போய்விடுகிறது.

# BIBLIOGRAPHY


1. Gorden Child, Anthoropology.
2. B.N. Bhattacharya, Indian Mother Goddess (Calcutta, India Publications).
3. A.A. Paine, Shaktas and Their Cult.
4. The Holy Bible, Old Testaments.
5. Editorial Board, "Myth and Legand", Comparative Religion.
6. F. Engels Origin of Family, Pridate Property and State.
7. Philip Rausar, Tantra, (Delhi, Vikas).
8. Marshal, Mohenjadaro Excavations.
9. J.G. Frazer, The Golden Bough, Vol. II
10. K. Marx and F. Engels, On Religion.
11. Mythology of Babylon and Assyria.
12. "Egyptian Mythology", Hamlyn Series.
13. Lalitha, Sahasranama.
14. பி.எல். சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய் தெய்வ வழிபாடு (சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்).

பாகம் - 2

# ச மூ க வி ய ல்

# 1

# தஞ்சைக் கோயிலின் செலவும் - நில வருவாயும்

0.0 தஞ்சைப் பெருவுடையார் கோயில் ராஜராஜனுடைய தலைநகரில், அவனுடைய பேரரசின் வெற்றிகளையும், பெருமையையும், சோழநாட்டின் பண்பாட்டின் சிறப்பையும், அரச குடும்பத்தின் பக்தியையும் பறைசாற்றுவதற்காகக் கட்டப்பெற்றது. இது அக்காலத்தின் சிற்பச் சிறப்பின் சிகரமாகவும், கலை வளர்ச்சியின் கோபுரக் கலசமாகவும், நிறுவன அமைப்புத்திறனின் வெற்றியாகவும் விளங்குகிறது. ராஜராஜன் தன் பேரரசின் செல்வத்தில் ஒரு பகுதியை இக்கோயிலைக் கட்டவும், அதன் பூசனைகளையும், விழாக்களையும், கலை நிகழ்ச்சிகளையும் நடத்துவதற்குச் செலவிட்டான். இதற்கென முழுநேர தேவகன்மிகளையும், கலைவாணர்களையும், தொழிலாளர்களையும் நியமித்து ஊதியமும் நிவந்தங்களும் அளித்தான்.

0.1 இக்கோயிலில் எழுநூறுக்கு மேற்பட்ட ஊழியர்கள் நிரந்தரமாகப் பணிபுரிந்தனர். கோயில் பூசனைகளுக்கும், திருவிழாக்களுக்கும் ஏராளமான செல்வம் தேவைப்பட்டது. இச்செலவுகள் கோயில் கட்டி முடித்து பத்து ஆண்டுகளில் மிகவும் அதிகரித்துவிட்டன. எத்தகைய செலவுகள் இப்பத்து ஆண்டுகளில் ஏற்பட்டன? அதற்குரிய வருவாயை அரசன் எப்படித் தேடித் தந்தான்? என்பதை அறிவது ஆர்வம் ஊட்டும் ஆராய்ச்சியாகும். அதனை இப்பொழுது மேற்கொள்வோம்.

1.0 தஞ்சைப் பெரிய கோயிலில் ராஜராஜனுடைய காலத்திலேயே, மிகப் பெரிய அளவில் பலவகைக் கோயில் பணியாளர்களும் பணிபுரிந்தனர். அப்பணியாளர்கள் யார் யார் எவ்வகையான பணி செய்தனர், அவர்களது எண்ணிக்கை எத்தனை என்பதை பெரிய

கோவில் விமானத்திலுள்ள கல்வெட்டுகள் விவரமாகக் குறிப்பிடுகின்றன. இப்பணியாளர்களது எண்ணிக்கையை அறிந்தால் அவர்களது ஊதியம் எவ்வளவு என்று கணக்கிட முடியும். அதிலிருந்து இப்புதிய செலவுக்கு எவ்வாறு வருமானம் பெறப்பட்டதென அறியலாம்.

1.1 தேவாரம் ஓதும், திருப்பதியம் விண்ணப்பம் செய்வோர் ஐம்பது பேர்கள் ராஜராஜன் ஆட்சியாண்டு இருபத்தொன்பதாவதில் நியமனம் பெற்றனர். "அவர்களுக்கு ஆளுக்கு முக்குறுணி நெல் தினந்தோறும் அளிக்க ஆணையிடப்பட்டது. இதனைக் கீழ்வரும் கல்வெட்டு குறிப்பிடும்."

> "உடையார் ஸ்ரீ ராஜராஜீச்சுரம் உடைய தேவர்க்கு திருப்பதியம் விண்ணப்பம் செய்ய இராஜராஜ தேவர் குடுத்த பிடாரர்கள் நாற்பத்தெண்மரும், இவர்களிலே நிலையாய் உடுக்கை வாசிப்பான் ஒருவனும், இவர்களிலே நிலையாய் கொட்டி மத்தளம் வாசிப்பான் ஒருவனும் ஆக ஐம்பதின்மர்க்கு பேரால் நிசதம் முக்குறுணி நிவந்தமாய் ராஜகேஸரியோடு ஒக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் உடையார் உள்ளூர் பண்டாரத் தேப்பெறவும்."[1]

இதனால் தேவாரம் ஓதும் பிடாரர், உடுக்கு மத்தளம் வாசிக்கும் கலைஞர் ஆக ஐம்பதின்மருக்கு ஒருநாள் ஊதியம் 150 குறுணி நெல் எனத் தெரிகிறது.

1.2 கோயிலைச் சுற்றி, இக்கோயில் உடைய தேவர் முன் ஆடவும், பாடவும், கோயில் பணி செய்யவும் நூற்றுக்கணக்கான தளிச்சேரிப் பெண்டுகள் நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கென கோயிலைச் சுற்றி வீடுகள் கொண்ட தனியாக நான்கு தெருக்கள் அமைக்கப்பட்டன. அவர்கள் சோழ மண்டலத்தில் பல கோயில்களில் பணி செய்து கொண்டிருந்தவர்கள் இத்தெருக்களில் குடியேற்றப்பட்டனர்.

இவர்களுக்கு ஊதியம் ஆண்டுக்கு இவ்வளவு என்று நிச்சயிக்கப்பட்டது. இவர்களுக்கு கோயிலுக்குச் சொந்தமான தேவதான நிலத்தில் இருந்து பெறப்படும் வருமானத்தில் பங்குகள் அளிக்கப்பட்டன. ஒரு பங்கு ஆண்டுக்கு நூறு கலம். ஒவ்வொரு தளிச்சேரிப் பெண்டிற்கும் ஒரு பங்கும், நட்டுவாங்கர்களுக்கும் ஆசான்களுக்கும் பங்கு இரண்டும், இன்னும் இவர்களில் தலைமை

பெற்றவர்களுக்கு மூன்றும் என ஊதியம் நிச்சயிக்கதபபட்டது. இதைக் கூறும் ஆணை வருமாறு:[2]

---

"உடையார் ஸ்ரீ ராஜராஜீச்சுரம் உடையார்க்கு நிவந்தக்காரராக உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த நிவந்தக்காரர்க்கும், உடையார் ஸ்ரீ ராஜராஜீச்சுரம் உடையார் தளிச்சேரிப் பெண்டுகளாகச் சோழமண்டலத் தளிச்சேரிகளில் நின்றும் கொண்டு ஏற்றின தளிச்சேரிப் பெண்களுக்கும் நிவந்தமாய்ப் பங்கு செய்தபடிப் பங்குவழி ஒன்றினால், நிலன் வேலியினால் ராஜகேஸரியோடு ஒக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் நெல்லு நூற்றுகலமாகவும்."[3]

இவர்களுக்கு ஒரு வேலி நிலத்தில் நூறுகலம் ஆண்டிற்குப் பெறும் பங்குரிமை வழங்கப்பட்டதென இக்கல்வெட்டின் மூலம் தெரிகிறது. தளிச்சேரியின் நான்கு தெருக்களிலும் இருந்த வீடுகளை எண்ணிட்டு அவ்வீடு ஒவ்வொன்றில் யார் குடியிருந்தார்கள் என்ற விவரத்தை மேற்குறிப்பிட்ட கல்வெட்டு தெரிவிக்கிறது. இத்தெருக்களில் தெற்குத் தளிச்சேரி தென் சிறகில் தொண்ணூற்றிரண்டு வீடுகளில் 92 பெண்களும், தெற்குத் தளிச்சேரி வட சிறகில் தொண்ணூற்றொரு வீடுகளில் 91 பெண்களும், வடக்கில் தளச்சேரி தென் சிறகில் தொண்ணூற்றிநான்கு வீடுகளில் 94 பெண்டுகளும், வடக்கில் தளிச்சேரி தென் சிறகில் இருபத்தைந்து வீடுகளில் 25 பெண்டுகளும் வாழ்ந்து வந்தனர். இக்கல்வெட்டுக்களிலிருந்து இவர்களது மொத்த எண்ணிக்கை 307 என்று தெரிகிறது

1.3 இவர்களுக்கு ஆடல்பாடல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பக்கமேளம் வாசிப்போருக்கும் ஒன்றரை முதல் இரண்டு பங்குகள் ஆண்டிற்கு ஊதியமாக் அளிக்கப்பட்டதை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. அவ்வாறே இரண்டு பங்கு பெற்றவர்கள் நட்டுவர்கள், ஆசிரியர்கள், நாடக ஆசிரியர்கள் முதலியோர்.[4]

---

நட்டுவக்காரர்கள் பாட்டுக்காரர்கள் கானபாடிகள், வங்கியக்காரர்கள், பாடவியக்காரர்கள், வாக்கியக்காரர்கள், உடுக்கை வாசிப்போர், வீணை வாசிப்போர், ஆரியம் பாடுவோர், தமிழ்பாடுவோர், கூத்தர், கெட்டிமத்தளம் வாசிப்போர், கந்தர்வக் துறையார், சங்கு ஊதுவோர், பக்கவாத்யர், உவச்சர்கள் முதலிய 17 வகையான

கலைஞர்களுக்கு அவர்களுடைய திறமைக்கும், புலமைக்கும் ஏற்ப வெவ்வேறான ஊதியங்கள் அளிக்கப்பட்டன.

| கலைஞர் | பங்கு | கலம் நெல் |
|---|---|---|
| தளிச்சேரிப் பெண்டு ஒருத்திக்கு | 1 | 100 |
| நட்டுவம் ஒருவர்க்கு | 2 | 200 |
| பாட்டுக்காரர் ஒருவனுக்கு | $1\frac{1}{2}$ | 150 |
| அரையன் (நட்டுவம் ஆடிக்காட்டுவோன் ஒருவனுக்கு | 2 | 200 |
| பாடவியம் ஒருவனுக்கு | $1\frac{1}{2}$ | 150 |
| வாத்யக்காரன் ஒருவனுக்கு | 2 | 200 |
| உடுக்கைக்காரன் ஒருவனுக்கு | $1\frac{1}{2}$ | 150 |
| வீணை வாசிப்பவன் ஒருவனுக்கு | $3\frac{1}{2}$ | 350 |
| ஆரியம் பாடுவோன் (மொத்தம் 3) | $1\frac{1}{2}$ | 150 |
| தமிழ் பாடுவோன் (மொத்தம் 4) | $1\frac{1}{2}$ | 150 |
| காந்தர்வன் ஒருவனுக்கு | 1 | 100 |
| சங்கு ஊதுபவன் ஒருவனுக்கு | 1 | 100 |
| உவைச்சன் ஒருவனுக்கு | 1 | 100 |
| பக்கவாத்தியார் (மொத்தம் 5) | $\frac{3}{4}$ | 75 |
| காந்தர்வன் உதவியாள் | $\frac{3}{4}$ | 75 |
| வேளைகாரர் வலங்கை (மொத்தம் 6 பேர்) | $\frac{3}{4}$ | 75 |

இக்கலைஞர்களை மேற்பார்வை செய்யவும், இவர்கள் நெல் வருமானத்தைத் தண்டம் செய்து கணக்கு வைத்து அவர்களுக்குச் செலுத்தவும் நாயகம் செய்வாரும், கணக்கரும், உதவிக் கணக்கரும் இருந்தனர். இவர்களுக்கும் பங்குகள் வகுக்கப்பட்டிருந்தன.

உதாரணமாக தளிச்சேரிப் பெண்டுகளுக்கும், காந்தர்விகளுக்கு நாயகஞ் செய்த சாலூர் பரஞ்சோதிக்கும், கோவிந்தன் சோமநாதனுக்கும் இரண்டு பங்குகள் என்றும், கணக்கு சதுரவிடங்கனுக்கு இரண்டு பங்குகள் என்றும், கீழ்க்கணக்குகள் என்ற பணிபுரிந்தவர்களுக்கு முக்கால் பங்கெனவும் ஊதியம் விதிக்கப்பட்டது.[5]

நாடக அரங்கில் பணிபுரியம் பணியாட்களுக்கு ஆளுக்கு அரைப்பங்கும், இக்கலைஞர்களுக்குத் துணி வெளுக்கவும், நாவிதஞ் செய்யவும், அரங்கு கட்டவும், வீடுகள் பழுது பார்க்கவும், பணிபுரிந்த தச்சன், கொல்லன், கன்னான், வண்ணான், நாவிதன் முதலியவர்களுக்கு அரைப் பங்கும் அளிக்கப்பட்டது.[6]

1.4 நாடக அரங்கில் வெற்பணி செய்தோர் 77 பேர்.[7] இவர்களுக்கு உணவு சமைத்துப் போடுகிறவர்களுக்கு மட்கலம் வனைவார் பதினொருவர். வண்ணார் இருவர். 'நாவிசர்' இருவர். அம்பட்டன் ஒருவன். தச்சு வேலைக்காரர்கள் பெருந்தச்சனுக்கு ஒன்றரைப் பங்கும் தச்சனுக்கு ஒரு பங்கும் அளிக்கப்பட்டன.

நாடக உடைகள் தைக்கும் பாணர் மூவருக்கு ஆளுக்கு அரைப்பங்கு அளிக்கப்பட்டது.[8] நாடகத்திற்கும் ஆடல் பாடல்களுக்கும் உரிய அணிமணிகள் செய்கிற தட்டான் ஒருவனும், அவனுடைய சிற்றாளுக்கும் முறையே ஒரு பங்கும், அரைப்பங்கும் அளிக்கப்பட்டது. மேற்பார்வை செய்யும் பெருந்தட்டானுடைய பதவிக்குக் கண்காணிப் பெருந்தட்டாண்மை என்று பெயர். அவனுக்கு ஒன்றரைப் பங்கு.[9]

இவர்களனைவரும் நிவந்தக்காரர் என கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்களுடைய மொத்தத் தொகை 197.

2.0 இவர்களனைவரும் கோயில் பணியாளர்கள். இவர்கள் தவிர 50 மெய்க்காப்பாளர்கள், அர்ச்சகர்கள், வேலைக்காரர்கள் முதலியவர்களும் இருந்திருக்கிறார்கள். ஆக மொத்தம் சுமார் 700 பேர் கோயில் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். இக் கல்வெட்டில் காணப்படும் ஊதியக்கணக்கைக்கொண்டு கணக்கிட்டால் ஓராண்டுக்கு எவ்வளவு கலம் நெல் பணியாளர் ஊதியமாகக் குறைந்தபட்சம் செலவாயிற்று எனக் காணலாம்.

2.1 இப்பணியாளர் அனைவருக்கும் எவ்வளவு பங்குகள், எவ்வளவு கலம் நெல் என்பதை விளக்கமாகக் கல்வெட்டு குறிப்பிடுவதால்,

ஆண்டிற்கு ஊதியச் செலவு எவ்வளவு ஆயிற்று என்பதைக் கணக்கிட முடியும்.

| பணியாள் | | நெல் அளவு | எண் | தினம் | ஆண்டு |
|---|---|---|---|---|---|
| ஒதுவார் | பங்கு | குளிம் முக்குறுணி | 50 | 50 | 150 மரக்கால் |

10 மரக்கால் ஒரு கலமாகக் கணக்கிட்டால் தினம் 15 மரக்காலாகிறது. ஆண்டிற்கு 5465 கலம் நெல் ஓதுவார் ஊதியமாகிறது.

தளிச்சேரிப் பெண்டுகளுக்கு ஆண்டிற்கு 100 கலம் நெல் ஊதியம்,[10] மொத்தம் 307 தளிச்சேரிப் பெண்டுகளுக்கு ஆண்டிற்கு கலம் 36,500 கலம் நெல் ஊதியமாக அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இனி நிவந்தக்காரரது ஆண்டுதியத்தைக் கணக்கிடுவோம்.

| பணியாள் | பங்கு | எண் | ஆண்டுதியம் கலம் |
|---|---|---|---|
| நட்டவம் | 2 | 8 | 1600 |
| உதவி நட்டவம் | 1½ | 2 | 300 |
| கானபாடி | 1½ | 3 | 450 |
| வங்கியம் | 1½ | 3 | 450 |
| பாடவியம் | 2 | 4 | 800 |
| வாத்திமாராயன் | 2 | 2 | 400 |
| உடுக்கைவாசிப்பான் | 1½ | 2 | 300 |
| வீணை வாசிப்பான் | 3½ | 1 | 350 |
| ஆரியம் பாடுவோர் | 1/ | 3 | 450 |
| தமிழ் பாடுவார் | 1½ | 4 | 600 |
| மத்தளம் | 1½ | 2 | 300 |
| சங்கு ஊதுவான் | 1 | 3 | 300 |

| | | | |
|---|---|---|---|
| பக்கவாத்யர் | $^3/_4$ | 31 | 3125 |
| காந்தர்வநாயகம் | 2 | 1 | 200 |
| கணக்கு | 2 | 2 | 400 |
| கீழ்க்கணக்கு | $^3/_4$ | 2 | 150 |
| கீழ்க்குடை | 2 | 1 | 200 |
| கீழ்க்கணக்கு | $^3/_4$ | 2 | 150 |
| உதவி உவைச்சர் | $^1/_2$ | 11 | 550 |
| சகடை கொட்டி | $^1/_2$ | 11 | 550 |
| சகடை கொட்டி | $^1/_2$ | 11 | 550 |
| சகடை கொட்டி | $^1/_2$ | 11 | 550 |
| தடிமாற்றம் | $^1/_2$ | 11 | 550 |
| திருப்பணித் தொங்கல் | | | |
| பிடிக்கும் ஆள் | 1 | 11 | 1100 |
| விளக்குடையாக்கருக்கு | | | |
| உள்படுவான் 7 ஆட்களுடன் | 4 | 8 | 450 |
| நீர்தெளிப்பான் | $^1/_2$ | | 200 |
| சன்னாலியள் | $^3/_4$ | 2 | 150 |
| மடைப்பள்ளிகுசவர் | $1+^1/_2$ | | 600 |
| வண்ணான் | 1 | 2 | 200 |
| காவிதிமை | $^1/_2$ | 2 | 100 |
| பெருநாவிசன் | 1 | 1 | 100 |
| சோசியர், பெருங்கணி–கீழ் ஆள் | $1+^1/_2$ | 1 | 200 |
| சோசிய கணிதாதி | | 1 | |
| ராஜன்மேற்படி | $1+^1/_2$ | 1 | 200 |
| கொலினமை செய்வார் | $^1/_2$ | 1 | 300 |
| அம்பட்டன் | 1 | 2 | 100 |
| தய்யான் | 1 | 4 | 100 |

| | | | |
|---|---|---|---|
| பெருந்தய்யான் | 1 | 1 | 100 |
| ரத்தனந்தய்யான் | 1 | | 100 |
| கன்னான் | 1 | 1 | 100 |
| தச்சாசார்யம் | $1\frac{1}{2}$ | 4 | 150 |
| தச்சன் | $\frac{3}{4}$ | 2 | 150 |
| பாணன் | $\frac{3}{4}$ | 1+11 | 300 |
| சாக்கைக் கூத்தன் | $1\frac{1}{2}$ | 2 | 150 |
| கண்காணித் தட்டாண்மை + ஆள் | 1 | 1 | 100 |
| | | | 18,225 |

3.1 நிவந்தக்காரரது ஊதியம் ஆண்டிற்கு 18,825 கலம் நெல், பதியம் ஓதுவார் ஊதியம் ஆண்டுக்கு சுமார் 5,326 கலம் நெல். தளிச்சேரி பெண்டுகளுக்கு 36,500 கலம் நெல், மொத்தம் 60,150 கலம் நெல். இதனுள் கோயில் தினசரிப்படித்தரம், தேவகன்மிகள் ஊதியம், விழாச் செலவுகள் எல்லாம் அடங்கவில்லை. அவற்றைக் குறித்து இக்கட்டுரையில் நாம் ஆய்வு செய்ய முயலவில்லை. கலைப்பணியில் ஈடுபட்ட, பணியாளர்களுடைய ஊதியச் செலவு மட்டும்தான் இங்கு கணக்கிடப்பட்டது.

தளிச்சேரிப் பெண்டுகளுக்கு ஒரு வேலி நிலத்தில் வரும் வருவாயில் 100 கலம் நெல் பெற உரிமையளிக்கப்பட்டது. தினக்கூலி பெறும் ஓதுவார்களைத் தவிர சுமார் 700 பணியாளர்களுக்கு ஒரு வேலி நிலத்தில் 100 கலம் பெறும் அல்லது அதில் 2 பங்கு, $\frac{1}{2}$ பங்கு, $\frac{3}{4}$ பங்கு உரிமையளிக்கப்பட்டது. மொத்த ஊதியம் $645\frac{1}{2}$ பங்குக்கு 64,550 கலம் நெல்.

இவை தவிர கோயிலின் திருவிடையாட்டத்திற்கும், படித்தரங்களுக்கும், கோயிலைப் பாதுகாக்கும் வேளைகாரப் படைகளின் ஊதியத்திற்கும், கோயிலின் சங்கம் சொத்துக்களைப் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்ட திருமெய்க்காப்புப் படையின் செலவிற்கும் நெல் வேண்டும்.

3.2 இவற்றில் கோயில் பூசாரிகளான மாணிகள் திருப்பரிசாரகர்கள் முதலியோர் நியமனம் ஊதியம் பற்றி தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதியில் உள்ள ஒரு கல்வெட்டு கூறுகிறது. பிராம்மணர், மாணிகள், கரணத்தார்களை சில மண்டலங்களின் பிரம்மதேயங்களின் சபையாரே தேர்ந்தெடுத்து அனுப்பி, அவர்களுடைய ஊதியத்தையும் அளிக்க வேண்டுமென ஆணையிடப்பட்டது. எனவே சபைகளின் வருவாயிலிருந்து, அவர்கள் ஊதியம் பெறப்பட்டது. இதைக் குறிப்பிடும் கல்வெட்டு வருமாறு:

கோராஜ கேசரி வர்மரான ஸ்ரீ ராஜராஜ தேவர்க்குயாண்டு இருபத்தொன்பதாவது வரை, உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் உடையார் ஸ்ரீ ராஜராஜீச்சுரம் உரையார்க்குச் சோழ மண்டலத்தும், பாண்டி நாடான ராஜராஜமண்டலத்தும் தொண்டை நாடான ஜயங் கொண்ட சோழ மண்டலத்தும் பிரமதேயங்களிலாரே அவ்வ்வ் பிரமதேயங்களில் பூமி சம்பத்தும், பத்து சம்பத்தும், அர்த்த சம்பத்தும் உடையராயிருப்பாரை:

ஸ்ரீ பண்டாரஞ் செய்யப் பிராமணரையும் திரிப்பரிசாரஞ் செய்ய மாணிகளையும் கணக்கெழுத கரணத்தார்களையும்

சந்திராதித்தவல் இடக்கடவார்களாக உடையார் இராஜராஜ தேவர்திருவாய் மொழிந்தருள."[11]

இதில் அவர்கள் ஊதியம் குறிப்பிடப்படவில்லை.

3.3 இதுபோன்றே கோயிலின் சங்கம் சொத்துக்களையும் ஸ்ரீ பண்டாரத்தையும் பாதுகாக்கத் திருமெய்க்காப்புகளை நியமித்தது பற்றியும், அவர்களுக்கு ஊதியம் அளிக்க சபை ஊர், நகரங்களாகிய நிறுவனங்களைப் பொறுப்பாக்கியது பற்றியும் ஒரு கல்வெட்டின் மூலம் அறிகிறோம். இதைப் பற்றிய ஒரு கட்டுரை 'ஆராய்ச்சி' இதழில் வெளியாகியுள்ளது. திருமெய் காப்புப் படையினர் ஊதியத்தை, அவ்வவர்களை அனுப்பி வைத்த நிறுவனங்களே ஏற்றுக்கொண்டன.[12]

இருப்பினும், கோயிலின் பெருஞ் செலவுக்கு சில நிரந்தரமான பொருளாதார ஏற்பாடுகளைச் செய்யும் அவசியம் ஏற்பட்டது. வருமானத்தை அதிகப்படுத்தாமல் இச்செலவுகளைச் செய்ய முடியாது. கோயிலுக்கு நில வருமானமே முக்கியமானது. அதற்கு அரசு தேவதான நிலங்களிலிருந்து வரும் வருமானத்தை அதிகமாக்க வேண்டும்.

4.0 கோவில் செலவுகளுக்காக நிலங்களிலிருந்து வரும் வருமானத்தை அதிகப்படுத்த ராஜராஜதேவர் மூன்று ஆணைகள் பிறப்பித்தார். இது நில வருமானப் பாகுபாட்டை மாற்றியமைத்தது. அவற்றின் தன்மை என்னவென்பதை சில கல்வெட்டுகள் புலப்படுத்துகின்றன.

4.1 பிரமதேயமென்பது பிராம்மண சபைகளின் ஆதிக்கத்திலுள்ள கிராமம். ஊர் என்பது பிராமணரல்லாதார் பஞ்சாயத்து ஆதிக்கத்திலுள்ள கிராமம். இவற்றின் நில உரிமைகளை மாற்றியும், கோயிலுக்கு குடிகள் கொடுக்க வேண்டிய காணிக்கடனை அதிகரித்தும் ராஜராஜன் கட்டளை பிறப்பித்தான். அக்கட்டளைகளில் ஒன்றைக் கூறும் கல்வெட்டு வருமாறு:[13]

> கோராஜாகேஸரி வர்மரான ஸ்ரீ ராஜராஜ தேவர்க்குயாண்டு இருபத்தொன்பதாவது வரை,
>
> உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் தஞ்சாவூர் எடுப்பித்த திருக்கற்றளி ஸ்ரீ ராஜராஜச்சுவரம் உடைய பரமஸ்வாமிக்கு வேண்டு ்வந்தங்களுக்குத்
>
> தேவதானமாக சோழ மண்டலத்தும் புற மண்டலங்களிலும் உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் குடுத்த ஊர்களில் ஊர்நத்தமும் ஸ்ரீ கோயில்களும் குளங்களும், ஊடறுத்துப்போன வாய்க்கால்களும் பறைச்சேரியும், கம்மாண்சேரியும் சுடுகாடும் உள்ளிட்டு இறையிலி நிலங்களும்
>
> இறை கட்டின நிலத்தால் காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் இடக்கடவ; பொன்னும் காசும் பேசிக் கல்லின் வெட்டின.

இவ்வாறு தேவதான நிலங்களின் விளை நிலங்களுக்கு கோயிலுக்கு அளக்கவேண்டிய காணிப்பாட்டத்தை உயர்த்தி இறை கட்டின காணிக்கடனை அரசு நிச்சயித்தது.

இதற்கு முன் அரசு வரியாக அளிக்க வேண்டிய 'இறை'யான நெல்லையும் பொன்னையும் கோயிலுக்கு ஊரார் அளித்து வந்தனர். இப்பொழுது ஊர் முழுவதையும் கோயிலுக்குச் சொந்தமாக்கி, விளை நிலங்களுக்கு இறை கட்டின காணிக்கடன் எனப்புதிதாக

உயர்த்தி நிச்சயித்ததை பல கல்வெட்டுக்கள் கூறும். அக்கல்வெட்டு கூறும் செய்தியை அறிய ஒரே ஒரு உதாரணம் தருவோம்.

தென் கடுவாயான அருமொழிதேவ வளநாட்டு இல்லைனாட்டுப் பாகயூர்.

பள்ளியும் கணிமுற்றூட்டும் உள்பட அளந்தபடி நிலம் நூற்றுமுப்பத்து நான் கேய் எட்டுமாவின் கீழ் முக்காலே மும்மா வரையரைக்காணி முந்திரிகைக் கீழ் நான்கு மாவிலும்;

ஊர்நத்தமும் குளமும் கம்மாண சேரியும் பறைச்சேரியும் சுடுகாடும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப்போன வாய்க்கால்களாலும் இறையிலி நிலம் ஒன்பதேய் காணி அரைக்காணி முந்திரிகைக் கீழரை நீக்கி;

இறைகட்டின நிலம் காணிக்கடன் ராஜகேஸரியோடு ஒக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல்லுப் பன்னீராயிரத்து ஐந்நூற்று முப்பதின் கலனே இருதூணிக் குறுணி ஒரு நாழி.''[14]

இறையிலி நிலம் எவையென்பதை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

"ஊர்நத்தமும் குளமும்............................ ஒன்பதேய் காணி அரைக்காணி முந்திரிகைக் கீழரை நீக்கி''[15]

காணிக்கடன் செலுத்த வேண்டிய நிலம் தனியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.[16] தேவதான நிலமாதலால் ஊரார் செலுத்தும் இறையில் ஒரு பெரும்பகுதி கோயிலுக்குக் கிடைக்கும். ஆனால் இக்கல்வெட்டு, இறையை உயர்த்தி நிச்சயித்து, நிவந்தங்கள் பலவற்றால் உயர்ந்துவிட்ட கோயில் செலவுகளை ஈடுகட்ட முழு இறையையும் கோயிலுக்கே செலுத்த ஆணையிட்டதைத் தெளிவாக்குகிறது.[17]

இத்தகைய ஆணைகள் மூலம் கோயில் வருமானத்தை அதிகமாக்கியதைக் காட்டும் புள்ளி விவரங்களை மூன்று நீண்ட கல்வெட்டுகள் குறிப்பிடும்.[18] (அட்டவணையைப் பார்க்கவும்).

5.1 இம்மூன்று கல்வெட்டுகளிலிருந்தும் ராஜராஜன் பெரிய கோவில் வருமானத்தை அதிகரிக்கச் செய்த வழிமுறைகள் தெளிவாகத் தெரிகிறது. தெளிவாகத் தெரிவனவற்றை மட்டும் கூட்டிப் பார்த்தால்

அட்டவணை 1

SII Vol. II. No.4

| | ஊர் | இறைகட்டின நிலம் | நெல் வருமானம் | காசு வருமானம் |
|---|---|---|---|---|
| 1. | பாலையூர் | 125 வேலி 8 மா | 12,530 கலம் | – |
| 2. | ஆரப்பாழ் | 107½ வேலி – | 16,748 கலம் | – |
| 3. | கீரன் தேவன் குடி | – | 4,070 கலம் | – |
| 4. | நாகன்குடி | 21 ¾ | 2,181 கலம் | – |
| 5 | – | 115 வேலி | 11,526 கலம் | |
| 6. | உச்சிபாடி | 55½ வேலி 3 மா | 5,526 கலம் | – |
| 7. | கீழ்வடுகக்குடி | 6 ¾ வேலி – | 674 கலம் | – |
| 8. | ஊசக்கண்ணங்குடி | 5 வேலி 8 மா | 518 கலம் | – |
| 9. | வடவிரையன்பள்ளம் | 24 வேலி – | 2,393 கலம் | – |
| 10. | திருத்தெங்கூர் | 29½ வேலி | – | 297 கழஞ்சு 4 மஞ்சாடி |
| 11. | அரக்கன்குடி | 6¾ வேலி 3 மா | 656 கலம் | – |
| 12. | பிடாரசேரி பகுதி – 1 | 5 வேலி 8 மா | 535 கலம் | – |
| 13. | பிடாரசேரி பகுதி – 2 | 49¾ வேலி 4 மா | 4,910 கலம் | – |
| 14. | நெற்குப்பை | 37 வேலி 7 மா | 3,720 கலம் | – |
| 15. | மருத்துவக்குடி | 29¾ வேலி 2 மா | 2,967 கலம் | – |
| 16. | ராஜராஜநல்லூர் | 34 வேலி 3 மா | 3,378 கலம் | – |

SII Vol. II. No.5

அட்டவணை 2

| | ஊர் | இறைகட்டின நிலம் | நெல் வருமானம் | காசு வருமானம் |
|---|---|---|---|---|
| 1. | கருப்பூர் | 5½ வேலி 4 மா | 549 கலம் | – |
| | | | 7 குறுணி | |
| 2. | திருத்தேவன்குடி | 29¼ வேலி | 2,900 கலம் | – |
| 3. | குறுவாணியக்குடி | 39½ வேலி 3 மா | – | 304 க. 3 மஞ். |
| | | | | 9 மா. வரை |
| 4. | ஆன்பனூர் | 75¾ வேலி 9 மா | 5,850 கலம் | – |
| 5. | ஈங்கையூர் | 42¾ வேலி | 4,278 கலம் | – |
| 6. | பணமங்கலம் | 40¾ வேலி | 4,072 கலம் | – |
| 7. | சாத்தன்யாடி | 193/4 வேலி 1 மா | 1,883 கலம் | – |
| 8. | ...க்கன்குடி | 4½ வேலி 4 மா | 469 கலம் | – |
| 9. | மாந்தோட்டம் | 14½ வேலி 4 மா | 1,450 கலம் | – |
| 10. | இறையாஞ்சேரி | 16¾ வேலி | 1,169 கலம் | – |
| 11. | வெண்கோன்குடி | 48 வேலி 2 மா | 4,784 கலம் | – |
| 12. | மாகாணிகுடி | 23 வேலி 3 மா | 2,315 கலம் | – |
| 13. | சிறுசெம்புரை | 6 வேலி 0 மா | 610 கலம் | – |
| | | | 12 குறுணி | – |
| 14. | துறையூர் | 149½ வேலி 4 மா | 14,988 கலம் | – |

| | | | | |
|---|---|---|---|---|
| 15. | கணிமங்கலம் | 11 வேலி 1 மா | 1,083 கலம் | |
| 16. | நகரம் | | | 30 கழஞ்சுகாலே |
| | வெண்ணிநிலம் | 25 வேலி 2 மா | | 3 மா. முக்காணி |
| | பூதமங்கலம் | 3 வேலி 8 மா | | |
| | காருகுறிச்சி | $2\frac{3}{4}$ வேலி 1 மா | | 28 கழஞ்சு 9 மஞ். |
| | | | | 7 மா. வரை |
| | வடதாமரை | $6\frac{3}{4}$ வேலி | | 64 கழஞ்சு 3/4 மஞ். |
| | | | | 8 மா. முக்காணி |
| | வெண்ணித் | 73/4 வேலி 2 மா | | 72 கழஞ்சு |
| | திறப்பான் பள்ளி | | | முக்கால் மஞ்சாடி |
| | இம்மூன்றுள் நத்தம் | $7\frac{3}{4}$ வேலி 1 மா | | |
| | இவற்றுக்கு கீழ் நிலன் | 63 வேலி 2 மா | | 541 கழஞ்சு |
| | | | | 8 மா. |
| 17. | சாலாபோகம் | $50\frac{1}{2}$ வேலி | 5,057 கலம் | – |
| | கொடிமங்கலம் | | ---------- | |
| 18. | நகரம்வேனல் | $20\frac{1}{4}$ வேலி | 54,991 | 167 கழஞ்சு |
| | விடுகுபல்லவபுரம் | | ---------- | அரையே 3 மஞ்சு. |

SII Vol. II - 92

அட்டவணை 3

| | ஊர் | இறைகட்டின நிலம் | வருவாய் கலம் | பொன் |
|---|---|---|---|---|
| 1. | பேராயூர் | .. | .. | 109 கழஞ்சு<br>9 மஞ்சாடி |
| | ” | .. | .. | 120 கழஞ்சு<br>13 மஞ்சாடி |
| 2. | அண்டக்குடி | 16 ½ வேலி<br>4 மா | 120¾ கலம் | 1... |
| 3. | ஆலூர் | .. | .. | 500 கழஞ்சு |
| 4. | .... மூர் | .. | .. | 500 கழஞ்சு |
| 5. | குசவூர் | .. | 9,000 | |
| 6. | கூடலூர் | .. | 12,840 | |
| 7. | மாப்பிசும்பு<br>கொட்டியாரம் | .. | 5,164 | |
| 8. | கொட்டியாரம் | .. | 117 | |
| 9. | நட்டுவிட்டி | 183 கலம் | 1,866 | |
| 10. | மாசார் | ... | 489 | |
| | | | 20,687 | |

1,53,651 கலம் நெல் வரவாகும். தோவதனமாக விடப்பட்ட நிலங்கள் உள்ள ஊர், சபை நிலங்களை முழுமையாக அளந்து, இறையிலி நிலம் கழித்து பயிரேறிய நிலத்தைச் சரியாகக் கணக்கிட்டு அவற்றிற்குக் காணிக்கடன் நிச்சயித்தார்கள். அளவுகளும், நெல், தங்கமாக செலுத்தவேண்டிய காணிக்கடனும் துல்லியமாக வரையறுக்கப்பட்டன. உதாரணமாக,

நிலம் – "இறை கட்டின நிலம் முப்பத்தொன்பதரையே மூன்று மாக்காணி அரைக்காணிக் கீழ் முக்காலே நான்குமாமுக்காணிக் கீழ் முக்காலே ஒருமா." ஒரு கையகல நிலம் கூட கணக்கில் விடப்படவில்லை.

பொன் – "இறை கட்டின பொன் முன்னூற்று "நாற்கழஞ்சே மூன்று மஞ்சாடியும் ஒன்பதுமா மாவரை" மஞ்சாடி கூட பின்னமாக்கி அதன் நிறை மாவரை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கும் கடுகளவு பொன்கணக்கில் விடப்படவில்லை.

**நில அளவு** : ராஜராஜன் காலத்தில் தான் ஊர் முழுதும் உள்ள நிலத்தை அளந்து, இறையிலி நிலம் கழித்து, பயிராகும் நிலத்தைக் கணக்கெடுத்துச் சரியான இறை பெற வழி வகுக்கப்பட்டது. இவ்வாறு அளந்த கோல் உலகளந்தான் கோல் ராஜராஜன் கோல் என்றழைக்கப்படும். பல்லவர் காலத்திலேயே தேவ தானமாக நிலங்கள் விடப்பட்டன.[19] ஆனால் ஊர் முழுதும் அளந்து, இறையிலி எவ்வளவென்பது நிர்ணயிக்கப்படவில்லை. எனவே, சொந்த நிலமுடையவர்கள் கூட இறையிலியாகத் தங்கள் நிலத்தை அனுபவித்து வந்தார்கள். சில ஊரார் இறையிறுக்க வேண்டிய நெல்லைக் குறைத்து அளப்பதற்காகத் தமது ஊர் நிலத்தில் இறையிலி நிலத்தைக் கூட்டிக் கணக்கிட்டார்கள். எனவே ராஜராஜன் தேவதானங்களில் இருந்த கையாடல்களையும் ஊழல்களையும் தவிர்த்து, இறையிலியையும், இறைகட்ட வேண்டிய நிலத்தை நிச்சயித்து மொத்தமாக ஊரார் கட்ட வேண்டிய காணிக்கடனை நிச்சயித்து ஆணை பிறப்பித்தான்.

**பொன் காணிக் 'கடன்'** : பொதுவாக உழவர்கள் வாழ்ந்த கிராமங்கள், பிராமணர் வாழ்ந்த தேவதானச் சதுர்வேதி மங்கலங்கள், இவற்றிற்கு நெல் மட்டுமே காணிக்கடனாக வசூலிக்கப்பட்டது. மேற்கண்ட அட்டவணையில் காணப்பட்ட தேவதானங்களில் (3) குறு

வாணியக்குடி (16) நகரம் – வெண்ணிருதல் முதலான பல சிற்றூர்கள். நகரம் வேனல் விடுகு பல்லவபுரம் ஆகிய மூன்றிற்குத்தான் காணிக்கடன் பொன்னாக நிச்சயிக்கப்பட்டது. இம்மூன்றும் வாணிபர் வாழ்ந்த நகரங்கள் என்பது பெயர்களிலிருந்தே தெரிகிறது. இக்காணிக்கடனும் காசாக வசூலிக்காமல் நிறையெடுத்த பொன்னாகவே வசூலிக்கப்பட்டது.

5.2 இறையிலி – இவைபற்றி விரிவாக ராஜராஜன் கல்வெட்டுக்கள் மூலம் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது. அவையாவன:

"ஊர் நத்தமும், குளமும், கம்மாண சேரியும், பறைச்சேரியும் சுடுகாடும், இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப்போன வாய்க்காலும் இறையிலி நிலம் ஒன்பதேய் காணி அரைக்காணி முந்திரி கைக்கீழரை."

(பாலையூர் பற்றியது).[20]

"ஊர் நத்தமும், குளங்களும், ஸ்ரீ கோயிலும், ஐய்யன் கோயிலும் பிடாரி கோயிலும் கழனிக் குளங்களும் பறைச்சேரி நத்தமும் இறையிலி. . . . ."

(ஆரப்பாழ் பற்றியது)[21]

"ஊர், நத்தமும், ஸ்ரீ கோயிலும், நந்தவனமும் குளங்களும் இறையிலி நிலம். . . . ."

(கீரன் தேவன்குடி)[22]

"ஊரிருக்கையும் இவ்வூர் களமும் குளமும் கரையும் இவ்வூரையூடறுத்துப்போய் நாட்டுக்குப் பாயும் பெருவளவாயும், பெருவள வாய் நின்று இவ்வூரை ஊடறுத்துப் போய் செட்டி மங்கலத்துப் பாயும் வாய்க்காலும் இவ்வூர் மஹாதேவர் திருவன்னிபகவர் ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும் பிடாரிகோயிலும் சேட்டையார் கோயிலும் திருமுற்றமும் திருப்பைஞ்ஞீலி மாதேவர் குளமும் கரையும் இவ்வூர் ஈழச்சேரியும், பறைச்சேரியும் வெள்ளான் சுடுகாடும் பறைச்சுடுகாடும் கற்கிடையும் ஆக இறையிலி நீங்கிய நிலம்

(ஆன்பனூர்)[23]

“இவ்வூர் நத்தம் குடியிருக்கையும் கிணறும் தொட்டியும் வெள்ளான் சுடுகாடும் கொட்ட கொட்டகாரங்களும், தலைவாய்ச்சேரியும் ஈழச்சேரியும் கம்மாணச்சேரியும் பறைச்சேரியும், பறைச்சுடுகாடும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் போய் புறவூர்களுக்குப் பாயும் வாய்க்காலும், பிடாரி புன்னதத்துறை நங்கை கோயிலும், திருமுற்றமும் பிடாரி பொதுவகை ஊருடையாள் ஸ்ரீ கோயிலும், திருமுற்றமும் இவ்வூர் காடுகாள் கோயிலும் திருமுற்றமும் ஏறாடுஇவ்வூர் துர்க்கையர் கோயிலும் திருமுற்றமும் கடக்கும் இவ்வூர் காளர் பிடாரியார் ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும் இவ்வூர் பிடாரி குதிரை வட்டமுடையார் ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும் இவ்வூர்க் குளமும் கரையும், ஆக இறையிலி நீங்கு நிலம். . . . .

(துறையூர் பற்றியது)[24]

இவ்வூர் இருக்கையும், குளங்களும் கரைகளும் திருக்கோயிலும், ஐயன்கோயிலும், பறைச்சேரியும் சுடுகாடும் சிறு முன்னியூர் ஏரியில் நீர்கோத்துப் பள்ளவாயாய்க் கிடந்த நிலமும் ஆக இறையிலி நீங்கு நிலம். . . . .”

(நகரம் வெண்ணி நிலம்)[25]

“இவ்வூர் புகழீச்சுவர கிருஹத்து தேவர் ஸ்ரீ கோயிலும் தளிச்சேரியும் சுடுகாடும் ஆக இறையிலி நீங்கிய நிலம். . . . .”

(நகரம் வேநெல் விடுதி பல்லவபுரம் பற்றியது.)[26]

5.3 காணிக்கடன் நீங்கிய இறையிலி நிலங்கள் இவையென்பதை மேலே கண்ட கல்வெட்டு ஆணைகள் வரையறுத்துக் கூறுகின்றன. இவையில்லாத எல்லா நிலங்களும், தேவதானம், சாலாபோகம், முற்றூட்டு, திருவிடையாட்டம்[27] முதலிய தான நிலங்கள் கூட காணிக்கடனுக்குட்படுத்தப்பட்டு ஊராரே பொதுவாக இறையிறுத்தல் வேண்டுமென ஆணையிடப்பட்டது. இதனால் வரி ஏய்ப்புகள் தடை செய்யப்பட்டன.

அவ்வாறு இறையிலியாக ஒப்புக்கொள்ளப்பட்ட நிலங்களை மேற்கண்ட கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. அவையாவன: ஊர்நத்தம், கம்மான்சேரி, பறைச்சேரி, சுடுகாடு, ஊரை ஊடறுத்துச் செல்லும் வாய்க்கால், ஸ்ரீகோயில், ஐய்யன்கோயில், பிடாரி கோயில், கழனிக்குளம், பறைச்சேரிநத்தம், நந்தவனம், சேட்டையார் கோயில், கோயில் முற்றங்கள், ஈழச்சேரி, கிணறு, தொட்டி, நங்கை கோயில், பிடாரி

பொதுவகை ஊருடையாள் கோயில், காடுகாள் கோயில், களம், பிடாரி குதிரை வட்டமுடையாள் கோயில், ஐயன் கோயில், பெருவழி முதலியன இறையிலியாகக் குறிக்கப்பட்டுள்ளன. இவை போக பயிரேறிய நிலங்களனைத்திற்கும் காணிக்கடன் நிச்சயித்து, அக்கடனை, ஊராரே அளக்கவேண்டுமென ஆணைபிறப்பிக்கப்பட்டது. இவ்வாறு தேவதான நிலங்களிலிருந்து இராஜராஜன் காலத்திற்கு முன்னர் வந்த காணிக்கடன் வருவாய் அதிகமாயிற்று.

6.1 காணிக்கடன் பெரும்பாலும் தேவதான நிலமான நஞ்சையிலிருந்து வந்தபடியால், அநேகமாக ஒரே சீராக வேலிக்கு இத்தனை கலம் என்ற கணக்கில் ஊர் நிலம் முழுவதற்கும் காணிக்கடன் நிச்சயிக்கப்பட்டது. மேற்குறித்த அட்டவணையில் சில புள்ளிகளிலிருந்து வேலிக்கு எத்தனைகலம் நெல் காணிக்கடனாக நிச்சயிக்கப்பட்டதென அறியலாம். அதனைச் சராசரியாகக் (mean) கொண்டால், மிகச்சிறு வேறுபாடுகளை (deviation) சில ஊர்கள் சம்பந்தமாகக் காணப்படுகின்றன. உதாரணமாக:

| | ஊர் | நிலம் | காணிக் கடன் கலமாக | வேலிக்கு எவ்வளவு கலம் சுமார் |
|---|---|---|---|---|
| 1. | பாலையூர் | 125 வேலி 8 மா. | 12,530 | 100 |
| 4. | நாகன்குடி | 21 ¾ | 2,181 | 100.6 |
| 6. | உச்சிபாடி | 55 ½ | 5,526 | 100 |
| 11. | அரக்கன்குடி | 6 ¾ | 656 | 97.75 |
| 12. | பிடாரசேரி | 5 கலம் 8 மா. | 535 | 93.6 |
| 14. | நெற்குப்பை | 37 கலம் 7மா | 3,720 | 98 |

இவை 93.6 முதல் 100 கலங்கள் வேலிக்கு கிடைப்பதைக் காட்டும். குறைவு படுவதை ஈடுகட்டும் அளவுக்குச் சில நிலங்களில் சராசரிக்கு அதிகமான காணிக்கடனும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அவ்விடங்களில் நிலம் செழிப்பாயிருத்தல் கூடும்.

சில ஊர்களில் வேலிக்கு நூறு கலத்திற்குக் குறைவாகக் காணிக்கடன் இருப்பதைக் காண்கிறோம். இதற்கு நிலத்தின் தரம் குறைவாய் இருந்ததே காரணமாயிருக்கலாம். ராஜராஜன் காலத்தில்

வேலிக்கு எத்தனை கலம் என்ற கணக்கில் நிலம் முதல் தரம், இரண்டாம் தரம் எனப் பிரிக்கப்பட்டிருந்ததைக் கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம். எனவே கீழ்வரும் உதாரணத்தில் நெல் வருவாய் வேலிக்கு நூறுகல விகிதத்திற்குக் குறைவதற்கு நிலத்தின் தரமே காரணமாயிருந்திருக்கவேண்டும். இதற்கு ஒரே ஒரு உதாரணமே உள்ளது.

| ஊர் | நில அளவு | காணிக்கடன் | வேலிவிகிதம் |
|---|---|---|---|
| ஆண்டான் ஊர் | 75¾ 9மா. | 5,850 | 77 |

இதிலிருந்து மிகவும் செழிப்பான நிலங்களையே தேவதானமாக அளித்து, வேலிக்கு 100 கலம் காணிக்கடன் வருவாய் வரும்படியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்பது தெளிவாகிறது. காணிக்கடன் போகவும், ஊர், இறை, பாட்டங்கள் முதலிய சில்லிறைகள் இறுத்த பின்னர், பயிரிடுவோருக்கு வாழ்க்கைச் செலவுக்கு ஊதியம் கிடைக்க வேண்டும்.

7.1. இம்மாற்றங்கள் நிகழ்ந்த பின்னர் காணிக்கடன் அதிகமாகி, ஒழுங்காக அளக்க வேண்டிய நிலைமையும் தோன்றிய பின்னர் பயிரிடும் உழவர்களின் வருமானம் குறைந்திருக்கவேண்டும். இறையிலி நிர்ணயிக்கப்பட்டு அதுபோக எஞ்சிய எல்லா நிலங்களுக்கும் காணிக்கடன் இருக்கவேண்டி வந்ததால், ஊர் பொதுவருமானமும் குறைந்திருக்கவேண்டும்.

7.2. இவ்வாறு தேவதான நிலங்களின் காணிக்கடன் வருவாயை உயர்த்தியதோடல்லாமல் நில உரிமை மாற்றங்களின் மூலமும் கோயில் வருமானத்தை அதிகரிப்பதற்கு ராஜராஜன் ஏற்பாடுகள் செய்ததைச் சில கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. உரிமை மாற்றங்களைக் குறிப்பிடும் சில கல்வெட்டுகளை ஆராய்ந்து, இம்மாற்றங்களின் தன்மையை அனுமானிப்போம்.

"தொண்டை நாடான ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஒய்மா நாட்டுப் பேராயூர்.

முன்னுடையாரை மாற்றிக்குடி நீக்கிக் காராண்மையும் மீயாட்சியும் மிகுதிக் குறைமையும் உள்ளடங்க இவ்வூர் இறைகட்டின

காணிக்கடன் ராஜகேஸரியோடு ஒக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அடக்கக்கடவ நெல்லு. . . . .பொன் நூற்றொன்பதின் கழஞ்சே ஒன்பது மஞ்சாடியும்.''[28]

இவ்வூரில் முன் நிலவுடைமையாளரை நீக்கி 'அவ்வுடையார்' பெற்ற காராண்மையும் மீயாட்சியும் உள்ளடங்க காணிக்கடன் நிச்சயித்து, தேவதானத்து பயிரிடுங்குடியென்ற நிலைமைக்கு அவர்களை மாற்றப்பட்டதை இக்கல்வெட்டு தெளிவாக்குகிறது. இம்மாதிரியே தெளிவாக 'முன்னுடையாரை மாற்றி' என்ற வாசகத்தோடு, தொடங்கும் கல்வெட்டுக்கள் 12 அவற்றுள் ஏழு ஊர்களின் பெயர்கள் தெளிவாக அறியப்படுகிறது. அவை பேராயூர், அண்டக்குடி, சூலூர், குசவூர், மாப்பிசும் கொட்டியாரம், நட்டுவிட்டி, மாசார் ஆகியவை. இவற்றுள் உழவர்க்கே உடமையாயிருந்த வெள்ளான் வகையே மிகுதி. பன்னிரண்டு கல்வெட்டுக்களில் இரண்டு பிரம்மதேயங்களைப் பற்றியது. பத்து வெள்ளான் வகை கிராமங்கள். இவையிரண்டிலும், காராண்மை மீயாட்சி உரிமைகளைக் கோயிலுக்கு உரிமை மாற்றங்கள் செய்ததை இவ்வாணைகள் காட்டுகின்றன.[29]

அவ்விரண்டு பிரமதேயங்களைப் பற்றிய கல்வெட்டுகள் வருமாறு:

''நுளம்பபாடியான நிகரிலிச் சோழப் பாடி பறிவை நாட்டுப் பிரமதேயம் குசவூர்.

இறைகட்டின காணிக்கடன் ராஜகேசரியோடொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் அளக்கக்கடவ நெல்லு ஒன்பதினாயிரத்துபத்து கலன்.''[30]

''பாடியான நிகரிலிச் சோழ பாடிப்பறிவை நாட்டுத் தேவதான பிரமதேயம் கூடலூர்

இறைகட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் அளக்கக்கடவ நெல்லு பன்னீராயிரத்து இரு கலனே...''[31]

இரு பிரமதேயங்களிலிருந்து இவ்வாணை மூலம் பெறப்பட்ட நெல்: குசவூர் – 9,010 கலம். கூடலூர் 1,202 கலம்.

வெள்ளான் வகை நிலங்களிலிருந்து இவ்வாணை மூலம் கிடைத்த நெல்: (1) 123 (2) 3,164 (3) 110 (4) 66 (5) 459 கலங்கள் வெள்ளான் வகை நிலங்களுக்கு காணிக்கடன் பொன்னாக நிச்சயிக்கப்பட்டதும் உண்டு.

8.1 இம்மாற்றங்களால் உடைமையாளர்கள் பயிரிடும் குடிகளாக மாற்றப்பட்டனர். அவர்கள் காணிக்கடனை ஊரார் (ஊர்ச்சபை) மூலம் செலுத்த வேண்டியதாயிற்று. ஆயினும் நிலங்களில் பயிரிடும் உரிமை அவர்களுக்கு இருந்தது. பயிரிடும் உழவர்களை அவர்கள் கூலிக்கு அமர்த்திக் கொண்டிருக்க வேண்டும்.

8.2 இவை தவிர ஒரே ஒரு கல்வெட்டு உள்ளூர் கோயில் நிலத்தை அபகரித்து வெள்ளான் வகையாகப் பயிரிட்டுவரும் நிலத்திற்கு இறைகட்டி தஞ்சைக் கோயிலுக்கு நெல் அளக்க ஆணையிட்டதைக் குறிப்பிடுகிறது:

> "இந்நாட்டுத் திருத்தேவன் குடி உள்ளூர் கடதேவர்க்கு நீக்கி ஏற அபகரித்து உண்டு வருகின்ற நிலமென்று வேறு முதலாக்கி வெள்ளான் வகையால் வருகின்ற நிலம் வெள்ளான் வகையில் முதல் தவிர்த்து இவ்வூர் ஊர்நத்தமும் சுடுகாடு முள்ளிட்டு இறையிலியாக நீக்கின நிலன் பொதுவே அனுபவிக்கக் கடவதாக நீக்கல் நீக்கி
>
> அளந்தபடி நிலம் இருபத்தொன்பதே காலே முக்காணி முந்திரிகைக் கீழ் நான்குமாக்காணி அரைக்காணிக் கீழ் காலே அரைமாவினால்
>
> இறைகட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடு ஒக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் அளக்கக்கடவ நெல் இரண்டாயிரத்துத் தொளாயிரத்து. . . ங்கலனே இருதூணி ஒருநாழி."[32]

இந் நிலம் முதலில் கடதேவர்க்கு உடைமையாயிருந்தது. இதனை யாரோ அபகரித்து உண்டு வந்தார்கள். அதனை ஊரார் வெள்ளான் வகையாக்கி பொதுவாகவே அனுபவித்து வந்தார்கள். இவ்வாணை அவ்வுரிமையை நீக்கி இறையிலி நீங்கப் பயிரிடுநிலம் இருபத்தொன்பதேகால் சில்லறை என்று இறைகட்டி 2,900–க்கு அதிகமான கலம் நெல்லளக்க ஆணையிட்டது. இது வேலி–கலம் சராசரிக் காணிக்கு ஒத்திருப்பதைக் காணலாம்.

9.0 இவ்வாறெல்லாம், சோழ மண்டலத்திலும் புற மண்டலங்களிலும் தேவதானங்கள், ஊர் நிலங்கள், பிரமதேயங்கள், வெள்ளான் வகை ஆகிய அனைத்து வகை நிலங்களையும் இறைகட்டின நிலங்களாக்கி,

அவற்றுள் முதல் ஆணையில் 18 ஊர்களுக்கும் இரண்டாவது ஆணையில் 16 ஊர்களுக்கும் மூன்றாவது ஆணையில் 12 ஊர்களுக்கும் காணிக்கடன் நிச்சயித்து வசூலிக்க ஏற்பாடு செய்து, கோயிலின் செலவுகளுக்கு வருமானம் ஏற்படுத்தித் தரப்பட்டது.

நாம் கணக்கிட்ட செலவுகள் ஒதுவார், தளிச்சேரிப் பெண்டுகள், நிவந்தக்காரர் ஊதியம் மட்டும் 64,590 கலம் நெல்லாகிறது. இவ்வாணைகளின்படி கிடைக்கும் வருவாய் 1,56,531 கலம் நெல்லாகிறது. இது தவிர பொன்னாகவும் வருமானம் வந்தது. இதில் ஒரு பகுதி ஆபரணங்கள், கலங்கள் பிரதிமைகள் செய்யப் பயன்படுத்தப்பட்டது. நெல்லில் செலவு போக எஞ்சியது பொன்னாக மாற்றி சேமிக்கப்பட்டது.

10.1 நாம் குறிப்பிட்ட 46 கல்வெட்டுக்களில் காணப்படும் உரிமை மாற்றங்களையும், உடைமை மாற்றங்களையும் இறுதியாகக் கவனிப்போம்.

இவற்றுள் குறுவாணியக்குடி நகரம், வெண்ணிநிலன் நகரம் வேனில் விடுதி பல்லவபுரம் மூன்றும் நகரத்தார் கிராமங்கள். இவை வணிகர் செல்வாக்கில் இருந்தவை. இங்கு நகரத்தார் சபைகள் தம்முள் வசூலித்தும், இக்கிராமங்கள் பொன்னால் காணிக்கடன் செலுத்தின. இங்கு நகரத்தார் சபைகள் தம்முள் வசூலித்தும், நிலங்களுக்கு இறைவிதித்து நெல் வசூலித்தும், காணிக்கடனைச் செலுத்தியிருக்க வேண்டும்.

இவை தவிர இரண்டு பிரமதேயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை பிராமணர் வாழ்ந்த கிராமங்கள். பல்லவர் ஆட்சியிலும், பாண்டியர் ஆட்சியிலும், சோழர் காலத்திற்கு முன்னரே பிரமதேயங்கள் தோன்றிவிட்டன. அவற்றில் குறிப்பிட்ட நிலங்களில் பங்கு பெறும் உரிமை பிராமணருக்கு அளிக்கப்பட்டதைக் குறிக்கும். இவ்வூதியம் அவர்கள் கடிகைகள், காலைகளில் போதிப்பதற்காகவும், கோயில் பூசைகளை மேற்பார்வை செய்யவும் அளிக்கப்பட்டது. ஆசிரியருக்கு அளிக்கப்படும் ஊதியம் சாலாபோகம் எனப்பட்டது. பிற்காலத்தில் புராணப் பிரசங்கம் செய்வோருக்கும் இப் பெயரிலேயே ஊதியம் அளிக்கப்பட்டது. ராஜராஜன் காலத்தில் பிரம்ம தேயங்களை வலுப்படுத்தினான்.

ஊர்நிலம் என்பது பிராமணரல்லாத உயர் சாதியினர் உழுவித்துப் பயிரிட்ட நிலம். இவர்கள் உழவர்களைக் கூலிக்கு அமர்த்திப்

பயிரிட்டனர். இது ஊருக்குப் பொதுவாயினும், இதில் விளையும் நெல்லில் பெரும்பங்கு காராட்சி, மீயாட்சியாக உழவுத்தொழில் செய்யாத உழுவித்துண்ணும் வேளாளருக்குக் கிடைத்தது.

இவையனைத்திலும் நிலம் யாருடைய உடைமை என்பது ராஜராஜனுக்கு முந்திய காலத்தில் தெளிவாக இருக்கவில்லை.

இங்கு குறிப்பிட்ட 46 சாசனங்களில் நிலவுடைமை தெளிவாக்கப்படுகிறது. இங்கு, காணிக்கடன் எல்லா வகை நிலங்களுக்கும் விதிக்கப்பட்டது. இறையிலி நிலங்கள் எவை என்பதை ஊர்தோறும் தெளிவாக்கி, மீதமுள்ள பிரமதேயம், நகரம், வெள்ளான் வகை, ஊர்நிலம், பழந்தேவதானம், அனைத்தும் காணிக்கடனுக்குட் படுத்தப்பட்டது. எனவே நிலஉடைமை இந்த 46 கிராமங்களிலும் ராஜ ராஜேச்சுரமுடைய பரமசுவாமிக்குத்தான் என்றும், காணிக்கடன், காணியுடைமைக்குரிய பாட்டம் (land rent) என்பதும் இவ்வாணைகள் தெளிவுபடுத்துகின்றன.

காராட்சி, மீயாட்சி என்ற உரிமைகள், பிராம்மணருக்கும், ஊராருக்கும், சபைக்கும், வேளாளர்களுக்கும் இராஜராஜன் காலத்துக்குமுன் இந்த 46 கிராமங்களிலும் குறிப்பிட்ட நிலங்களில் இருந்து, அவ்வுரிமைகளைக் கோயிலின் காணியுடைமைக்கு உள்ளடக்கியதை ஆணைகள் குறிப்பிடுகின்றன. எனவே கோயிலின் உடைமைக்குட்பட்டு, குத்தகை உரிமையாகக் காராட்சியும், பயிரிடுவதை கோயிலுக்காக மேற்பார்வை செய்வதற்கு ஊதியமாக மீயாட்சியும் மாற்றப்பட்டது.

எனவே பெரிய கோயில் சாசனங்கள் குறிப்பிடும் 46 கிராமங்களிலும் கோயிலின் நிலவுடைமை தலையாய உரிமையாக விதிக்கப்பட்டது. கிராமங்களில், பிராம்மணரும், சபைகளும், வேளாளரும், நகரத்தாரும் கோயிலின் நிலவுடைமை மேலாதிக்கத்திற்குட்பட்டு, நிவந்தக்காரர் போல, நிலத்தின் விளைச்சலில் பங்கு பெறும் உரிமையைப் பெற்றனர்.

10.2 இம்மாறுதலால் சுவாமிக்கே நிலம் என்ற கொள்கை செயல்படுத்தப்பட்டது. சுவாமியின் நிலத்தைப் பயிரிடக் கொடுத்து மேற்பார்வை செய்வோர் சபையினரும், ஊராரும் நகரத்தாரும், வேளாளரும் என்ற நிலை ஏற்பட்டது. தங்களது பழைய வருமானத்தை

நிலைநிறுத்திக்கொள்ள அவர்கள் பயிரிடும் குடிகளிடம் முன்னிலும் அதிகமாக காராட்சி, மீயாட்சிப் பங்குகளை வசூலிக்கத் தொடங்கினர் என்பதை, அவற்றை எதிர்த்து உழுது பயிரிடும் குடிகளது கிளர்ச்சிகள் பற்றிய சாசனச் செய்திகளிலிருந்து நாம் அறிகிறோம். இவை பற்றிய விவரங்களை "கோயில் சாசனங்கள்" பல தருகின்றன.

காராட்சியும், மீயாட்சியும் வேலிக்கு இவ்வளவென ராஜராஜனது ஆணைகள் நிச்சயிக்கவில்லை. எனவே அதிகரித்துக் கொள்ள முடியும். அதுபோலவே உழுது பயிரிடும் குடிகளுக்கு வேலிக்கு இவ்வளவென்றோ, கூலித்தொழில் செய்வோரது கூலி இவ்வளவென்றோ நிர்ணயம் செய்யப்படவில்லை. எனவே சுவாமிக்காக உழைக்கிறோம், நமது பொருளாதாரத் துன்பங்கள் சுவாமிக்காக என்ற பக்தியுணர்வைத் தூண்டுவது எளிதாயிற்று. இம்மாற்றங்களால் ஏற்படும் பளு முழுவதையும் ஏற்றுக்கொண்டு மன அமைதிகொள்ள பக்திப் பிரசாரம் பயன்பட்டது.

இவ்வாணைகளின் விளைவுகளை எதிர்த்த உழவர்களை சிவத்துரோகிகள் என்ற பட்டம் கட்டி அவ்வெதிர்ப்புகளை அடக்குவதும், சுவாமிக்கே நிலம் என்ற கொள்கையால் எளிதாயிற்று.

## BIBLIOGRAPHY NOTES


1. தஞ்சைப் பெருவுடையார் கோவில் (த.பெ.க.வெ.) கல்வெட்டுக்கள் முதற்பகுதி – பதிப்பாசிரியர் நாகசாமி – பக்கம் 18

2. த.பெ.க.வெ. பக்கம் 54 முதல் 88 வரை

3. த.பெ.க.வெ. பக்கம் 54–55

4. த.பெ.க.வெ. பக்கம் 89–90

5. த.பெ.க.வெ. பக்கம் 95, வரிகள் 3–4

   "தளிச்சேரிப் பெண்டுகளுக்கும் காந்தர்விகளுக்கும் நாயகம் செய்ய ச–ஹூர் பரஞ்சோதிக்குப் பங்கு இரண்டும்."

6. த.பெ.க.வெ. 97–98, வரிகள் 21–22

   நாவிசஞ் செய்ய இருவர்க்கு செபதரன் நெத்தானன். ஆன ராஜராஜப் பெருநாவிசனுக்குப் பங்கு ஒன்று பக்கம் 97–98 வரிகள் 13–14 வண்ணத்தார்கள் இருவர்க்குப் பேராற்பங்கு ஒன்றாக இத்தெருவில் ஈரங்கொள்ளிகளுக்கு பங்கு இரண்டும்.

   பக்கம் 98. வரி 15–16. தச்சாச்சார்யம் ஒன்றுக்கு பங்கு ஒன்றரை.

7. த.பெ.க.வெ. பக். 96–98

8. த.பெ.க.வெ. பக். 98–99

   "தய்யான் ஒருவனுக்கு கவாலியான வீர சோழப் பெருந்தய்யானுக்குப் பங்கு ஒன்றும்"

9. த.பெ.க.வெ.பக். 98, வரி 18–20

   தச்சாச்சாரியம் ஒன்றுக்குப் பங்கு ஒன்றரையும் ஆள் இரண்டுக்குப் பங்கு ஒன்றரையும் ஆக வீர சோழன் குஞ்சர மல்லனான ராஜராஜப் பெருந்தச்சனுக்குப் பங்கு மூன்றும்.

10. த.பெ.க.வெ.பக். 55, வரி 1–6 வரை தளிச்சேரிப் பெண்டுகளாக சோழமண்டலத்துத் தளிச்சேரிகளினின்றும் கொண்டு வந்து ஏற்றின தளிச்சேரிப் பெண்டுகளுக்கும் நிவந்தமாகப் பங்கு

செய்யதபடி பங்கு வழி பங்கு ஒன்றினால் நிலன் வேலியினால் ராஜகேசரியோடொக்கும் ஆட வல்லான் என்னும் மரக்காலால் நெல் நூற்றுக்கலமாகவும்

11. த.பெ.க.வெ. பக். 100–101

12. மேற்படி பக். 117–118

13. மேற்படி பக். 129, 130, 131

14. மேற்படி பக். 130

15. மேற்படி பக். 130

16. மேற்படி பக். 130, வரி 22–24

இறை கட்டின நிலம் நூற்று இருபத்து ஐஞ்சேய் எழுமாவரை முந்திரிகைக் கீழ் எண்மாவரை அரைக்காணி முந்திரிகைக் கீழ் நான்குமாவினால்.

17. மேற்படி பக். 130, வரி 25–27

18. (1) SII Vol. II 4 த.பெ.க.வெ. 10

(2) SII Vol. II 5 மேற்படி 11

(3) SII Vol. II 92 மேற்படி 12

19. பல்லவர் செப்பேடுகள் – வரலாற்றுக் கழகம், சென்னை.

20. த.பெ.க.வெ. – பக். 130. வரி 17–20.

21. மேற்படி பக். 131 வரி 6–9

22. மேற்படி பக். 131 வரி 20–22

23. மேற்படி பக். 143 வரி 20–32

24. மேற்படி பக். 150 வரி 21–31 & 151 1–11

25. மேற்படி பக். 152 வரி 12–16

26. மேற்படி பக். 156 வரி 9–20

27. தேவதானம்–ஊர் நிலத்தில் ஒரு கோயிலுக்கு காணிக்கடன் பொறுப்பு அளிப்பது. சாலாபோகம் சாலை என்பது பாடசாலை.

அங்கு போதிக்கும் ஆசிரியரின் ஊதியத்திற்குப் பொறுப்பளிக்கப்பட்ட நிலம். புராணிகர்கள் ஊதியத்திற்கும் பொறுப்பளிக்கப்பட்ட நிலத்தையும் குறிக்கும்.

முற்றூட்டு – ஒரு நிலத்தின் முழுவிளைச்சலையும் ஒருவருக்கோ, கோயிலுக்கோ, தானமாக அளித்தல். திருவிடையாட்டம் – சிவன்கோவில் தினசரிப்படித்தரச் செலவிற்கு பொறுப்பாக அளிக்கப்பட்ட நிலம்.

28. த.பெ.க.வெ. பக்கம் 757 வரி 4–10

29. S-II Vol. II 92. த.பெ.க.வெ.எண். 12. முழுமையும்.

30. த.பெ.க.வெ.பக். 158 வரி 22 – 25.

31. மேற்படி பக். 159 வரி 2–5

32. த.பெ.க.வெ.பக். 142 வரி 13–20.

2

# திரிபுரி பழமொழிகளுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகள்*

## ஓர் ஒப்பாய்வு

துஷார் காந்தி நியோகி என்ற ஆய்வாளர் 'Folk Lore' பத்திரிகையின் 15–வது மலர், முதல் இதழில் திரிபுரி மக்களது சில பழமொழிகளை ஆங்கில மொழிபெயர்ப்பில் வெளியிட்டுள்ளார். முடிந்த அளவிற்கு திரிபுரி பழமொழிகளுக்கு இணையான ஆங்கிலப் பழமொழிகளையும் தொகுத்துள்ளார். அக் கட்டுரையில் வெளியிடப்பட்ட திரிபுரி பழமொழிகள், பரேந்திரதேவ் வர்மன் என்ற கிராம வாசியினால் சேகரிக்கப்பட்டது. அவருக்கு திரிபுரி மொழியும் வங்காளி மொழியும் தெரியும். இப்பழமொழிகளை அவர் தமது வயது முதிர்ந்த தாய் தந்தையரிடம் கேட்டு அறிந்தார். திரு. நியோகி மேற்குறிப்பிட்ட கட்டுரையின் முன்னுரையில் "பல மொழி பேசும் மக்களிடையே ஒரே விதமான கருத்துக்களும் கொள்கைகளும் நிலவுவதை அவர்களுடைய பழமொழிகள் காட்டுகின்றன" என்று எழுதுகிறார். இதற்கு உதாரணமாக 16, 17 எண்களிட்ட பழமொழிகளுக்கு வங்காளியில் இணைப் பழமொழிகளைக் காண்பித்து அவை ஒரே கருத்தைக் கொண்டிருப்பதை சுட்டிக்காட்டுகிறார்.

---

* இக்கட்டுரையில் திரிபுரி பழமொழிகளுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளைத் திரட்டித் தந்தவர் புலவர் டி. மங்கை. சில பழமொழிகளைத் திரட்டித் தந்தவர் உ. மீனாட்சிசுந்தரம். இவ்விருவரும் நெல்லை ஆராய்ச்சிக் குழுவின் நாட்டுப் பண்பாட்டுத் துறையின் உறுப்பினர்கள்.

"இவற்றின் கருத்தொற்றுமைக்குக் காரணம் என்ன? இரு வேறு மொழிகளில் வழங்கும் இப்பழமொழிகள் ஒரே மூலத்திலிருந்து தோன்றியவையா?" என்று வினவுகிறார். இக்கேள்விகளுக்கு அவர் விடையளிக்க முயலுகிறார். "ஒரு மூலத்தோற்றம்" என்ற விடை பொருத்தமற்றது என்று கூறிவிட்டு, அவர், "மனிதனுடைய அறிவாற்றல் அளவில்வேறுபட்டபோதிலும் தன்மையில் ஒன்றாகவே இருக்கிறது" என்று அபிப்பிராயம் கூறுகிறார்.

பின்னர் ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்குக் கடன் பெறுவது என்ற கொள்கையையும் – திரிபுரிப் பழமொழிகளை (6, 7, 9, 10, 15, 25 ஆகிய எண்ணுடையவை) – வங்காளிப் பழமொழிகளோடு, ஒப்பிட்டு ஆராய்கிறார். எந்த மொழியிலிருந்து எந்த மொழி கடன் வாங்கியது என்பதை உறுதியாகக் கூறமுடியாது என்ற முடிவுக்கு வருகிறார். இவ்வொற்றுமைக்கு காரணம் இவ்விரு நாகரிகங்களின் சமூகப் பின்னணி ஒரே மாதிரி இருந்த காலத்தில் இப்பழமொழிகள் தோன்றியிருக்க வேண்டுமென கருத்து தெரிவிக்கிறார்.

இது. மிகவும் உண்மையான கூற்றாகும். வெவ்வேறு மொழிகளில் உள்ள பழமொழிகள் கருத்தில் மட்டுமல்லாமல் உவமைகள், உருவகங்கள், குறியீடுகள், படிமங்கள் முதலிய வெளியீட்டுக் கூறுகளில் கூட ஒற்றுமை உடையனவாய் இருப்பதை பல மொழிகளில் உள்ள பழமொழிகளை ஒப்பிட்டு ஆராய்ந்தவர்கள் அறிவார்கள். உலகில் வெகு தூரத்திற்கு வழங்கிவரும் இரு மொழிகளில் ஒரே கருத்தும் ஒரே உருவ அமைப்பும் கொண்ட பழமொழிகள் கடன் வாங்கல் முறையால் தோன்றியிருக்க முடியாது. தமிழும் திரிபுரியும் நெடுந்தொலைவில் வாழ்கின்ற மக்கள் கூட்டத்தினரால் பேசப்படுபவை. இந்திய நாட்டின் வடகிழக்கிலுள்ள இமயமலைப் பள்ளத்தாக்கில் வாழ்கின்ற திரிபுரி மக்களும், இந்திய நாட்டின் தென் கோடியில் வாழுகின்ற தமிழ் மக்களும் எந்தக் காலத்திலும் பண்பாட்டுத் தொடர்புகொண்டவர்களல்லர். ஆயினும் பரேந்திரதேவ் வர்மன் தொகுத்து தந்துள்ள 35 பழமொழிகளில் 32–க்கு கருத்தொருமை உடைய இணைப் பழமொழிகள் உள்ளன என்பதை எளிதான முயற்சியால் நான் கண்டேன். இவற்றுள் 32 பழமொழிகளுக்கு நேரிடையான தமிழ் பழமொழிகள் உள்ளன. தமிழ் நாட்டுப் பாடல் ஆய்வாளர்களான குமாரி T. மங்கையும், உ. மீனாட்சி சுந்தரமும் 32

திரிபுரிப் பழமொழிகளுக்கு இணையான 32 தமிழ்ப் பழமொழிகளைத் தேடித் தந்தார்கள்.

தமிழ், திராவிட மொழி வகையைச் சேர்ந்தது. இதனை நாலரைக் கோடி மக்கள் பேசுகிறார்கள். திரிபுரி மொழியைச் சில லட்சம் மக்கள்தாம் பேசுகிறார்கள். ஆயினும் இவ்விரண்டு மொழிகளினும் கருத்தொற்றுமை உடைய பழமொழிகளைக் காணமுடிகிறது.

ஒப்பிடுதலை எளிதாக்குவதற்காக நான் ஒரு பட்டியல் தயாரித்துள்ளேன். அப்பட்டியலில் முதல் காலத்தில் திரிபுரிப் பழமொழியை தமிழ் மொழிபெயர்ப்போடு கொடுத்துள்ளேன். இரண்டாவது காலத்தில் தமிழ்ப் பழமொழியும், மூன்றாவது காலத்தில் பழமொழியின் விளக்கமும் தரப்பட்டுள்ளது.

| | திரிபுரி | தமிழ் | விளக்கம் |
|---|---|---|---|
| 1. | வட்டாய் கராய் ப்ரேங் காகா<br>மழை இல்லை; இடி உண்டு; | மழை இல்லாதபோது<br>இடி இடிக்கும். | பயனில்லாத படாடோபப் பேச்சுக்கு இது ஓர் உவமை. ஒரே உவமைப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. |
| 2. | காக் கடார் சனாய் லங் கானி ராஜா<br>பெரிய வார்த்தைகள் பேசுபவன்<br>இலங்கை ராஜா | குரைக்கிற நாய்கடிக்காது. | The dog that barks does not bite<br>பெரிய பேச்சு பேசுகிறவன் ஒரு காரியமும் செய்ய மாட்டான் என்பது பொருள். |
| 3. | அதி தக்க பான்மிலிகியா<br>அதிக எண்ணெய் பளபளப்பு தராது | அளவுக்கு மிஞ்சினால்<br>அமுதமும் விஷம் | வாழ்க்கையில் எதிலும் மிதமிஞ்சி ஈடுபடக்கூடாது எனும் அறிவுரை இவற்றில் அடங்கியிருக்கிறது. |
| 4. | அதி குலுங்கனி ததல் பராக்<br>அதிக சலாம் போடுகிறவன் பொய்யன் | – | – |
| 5. | சொடராக் குபாங் பகாலி சாகியா<br>அதிக ஆட்கள் குறைந்த மரச்<br>சட்டங்கள் செய்தார்கள் | கண்ணுகளாச் சேர்ந்து களம்<br>பறிச்சாற்போல ஊர் கூடி<br>செக்குத் தள்ளினாற் போல | அதிக ஆட்கள் வேலைசெய்து அறுவடையைக் கெடுத்ததுபோல் அல்லது ஊர் கூடி செக்கிழுத்ததைப் போல் Too many cooks spoil the broth. |
| 6. | புரைராக் குலாங்னலியா முனியா<br>பல பெண்கள் சணல்<br>கொதிக்கவைத்து சில<br>மரச்சட்டங்கள் செய்தாற்போல | ஷை பழமொழி | – |

| | | | |
|---|---|---|---|
| 7. | கடாதுயாடா புபாகோ<br>குடத்தில்<br>குறைவாக நீர் இருந்தால் அது<br>அதிகமாகத் துள்ளும் | குறைகுடம் கூத்தாடும் | குடத்தில் குறைவாக நீர் இருந்தால் அது குதித்து ததும்பி வழியும். தமிழில் இதற்கு எதிர்மறையான பழமொழி ஒன்று உண்டு. "நிறைகுடம் ததும்பாது" இப்பழமொழிகளில் உருவகங்கள் கூட ஒன்றாயிருப்பதைக் காணலாம். |
| 8. | காசா குபாய் காசா தடால்<br>பாதி உண்மை, பாதி பொய் | – | – |
| 9. | தகாபா தாம் புன்னுதியா தாங்<br>காக்கை பசுவாகாது | உயர உயரப் பறந்தாலும்<br>ஊர்க்குருவி பருந்தாகுமா? | குருவி உயரப் பறந்தாலும் அது பருந்தாகாது. |
| 10. | நாக் தோங் கைச்சே ஹுக்<br>வீடு பெற்றால் நிலம் கேட்பான் | வீட்டைக் கொடுத்தால்<br>மோட்டைப் பிடுங்குவான்.<br>இருக்க இடம் கொடுத்தால்<br>கிடைக்கு ரெண்டு ஆடு<br>கேட்குமாம் | கீழ்வீட்டை ஒருவனுக்கு கொடுத்தால் அவன் மேல் வீட்டைப் பிடுங்கிக் கொள்வான். தமிழ் நாட்டிலும் கல் செங்கல் கட்டிடங்கள் இருப்பதால் கீழ் வீடு மேல் வீடு உண்டு. ஆனால் திரிபுரியில் – மக்கள் மூங்கிலினால் வீடு கட்டுகிறார்கள். அங்கு மேல் வீடு கிடையாது. ஆகவே வீட்டைக் கட்டியவன் பக்கத்து நிலமும் வேண்டும் என விரும்புவான். |

| | | | |
|---|---|---|---|
| 11. | முசுக் பல்நேச்சா மயாங்<br>பல்கினாய் சா ஆவோ?<br>பசு விற்கிறவனுக்கு<br>யானையால் என்ன பயன்? | தங்கம் விற்ற கையால்<br>தவிடு விற்கலாச்சே | – |
| 12. | சாக் ஹும் கைச்சே<br>பாய்பா காகங்<br>நல்லவனுக்கு உலகம்<br>நல்லது | – | – |
| 13. | ஆங் பசே கைச்சேபனி புமா<br>அப்பன் பேரை பிள்ளை பெறுவான் | அப்பனுக்குப் பிள்ளை<br>தப்பாமல் பிறந்திருக்கு | தந்தையைப்போலவே மகன் இருப்பான்,<br>தாயைப்போலவே பெண்ணிருக்கும்<br>என்ற பழமொழியும் உண்டு.<br>"நூலைப்போல சீலை, தாயைப்போல<br>பிள்ளை" |
| 14. | அநி சதக் புனி நைதக்<br>தனக்காக உண்ண வேண்டும்,<br>பிறர் மதிக்க உடை<br>உடுக்க வேண்டும் | உனக்காகச் சாப்பிடு<br>ஊருக்காக உடுத்து | ஒருவன் தன் விருப்பப்படி உண்ணலாம்,<br>ஆனால் சமூக வழக்கப்படி<br>உடுத்திக்கொள்ள வேண்டும். |
| 15. | தங் புரு சகனி இச்சா<br>பைபுரு புருமு இச்சா<br>உன் விருப்பப்படி போ; பிறர்<br>விருப்பப்படி வா | – | – |

| | | | |
|---|---|---|---|
| 16. | ருனா வச்புச் தன்சாடி<br>துணிக்குத் தக்கபடி<br>நெசவு செய் | செருப்புக்குத் தகுந்தாற்போல<br>காலை வெட்டணுமா? | காலுக்குத் தகுந்தபடி தோலை வெட்டி<br>செருப்பைச் செய்ய வேண்டும். |
| 17. | துய்மா நய் துய்,<br>ரிங்னான் சுதாய்<br>ஆற்றையும் பார்க்கலாம்<br>சேலையையும் துவைக்கலாம் | ஒரு கல்லிலே இரண்டு<br>மாங்காய், ஆட்டை<br>மேய்ச்சாலுமாச்சு,<br>அண்ணனுக்கு பெண்<br>பார்த்தாலுமாச்சு | ஒரு காரியம் செய்யப்போய் பல<br>காரியங்கள் செய்து முடிக்கலாம்.<br>அதற்கு முன்யோசனை வேண்டும். |
| 18. | யா பெய்ன் துங்கலை<br>புசுக் துனு<br>அடிமரத்தை வெட்டினால்<br>மரம் பட்டுப் போகும் | வேர் சாய்ந்தால் தூர் சாயும் | அடித்தளத்தில் பலவீனம் இருந்தால்<br>மேற்கோப்பை அழகாகக் கட்டிப்<br>பயனில்லை. |
| 19. | சாங் சபுரு ககான்<br>கமியா சிசாகா<br>ஆரம்பத்திலேயே<br>ஒன்று நல்லதாக வளருமா<br>கெட்டதாக வளருமா என்பது<br>தெரிந்து விடும். | விளையும் பயிர் முளையிலே<br>தெரியும் | வார்ட்ஸ் ஒர்த் "Child is the father of<br>Man" என்று கூறுகிறார். இள<br>வயதிலேயே மனிதனது<br>மேன்மைக்குரிய இயல்புகள் சிறு முளை<br>போல் காணப்படுகிறது என்பதிதன்<br>கருத்து. |
| 20. | சுகி தும்டே வசும்டாய் பெங்<br>மூங்கில் குழாயில் நுழைத்தாலும்<br>நாய்வால் நேராகாது. | நாய் வாலை நிமிர்க்க முடியுமா? | இயற்கையான பண்புகளை எவ்வளவு<br>முயன்றாலும் மாற்ற முடியாது. |

| | | | |
|---|---|---|---|
| 21. | இயகா இயசா பாய்<br>சராபாய் மனியா<br>ஒரு கையால் ஓசை உண்டாகாது. | இருகை தட்டினால்தான்<br>ஓசை | நட்புக்கோ, சண்டைக்கோ இரண்டுபேர் வேண்டும். இருவரில் ஒருவர் பொறுமையாக இருந்தால் நட்பு நீடிக்கும் என்று குறள் கூறுகிறது. "ஒருவர் பொறை இருவர் நட்பு" இது பழமொழிக்கு முரண்பட்ட கருத்தாகத் தோன்றினாலும் நட்புக்கு இருவர் என்பதும் இருவருக்கும் பொறுமை வேண்டும் என்பதைத் தான் வற்புறுத்துகிறது. |
| 22. | லாய் தங்மனி சுகான்<br>சஜா ஞெய்யா?<br>பழம் பெருமை பேசாதே | தாத்தா தாசில் பண்ணினார்<br>பேரன் தெருத்தூக்கறான் | தெருத்தூக்கிற பேரன் தாத்தா தாசில் வேலை பார்த்த பெருமையை பேசுவதில் பயனில்லை. |
| 23. | நாகானி பாமங்<br>தாமானி பைதா<br>தெரிந்த பிராமணனுக்கு<br>பூணூல் வேண்டியதில்லை. | நாடறிந்த பாப்பானுக்கு<br>பூணூல் எதுக்கு? | ஒரு மனிதனின் தன்மை முக்கியமே அன்றி அவனணியும் புறச்சின்னங்கள் முக்கியமற்றவை. |
| 24. | குடும் ஆசானி பலக்டி<br>இரும்பு சிவப்பாக<br>இருக்கும்போதே<br>சம்மட்டியால் அடித்து<br>வளைக்க வேண்டும் | காற்றுள்ளபோதே<br>தூற்றிக்கொள் | இதுபோல் எல்லா மொழிகளிலும் பழமொழிகளுள்ளன. வாய்ப்பு வரும்போது முயற்சியால் அதனைப் |

| | | |
|---|---|---|
| | | பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கருத்தில் பல நாட்டினரிடையேயும் வழங்குகிறது. ஆங்கிலத்திலும். (Strike while the iron is red hot. Take the opportunity by the fore lock. |
| 25. ரங்சோங் கயினா பரா<br>கிங் ஜாகா<br>பணமிருந்தால் மதிப்பு வரும் | பணம் பந்தியிலே | இது உலக வழக்கு. பண மதிப்பு தனியுடைமை சமுதாயங்கள் அனைத்திலும் காணப்படுவது இதை வெளியிடும் பழமொழிகளும் பல மொழிகளில் உள்ளன. |
| 26. சிகாகினி புகா கமியா<br>திருடனின் மனம் அமைதியாக இராது. | கள்ள மனம் துள்ளும்;<br>குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் | — |
| 27. மையுங்லே துகிவா சங்பிரா<br>யானை இறந்தால் மனிதன் இடுப்பு உயரம் இருக்கும் | யானை செத்தால் குதிரை மட்டம் | உயரத்தை அளக்கிற குறியீடுகள் வெவ்வேறாய் உள்ளன. ஆயினும் கருத்து ஒன்றேதான். மேலோர் வறுமையடைந்தாலும் தரை மட்டமாகி விட மாட்டார்கள். நாலடியில் இக்கருத்து "கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே" என்று கூறப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 28. | ஜினிகா சடங்கா<br>பேஸ் சாய்மனா<br>வலியால்<br>துன்பப்படுகிறவனுக்கு<br>அதன் கொடுமை தெரியும் | தனக்கு வந்தால்தான் தெரியும் | கஷ்டப்படுகிறவனுக்குத்தான் கஷ்டம் தெரியும். இது ஓர் உவமைப் பழமொழி. |
| 29. | மனா ரக்ரக் நரி நாய் ரக்ரக்சன்<br>ஆசைப்படுவது கிடைக்கக்<br>கிடைக்க மேலும் மேலும்<br>ஆசைப்படுவான் | யாசிக்க சம்சாரம்<br>பெருத்தாற்போல | இது ஒரு நாடோடிக் கதையை அடிப்படையாகக் கொண்டது. ஒரு சன்யாசி எலியைக் கொல்ல பூனை வளர்த்தார். பூனைக்குப் பால் வார்க்க ஒரு மாடு வளர்த்தார். மாட்டைப் பராமரிக்க ஒரு வேலைக்காரியை அமர்த்தினார். வேலைக்காரியை கலியாணம் செய்து கொண்டு குழந்தைகளைப் பெற்றார். இவ்வாறு ஒரு ஆசை அடுத்த ஆசைக்கு இட்டுச் சென்று கடைசியில் சன்யாசி சம்சாரி ஆனார். |

| | | | |
|---|---|---|---|
| 30. | ஜதனா ஹங்காய்<br>ஓலவா ஹம்<br>நல்லதாக முடிவதெல்லாம்<br>நல்லதுதான் | எங்கே சுற்றியும்<br>ரங்கனைச்சேவி | வைணவர்களுக்கு மிக உயர்ந்த<br>குறிக்கோள் ரங்கனைச் சேவிப்பது.<br>மலை காடெல்லாம் சுற்றி கடைசியில்<br>ஸ்ரீரங்கத்திற்குப் போய்<br>ஸ்ரீரங்கநாதனைச் சேவித்து விட்டால்<br>பின் கஷ்டங்களெல்லாம் சேவித்த<br>இன்பத்திற்கு முன்னே பெரிதாகத்<br>தோன்றாமல் போகும். |
| 31. | புகு திக்ளாயா நானிக்காயா<br>புகும் நாம்<br>ஆணியை எடுக்க<br>ஆணியை ஆடி | முள்ளை முள்ளால் எடு | எதிரிகள் கடைப்பிடிக்கும்<br>உபாயத்தாலேயே எதிரிகளைவெல்ல<br>வேண்டும். |
| 32. | தாம் கலையாணி<br>மருயா தயோதி பாய் தங்கா<br>மலிவான காய்கறியில் புழு<br>நிறைந்திருக்கும். | கை நிறைய கழுதை விட்டை | நிறைய கிடைக்கிறதென்பதற்காக<br>பயனற்றதை வாங்கக் கூடாது. |

முன் பக்கம் காட்டிய இணைப் பழமொழிகள் கருத்துக்களிலும் உவமை உருவகங்களிலும் உள்ள ஒற்றுமைக்குரிய காரணங்களை ஆராய்வோம். இதற்கு அப்பழமொழிகள் தோன்றிய வாழ்க்கைச் சூழலை அடிப்படையாகக் கொள்வோம். பழமொழி (3) தமிழில் தேவர்களின் உணவான அமிர்தத்தைக் குறிக்கிறது. தமிழ் மக்களுக்கு இந்திய இதிகாசக் கதைகளான மகாபாரதம், இராமாயணம் மூலம் தேவாசுர யுத்தம் பற்றித் தெரியும். அது சாவா மருந்தென்றும், மூவா மருந்தென்றும் அவர்கள் அறிந்திருந்தார்கள். இவ்வளவு மேன்மையான பயன்பாடுள்ள அமுதம் கூட அளவுக்கதிகமானால் விஷமாகிவிடும் என்ற பழமொழியைப் படைத்தார்கள். அமுதம் குறைந்த அளவில் உட்கொண்டால் மனிதனை சிரஞ்சீவியாக்கும். இந்த விளைவுக்கு ஒரு அளவில் அதனை உண்ணவேண்டும். அளவு மீறி உண்டால் அது எதிர்மறையான விளைவுகளை உண்டாக்கும். பழமொழி இதனை எதிர்மறையான பொருளாகவே குறிப்பிடுகிறது. அதாவது சிறிய அளவில் சாவாமைக்குக் காரணமான அமுதம் பெரிய அளவில் விஷமாகிவிடும்.

5–வது பழமொழியை எடுத்துக்கொள்வோம். இதன் கருத்து ஒரு வேலைக்குத் தேவையானதைவிட அதிக ஆட்கள் அவ்வேலையிலீடுபட்டால் வேலை நன்றாக நடைபெறாது என்பதாகும். இந்த வேலையைக் குறிப்பிடும் போது மலைநாட்டு திரிபுரிகள் மரச் சட்டத்தையும், மருத நாட்டு தமிழ் மக்கள் வயல் வேலையையும் குறிப்பிடுகிறார்கள். மலைநாட்டு மக்கள் தங்கள் உறைவிடங்களைக் கட்டுவதற்கு மலைகளில் கிடைக்கும் மூங்கில்களைப் பயன்படுத்துகிறார்கள். எனவே பல பழமொழிகளில் மூங்கிலின் பயன்பாட்டை அவர்கள் குறிப்பிடுகிறார்கள்; ஆனால் தமிழ் மக்கள் பண்டைக் காலம் முதல் செங்கல், மரம், இரும்பு, சுண்ணாம்புச் சாந்து, கல் முதலிய கட்டிடப் பொருட்களைப் பயன்படுத்தி வந்துள்ளார்கள். எனவே உறைவிடத்தையோ அல்லது கட்டிடங்களையோ குறிப்பிடும் போது இப்பொருள்களின் பயன்பாடு பழமொழிகளின் தன்மைகளை மாற்றுகிறது. எனவே பழமொழி 5–ல் திரிபுரியில் மூங்கில் சட்டமும் தமிழில் எண்ணெய் செக்கும் தொழில் பொருட்களாக வருகின்றன. எள்

ஆட்டி எண்ணெய் எடுக்கும் வேலை திறமை தேவையான வேலை. ஒரு வாணியனுக்கு பத்துபேர் உதவியாகப் போனால் அவனுடைய வேலையைத்தான் கெடுப்பார்கள். அதேபோல்தான் சட்டம் செய்வதும் தேவைக்கு மேல் அதிகமான ஆட்கள் சட்டம் செய்யப்போனால் குழப்பம் தான் ஏற்படும். உவமைப் பொருள்களின் வேறுபாட்டிற்கு தமிழகத்திலும் திரிபுராவிலும் வாழ்கிற மக்களின் சமுதாய வாழ்க்கையிலும் பொருளுற்பத்தி வளர்ச்சியிலும் உள்ள வேறுபாடுகளே காரணம்.

35 திரிபுரி பழமொழிகளுக்கு 32 இணைப்பழமொழிகள் தமிழில் உள்ளன. 1, 7, 9, 10, 13, 14, 19, 22, 23, 25, 27, 28, 31 ஆகிய எண்களுடைய பழமொழிகள் கருத்திலும் உருவத்திலும் மிகவும் ஒத்திருப்பதையும் இணைப் பழமொழிகளாகவே இருப்பதையும் காணலாம். உவம, உருவகப் பொருள்கள்கூட இரு மொழிப் பழமொழிகளிலும் ஒன்றாகவே உள்ளன. இப்பழமொழிகளின் கருத்தைப் பார்த்தால் இவையனைத்தும் பொதுவான நீதி அல்லது ஒழுக்கக் கருத்தாக இருப்பது தெரிகிறது. இதனால் பொதுவான மனித ஒழுக்கக் கருத்துக்களை வெளியிடும் பழமொழிகள் இவ்விரு மொழிகளிலும் இணைகளாக இருக்கின்றன. வெளியீட்டு முறைகூட ஒன்றாக இருப்பதை மேலே குறிப்பிட்டுள்ள எண்ணுள்ள பழமொழிகளின் விஷயத்தில் காண்கிறோம். இவை ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றின என்று கருத மொழி ஒற்றுமையோ, மக்களிடையே பௌதீக தொடர்புகளோ பண்பாட்டுத் தொடர்புகளோ இல்லை என்பது வெளிப்படை. எனவே இதற்குக் காரணம் இக்கருத்துக்களும் பழமொழிகளும் தோன்றுகிற காலத்தில் இவ்விரு வேறு மொழிகள் பேசுகிற மக்கள் நாட்டு வாழ்க்கை (Folk life)யும், நாட்டுப் பண்பாடும் இணையாக இருந்திருக்கவேண்டும். கருத்தொற்றுமைக்கும், கருத்தை வெளியிடும் முறையில் காணப்படும் ஒற்றுமைக்கும் காரணம் வெவ்வேறு வரலாற்றுக் காலங்களில் இக்குறிப்பிட்ட கட்டங்களில் இவ்விரு மக்களின் கூட்டு வாழ்க்கையும் அவ்வாழ்க்கையின் அடிப்படையில் எழுந்த பண்பாட்டு நிலையும் சமாந்தரமாக இருந்திருக்க வேண்டும். இக்கருத்தே பல்வேறு மொழிகளில் உள்ள, பழமொழிகளில் இணையான கருத்துக்களையும் வெளியீட்டு முறைகளையும் நாம் காண்பதற்கு காரணம் என்று கூறலாம்.

இனி இவ்விரண்டு மொழிகளில் உள்ள பழமொழிகளில் ஒரே கருத்தை வேறுபட்ட முறைகளில் வெளியிடுவதைக் காண்போம். 3–வது பழமொழியை எடுத்துக்கொள்வோம். மிதமிஞ்சிய எதுவும் நல்லதல்ல என்பது அதன் கருத்து. திரிபுரிப் பழமொழியில் உருவகப் பொருளாக அதிகம் எண்ணெய் என்ற பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது. மலை வாசிகளான திரிபுரி மக்களுக்கு எண்ணெய் கிடைப்பது அபூர்வமே. இந்த அபூர்வமான பொருளை வீணாக்கக் கூடாது என்ற எண்ணம் அவர்களிடையே இருக்கும். இதனால்தான் அதிக எண்ணெயைத் தேய்த்துக் கொண்டால் தலை பளபளப்பாகி விடாது என்று அவர்களது பழமொழி கூறுகிறது. கொஞ்சம் எண்ணெயைத் தேய்த்தாலே தலைமயிர் பளபளப்பாகிவிடும்போது அதிக எண்ணெயை ஏன் தேய்க்க வேண்டும்? தமிழ் நாட்டில் எண்ணெய் எளிதில் கிடைக்கக்கூடிய ஒரு பொருள். பல விதமான தாவர விதைகளிலிருந்து தமிழ் மக்கள் எண்ணெய் பிழிந்து வந்துள்ளார்கள். ஆகவே அபூர்வமான ஒரு பொருளை உருவகப் பொருளாகக் காட்டுவதற்கு அவர்கள் எண்ணெயைத் தேர்ந்தெடுக்கவில்லை. அமுதத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். அது எவனுக்கும் கிடைக்காத ஒரு பொருள். இதிகாசங்களிலிருந்து அவர்கள் தெரிந்து கொண்ட ஒரு பொருள்.

இவ்விதமாக தொழில் வளர்ச்சி நிலை வேறுபட்டால் உருவகப் பொருள்களைத் தேர்ந்ததிலும் வேறுபாடு காணப்படுகிறது. இவ்வாறேதான் திறமையான உழைப்பு தேவைப்படும் தொழிலில் திறமையற்ற மிகப் பலர்ஈடுபட்டால் நல்ல பயன் ஏற்படாது என்ற கருத்தை இரு பழமொழிகளும் வேறுபட்ட உருவகங்களால் வெளியிடுகின்றன. இவற்றை 5–வது, 6–வது பழமொழிகளில் காணலாம். 6–வது பழமொழியில் சணல் கொதிக்க வைத்து சட்டங்கள் செய்யும்போது ஒவ்வொருவர்தான் வேலையில் ஈடுபட வேண்டும். பலர் ஈடுபட்டால் சட்டம் செய்வதற்குரிய பக்குவ நிலையில் சணல் கிடைக்காது. தவிர, இது ஆண்களுடைய வேலை. பெண்களுக்கு இவ்வேலையில் பழக்கமில்லை. பழக்கமும், திறமையும் இல்லாத வேலையில் பெண்கள் ஈடுபட்டால் வேலை பாழாகிவிடும். இந்த உருவகப் பொருள்கள் குடிசை கட்டும் தொழிலிலிருந்து பெறப்பட்டவை. தமிழ் நாட்டில் பயிர் தொழில் மிக முக்கியமானது. நடவுத் தொழில் திறமைமிக்கப் பெண்களால் செய்யப்பட வேண்டும். பழக்கமில்லாத

சிறுமியர் இதைச் செய்தால் நடவு பாழாகிவிடும். மேற் குறித்த கருத்தை விளக்குவதற்கு உருவகப் பொருள் உருவகத் தொழிலிலிருந்து பெறப்படுகிறது.

சமூக வாழ்க்கையில் தனியார் சுதந்திரமும், சமூகப் பொறுப்பும் இணைந்து செல்லவேண்டும். இதனை உழைக்கும் மக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். இக்கருத்தை பல மொழி பேசும் உழைக்கும் மக்கள் பல்வேறு விதமாக தங்களது மொழிகளிலுள்ள பழமொழிகளின் வழியே வெளியிடுகிறார்கள். இக்கருத்தை திரிபுரி மக்களும், தமிழ் மக்களும், தங்கள் பழமொழிகளில் எவ்வாறு வெளியிட்டுள்ளார்கள் எனக் காண்போம். தனக்காக உண்ண வேண்டும்; பிறருக்காக உடுத்தவேண்டும் என்ற கருத்தை ஒரே விதமாக இரு பழமொழிகளும் வெளியிட்டுள்ளன.

| திரிபுரி | தமிழ் |
| --- | --- |
| தனக்காக உண்ண வேண்டும். | உனக்காகச் சாப்பிடு. |
| பிறர் மதிக்க உடை உடுத்த வேண்டும். | பிறருக்காக உடுத்து. |

ஒருவன் தனக்குப் பிடித்ததை உண்ணலாம். அதற்கு அவனுக்கு சுதந்திரம் உண்டு. ஆனால், கோவணத்தைக் கட்டிக்கொண்டு கோயிலுக்குப் போகமுடியாது. பொது இடங்களில் உடுத்திக் கொள்ளவேண்டிய முறைகள் சமூக வழக்கங்களாகி உள்ளன. இந்த வழக்கங்களை எந்த தனி மனிதனும் கடைப்பிடிக்க வேண்டும். தனி மனிதன் சமூக வழக்கங்களையும் கட்டுப்பாடுகளையும் சமூக வாழ்க்கையின் அமைதிக்காக கடைப்பிடிக்க வேண்டும்.

நாட்டு மக்கள் (Folks) எல்லோரும் உழைக்கும் மக்கள். உழைப்பே அவர்களுக்கெல்லாம் பொதுவான செல்வம். உழைப்பு பயன்தர வேண்டும், உழைப்பு குழம்பிப் போய்விடக் கூடாது, வீணாகி விடக்கூடாது. உழைக்கும் போது தனிமனிதத் திறமை முழுவதும் பயன்படுத்தப்பட்டு, பயனளிக்க வேண்டும் என்பதெல்லாம் உழைக்கும் மக்களுடைய பொதுவான ஆர்வங்கள். இக்கருத்துக்களோடு, பல பழமொழிகள் தொடர்பு கொண்டிருக்கும். உதாரணமாக 5–வது, 6–வது பழமொழிகளை எடுத்துக்கொள்வோம். திறமையான வேலையை பலர் செய்வதால் முழுமையான பயன் விளைந்துவிடாது என்பது இதன் கருத்து. தமிழில் இவை இரண்டும் பழமொழி உவமைகள்.

1. ஊர் கூடி செக்குத் தள்ளினாப் போல

2. கண்ணுகளாச் சேர்ந்து களம்பறிச்சாப் போல

1–ன் பொருள், ஊரிலுள்ள எல்லோரும் கூடி ஒருவன் ஓட்ட வேண்டிய எண்ணெய்ச் செக்கை தள்ளியது, போல –

2–ன் பொருள், பயிற்சி இல்லாத சிறு பெண்கள் களத்தில் வேலை செய்தது போல –

எண்ணெய்ச் செக்கு பயிற்சியும் அனுபவமுள்ள வாணியனால் தள்ளப்படும். அனுபவமில்லாத முப்பது பேர் சேர்ந்தாலும் அந்த வேலையை அவனைப் போலச் செய்ய முடியாது. அதிக எண்ணிக்கை இத்தொழிலைக் கெடுத்துவிடும்.

பெண்கள் நாற்று நடவோ, களை பறிக்கவோ தேவையான உழைப்பில் ஈடுபடுகிறார்கள். அனுபவமுள்ளவர்கள் வேலை செய்தால்தான் வேலை விரைவாக நடக்கும். நாலைந்து அனுபவமுள்ள பெண்களுக்குப் பதிலாக இருபது சிறுமியரை இவ்வேலைகட்கு அனுப்பினால் அவர்கள் வேலையைச் செய்யாமல் பாடியும், வம்பளந்தும், விளையாடியும் நேரம் போக்குவார்கள்; நாள் முடிவில் ஐந்து பேர் செய்கிற வேலையில் நாலில் ஒரு பகுதி கூட இருபது சிறுமியர் செய்திருக்க மாட்டார்கள். திறமை தேவையான தொழிலில் திறமையற்றவர்கள் மிகப் பலர் ஈடுபடுத்தப்படுவது நற்பயனை விளைவிக்காது என்ற கருத்தை திரிபுரி மக்கள் அவர்களுடைய வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்றாற் போலவும், தமிழ் மக்கள் தமது உழவுத் தொழில் சூழலுக்கு ஏற்றாற்போலவும் உவமைப் பழமொழிகளாக வெளியிட்டுள்ளார்கள். பழமொழிகளில் காணப்படும் உவமை, உருவகம், குறியீடு, முதலிய வெளியீட்டு முறைகளெல்லாம், பழமொழிகளைப் படைக்கிற மக்களது சமுதாயச் சூழலுக்கும், உழைக்கும் வாழ்க்கைக்கும் ஏற்றாற்போல் இருக்கும்.

இதைப்போலவே மற்றோர் உதாரணம் காண்போம். பழமொழி 32–ல் இரண்டு மொழிகளிலும் கீழ்வருமாறு உள்ளன.

| திரிபுரி | தமிழ் |
| --- | --- |
| மலிவான காய்கறியில் புழு நிறைந்திருக்கும் | கை நிறைய கழுதை விட்டை |

இவற்றின் கருத்து மலிவாக இருக்கிறது என்பதால் பயனற்றவற்றை வாங்கிவிடக் கூடாது என்பதே; நிறைய கிடைத்தாலும் பயனற்றவற்றை பெறக்கூடாது என்பதே. திரிபுரிப் பழமொழி உண்ணுவதற்குத் தேவையான காய்கறிகள் மலிவாகக் கிடைத்தால் அவற்றில் புழு இருக்கும். வாங்கக்கூடாது என எச்சரிக்கிறது. தமிழ் பழமொழி கை நிறைய கிடைத்தாலும் கழுதை விட்டையால் பயன் இல்லை என்பதைக் கூறுகிறது. பசுவின் சாணம் வயலுக்கு உரமாகும். உழவர்கள் அதைத் தேடிப் பெறுவார்கள். கழுதையின் விட்டை தெருவெல்லாம் கிடந்தாலும் யாரும் அதைப் பொறுக்குவதில்லை. ஒரே கருத்தை இவ்விரு மக்கள் வெளியிடும் முறையில் உள்ள வேறுபாட்டைத் தெளிவாகவே கண்டோம். இந்த வேறுபாட்டிற்குக் காரணம் தொழில் வேறுபாட்டால் உண்டாகிற மதிப்பு வேறுபாடுகளே.

துஷார் காந்தி தியோகி தமது கட்டுரையில் வெளியிட்டுள்ள 35 திரிபுரி பழமொழிகளில் 30 பழமொழிகளுக்கு தமிழில் நெருக்கமான இணைப் பழமொழிகள் உள்ளன. அவற்றில் 13 பழமொழிகளுக்கு ஒருமையான இணைகள் உள்ளன. (identical parallels) இவை திரிபுரிப் பழமொழியை சொல்லுக்குச் சொல் தமிழில் மொழி பெயர்த்ததைப்போல் இருக்கின்றன. இவை பொது நீதிக் கருத்துக்களாகவும், உழைப்பு பற்றிய கருத்துக்களாகவும் உள்ளன. உழைக்கும் வாழ்க்கையின் ஒற்றுமையின் காரணமாக ஒரே விதமான ஒழுக்க நியதிகளும், நீதிக் கருத்துக்களும் மொழியால் பிரிந்திருக்கும் மக்களிடையே தோன்றுகின்றன. இத்தகைய ஒருமித்த கருத்துக்களை ஒரே விதமாக உவமை, உருவகம், குறியீடுகளால் அவர்கள் வெளியிடுகிறார்கள். இவற்றில் ஏற்படும் வேறுபாடுகளுக்குக் காரணம் அவர்களது தற்காலப் புறச் சூழ்நிலை, உற்பத்தி வளர்ச்சி நிலை, பண்பாட்டு நிலை, வேறு பண்பாடுகளுடன் தொடர்பு முதலியன.

சூழ்நிலை மாற்றத்தாலும், தொழில் மாற்றத்தாலும் நமது நாட்டின் நாட்டார் வாழ்க்கையும் பண்பாடும் வெகு வேகமாக மாறி வருகின்றன. இவை குழப்பமாக மாறி வரவில்லை. விஞ்ஞான ரீதியான சமூக வளர்ச்சி விதிகளுக்கு ஏற்பவே மாற்றங்கள் நிகழுகின்றன. நம் நாட்டின் பல பிரதேசங்களில் வாழுகிற கிராமப்புற உழைப்பாளி மக்களின் சமுதாயங்கள் அசமத்துவ வளர்ச்சி நிலைகள் உள்ளன. அசமத்துவ வளர்ச்சி நிலைகளுக்கும் பொருந்துவதான சமூக வளர்ச்சி விதிகள்

நமது தேசீய வாழ்வை உருவாக்குகின்றன. கடந்த காலத்தில் நமது நாட்டுப்புற சமுதாய வாழ்க்கை விரைவான மாறுதலில்லாமல் நிலைத்தும் தேங்கியும் இருந்ததால் வரலாற்று ரீதியில் பல கருத்துக்களும் சிந்தனைகளும் ஒரே மாதிரியான விதத்தில் பல பிரதேசங்களிலும் எழுந்திருக்கிறது. தேங்கிய நிலையிலுள்ள சமுதாயங்களின் கருத்துக்கள், பின்னர் அவை வளர்ச்சி பெறும் போதுகூட மாறாமல் நிலைத்துவிடுகின்றன. எனவேதான் திரிபுரி உழைக்கும் மக்களது பழமொழிகளுக்கும் தமிழ் நாட்டு உழைக்கும் மக்களது பழமொழிகளுக்கும் மிக நெருங்கிய ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

3

# இராமாயணத்தோடு தொடர்புடைய இடங்கள் பற்றிய புனைகதைகள்

இராமாயண நிகழ்ச்சிகள் நடந்த இடங்களாகப் பல இடங்கள் தமிழ் நாட்டில் குறிப்பிடப்படுகின்றன. அல்லது இராமாயணக் கதை மாந்தர்களோடு தொடர்புபடுத்தப்படுகின்றன. பல நாட்டு இலக்கிய ஆய்வாளர்களும், அகழ்வாராய்ச்சி அறிஞர்களும் இராமாயணம் குறிப்பிடும் இடங்கள் அனைத்தும் மத்தியப் பிரதேசத்திற்கு வடக்கில்தான் உள்ளன என்று முடிவு கூறியிருக்கிறார்கள். இலங்கைதான் இராமாயணம் குறிப்பிடும் இடங்களில் தென்கோடியிலுள்ளதாகச் சொல்லப்படுவது என்பது அனைவரும் அறிந்ததே. அதுகூட மத்தியப் பிரதேசத்தில் ஓர் ஏரியின் நடுவில் இருந்ததாக எச்.டி. சங்காலியா முதலிய ஆய்வாளர்கள் சான்றுகளோடு முடிவுகட்டியுள்ளார்கள்.

ஆனால் தமிழ் நாட்டில் பல தீர்த்தங்கள், ஆறுகள், மலையுச்சிகள், கடற்கரைப் பட்டினங்கள் முதலியவை அனுமன், சடாயு, சீதை முதலிய கதாமாந்தர்களோடு தொடர்பு படுத்தப்படுகின்றன. இத்தொடர்பின் தன்மைகளை சமூக மானிடவியல், பண்பாட்டு மானிடவியல் நாட்டுப் பண்பாட்டியல் ஆய்வுகள் தந்திருக்கும் அடிப்படையில் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன.

வரலாற்று முற்கால சமுதாயத்தில் வாழ்ந்த மனிதர்கள் தமது சூழ்நிலையின் தன்மைகளை அறிய முயன்றார்கள். இயற்கை, இடங்கள், விலங்குகள், மனிதர்களின் செயல்கள் முதலியவற்றை அறிந்து விளக்குவதற்கு முயன்றனர். ஆனால் அவர்கள் அவற்றைப் பற்றிக் கேள்விகளைக் கேட்க முடிந்ததேயன்றி, கேள்விகளுக்குப் பதில் காணும் அறிவு வளர்ச்சி பெற்றிருக்கவில்லை.

காட்டில் வாழ்ந்த புராதன மனிதர்களின் மனத்தில் பல கேள்விகள் எழுந்தன:

தீ எப்படி உலகிற்கு வந்தது?

செடி கொடிகள் ஏன் காய்கனிகளைத் தருகின்றன?

செங்குரங்கின் முகம் சிவப்பாயிருப்பதேன்?

கரடிக்கு மேலெல்லாம் உரோமம் இருப்பது ஏன்?

காளைக்குக் கொம்பு இருப்பதேன்?

எருமையின் கொம்பு வளைந்திருப்பதேன்?

இந்த மலை ஏன் படுத்திருக்கும் பெண் போலிருக்கிறது?

சந்திரனில் ஏன் முயல் உருவம் இருக்கிறது?

குழந்தை எப்படிப் பிறக்கிறது?

விதையிலிருந்து செடி ஏன் முளைக்கிறது?

இவையாவும் பண்டைக்கால மனிதர்களால் விடை காண முடியாத புதிர்களாக இருந்தன. இவற்றிற்குப் பதில்களைக் காண அவன் புனைகதைகளைப் (myths) புனைந்தான்.[1] விஞ்ஞான அறிவு தோன்றுமுன் புனைகதைகளால் அவன் தனது வினாக்களுக்கு விடை கண்டான். விஞ்ஞானத்தின் தாய் புனைகதைகள்[2] என்று மானிடவியலார் கூறுவர். உலக முழுவதும் பண்டை இனக்குழு மக்கள் புனைகதைகளை உருவாக்கித் தங்கள் மனத்தை உறுத்தும் கேள்விகளுக்கு விடையளித்துக்கொண்டார்கள்.

மிக முற்காலப் புனைகதைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

தோற்றப் புனைகதைகள் (Origin myths) ஒரு பொருள், நிகழ்ச்சி, குணம், மாறுதல் முதலியவை எப்படித் தோன்றின என்பதைக் கூறும் கற்பனைக் கதைகள் இவை.

காவிரி தோன்றியது எப்படி?

அகஸ்தியர் கமண்டலத்தைக் காக்கை கவிழ்த்து விட்டதால் காவிரி தோன்றியது.

நெருப்பை மனிதன் எப்படிப் பயன்படுத்தத் தொடங்கினான்? ஜாகர் என்ற தென்னமெரிக்க மிருகத்திடம் நட்புக்கொண்டு அதன்

வீட்டிற்குப் போய், அதன் மகனாக வாழ்ந்து, மனிதன் திருடிக்கொண்டு வந்தான் (சிவப்பு இந்தியப் புனைகதை).[3]

புரோமிதியூஸ் ஜியூஸ் என்ற கடவுள் ஒளித்து வைத்திருந்த தீயை, அக்கடவுளின் மனைவி தன் மகனிடம் சொல்லி அவன் திருடிக் கொண்டுவந்து கொடுத்தான் (கிரேக்கப் புனைகதை).[4]

இவை போன்றவை தோற்றப் புனைகதைகள். சில இடங்கள், நிகழ்ச்சிகள், சடங்குகள் பற்றி மனிதனது விளக்கம் புனைகதைகளாகக் கூறப்படும். இவை விளக்கப் புனைகதைகள்.

இடி இடிப்பது ஏன்? இந்திரன் வில்லின் நாண் ஒலி அது; மழைத் தெய்வத்தின் மனைவி ஓர் உரலை உருட்டுகிறாள்; ருத்ரனது கோரச் சிரிப்புதான் இடி; புரோடியூஸின் குரல்.[5] இவை (explanatory myths) என்று அழைக்கப்படும்.

சில புனைகதைகள் மனிதனது சடங்குகளோடு தொடர்புகொண்டு, தோற்றப் புனை கதைகளாகவும், விளக்கப் புனைகதைகளாகவும் இருக்கும்.

திருக்கலியாணம் ஏன் நடக்கிறது? ஒவ்வொரு தெய்வத்துக்கும் ஒரு கதையிருக்கிறது.

பெண் பூப்பு எய்தியவுடன் ஏன் சில சடங்குகள் செய்ய வேண்டும்?

பார்வதி ருதுவடைந்ததும் செய்த சடங்குகளை எல்லோருக்கும் செய்யவேண்டும். இதுபோலப் பலகதைகள் இருக்கலாம்.

ஔவையார் நோன்பு, வரலட்சுமி நோன்பு, சித்திர புத்திரன் நோன்பு ஏன் கொண்டாட வேண்டும்?

இதில் ஒரு புனை கதை வரலாறும், நோன்பு நோற்றவர் அடைந்த நன்மை பற்றிய விவரங்களும் இருக்கும். அல்லது நோன்பு நோற்காதவர்கள் அடைந்த தீமை பற்றியும் இருக்கும்.[6] இவையாவும் சுதந்திரமான கதைகள்.

இலக்கியமும் புராணங்களும் வளர்ச்சி பெற்ற பின்னர், மனிதன் தனது சூழ்நிலை பற்றி அவற்றோடு தொடர்புகொண்ட கதைகளைப் படைத்துள்ளான்.

புராணங்களும், காப்பியங்களும் தோன்றியபின், மனிதன் இடங்களையும், நிகழ்ச்சிகளையும் அவற்றோடு தொடர்புபடுத்திப் பல புனைகதைகளைப் புனைந்தான். அவற்றில் ராமாயணத்தோடு தொடர்புடைய சில புனைகதைகளைக் காண்போம்.

அனேகமாக ஒவ்வொரு ஊரிலும் குன்று, ஆறு, பாறை, ஊற்று முதலிய இடங்களைப் புனைகதைகள் மூலம் இராமாயணத்தோடு தொடர்பு படுத்தியுள்ளார்கள். இராமாயணத்தில் அக்கதை இருக்க வேண்டுமென்பதில்லை. தங்கள் ஊருக்குப் பழம்பெருமை தேடிக் கொள்வதற்காக மக்கள் தங்கள் ஊரை இராமாயண நிகழ்ச்சிகளோடோ, இராமாயணக் கதை மாந்தர்களோடோ தொடர்புபடுத்தியிருக்கிறார்கள். முயன்றால் இத்தகைய புனைகதைகளை ஒவ்வொரு ஊரிலும் சேகரிக்கலாம்.

இவற்றைச் சேகரித்து ஆராய்வதற்கு முன் முயற்சியாகச் சில புனைகதைகளைச் சேகரித்து இக்கட்டுரையில் ஆராய்வோம். இக்கட்டுரை ஒரு சிறிய முயற்சியே. தமிழ்நாடு முழுவதிலும் வழங்கிவரும் இத்தன்மையான புனைகதைகளைச் சேகரிப்பதற்கும் ஆராய்வதற்கும் தூண்டுகோலாக அமைவதற்காகவே இக்கட்டுரையை எழுத எண்ணுகிறேன்.

இராமாயணக் கதையின் தமிழ் வடிவமான கம்பரது காவியம், ஆரணிய காண்டத்தின் நிகழ்ச்சிகளையும், கதை மாந்தர்களையும் தமிழ் நாட்டில் சில இடங்களோடு தொடர்புபடுத்துகிற கதைகள் ஏராளமாக உள்ளன. இவற்றைக் காவியம் தெளிவாகச் சுட்டிக்காட்டாது. சீதையை இராவணன் சிறையெடுத்துச் சென்றபோது அவனைத் தடுக்க முயன்று போரிட்டு மாண்ட ஜடாயு, அவனைத் தேடிச் சென்ற அனுமான் ஆகிய கதை மாந்தர்களோடு, தமிழ் நாட்டிலுள்ள இடங்கள் புனைகதைகளால் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. நேரடியாக இராமனோடு தொடர்பு படுத்தப்பட்டுள்ள இடங்களும் உள்ளன. இவை குறித்த கதைகளே மிகப் பலவாக தமிழ்நாட்டில் வழங்கப்படுகின்றன. அப்புனைகதைகளில் ஒன்பது கதைகளை இக்கட்டுரையில் காண்போம்.

## 1. ஜடாயு தீர்த்தம்

பாளையங்கோட்டைக்கு வடக்கே 2 மைல் தூரத்தில், தாமிரவருணி நதியோரத்தில் வெள்ளைக் கோவில் என்ற மயானம் உள்ளது.

இதனருகில் உள்ள நதியின் தீர்த்தக் கட்டத்திற்கு ஜடாயு தீர்த்தம் என்பது பெயர். இக்கட்டத்தில் தகனம் செய்யப்பட்ட சடலத்தின் எலும்புகளைப் பானையில் வைத்துப் புதைக்கிறார்கள்.

இவ்வாறு செய்வதால் இறந்தவர் புண்ணியம் பெறுவார், சுவர்க்கம் புகுவார் என்ற நம்பிக்கையுள்ளது.

இவ்விடம் புனிதமானது என்று காட்ட ஒரு புனைகதை வழங்குகிறது. இவ்விடத்தில் சீதையைத் தூக்கிச் சென்ற இராவணனைத் தடுத்துச் சீதையை மீட்க ஜடாயு போர் புரிந்தான். இராவணன் தனது வாளால் அவன் இறகுகளை வெட்டியெறிந்தான். ஜடாயு மரண வேதனையில் கிடந்தான். சீதையைத் தேடி வந்த இராமன் மனம் வருந்தி அவனிடம் நிகழ்ந்ததைக் கேட்டுச் சீதை இருக்குமிடத்தை அறிந்தான். ஜடாயு உயிர் விட்டான். இராமன் அவனுக்கு மகன் முறையாக ஈமக்கடன்கள் செய்தான். ஜடாயுவைத் தகனம் செய்த இடம்தான் ஜடாயு தீர்த்தம் என்று புனித தீர்த்தமாகியது.[7]

இவ்விடத்திற்குச் சிறிது தூரத்தில் ஒரு கிணற்றில் ஒரு குழுச்சிலை இருப்பதாக டாக்டர் அங்குசாமி கூறுகிறார். அதில் இராமன், இலக்குவன், ஜடாயு மூவரின் உருவங்கள் செதுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இப்புனைகதையை வலுப்படுத்துவதற்காக இச்சிலை உருவாக்கப்பட்டிருக்கலாம். உண்மையில் ஜடாயு தீர்த்தம் என்பது, மயானத்திற்கு அருகில் உள்ள நீரோட்டமேயாகும். அக்கரையிலுள்ள கிணற்றுப் பகுதியல்ல. இங்கு சிலையெதுவும் இல்லை.

## 2. அனுமான் வால்

இதே மயானத்தின் அருகில் ஒரு வளைந்த புடைப்புக்கோடு செதுக்கிய நீண்ட கல் ஒன்று கிடக்கிறது. இதனருகில் ஒரு மாந்தோப்பு இருந்தது. பாடை தூக்கிச் செல்லுபவர்கள் அதைத் தாண்டாமல், சுற்றிச் செல்லுவார்கள்.

இக்கல்லுக்கும், இந்நிகழ்ச்சிக்கும் ஒரு தொடர்புமில்லை. ஆனால், இக்கல் அனுமார் வால் என்று கருதப்பட்டு, ஒரு புனைகதையும் இதை விளக்கப் புனையப்பட்டுள்ளது. பாரதத்தில் பாரிஜாத மலரைப்

பறிப்பதற்காக ஒரு வனத்திற்குச் சென்று, அவ்வனத்தைக் காவல் புரிந்த அனுமானது வாலை நிமிர்த்த முடியாமல் தோற்றுபோனதாகவும் ஒரு கிளைக் கதையுள்ளது. அந்த வால் இதுதான் என்று தொடர்புப் புனைகதையொன்று உருவாக்கப்பட்டு வழங்கி வருகிறது.[8]

மாந்தோப்பில் மாங்காய் களவு செய்ய ஆட்கள் நுழையாதபடி தடுக்க இக்கல் பயன்பட்டிருக்கவேண்டும். இது போலப் பல சின்னங்கள் பயத்தை உண்டாக்கப் பயன்படுகிறது. நாகம், சிங்கம், பூதம், யாளி முதலியன கோவில் பொக்கிஷங்களுக்குக் காவலாக இருப்பதாகப் புனைகதைகள் உண்டு. சில சிவன் கோவில்களைப் பூதம் காப்பதாகப் பூதக்கல் உருவங்கள் கோவில் வாசலில் அல்லது பொக்கிஷ அறை வாசலில் செதுக்கப்பட்டிருக்கும். நாயோடு சேர்ந்த பைரவர் சிலைகள், சிவன் கோவிலைப் பாதுகாப்பதாக நம்பிக்கை உள்ளது. எல்லாச் சிவன் கோவில்களிலும், மழுவணிந்த சண்டேசுவர் சிலைகள் உண்டு. யாரும் கோவில் சாமான்களைத் திருடிச் செல்லவில்லை என்று காட்ட இச்சிலை முன் கைதட்டிச் செல்லவேண்டும்.

இதில் உள்ள நம்பிக்கை, இரவில் இச்சிலைகள் உயிர் பெற்றுக் காவல் காக்கின்றன என்பதேயாகும். இந்த நம்பிக்கையில்தான் காளி அல்லது மாரியம்மன் கோயில்களுக்கு வாசல் தேவதைகள் தோன்றியிருக்கவேண்டும்.

## 3. அனுமன் தீர்த்தம்

தர்மபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரை என்ற சிறு நகரின் அருகே ஒரு வற்றா ஊற்றிலிருந்து நீர் வெளிப்படுகிறது. அதை ஆற்றுப்படுகை மட்டத்திற்கு மேல் 4 அடி உயரம் தொட்டி போலக் கட்டி நீர் வடிய ஒரு தூம்பும் வைத்திருக்கிறார்கள். இத்தொட்டி பிற்காலத்தில் கட்டப்பட்டது. ஊற்று நெடுங்காலமாக இருந்து வருகிறது. இதற்கு அனுமன் தீர்த்தம் என்று பெயர்.

இதைப் பற்றி ஒரு புனைகதை உள்ளது. சீதையைத் தேடி வரும் பொழுது இராமன், இலக்குவன், அனுமான் மூவரும் ஆற்றின் அருகிலுள்ள ஒரு மலையில் தங்கினார்கள், இராமன் சந்தியாவந்தனம் செய்ய நீர் கொண்டு வர அனுமனை அனுப்பினான்.

அனுமான் தண்ணீர் தேடச் சென்றவன் நெடு நேரமாகியும் திரும்பி வரவில்லை. இராமன் ஓர் அம்பில் ஒரு செம்பை வைத்து எய்து,

தரையிலிருந்து நீர் தோன்றச் செய்து செம்பில் நிரப்பிக் கொணரச் செய்து சந்தியா வந்தனம் செய்து முடித்தான். தன்னை நம்பவில்லையே என்று அனுமன் கோபித்துக்கொண்டான். இராமன் அவனைச் சமாதானப்படுத்துவதற்காக அம்பால் தோண்டிய ஊற்றுக்கு அனுமன் தீர்த்தம் என்று பெயர் வைத்தான்.[9]

இந்தப் புனைகதை, ஊற்றின் தோற்றம் பற்றிய விளக்கமாக இன்றும் அப்பகுதி மக்களிடையே வழங்கி வருகிறது. அம்பின் மந்திர சக்தி பற்றிய கதைகள் (legends) இந்தியக் காப்பியங்கள் பலவற்றில் உள்ளன. இது போலவே திருமாலின் சக்கரம், முருகனின் வேல், பீமனின் கதை, இந்திரனின் வஜ்ராயுதம், டையனாவின் திரிசூலம், மர்டாக்கியின் வேல், இராவணனின் வாள், இவற்றிற்குச் சாதாரணப் போர்க் கருவிக்கு மேற்பட்ட மந்திர சக்தியுண்டு என்ற நம்பிக்கை புராணங்களிலும், தனியான புனைகதைகளிலும் உள்ளன.

இதற்கு ஒரு மானிடவியல் காரணம், உலோக காலத்துவக்கத்தில், உலோக ஆயுதங்கள், கல் ஆயுதங்களைவிட வலிமையுடையவையாக இருந்தது குறித்துப் பண்டைய மனிதனது அதிசய உணர்வே. உடல் வலிமையின் பிரதிநிதியான அனுமன், செய்ய முடியாத காரியத்தை, வில் அம்பு தரித்த இராமனால் செய்ய முடிந்தது. வளர்ச்சியடைந்த உற்பத்தி சக்திகளின் விளைவாக உருவாக்கப்பட்ட கருவிகளின் மேன்மையை இது குறிப்பிடுகிறது. உடல் வலிமை, உலோக ஆயுத வலிமைக்குத் தாழ்ந்து விடுகிறது.

## 4. அனுமகுண்டம்

திருக்குறுங்குடி மலையில் மகேந்திரகிரி என்று பெயரிடப்பட்ட சிகரம் ஒன்றுள்ளது. இதன் மேல் பெரிய கால் சுவடு ஒன்று 4 அடி ஆழத்தில் வெட்டப்பட்டுள்ளது. இங்கு மழை காலத்தில் நீர் தேங்கி நிற்கும்.

இது குறித்து அனுமனோடு தொடர்புடைய புனைகதை ஒன்றுள்ளது. இம் மலை மீது ஏறித்தான் அனுமன் இலங்கைக்குத் தாவினான். தாவும்பொழுது விசுவரூபம்கொண்டான். சிற்றுருவில் இருந்த அனுமன் பேருருவம் கொண்டபோது மலையில் கால் பதிந்து ஒரு சுவடு ஏற்பட்டது. ஓர் ஊற்றுத் தோன்றி அவனது பாதங்களை நனைத்தது.[10]

இப்புனைகதையின் மூலம் (source) கம்பனது கடல் தாவு படலமே. இப்புனை கதைக்குச் சான்றுகளை உண்டாக்க ஒரு பாதத்தை மலையுச்சியில் தோண்டியுள்ளாகள்.

## 5. மருத்துவாமலை

இது ஆரல்வாய்மொழியருகிலுள்ள மலையையும், கன்னியாகுமரி அருகிலுள்ள மலையையும் குறிக்கும்.

இம்மலை, அனுமன் சஞ்சீவிமலையை இலங்கைக்குத் தூக்கிச் சென்றபோது உதிர்ந்த பாறைகள் என்று சொல்லப்படுகிறது. இதுதான் இம்மலைகளின் தோற்றம் பற்றிய புனைகதைகள்.[11]

## 6. தாடகை மலை

கன்னியாகுமரி மாவட்டத்தில் தரிசனங்கோப்பு என்ற ஊரின் அருகில் ஒரு நீண்ட பாறையொன்றுள்ளது. அது கற்பனைக் கண்ணோடு பார்த்தால் ஒரு பேருருவம்கொண்ட பெண்ணுருவம் படுத்துக் கிடப்பதுபோலக் காணப்படும். பூதாகாரமான தலையும் மார்பும் வயிறும் கால்களும் இருப்பது போலத் தோன்றும். இது இயற்கையின் விசித்திரமான படைப்புத்தான்.

## 7. வில்லுக்கீறி

இதற்கோர் தோற்றப் புனைகதையுள்ளது. தாடகையை இராமன் கொன்றபோது இங்குதான் விழுந்தாள். விழுந்த பின் கல்லாகி விட்டாள்.[12]

இதற்குச் சில மைல்களுக்கப்பால் ஓரிடம் வில்லுக்கீறி என்றழைக்கப்படுகிறது. அங்கு ஒரு ஊரும் உண்டு. இது தக்கலைக்கு நான்கு மைல் தெற்கேயுள்ளது.

அவ்வூர் மக்கள் வில்லுக்கீறி என்ற பெயர்த் தோற்றத்திற்குக் காரணமாக ஒரு புனைகதையை நம்புகிறார்கள்.

இராமன் இவ்விடத்தில் இருந்துதான் தாடகை மீது அம்பெய்தான். முதலில் அவளைக் கண்டதும் அவன் பெண்ணென்று தயங்கி நின்றான். பின் அவள் பாறைகளை வீசினாள். ஒரு சூலத்தைக் குறி பார்த்து

இராமன் மீது எறிந்தாள், அது கடுகி விடுவது கண்டும் இராமன் வில்லை எடுக்கவில்லை. விசுவாமித்திரன், அவனைப் பார்த்து தீமை புரிபவர், பெண், ஆண் என்ற வேறுபாடில்லாமல் கொல்லப்படவேண்டும் என்று கூறி வில்லையெடுத்து நாணேற்றக் கூறினான். இராமன் வில்லைத் தரையில் ஊன்றித் தயங்கி நின்றவன் அம்பை நாணில் ஏற்றினான். தரையில் வில் கீறிய இடம் வில்லுக்கீறி என்ற பெயர் பெற்றது.[13]

### 8. திருப்புல்லாணி

இராமன் அணைகட்டிய கதையோடு பல ஊர்கள் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. திருப்புல்லாணி என்று அழைக்கப்படும் ஊர் திருப்புல்லணை என்றும், அது இராமன் புல்லினால் கட்டிய அணை என்றும் ஒரு புனைகதை அவ்வூரில் வழங்கி வருகிறது.[14]

### 9. இராமேஸ்வரம்

இராமேஸ்வரம் என்ற ஊரில் உள்ள லிங்க வடிவமான சிவபெருமான், இராமன் வெற்றி பெற்றுத் திரும்பும் பொழுது பூசித்து வழிபட்ட லிங்கமென்ற ஒரு புனைகதை வழக்கில் உள்ளது.[15]

## இராமாயணக் கதாபாத்திரங்களோடு தொடர்புடைய இடங்கள்

மேற்குறிப்பிட்ட ஒன்பது புனைகதைகளில் இராமனோடு தொடர்புடையவை மூன்று.

இவற்றுள் ஒன்று இராமனோடும் அனுமனோடும் தொடர்புடையது. இது மூன்றாவது கதை. இக்கதையில் இராமனது வில்லாற்றலும், அனுமனது அலைந்து தேடும் உடல் வலிமையும் இணைக்கப்பட்டுள்ளது.

இராமனது சந்தியாவந்தன சமய நிகழ்ச்சிக்கு புனித நீர் தேவைப்படுகிறது. தேடி வருவதற்கான உடல் ஆற்றல், விரைவு இவற்றைப் பயன்படுத்துவதற்காக இராமன், அனுமனை ஏவுகிறான்.

இது இராமாயணத்தில்அனுமனுக்கும், இராமனுக்கும் உள்ள தொடர்புதான். இத்தொடர்பே புனைகதையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இராமனது மேன்மை, சந்தியாவந்தனம் ஆகிய மதநிகழ்ச்சியிலும், அவனது வில்லாற்றலிலும் சுட்டிக்காட்டப்படுகிறது. அவை அனுமனது உடல் வலிமைக்கு மேல், நீரைப் பெறுவதில் வெற்றி கொணர்கிறது. தனது துணைவனுக்குக் கோபம் வராமலிருக்க இராமன் ஊற்றிற்கு அனுமனது பெயரை இடுகிறான். கருடன், அனுமன் முதலிய கதாபாத்திரங்கள், மனித இயல்புகொண்ட விலங்குகள். இவை போன்றவை தனியாகவே தெய்வங்களாக வணங்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.[16] இவை மந்திரத்தோடும், சூன்யத்தோடும் தொடர்புகொண்டவை. கருடனும், அனுமனும், நாகத்தை அடக்கவும், பேய்களை விரட்டவும், உயர்ந்த தெய்வங்களாகக் கருதப்பட்டன. அதாவது அவை பாமரர் தெய்வங்கள் (folk gods above the level of ghosts and spirits) இவை உடல் வலிமையாலும் மந்திரவலிமையாலும் செயல் படுபவை. இராமன் ஒரு தெய்வ வணக்கத்தைப் பின்பற்றுபவன். வில்–அம்பு என்ற ஆயுதங்களையுடையவன். அவனுடைய சக்தி, விலங்குகளுடைய சக்திக்குமேலாக இராமாயணத்தைப் பின்பற்றியே மதிக்கப்படுகிறது. இங்கே பாமரர் தெய்வங்களும் விஷ்ணு அவதாரமான இராமனும் கீழ்நிலை, மேல் நிலைகளில் முரண்படும்போது சமாதானப் படுத்தப்படுகின்றன. அப்பகுதி மக்களின் ஸ்தல தெய்வமான அனுமனுக்கு இராமனே முக்கியத்துவம் கொடுப்பதாகக் கூறி புனைகதை இருவரது உறவையும் சீராக்குகிறது.

இதுபோலவேதான் ஜடாயுவின் இராமாயண பாத்திர நிகழ்ச்சி இராமன் சீதையைத் தேடும் நிகழ்ச்சியோடு தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. இதில் வேறோர் (mytheme) அல்லது புனை கதைப் பகுதி உள்ளது.

உலகப் புனைகதைகளில் ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு விலங்கு மனிதனுக்கு உதவும். வேறோர் விலங்கு மனிதனுக்கு இடையூறு செய்யும். கதையில் இவற்றுள் ஒன்று தலைவனுடைய முன்னேற்றத்திற்குத் துணை செய்வதாகவும், மற்றொன்று இடையூறு செய்வதாகவும் இருக்கும்.

தென்னமெரிக்க இந்தியப் புனைகதைகளில் விலங்குகளில் ஜாகர் மனிதனுக்குத் துணைசெய்வதாகவும் பூனை அல்லது காகம் தீமை

செய்வதாகவும் வருவதைப் பேராய்வாளர் லெவிஸ்ட்ரரஸ் எடுத்துக் காட்டியுள்ளார்.[17]

இவற்றை டோடம் (Totem) விலங்கெனக் கொள்வதற்கில்லை. இதன் தோற்றம் டோடம் நம்பிக்கையிலிருந்து பிறந்திருக்குமாயினும், புனைகதையில் இதற்கு மனித வாழ்க்கையில் ஒரு பங்கு (function) இருக்கிறது. குலக்குறி விலங்கு மந்திர சக்தியுடையது. புனைகதையில் விலங்கு மனித இயல்புகளான நன்மை, தீமைகள் புரியும் சக்திகள் உள்ளன.

இராமாயணத்தில் வரும் விலங்குகள் புனைகதை விலங்குகளின் தன்மையுடையனவே. தமிழ் நாட்டில் டோடம் நம்பிக்கையுண்டு என்பதை குரு ஞானப்பிரகாசர் காட்டியுள்ளனர்.[18] இவை தமிழ்ப் புனைகதைகளிலும் இடம் பெற்றுள்ளன. இந்நம்பிக்கையின் அடிப்படையில் தம்மிடையே பரவிய இராமாயணக் கதையின் ஜடாயுவும், ஜாம்பவான் என்ற கரடியும், மனிதனுக்கு உதவும் விலங்குகளாகக் கொள்ளப்பட்டன. இராமனுக்கு உதவும் ஜடாயுவின் தன்மையோடு, தமிழ்க் குலக்குறி விலங்குகளிலிருந்து தோன்றிய புறக்கதை விலங்கையும் இணைத்து அவற்றைப் புனிதமானதாகக் கருதி அவை தகனம் செய்யப்பட்ட இடம் தீர்த்தக் கட்டமாக்கப்பட்டிருக்கவேண்டும்.

கழுகு, கரடி ஆகிய விலங்குகளின் வழிபாடு இன்று பல பகுதிகளில் உள்ளன.[19] திருக்கழுக்குன்றத்துக் கழுகுகள் பெருமாள் கோவில்களிலும், தனியாகவும் கருட வணக்கம்[20] கோவில் இல்லாத ஊர்களில் கூட வெள்ளிக்கிழமை கருட தரிசனம் முதலிய வணக்கங்கள், குலக்குறி விலங்கு வழிபாட்டின் வளர்ச்சியைக் காட்டுகின்றன. களக்காட்டுப் பகுதியில் கரடிமாடன், புலிமாடன் உருவங்கள் உள்ளன. இவை மனிதத் தன்மையேற்றப்பட்ட, வளர்ச்சி பெற்ற குலக்குறி விலங்குகளாகத் தோன்றுகின்றன.

எனவே ஏற்கெனவே பழக்கமான 'நன்மை புரியும் விலங்குகள்' என்ற நம்பிக்கையிலிருந்து ஜடாயுவையும் கருடனையும் தேர்ந்தெடுத்து இடங்களைப் புனிதமாக்குவது மிகவும் எளிய அறிவூக்க முயற்சியே. ஏற்கெனவே இருந்த நாட்டு நம்பிக்கைகளோடு, இராமாயணக் கதையின் ஜடாயு பாத்திரம் பொருந்துவதால், ஜடாயு கௌரவிக்கப்பட்டு இராமனுக்கு உறவாக்கப்பட்டு, அவனைத் தகனம் செய்த இடமாகக்

கூறி, இந்த இடம் புனிதமாக்கப்பட்டது. இது நாட்டு நம்பிக்கையோடு, இராமாயணக் கதையின் நம்பிக்கைகளின் இணைப்புத்தான்.

முன்னரே இராமனை உயர்வாகவும், அனுமனைத் தாழ்வாகவும் இருநிலைகளில் இணைத்த புனைகதையை அனுமகுண்டம் பற்றிய கதையில் கண்டோம். அனுமனைப் பற்றியே மிகப் பல புனைகதைகள் உள்ளன. அவற்றுள் சில இடங்களோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. குரங்கு குலக்குறி விலங்காகப் பல காலமாக இருந்து வந்துள்ளது. மிகப் பண்டைக் காலத்தில் மனிதனோடுள்ள உருவ ஒற்றுமையால் அவனைக் கவர்ந்துள்ளது.

மந்திரங்கள், வசியங்கள் முதலியவற்றோடு தொடர்புடையதாக இருந்தது. தற்காலத்தில், இராமனோடு தொடர்பற்ற தனி அனுமான் சிலைகள், மிகப் பெரிய சிலைகள் உள்ளன. பிற்காலத்தில் இராமர் கோயில்களை அவற்றின் முன் கட்டியிருக்கிறார்கள். உதாரணமாக நாமக்கல் அனுமார், சுசீந்திரம் அனுமார் சிலைகளைக் கூறலாம். சில பகுதிகளில் இராமனை அனுமான் வணங்கும் வழக்கம் இருக்கிறது. சூன்யம், வசியம், மந்திரம், பேயோட்டம் முதலியவற்றில் அனுமானுக்குப் பங்குண்டு.[21] எனவே நாட்டார் நம்பிக்கைகளில் அனுமானைப் போன்றதோர் மனித விலங்கிற்கு மனிதனை விட அதிக சக்தியிருப்பதாகக் கருதப்படுகிறது.[22]

இராமனைப் பற்றிய புனைகதைகளில் அவனுடைய குணம், செயல்கள் பற்றி ஆராயும்போது இராமனைவிட, காப்பியத்தின் சிறு கதாபாத்திரங்கள் நாட்டு மக்களின் கற்பனையை ஏன் கவருகின்றன என்று காண்போம். இங்கு அனுமனோடு தொடர்புடைய புனைகதைகளை ஆராய்வோம்.

அவை நெல்லை மேற்கு மலையோரங்களிலும், குமரியின் மேற்கு மலையோரங்களிலும் வழங்கி வருகின்றன. இவையாவும் இராமனுக்கு உதவி செய்கிற செயல்களோடும், விலங்கின் உடல் வலிமையோடும் தொடர்புடையவை. புனைகதை 2 மட்டும் இராமாயணத்தோடு தொடர்புடையது.

3, 4, 5–வது கதைகள் அனுமனைப் பற்றியவை. 3–வது கதையை ஒதுக்கி விட்டுப்பார்த்தால், 4–வது கதை திருக்குறுங்குடி மலையோடும், 5–வது கதை குமரிமாவட்ட மலைகளோடும் தொடர்புடையவை.

அனுமகுண்டம் என்ற மலையுச்சியிலுள்ள குழி மனிதனால் தோண்டப்பட்டதே. இம்மலையுச்சிக்கும் மலைக்கும் புனிதத் தன்மை ஏற்படுத்தவே அனுமன் இக்குழியோடு தொடர்புபடுத்தப்படுகிறான். அனுமன் விசுவரூபம் எடுத்தபோது, அவனுடைய பேருருவத்தின் பாரம் தாங்காமல் மலைச் சிகரத்தில் குழி விழுந்தது. அக்குழிதான் இதுவென்று, ஒரு தோற்றப் புனைகதை, காப்பியத்தில் சொல்லப்படும் அனுமனது பெருஞ்செயல் ஒன்றின் விளைவானதாகப் புனையப்பட்டுள்ளது.

மருத்துவாமலை பற்றிய புனைகதையிலும் அனுமனது உடல் வலிமையும், இராமனுக்கு உதவுகிற தன்மையும் அடிப்படைகளாக உள்ளன.

நாட்டாரது தெய்வ நம்பிக்கை, மதிப்புகளின் அடிப்படையிலேயே இப்புனைகதைகள் தோன்றியுள்ளன.

இராமனது இயல்புகள் சாதாரண மக்கள் தம்மிடையே மதிக்கும் இயல்புகளாக இல்லாமல் அசாதாரணமான காப்பியத்தலைவர்களிடம் இக்கதை காணும் மதிப்புகளாக உள்ளன.

புதிய கருவிகள், உலோகம் இவற்றின் மந்திர சக்தியில் மக்கள் பண்டைக்காலத்தில் கொண்டிருந்த நம்பிக்கையின் எச்சம் இராமனது இயல்புகளில் காணப்படுகிறது.

இராமன் வில்லினாலும், அம்பினாலும் செய்வித்த அதிசய நிகழ்ச்சிகள் பல புனைகதைகளில் காணப்படுகின்றன. புல்லால் அணைகட்டியதும், புல்லை அம்பாக்கியதும், இவ்விரண்டின் தொடர்பைக் காட்டுகின்றன. ‘வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்’ என்ற பழமொழி, வில், வேல்களின் மீது மக்கள் கொண்ட அதிசய உணர்வின் வெளியீடே. உழவுத் தொழிலில் ஈடுபட்ட மக்கள், இவ்வாயுதங்களைப் பயன்படுத்திய காப்பியத்தலைவனை தம்மிலும் வேறுபட்ட உயர்ந்த மனிதாதீத சக்தியுடைய புராண பாத்திரமாகவே கருதினர்.

காப்பியத் தலைவனது அதிசயித்தக்க சக்திக்கு அவனது கருவிகளும், மனித குணங்களும் காரணங்களாகக் காட்டப்படுகிறது.

அனுமனது சக்திக்கு, உடல் வலிமையை மிகைப்படுத்தியும், இராமபக்தியை அடிப்படையாகக்கொண்டும் விளக்கம் காணப்படுகிறது.

இராமேசுவரம் பற்றிய புனைகதை இவ்விரு வகைகளினின்றும் வேறுபட்டது. இது சைவ வைணவ சமய உயர்வுப் போட்டியில் தோன்றியதாகும். இராமன் சிவனை வழிபட்டதாகவும், சிவன் விஷ்ணுவை வழிபட்டதாகவும் கூறும் கதைகள் சிவன் உயர்ந்தவரா விஷ்ணு உயர்ந்தவரா என்று விவாதிப்பதற்காகவே புனையப்பட்டன.

ஸ்தல புராணங்களிலும், ஐயப்பன் கதைகளிலும், விஷ்ணு–மோகினிக் கதைகளிலும் இதைக் காணலாம். இந்தப் போராட்டங்களின் எதிரொலியாக விஷ்ணு வணங்கிய சிவன் கோவில்கள், சிவன் வணங்கிய விஷ்ணு கோவில்கள் பற்றிய கதைகள், தோற்றப் புனைகளாகச் சில கோவில்களோடு தொடர்புகொண்டு உருவாயின.

இராமாயணக்கதை சங்க காலத்துப் புலவர்களுக்குத் தெரிந்திருந்தது. சிலப்பதிகார காலத்தில் அதன் சம்பவங்களை விரிவாகச் சொல்லாமல் உவமையாக இளங்கோவடிகள் கூற்றினால் தெரிந்துகொள்ளுமளவிற்குப் பரவியிருந்தது. ஜைனர்களுக்கும் பௌத்தர்களுக்கும், வால்மீகி இராமாயணத்தினின்றும் வேறுபட்ட இராமாயணங்கள் தெரிந்திருந்தன.

ஆனால் கம்பனது இராமாயணமே மிகப் பரவலாக நாட்டு மக்களிடையே பரவிவிட்டது என்பதற்கு கம்பனைப் பற்றிய கதைகளும் கம்பனது வாழ்க்கை பற்றிய நாட்டார் கதைகளும் சான்று கூறுகின்றன. எனவே கம்பனது காலத்திற்குப்பின் இது கற்றவர்களது காப்பியமாக இல்லாமல் நாட்டாரிடமே பரவிய கதையாகிவிட்டது. இக்கதைகளின் பல நிகழ்ச்சிகள், அவர்களுடைய புனைகதைகளை (legends)ஐ ஒத்திருந்தன. இராமாயணத்தின் நாட்டுக் கூறுகள் (folk elements) தங்களுடைய நம்பிக்கைகள், வாழ்க்கை மதிப்புக்களை ஒத்திருந்தன. தங்கள் படைப்புகளை ஒத்த பாத்திரங்களையும் தங்களது வாழ்க்கை மதிப்புக்கள் போன்ற மதிப்புக்களையும் அவர்கள் இராமாயணப் பாத்திரங்களிலும், இராமாயண காவிய மாந்தர்களின் மதிப்புகளிலும் (values) கண்டார்கள்.

இதில் முக்கியமான சிறு பாத்திரங்கள் அனுமன், சபரி, குகன், ஜாம்பவான்.

## BIBLIOGRAPHY


1. Introduction, "Mythology", Hamlyn Mythology Series, Vol. I.
2. G. Frazer, "Myths", Golden Bough, (Abridgeded).
3. Claude Levi Straus, "Myth on the Discovery of Fire", Study of Mythology.
4. Graves, "Prometicous Myth", Greek Mythology.
5. Wordsworth, The world is too much with us.
6. சித்திரபுத்திரன் கதை – Manuscripts Library, Kerala University.
7. Myth prevalent among the folks in regions surrounding this site.
8. "
9. Myth prevalent among the folks at Uthangarai, Arur TK, Dharmapuri Dt, collected from S. Varadarajan, Maganoorpatti.
10. Folk myth prevalent among folks of Thirukkurungudi region, Nanguneri Tk, collected. from Andia Pillai, Thirukkurungudi.
11. Folk myth prevalent among folks of Aralvoimozhi (ஆரல்வாய் மொழி) and Kanyakumari, collected from S. Velayutham, Thamaraikulam.
12. Folk myth prevalent among folks of Bhoothapandi, Kanyakumari Dt, collected from Mahadeva Iyer, Ayurvedic Physician, Dharasanamkoppu.
13. Myth prevalent among folks in Thakkalay and neighbouring Villages, collected from Thangam Pillai, Boothapandi.
14. Collected by T. Mangai.
15. "
16. கருடமந்திரமும் அனும கவசங்களும் வசியமுறைகள் எனப்படும் மந்திரவாதச் செயல்களில் பயன்படுத்தப்படுகின்றன. கருடமந்திரம் நாகதோஷத்தைப் போக்கவும் அனுமன் வசியம், வசியமுறைகளிலும் பயன்படுகின்றன.

17. Claude Levi Straus, "Mythic Animals", Study of Mythology.

18. Father Gnanaprakasam, Plant and Animal Worship in South India, (Jaffna, SiLanka).

19. Egyptian myth-god with the head of an egle and body of man. A wooden figure of a god of the same shape is found in folklore museum, Institute of Kannada studies, University of Mysore.

20. Bear-A god by name (கரடிமாடன்) Bear Madan is found in Sastan koil, Chidambarapuram, Kalakadu in Nanguneri Tk, Trinelveli Dt.

21. Garuda has shrines in all important Perumal temples, At Alwarthirunagari, Garuda is called Pakshi Rajan. king of birds.

22. In magical charms there is a yantra called Hanuman chakra (அனுமச் சக்கரம்) and also a verbal charm about Hanuman. This charm is discribed in manuscripts entitled வசியம், வசியாராணாதிகள், புனை சுருட்டு in the collection of manuscripts in Kerala University manuscripts library, Trivandrum.

# பழங்கதைகளும் பழமொழிகளும்

நூலினுள்...

- உலகம் படைக்கப்பட்ட விதம் பற்றி அறிவியல் விளக்கம் இல்லாமல் வரலாற்று முற்கால மக்களும் தற்கால இனக்குழு மக்களும் கட்டுரைத்த கற்பனைக் கதைகள் புனைகதை மானிடவியல் ஆராய்ச்சியாக நூலில் இடம்பெற்றுள்ளது.

- தஞ்சைக் கோயிலில் இசை, நடனம் முதலியவை நிகழ்விக்கும் செலவுக்காக ராஜராஜ சோழன் செய்த வழிமாற்றங்கள் கல்வெட்டுக்களின் மூலம் சமூகவியல் துறை ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது.

- பழமொழிகள் குறித்த ஆய்வு, இராமாயணக் கதை நிகழ்வுகள் நடந்த தலமாகக் கூறப்படும் இடங்கள் பற்றிய ஆய்வு ஆகியவை நூலில் இடம்பெற்றுள்ளன.

NCBH

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை-600 098.

ISBN 812341146-4

9 798123 411469

Code No. A 123 Rs. 75/-